பேராசிரியர் முனைவர்
ந சுப்பு ரெட்டியார்

தமிழ் இலக்கியங்களில்
அறம் – நீதி – முறைமை

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

எளிமை, இனிமை, தெளிவு இவர்தம் நூல்களின் தனிச்சிறப்புகளாகும்.

தமிழ் இலக்கியங்களில்

அறம் - நீதி - முறைமை

பேராசிரியர் முனைவர் **ந சுப்பு ரெட்டியார்**

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

அறம் என்ற தலைப்பில், மனத்தூய்மை, நிலையாமை, நடுவுநிலைமை,
இன்னும்பிற : நீதி என்ற தலைப்பில், செங்கோன்மை, நீதி உணர்வு,
நீதிவழங்கல் இன்னபிற : முறைமை எனும் தலைப்பில், ஊழ்செயற்படுதல்,
முறைமை பற்றி பல்வேறு காட்டுகள் இன்னபிற தலைப்புகளை
எளிதாகவும், தெளிவாகவும், பற்பல கோணங்களில்
இனிய தமிழில் விளக்கியுள்ளார் பேராசிரியர்.

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

ISBN: 978 -81-939637-3-9

eBOOK ~ *மின் நூல்*

தமிழ் இலக்கியங்களில்
அறம் - நீதி - முறைமை

அருங்கலைக்கோன், சடகோபன் பொன்னடி, சேவா ரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
.

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

தமிழ் இலக்கியங்களில்
அறம் - நீதி - முறைமை

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchase.

முதற்பதிப்பு – 1988
இரண்டாம் பதிப்பு - 2018

Price: Rs.450.oo

Published by:
ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-939637-3-9

9 788193 963739

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

—குறள் 783.

திரு. மாடபூசி அனந்தசயனம் அய்யங்கார்
பி.ஏ., பி. எல்

பீகார் மாநில முன்னாள் ஆளுநர்,
நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர்,

தோற்றம் :
4—2—1891.

பரமபதித்தது :
14—3—1978.

*தில்லிப் பாராளுமன்ற முன்னாள் சபாநாயகரும்
பீகார் மாநில முன்னாள் ஆளுநரும் திருவேங்
கடவனுக்கு அடிமையும், வைகுண்டவாசியுமாகிய*

திரு. மாடபூசி அனந்தசயனம் அய்யங்கார் *அவர்களுக்கு*

அன்புப் படையல்

திவ்விய மான வேங்கடத் தப்பன்
திருவடி மலர்திரு வுளத்தன்;
கவ்வைசேர் மக்கள் உயர்வுற உழைத்த
கண்ணியன்; காந்தியின் தொண்டன்;
அவ்வியம் அறியாச் சால்பினன்! என்னை
அன்பினால் பண்பினால் பிணித்தோன்;
செவ்விய **அனந்த சயனமய் யங்கார்**
சேவடிக் குரியதிந் நூலே.

அணிந்துரை

(ஜஸ்டிஸ் எஸ். நடராசன், உச்சநீதிமன்றம், தில்லி)

'தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறைமை' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு, நூலாக மலர்ந்தது கண்டு மகிழ்கிறேன்.

'அறம்' என்ற தலைப்பில் கூறப்பட்ட பொருள்கள் மிகவும் சிறப்பானவை. தொல்காப்பியம், நன்னூல், சங்க இலக்கியம், ஐம்பெரும் காப்பியங்கள் முதலான இலக்கண இலக்கிய நூல்களினின்றுமேற்கோள்கள் எடுத்துக் காட்டிய பாங்கு சிறப்பான ஒன்று.

உறுதிப் பொருள்களில் அறம், பொருள் என்னும் இரண்டன் விளக்கம் அருமையானது. இன்பத்தைப்பற்றிக் கூறுங்கால் "இன்பம் என்பது வெறும் பொருளை மட்டும் நுகரும் இன்பமாக இருப்பின் அதுவும் புறப்பொருள் என்றே வழங்கும். ஆனால் அகப்பொருள் என்று கூறப் பெறும் இன்பமாவது உயரறிவின் அன்பை நுகரும் இன்ப மாதலின் அது தனியாக 'அகம்' என வழங்கலாயிற்று" (பக். 10, 11) என்ற விளக்கம் நன்று.

முழுமுதற் கடவுளைச் 'சிவம்' என்று கூறி, அதனை இயக்கத்தை, செயலை, செயலாற்றலை, அருளை 'அறம்' என்று கூறியிருப்பது (பக். 13) புதிய ஒன்று.

சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழரது வாழ்க்கை யைப் படம்பிடித்துக் காட்டுவன என்று சில காலமாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லுவதை ஆசிரியர் நன்றாக மறுத்துள்ளார் (பக். 17, 18).

இன்றைய வாழ்க்கை நிலையைப் பொருளாதார அடிப்படையில் ஆய்ந்து அக்கால இலக்கியங்கள் இன்றைய சூழ்நிலையில் எங்ஙனம் பொருந்தும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.

அகப்பொருளில் அறத்தைப்பற்றி பேசுங்கால் "பால தாணையின், ஒத்தகிழவனும் கிழத்தியும் காண்ப" (தொல். கள. 5) என்னும் நூற்பாவில் 'கிழவனும் கிழத் தியும்' என்று இருவரையும் எழுவாயாக வைத்துக் காட்டும் பாங்கில் முன்னதாகக் காதலித்தவர் யார் என்ற வினாவுக்கு இடம்வைக்கவில்லை என்பது சிந்திக்கத் தக்கது" (பக்.-23) என வரைந்திருப்பது ஆசிரியர் ஆய்வுத் திறனுக்கு ஓர் காட்டு.

'அறத்தொடுநிற்றலையைப்' பக்தி இலக்கியத்தோடு புணர்த்திப் பேசுங்கால் ஆசிரியரது சமய இலக்கிய அறிவு நன்கு வெளிப்படுகிறது. குறிப்பாக வைணவ இலக்கியத் திலும், அந்த மரபுகளிலும் உள்ள ஆழ்ந்த பயிற்சி ஆய்வுக்குத் துணை செய்கிறது(பக்.-30).

வெளிநாட்டைப்பற்றிக்கூறிவருங்கால் சமுதாயச்சடங் கிற்கும், கற்பொழுக்கத்திற்கும் நடக்கும் போராட்டமாக வரைந்திருப்பது அழகான ஒன்று.

இல்லற இயல், துறவறவியல் என்னும் இரண்டிற்கும் பொதுவானவையாக அழுக்காறு, இன்னாச் சொல், அவா, வெகுளி என்னும் நான்கினையும் நீத்தல் என்றுகூறப்படுதல் வேண்டும் என்ற உரைத்த ஆசிரியர் (பக்-64) இக்காலத்துச் சில போலித் துறவிகள் செல்வம் சேர்ப்பதையே குறிக் கோளாகக் கொண்டு இயங்குவதைச் சுட்டிக்காட்டு கின்றார்.

"கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்" என்னும் கம்பன் சொற்றொடரில் வரும் 'க்ண்களால்' என்ற சொல்லுக்குப் புத்துரை வழங்கிய ஆசிரியர் (பக்-73) பாராட்டிக்குரியவர்.

'அன்பின்' சிறப்பையும் தன்னலத்தினால் ஏற்படும் தீமைகளையும் ஆசிரியர் நன்கு விளக்குகின்றார் (பக்-82).

'விருந்தோம்பலைச் சொல்லுங்கால் இக்காலத்தில் விருந்து என்ற பெயரில் நடக்கும் ஆடம்பரங்களையும், உண்மையான விருந்து வழங்க இயலாத நிலையையும் குறித்து ஆசிரியர் கூறியிருப்பது அவரது நுணித்த பார்வைக்கு ஓர் எடுத்துக் காட்டு (பக்-88).

'செய்ந்நன்றி அறிதல்' என்னும் தலைப்பின் கீழ் "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல்அரிது" என்ற குறளுக்குக் கணித வாய்பட்டில் விளக்கம் தந்திருப்பது (பக்-98, 99) புதுமையான, ஆசிரியரின் சிந்தனைக்கு ஓர் உரைகல்லான எடுத்துக்காட்டு.

'பொறையுடைமையைப்' பற்றிக் கூறுங்கால், தருமனது பொறுமையை விளக்கும் முகத்தான் வில்லிபாரதப் பாடல்களையும், பாஞ்சாலி சபதப் பாக்களையும் எடுத்துக் காட்டியிருப்பது (பக் 132-135) சிறப்பான ஒன்று.

அவாவறுத்தல், வெஃகாமை, கள்ளாமை என்னும் மூன்று சொற்களும் ஒருபொருளுடையன போலத் தோன்றினும் அவை தம்முள் நுணுகிய வேறுபாடுடையன என அழகாகக் குறித்துள்ளார்.

துறவறவியலில், செவிச் செல்வத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அந்தச் செல்வம் பொருட்பாலினதாயினும் அருட்செல்வத்தினும் ஒருபடி உயர்ந்தது என்பதை விளக்கும் பாங்கு அழகியதாகும் (பக். 156-57).

'புலால் மறுத்தல்' பற்றி நீதிபதி ஒருவர் கூறிய கருத்து வள்ளுவத்திற்கு முரணானது என நிலைநாட்டியிருப்பது ஆசிரியரின் கொள்கைத்துணிவுக்கு (Courage of conviction) எடுத்துக்காட்டு (பக். 163-64)

'தவம்' அனைவர்க்கும் பொதுவானதென்றும், இல்லறத்தினரும் இதனை முயலுதலே சிறப்பானதென்றும்

கூறிய ஆசிரியர் அதற்குத் தக வள்ளுவரது வாய்மொழியை விளக்கியிருப்பது சாலப் பொருந்தும்(பக். 165).

'மழித்தலும் நீட்டலும்' என்பதைப்பற்றிக் குறிப்பிடும்போது தமக்குத் தெரிந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறியிருக்கும் பாங்கு ஆசிரியரின் நகைச்சுவையுணர்வையும், இத்தகைய வழக்கங்களில் அவருக்கு நம்பிக்கையின்மையையும் புலப்படுத்துவன(பக். 168-69).

'நீதி' என்ற பகுதியில் தொடக்கத்திலேயே அறத்திற்கும் நீதிக்கும் உள்ள வேற்றுமையைத் தெளிவுபடுத்தி விடுகின்றார்(பக். 218).

புறநானூற்றுக் காலத்தில் மன்னனை உயிராகவும் மக்களை உடம்பாகவும் காட்டப்பெற்ற கருத்து, கம்பன் காலத்தில் தலைகீழாகமாறி 'மக்களாட்சிக்கு' வித்து நடப்பெற்றது. அத்தகைய நிலையிலிருந்து ஆட்சி செய்யும் மன்னனின் செங்கோன்மையைப்பற்றி இக்கால நடைமுறையோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் ஆசிரியர் (பக். 224-225).

'நீதி நெறி' வழுவாது ஆட்சிபுரிந்த மூவேந்தரது வரலாறுகளின்று தக்க நிகழ்ச்சிகளை ஆசிரியர் கூறுகிறார் (பக். 232, 235, 248).

தமிழக வேந்தர் நீதி வழங்கிய முறையையும், அதன்பால் அவர்கள் கொண்டிருந்த ஊற்றத்தையும் ஆசிரியர் தக்க மேற்கோள்களுடன் புலப்படுத்துகிறார்.

'கொலைத்தண்டனை கூடாது' என்றும், சிற்சில இடங்களில் அது தேவை என்றும் இருவேறு கருத்துகள் நிலவும் சூழ்நிலையில் மேனாட்டு அறிஞர் வாய்மொழிப்படி திருந்தத் தக்கவர், திருந்ாதவர் என இரு பகுப்புடைய கொலைஞருள் பிற்பகுதியினருக்குக் கொலைத் தண்டனை சாலும் என்று கூறும் ஆசிரியர், அண்மைக் காலத்தில் நிகழ்ந்த இருபெருங் கொலைக் குற்றங்களைச்

சுட்டிக்காட்டுவது அவரது யதார்த்த நோக்கைப் (பக். 255) புலப்படுத்துவதாகும்.

இறை, புரவு, கடமை என்னும் சொற்கள் பிறந்த வகையைக் கூறும் ஆசிரியர் பிசிராந்தையாரது பாடலை எடுத்துக்காட்டி மன்னனது (இக்காலத்து அமைச்சரது) கடமை இன்னதென்று நிறுவுகின்றார் (பக். 258).

'அறிகரி' 'பொய்க்கரி' போன்ற சொற்கள் பயிலும் அகப்பாடல்களை மேற்கோள் காட்டி அம்முகத்தான் நீதிபற்றிக் கூறுவது சுவையான இடம் (பக். 266, 267).

உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்பாக அரசன் செய்ய வேண்டிய கடமையைப் பற்றிக் கூறிவரும்போது 'சாதி யொழிப்பு' என்ற பெயரில் நடக்கும் முறையற்ற செயல்களை ஆசிரியர் வெளிப்படையாகச் சாடுவது அவரது துணிவுக்கு ஓர் அளவுகோலாகும் (பக். 271, 275).

மூன்றாவது பகுதியாகிய 'முறைமை' யில் ஆசிரியர் பொதுவாக அச்சொல் பயின்றுவரும் இலக்கிய மேற்கோள்களையே எடுத்துக்காட்கிடுன்றார். முறைமை என்ற சொல் பெரும்பாலும் அறம், நீதி என்ற பொருளிலேயே ஆளப்படுதலானும், அவ்விரண்டையும் பற்றி முன்னரே நிறையக் கூறியிருத்தலானும், இந்தப்பகுதி சுருங்கவே அமைந்துள்ளது.

ஆயினும், முறைமை என்பது அரசநீதி, மரபு முறை, மரியாதைமுறை என்ற பொருள்களிலும் பயின்றுவருவதைக் காணும் ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலம் வியக்கத் தக்கது.

'முறைமை' என்ற சொல்லை நெறிமுறை தவறாது நிகழும் ஊழ், ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி, காலத்திகிரி, கோலத்திகிரி போன்ற பொருள்களுடன் புணர்த்தி

வைணவ இலக்கியங்களின் மேற்கோள்களுடனும் இக்கால அறிவியல் வளர்ச்சியுடனும் ஒப்பிட்டுப் பேசும் பாங்கு மிகவும் சுவையான பகுதியாகும் (பக். 303-309).

பொதுவாக நூல்முழுதும், ஆசிரியரின் இலக்கண இலக்கிய அறிவையும், குறிப்பாக வைணவ சமயத்திலும் அதன் இலக்கியங்கள், தத்துவங்கள் ஆகியவற்றில் அவருக் குள்ள ஆழ்ந்த பயிற்சியையும் வெளிப்படுத்துகின்றன.

இந்நூல் தமிழ்கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த ஓர் மாமணி. தமிழின்பால் காதல் கொண்ட ஒவ்வொரு வரும் பன்முறை படித்துப் பயன்பெற வேண்டிய நூல் இஃது என்பதில் ஐயமில்லை.

—எஸ். நடராசன்

நூல் முகம்

நோற்றேன் பல்பிறவி
நுன்னைக்காண்பதோர் ஆசையினால்
ஏற்றேன் இப்பிறப்பை
இடருற்றனன் எம்பெருமான்!
கோற்றேன் பாய்ந்தொழுகும்
குளிர்சோலைசூழ் வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தேன்;
அடியேனையாட் கொண்டருளே.[1]

—திருமங்கையாழ்வார்

பணிவாழ்க்கையின் இறுதிக்காலமாகிய பதினேழு ஆண்டுகள் திருப்பதியில் வாழ வழி வகுத்து அவன் திருவடி வாரத்தில் நிறுவப் பெற்றுள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையை நிறுவவும் அதில் துறைத்தலைவனாகவும் பேராசிரியனாகவும் பணியாற்றும் வாய்ப்புகளை நல்கினான் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலாகிய' திருவேங்கடமுடையான். ஒய்வுபெற்ற பின் (அக்டோபர்-1977) சென்னையில் அவன் இருப்பிடமாகிய 'வேங்கடம்' என்ற இல்லத்தில் வாழவைத்துள்ளான். இடைஇடையே பல்வேறு அதிர்ச்சி வைத்தியம் தந்தருளினாலும்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்;
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே[2]

என்ற திருமூலர் திருவாக்கை நினைவு கூரச்செய்து தமிழ்ப்பணியும் சமயப்பணியும் வளர்க்கத் துணைபுரிந்து

1. பெரி. திரு. 1-9 :8
2. திருமந்திரம்—91

வருகின்றான்; ஒல்லும் வகையெல்லாம் என்தகுதிக்கேற்ப உதவியும் வருகின்றான்.

இந்த நிலையில் சென்னைப் பல்கலைக் கழகத்தைத் தூண்டி அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் மூன்று நிகழ்த்துமாறு ஆணையையும் பிறப்பிக்கச் செய்தான். கரும்பு தின்னக் கூலிகொடுக்கும் பல்கலைக் கழகம் **டாக்டர் (திருமதி) கிருட்டிணா சஞ்சீவிதிருமதி கண்ணம்மாள் நடேசன் அறக்கட்டளைச்சொற்பொழிவுகளை** (1986-87க்குரியவை) நிகழ்த்துமாறு 14.5.1987ல் அழைப்புவிடுத்தது. அறக் கட்டளை நிறுவிய டாக்டர் ந. சஞ்சீவியைக் கலந்து யோசித்த போது "**தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி-முறைமை**" என்ற தலைப்பில் மூன்று நாள் மூன்று சொற் பொழிவுகளை நிகழ்த்த முடிவு ஆயிற்று. அங்ஙனமே மார்ச்சு 28, 29, 30 (1988) நாட்களில் முறையே அறம், நீதி, முறைமை பற்றி மூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்தி னேன். இச்சொற்பொழிவுகளை என்பொறுப்பில் வெளி யிட்டுக் கொள்ள இசைவும் வழங்கியது பல்கலைக் கழகம். இசைவுவழங்கியமைக்கு என் நன்றி.

ஐந்திணைப் பதிப்பக உரிமையாளர் திரு **குழ. கதிரேசன்** அவர்களின் பரிந்துரையின் பேரில் என் அருமைத்தம்பி **திரு. வெள்ளையப்பன்** (உரிமையாளர், தேன்மழைப் பதிப்பகம் ஆலந்தூர், சென்னை - 16) இப் பொழிவுகளை மனமுவந்து ஏற்று வெளியிடுகின் றார். இவர்கள் இருவருக்கும் என் உளங் கனிந்த நன்றி என்றும் உரியது. இப்பொழிவுகளைக் கவினுற அச்சிட்டுக் கற்போர் கைகளில்தவழச்செய்த ஜெய்ஸ்ரீஅச்சகத்தாருக்கு, குறிப்பாக அதன் அதிபர் **திரு. கே. பி. பிரசாத்துக்கு**, என் நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

ஜஸ்டிஸ் S. நடராசன் அவர்கள் நாடறிந்த நல்ல மனிதர்; அடக்கமான பண்புடையவர். இவருடைய நட்பினைப் பெற்றது இறைவனது திருவருளாலாகும் பல்லாண்டுகள் வழக்குரைஞராகப் பணியாற்றி நேர்மையையும் திறமையையும் நிலை நாட்டிய இப்பெருமகனாரைத் தமிழக அரசு உயர்நீதி மன்றத்து நீதிபதியாக்கியது. பல ஆண்டுகள் அப்பொறுப்பை வகித்துப் பணியாற்றி "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல" அமைந்து ஒருபால் கோடாமையாலும் தமது நேர்மையை யாவரும் கண்டதாலும் நடுவண் அரசு இவரை உச்சநீதி மன்றத்து நீதிபதியாக்கியது. இங்கு இவர் பல பொறுப்புகளில் அரும் பணியாற்றி நற்பெயர் எடுத்ததை இந்திய துணைக் கண்டம் நன்கு அறியும். இவருடைய அமைதி, அடக்கம் சீலம், பரிவு முதலிய அருங்குணங்கள் 'குலத்தளவே ஆகும் குணம்' என்ற முதுமொழிக்கு ஏற்ப அமைந்தன. நல்ல சூழ்நிலைகளில் பெற்ற கல்வியும் இவற்றிற்கு மெருகூட்டியது. இவருக்குப்பெருமதிப்பையும்நல்கின. இறையன்பிலும் மெய்ப்பொருள் கருத்துகளிலும் ஆழங்கால் பட்டு நிற்பவரும் இலக்கிய இன்பத்தில் ஈடுபாடு கொண்டவரும் 'உயர் திணை என்மனார் மக்கட்சுட்டே, 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்ற ஆன்றோர் பொன்மொழிகட்கு இலக்கியமாகத் திகழ்பவருமான இந்த அருங்குணச் செல்வரின் அணிந்துரை பெற்றது இந்நூலின் பேறாகும்; அடியேனது பேறுமாகும். அணிந்துரை அருளிய பெரியாருக்கு என் இதயம் நிறைந்த நன்றி என்றும் உரியது.

இந்த அரிய நூலைச் சட்டக்கலை வல்லார் பரமபதவாசி **திரு மாடபூசி அனந்தசயனம் அய்யங்கார்** அவர்கட்கு அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன். திரு அய்யங்கார் பீகார் மாநில ஆளுநராகப் பணியாற்றித் திருப்பதியில், சொந்த ஊரில், சொந்த இல்லத்தில் குடியேறிய நாள் முதல் (1962) அவர் பரமபதித்த நாள் வரை (1978) அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் கிடைத்தமை

திருவேங்கடமுடையானின் திருவருளாகும். முதன் முதலில் சந்தித்தபோது ''நீங்கள் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்! வாழும் இடத்தையொட்டித் தமிழும், பிழைப்பின் நிமித்தத்தை யொட்டி ஆங்கிலத்தையும் படித்தீர்கள். அப்படியே நானும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவன்; வாழ்ந்த இடத்தையொட்டித் தெலுங்கையும் பிழைப்பின் நிமித்தம் ஆங்கிலத்தையும் படித்தேன். இப்பொழுது நாம் இருவரும் தமிழர்களே, சரிதானே'' என்றார். ''ஏழுமலையான் திருவருள்படி நம் வாழ்க்கையும் பணியும் அமைந்தன'' என்று அடக்கமாக மறு மொழி பகர்ந்தேன். அவரும் என் பணியைப் பாராட்டி மகிழ்ந்தார். திருப்பதியில் நான் இருந்தவரை இவருடன் மிக நெருங்கிப் பழகினேன். தமிழ்த்துறை என் மணி விழாவை மலர் ஒன்றை வெளியிட்டுக்கொண்டாடியபோது (24-9-1977) அந்த விழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்த பெருமகனார். என்வீட்டில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில் தவறுவதில்லை.

★ என்னுடைய டாக்டர் பட்டத்துக்குரிய ஆய்வுக் கட்டுரை (ஆங்கிலத்தில் அமைந்தது) அச்சுவடிவத்தில் பல்கலைக் கழகம் வெளியிட்டபோது அதற்கு அரியதோர் ஆங்கில அணிந்துரை நல்கி ஆசிகூறி நூலுக்குப் பெருமையும், பொலிவும் தந்த பெருமகனார் இவர்.

இந்த வைணவ மாமணியைப் பார்க்கும்போதெல்லாம் 'கெடும் இடர் ஆய எல்லாம் கேசவா! என்ன' (திருவாய் 10-2: 1) என்ற நம்மாழ்வாரின் பாசுரமும் நினைவுக்கு வரும். என் இதயத்தாமரையில் நிரந்தரமாக எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தப்பனும் அனந்த சயனத்து அண்ணல் பதுமநாபனாகவே காட்சி அளிப்பான். இத்தகைய எழுச்சியை உண்டு பண்ணும் இப்பெருமகனாருக்கு அறம்-நீதி-முறைமை பற்றிய இந்த அரிய நூலைப் பொருத்தமாக அன்புப்படையலாக்கிய பெருமையுடன் அகமகிழ்கின்றேன்.

இந்தப் பொழிவுகளை நிகழ்த்துவதற்கும், அவை எழுத்து வடிவம் பெறுவதற்கும் அச்சேறி வெளியிடப் பெறுவதற்கும் மூலகாரணமாக இருப்பவன் எம்பெருமான் ஏழுமலையப்பன். 'என்கண்பாசம் வைத்து' நிரந்தரமாக் என் இதயகமலத்தில் எழுந்தருளியிருக்கும் அந்த 'வேங் கடத்து எழில்கொள் சோதிக்கு' என் மனம் மொழி மெய் களால் வணங்கி வாழ்த்துகின்றேன்.

உளன்கண்டாய் நல்நெஞ்சே!
உத்தமன்; என்றும்
உளன்கண்டாய்; உள்ளுவார்
உள்ளத்து உளன்கண்டாய்;
வெள்ளத்தின் உள்ளானும்,
வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்என்று ஓர்.

—பொய்கையாழ்வார்

'வேங்கடம்'
AD—13 (பிளாட் 3354)
அண்ணாநகர்
சென்னை—600 040
திசம்பர் 15, 1988

ந. சுப்புரெட்டியார்
தொ.பே. 615583

3. முதல்திருவந்.-99.

உள்ளுறை

அன்புப்படையல் (iii)
அணிந்துரை (iv)
நூல் முகம் (x)

தமிழ் இலக்கியங்களில்—அறம் (4-214)

முன்னுரை - உறுதிப் பொருள்கள் (7) - மும்முதற் பொருள் - மூன்றன் பகுதி (8) - அகம், புறம் என்ற பாகுபாடு (10) - அறம் : விரிந்த பொருள் (12) - 'அறனில் கொள்கை, (15) - மனத்தூய்மை (18) - இன்றைய நிலை (19) - பாரதியார் (21) - (1) **அகப் பொருளில் அறம்** (22)- அகப்பொருள் மாந்தர்கள் (25) - 'அறத்தொடு நிலை" விளக்கம் (25) - இலக்கியக்காட்டுகள் (27) - பக்தி இலக்கியங்களில் (ஆழ்வார் பாசுரங்களில்) இந்நிலை-திருப்புலியூர் மாயப் பிரான் (30); அறத்தொடு நிற்கும் சந்தர்ப்பங்கள் (40) - வெறியாட்டு (44) - விளக்கம் - சிலப்பதிகாரத்தில் (46) - திருவிருத்தத்தில் (47) - திருக்கோவையாரில் (49)-வெறிபாடிய காமக்கண்ணியார் (50)-மணந்துகொள்வதில் இருமுறைகள் (51) - இல்லறம் புகுவதில் இருநெறிகள் (53) - முருகன் திருமணம் (54) - வழக்கில் இரண்டும் இருத்தல் (56)-(2) **புறப்பொருளில்** : வள்ளுவரின் அறம் (57) - நிலையாமையைக் காட்டல் (58) சிலம்பில் அறம் பற்றி (60) - அறம் : வகையும் தொகையும் (61)- அறத்தின் செய்வகைகள் (63) மனம் மாசுஇல்லாமல் செய்யும் அறம் (64) - (அ) இல்லற இயலில் நான்கு பகுதிகளில் (65) - முதற் பகுதியில் இல்வாழ்வான் (66) - இல்வாழ்க்கை (68)-வாழ்க்கைத் துணை நலம் (69)மக்கட்பேறு (78) குடும்பத்தின் உறுப்பினர் பற்றி (66) - பல்வேறு கருத்துகள் (72) - இரண்டாவது பகுதியில் - அடிப்படைப் பண்பு அன்புடைமை (80) - மூன்றாவது பகுதியில் - விருந்தோம்பல் முதல் (87) - பல்வேறு கருத்துகள் - இனியவை

கூறல் (96) - செய்ந்நன்றி அறிதல் (97) - பல்வேறு கருத்துகள் - ஒப்புரவு அறிதல் (110) - ஈகை (112) - பல்வேறு கருத்துகள் - நான்காவது பகுதியில் இல்வாழ்வானிடம் அமைந்திருக்க வேண்டிய பண்புகள் (121) -நடுவுநிலைமை (121) - அடக்கமுடைமை (124) - ஒழுக்கமுடைமை (125)- பிறனில் விழையாமை (128) - பொறையுடைமை (130)- அழுக்காறாமை (135) - வெஃகாமை (140) - புறங் கூறாமை (142) - பயனில் சொல்லாமை (144) - தவினை யச்சம் (145) - புகழ் (148) - (ஆ) துறவற இயல் (152) - 'நோன்புப் பகுதி' 'ஞானப் பகுதி' (154)- நோன்புப் பகுதி - அருளுடைமை (154) - புலால் மறுத்தல் (159) - தவம் (163) - கூடாவொழுக்கம் (166) - கள்ளாமை (170) - வாய்மை (171) - வெகுளாமை (174) - இன்னா செய் யாமை (177) -கொல்லாமை (180) - ஞானப்பகுதி (184)- நிலையாமை (185) - அகத்துறவு, புறத்துறவுகள் (188) - மெய்யுணர்தல் (192) - அவாவறுத்தல் (195) - போரில் அறம் (196) - சான்றோர் (209) இறுவாய் - பாரதக் கதையில் ஒரு நிகழ்ச்சி (211)

2. தமிழ் இலக்கியங்களில் நீதி (217—275)

முன்னுரை - அரசனின் இன்றியமையாமை (218-9)- முறை-பரிமேலழகரின் விளக்கம் (219) பலருடைய கருத்து (224) - செங்கோன்மை (225) - நாட்டின் பொருள் வளம் (227) - மூவேந்தர் ஆட்சி முறை (231) சோழன் ஆட்சி (232) - பாண்டியனின் முறை (234) - சேரவேந்தனின் நீதி உணர்வு (241) - நீதிவழங்கல் (245)-வள்ளுவர் கருத்து (258) - இறைபெறும் நெறி (556) - அறங்கூறு அவைமூலம் நீதி (294) - பொய்க்கரி புகல்வோர் (265) - பூத சதுக்கம் (263) உடல் ஊனமுற்றோர் (270)-மநுதர்மமும் வள்ளுவர் அறமும் (273) - சாதி ஒழிப்பு (274)

3. தமிழ் இலக்கியங்களில் முறைமை (279 -336)

முன்னுரை - முறை, முறை (மை) பற்றிய பல்வேறு காட்டுகள் - சிலம்பில் (281)-மணி மேகலையில் (282)-கம்ப ராமாயணத்தில் (283) மாறுபட்ட கருத்துக்கள் (291) - நீதி என்ற சொல் முறைமை என்ற பொருளில் (295) - ஆட்சி முறை (298) - ஈட்டாசிரியர் குறிப்பிடும் நிகழ்ச்சி (299)- ஊழ்செயற்படுதல் (303) - அண்டங்களின் ஒழுங்குமுறை (304) பிள்ளைப் பெருமாள் அய்யங்கர் இதைவிளக்கும் முறை (306)-வள்ளுவரின் ஊழ் (முறைமை) பற்றிய விளக்கம் (309)இலக்கிய எடுத்துக்காட்டுகள் (310)-மேலும் வள்ளுவரின் விளக்கம் (313) - காவியங்களில் ஊழ் (319) - விளக்கம்-கண்ணீரின் ஆற்றல் (326)

பின்னிணைப்பு-1 : பயன்பட்ட நூல்கள்—334

பின்னிணைப்பு-2 பொருட் குறிப்பு — 341

அறம்

தமிழ்இலக்கியங்களில்

அறம்

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தம்முத்தி
அருவுருவத் தன்மை நாமம்
ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்
பரிவறநின் றியக்கச் செய்யும்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்![1]

அகரஉயிர் எழுத்தனைத்து மாகி வேராய்
அமர்ந்ததென அகிலாண்டம் அனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி, அல்ல வாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்
தோயாத அறிவாகிச் சுத்த மாகி,
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல்
செய்வாம்.[2]

---

1. தா. பா: பொருள் வணக்கம்-5
2. ஷை ஷை -12

பெரியோர்களே, செந்தமிழ்ச் செல்வர்களே

வணக்கம். சில ஆண்டுகட்கு முன்னர் நம்மிடையே வாழ்ந்தவர் டாக்டர் (திருமதி) கிருட்டிணா சஞ்சீவி அவர்கள். கற்றவர்க்கு இனியவராகவும், மற்றவர்க்குப் பெருமையுடையவராகவும், மாணாக்க, மாணாக்கியர்க்கு நல்லாசிரியையாகவும், எல்லோர்க்கும் நல்லவராகவும், கணவருக்கு வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப "மனைத் தக்க மாண்புடையவளாகித் தற்கொண்டான் வளத்தக் காள் வாழ்க்கைத் துணை" (குறள்-51) யாகவும் இருந்து நல்வாழ்வு வாழ்ந்தவர் டாக்டர் (திருமதி) கிருட்டிணா சஞ்சீவி அவர்கள். இவர்கள் நினைவாகவும், தம் அருமை அன்னையார் திருமதி கண்ணம்மாள் நடேசன் நினைவாகவும் டாக்டர் ந. சஞ்சீவியவர்கள் "டாக்டர் (திருமதி) கிருட்டிணா சஞ்சீவி - திருமதி கண்ணம்மாள் நடேசன் சொற்பொழிவுத் திட்டம்" என்ற ஓர் அறக்கட்டளை யைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிறுவியுள்ளார்கள்.

இந்தத் திட்டத்தின்கீழ் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு பல்கலைக்கழகம் எனக்கு அழைப்பு விடுத்தது. என்ன பொருள் பற்றிப் பேசலாம் என்று அறக்கட்டளை நிறுவிய டாக்டர் சஞ்சீவி அவர்களை யோசனை கேட்டபோது அவர்கள் **'தமிழ் இலக்கியங் களில்- அறம், நீதி, முறைமை'** என்ற பொருள் பற்றிப் பேசலாம் என்றார்கள். நல்ல தலைப்புதான். தமிழே ஒரு பெருங்கடல். மாக்கடலில் எண்ணற்ற வகை மீன் கள் உள்ளன. குறிப்பிட்ட மூன்று வகை மீன்களைப் பிடிக்க வேண்டுமென்றால் எவ்வளவு முயற்சி எடுக்க வேண்டுமோ அவ்வளவு முயற்சி எடுக்க வேண்டும். தமிழ்க்கடலில் அறம், நீதி, முறைமை என்ற தலைப்புகளில் பொருள் சேர்ப்பதற்கு என்னால் இயன்ற அளவு முயன்று கருத்துகளைத் திரட்டி வைத்துக் கொண்டு இன்று உங்கள் முன் வந்து நிற்கின்றேன். தவிர, இந்த

அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதில் ஒரு பெருமித உணர்வு என்பால் எழுகின்றது. இதற்குக் காரணம் இத்திட்டத்தை நிறுவிய டாக்டர் சஞ்சீவி, என் அருமைப் பேராசிரியர் மு. நடேச முதலியார் அவர்களின் அருமருந்தன்ன முதற்குமாரர். நான் (1934-36) திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் பயின்ற பொழுது திரு. முதலியார் என் தமிழ்ப் பேராசிரியர். திரு. முதலியாரின் வகுப்பில் மாணாக்கர்கள் ஒழுங்குமுறையைக்கடைப்பிடித்தது போல் எந்தத் தமிழ்ப் பேராசிரியர் வகுப்பிலும் மாணாக்கர்கள் கடைப்பிடித்ததை இன்று வரை நான் எங்கும் கண்டறிந்ததில்லை. அவர் திறமையுடன் கற்பித்தது ஒருபுறமிருக்க, கட்டுரை எழுதுவதில் அவர் கற்பித்த முறை மிக மிக அற்புதமானது. இன்று எழுதுவது என்னிடம் இரண்டாம் இயல்பாக அமைந்திருப்பதற்கு முக்கிய காரணம் அவர் தந்த பயிற்சியே என்பது என் அதிராத நம்பிக்கை. மூன்றாண்டுப் பருவத்தில் தந்தையை இழந்த எனக்கு அவர் தந்தை முறையில் நின்று அடிக்கடித் தனிமையில் கூறிய அறவுரைகள் என் சிந்தையில் ஆழப் பதிந்து என் வாழ்க்கையை நெறிப்படுத்தின என்பதை இன்றும் நீள நினைந்து போற்றுகின்றேன். இவையெல்லாம் இன்று என் நினைவில் ஒன்றன்பின் ஒன்றாக எழுகின்றன. மேலும் இப்பேராசிரியப் பெருந்தகை திருச்சி மலைக்கோட்டையில் வாழ்ந்ததும் நினைவுக்கு வந்ததால் தாயுமான அடிகளின் பாடல்களை இறைவணக்கப் பாடல்களாகக் கொள்ளவும் நேர்ந்தது. நிற்க

அன்பர்களே, இன்றைய பொழிவில் 'தமிழ் இலக்கியங்களில் அறம்' பற்றிய கருத்துகள் அமைந்திருப்பதை உங்களுடன் சேர்ந்து உரக்கச் சிந்திக்கின்றேன். இவ்வுலகிலுள்ள பொருள்களை உயிர்ப்பொருள்கள், உயிரில் பொருள்கள் என இரு கூறிட்டுப் பேசலாம். உயிர்ப் பொருள்களின் நலத்தின் பொருட்டே உயிரில் பொருள்

கள் படைக்கப்பெற்றுள்ளன. தன் துன்பத்தை உணர்ந்து வருந்துவதும், தன் இன்பத்தை உணர்ந்து களிப்பதும் எல்லா உயிர்கட்கும் பொதுவான இயல்பு என்பதை நாம் அறிவோம். ஆனால், மக்கள் வாழ்க்கையின் தனிச்சிறப்பு அதில் பகுத்தறிவு விளக்கம் அடைந்திருப்பதும் இன்பத்தை அவாவி நிற்றலுமேயாகும் என்பதையும் உணர்கின்றோம். ஏனைய உயிர்களைப்போலவே மனிதன் ஐயறிவு நிரம்பப் பெற்றவனாயினும் அவற்றிடம் அமையாத மனம் என்னும் கருவியை அவன் பெற்றுள்ளான். இந்தச் சிறந்த கருவியைப் பெற்றுள்ள அவன் அதைப் பண்படுத்தவும், பயன்படுத்தவும் வல்லவனாகவும் விளங்குகின்றான். மனிதனுடைய வாழ்க்கை மெய், வாய் மூக்கு, கண், செவி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வாழும் வாழ்வு மட்டிலும் அன்று. இவையுமாய் இவற்றிற்கு அப்பாலுமாய் உணர்ந்து அறிந்து மனத்தால் வாழும் வாழ்க்கையாகும் அவனது திரு வாழ்க்கை. அறியாமை வாயிலாக வரும் துன்பங்களை நீக்கி இன்பத்தை நுகர்தற் பொருட்டே இவனிடம் அறிவு விளக்கம் அமைந்துள்ளது. இதனையுணர்ந்த தொல்காப்பியனார்.

> 'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.[3]

என்று கூறியிருப்பதைச் சிந்திக்கின்றோம். இங்ஙனமே பிற்காலத்தார் உறுதிப்பொருள்களை அறம், பொருள், இன்பம் எனப் பாகுபடுத்தி ஓதியது போலாது அவர்,

> இன்பமும் பொருளும் அறனும் என்றாங்(கு)
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை[4]

3. தொல். பொருளியல். நூற்பா. 27 (இளம்)

4. ஷெ. களவியல். நூற்பா-1 (இளம்)

என்று ஓதியவற்றானும் இதனை நன்கு அறியலாம். இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே டாக்டர் மு. வ. தமது "**திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்**" என்ற தம் அருமையான நூலில் நூற்பொருளைத் திருக்குறளில் காணப்பெறுவது போல் அறம், பொருள், இன்பம் எனப் பகுத்தோதாது இன்பம், பொருள், அறம் எனப்பகுத் தோதினார் என்றே எனக்குத் தோன்றுகின்றது. இந்த அமைப்பைத் தமிழ் முனிவர் திரு. வி. க. அவர்கள் பலப் படப் பாராட்டியிருப்பது(அணிந்துரையில்) நம் கவனத்தை ஈர்க்கின்றது.

உறுதிப் பொருள்கள்:

இந்நிலவுலக வாழ்வில் மக்கள் எல்லோரும் அடைதற் கரிய உறுதிப் பொருள்களை அறம், பொருள், இன்பம், வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் பாகுபடுத்திக் கூறுவதை நாம் அறிவோம். எல்லா உயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம்; அந்த இன்பத்திற்குக் காரணமாக அறிவுடைய மக்களால் ஈட்டப்படுவது பொருள்; பிறர்க்குத் தீங்கு நினையாத மாசற்ற மனத் தால் பொருள் செய்தொழுகும் முறை அறம். நுகர்தல், வேட்கைமுறைபற்றி இன்பம் - பொருள் - அறம் என "இன்பமும் பொருளும் அறனும்" என்ற மேற்காட்டிய நூற்பாவால் வகுத்துக் காட்டினார் தொல்காப்பியர். செய்கை முறை பற்றி அறம்-பொருள்-இன்பம் எனவும் எண்ணுதல் மரபு. இம்முறையில் எண்ணுவதை,

> அந்நிலை மருங்கின் அறம்முத லாகி
> மும்முதல் பொருட்கும் உரிய என்ப.[5]

என்று கூறுவர் தொல்காப்பியர். வீட்டினைப் பற்றித் தொல்காப்பியர் தனியாக எடுத்தோதவில்லை. "உலகின்

5. செய்யு. 106. (இளம்)

பொருள் மூன்றினையும் கூறுவான் அவற்றை மும்முதல் பொருள் என்றான், அவையின்றி வீடுபெறுமாறு வேறின்மையின் வீடும் ஆண்டுக் கூறினான் என்பது'' என்ற பேராசிரியரின் உரைப்பகுதியால்ஆசிரியர் எடுத்தோதாதன் காரணத்தை அறியலாம். இந்த மூன்றினைத் தவிர அறிவுடைய மக்களால் விரும்பி மதிப்பதற்குரியன பிற இன்மையின் இம் மூன்றினையும் '**மும்முதற்பொருள்**' என்று ஆசிரியர் சிறப்பித்துள்ளமை உய்த்துணரத்தக்கது. அறவழியில் பொருளாக்கி அப்பொருளால் இன்பம் நுகர்தலே மக்களது விழுமிய நல்வாழ்க்கை முறையாகும். இவ்வாறு மூன்று பகுதிகளாக நிகழும் இவ்வுலக வாழ்க்கையின் பகுதியினை ''**மூன்றன் பகுதி**'' எனத் தொகுத்துரைப்பர் தொல்காப்பியர். வள்ளுவப் பெருந்தகையும் தொல்காப்பியரின் முறையையொட்டியே தம் நூலை அறம், பொருள், இன்பம் என முப்பால்களாக வகுத்தருளினார் என்பது ஈண்டு நோக்கி உணரத்தக்கது.

இன்பநிலை, பொளிருயல்பு போன்றவற்றை விளக்குவது பொருத்தமின்மையால் அவற்றை ஈண்டு விளக்கவில்லை. இவை பற்றிய விளக்கத்தை என் பிறிதொரு நூலில்[6] காணலாம். ஆசிரியர் மூன்றாவதாக நிறுத்திய '**அறம்**' என்னும் முடிந்த பொருளை ஈண்டு ஆராய்வது பொருத்தமுடையதாகும். அறமும் அன்பினையே முதலும் ஈறுமாகக் கொண்டு ஈட்டப்படுதலும் நுகரப் பெறுதலும், செய்யப் பெறுதலும் வேண்டும். என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். இது 'இன்பமும் பொருளும்' என்ற நூற்பாவின் முதலிரண்டு அடிகளினால் இனிதுபெறப்படும். வள்ளுவப் பெருந்தகையும்,

---

6. **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை** (மூன்றாம் பதிப்பு) (பழநியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை -600 014)

அறத்திற்கே அன்பு
சார்பென்ப அறியார் (76)

என்று ஓதியுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கி உணரத்தக்கது. எனவே, உண்மையன்பு இன்றி யாதாவது ஒரு பயன் கருதி ஆற்றும் அறம் நன்மை பயவாமை நன்கு அறியப்படும். இங்ஙனம் பயன் கருதி அறம் செய்வார் தமது கைப்பொருளாலன்றிப் பிறரது பொருளாற் செய்தற்கும் துணிவர். ஆண்டியை அடித்துத் தாதனுக்குக் கொடுப்பதும், கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதும் (Robbing the Peter and Paying to the Paul) இன்று நாம் பல துறைகளில் காணும் காட்சியாகும், எல்லா உயிர்களிடத்தும், எல்லா மக்களிடத்தும் நெகிழ்ந்த அன்பு கொண்டு, எவ்வுயிர்க்கும், எவர்க்கும் தீங்கு நேராத முறையில் பெயர் புகழை வேண்டாது அறம் செய்வதே செய்வோர்க்கும் பிறர்க்கும் உண்மையில் பயன்படுவதாகும். அன்றியும், தொல்காப்பியனார் 'அறம்' என்பதை ஒன்றாகக் கூறினாரேயன்றி அதனை 'இல்லறம்' 'துறவறம்' என்று இரண்டாகப் பகுத்து யாண்டும் ஓதினாரில்லை. அவர், இம்மை இன்பம் விழைந்து தாம் காதலன்பு பாராட்டிய மனைவி மக்களோடு ஒருங்கிருந்து நடத்திய அன்பு வாழ்க்கையும், மறுமை இன்பம் அவாவி மனைவி மக்கள் தமக்குத் தொண்டு செய்ய இம்மை முயற்சியினின்று நீங்கி இறைவன் திருவருளில் தமது உணர்வினைத் தோய்வித்திருக்கும் தவ வாழ்க்கையும் ஓர் அறத்தினுள்ளேயே அமைந்த இருவகை நிலைகளாகும் என்ற கருத்துடையவர். இதனை,

காமஞ் சான்ற கடைகோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே[7]

---

7. கற்பியல்-51 (இளம்)

என்ற நூற்பாவால் தெற்றென அறியலாம். 'காதலின் பால் துய்த்த காம வின்பம் நிறைந்து கடைக் கொண்டு வாழ்நாள் எல்லையின் நடுக்காலத்தில் தமக்குக்காவலாய் அமைந்த தம் புதல்வரோடு கூடியிருந்தும், தாம் அதுகாறும் செய்து போந்த அறத்தை இனித் தாம் செய்யலாகாமையின் தமக்காக அவ்வறத்தைச் செய்யும் சுற்றத்தாருடன் அமர்ந்தும் குடும்பத் தலைமகனும், தலைமகளும் சிறந்ததாகிய தவத்தில் தம துணர்வினைப் பயிலச் செய்தல் தாம் அதுகாறும் செய்து போந்த காதல் மனைவாழ்க்கையின் பயனாகும்' என்பது இதன் கருந்து. இதிலிருந்து நெஞ்சினால் துறத்தலே 'துறவு' என்பது அறியப்படும். ஒவ்வொருவருக்கும் இத்தவ ஒழுக்கம் இன்றியமையாதது என்பது தொல்காப்பியரின் கருத்து.

'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே'[8] என்பது நன்னூல் விதி. வழி வழியாக தமிழர்கள்பால் மரபாக வழங்கி வந்த கருத்தே இலக்கணத்தில் நூற்பா வடிவில் காணப்பெறுகின்றது. வடமொழிவாணர்கள் இக்கருத்தையே தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறுவர். இந்த நான்கு பொருள்கள் இன்பம் ஒன்று நீங்கலாக ஏனை மூன்றையும் முன்னோர் '**புறப்பொருள்**' என்று வழங்கினர், சுருங்கக் கூறின் இன்பம் '**அறம்**' என்றும் பொருள் '**புறம்**' என்றும் கூறி விடலாம். பொருளை ஒழுங்காகப் பயன் படுத்துவதனால் பொருளை நுகரும் இன்பத்தினும் சிறந்த பேரின்பமாகிய வீடு பேறு உண்டாதலின் ஒழுங்கு முறை என்னும் அறமும், அதன் பயனாகிய வீடும் பொருளோடு சேர்த்துப் 'புறப்பொருள்' என வழங்கலாயின.

இன்பம் என்பது வெறும் பொருளை மட்டும் நுகரும் இன்பமாக இருப்பின் அதுவும் புறப்பொருள் என்றே வழங்

8. நன்னூல் — 10

கும். ஆனால் அகப்பொருள் என்று கூறப்பெறும் இன்பமாவது, உயிரறிவின் அன்பை நுகரும் இன்பமாதலின் அது தனியாக 'அகம்' என வழங்கலாயிற்று. வீடு என்னும் நிலை, சொல்லுக்கும் பொது உணர்வுக்கும் எட்டாத உணர்விறந் சிறப்பு உணர்வு நிலையாகக் கருதப் பெறுகின்றது. அது அறவொழுக்கத்தின் பயனாக உண்டவதாயுள்ளது. ஆதலால் அதனை அறம் என்பதிலேயே அடக்கிக் காரணவகையாற் சான்றோர் கூறினர். ஆதலால் நூல்களால் விளக்கிப் பேசக்கூடிய உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று என்பது வழக்காக அமைந்து விட்டது. வாழ்க்கையின் பல நிலைகளும் இவ்வாறு இம்மூவகைப் பாகுபாட்டில் இனிதமைந்து நூல்களில் அங்கங்களாக விளக்கப்பெற்றுவருகின்றன. இவ்வாறு விளக்கப்படும் நூல்களுள் தனிப் பெருமையும் சிறப்பும் உடையது திருக்குறள்; 'தமிழ் மறை' என்றும் போற்றப் பெறுவது. இதனைச் சிறந்த அறநூல் என்று வழங்குவது முற்றிலும் பொருந்தும்.

இவ்விடத்தில் ஒருமுக்கிய கருத்தை நினைவிற் கொள்ள வேண்டும்.

புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்[9]

என்று மணிவாசகப் பெருமான் கூறும் மக்களே வாழ்க்கைச் சிறப்புடையவர்கள். இவ்வாறு மக்கள் வாழும் வாழ்க்கை சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம் என்ன? மனிதனிடம் மனம் என்னும் சிறந்த கருவி அமைய பெற்று அதை அவன்

9. திருவா. சிவபுராணம்-அடி 26-31

பண்படுத்தவும் பயன்படுத்தவும் வல்லவனாக விளங்குவதே காரணமாகும். உலகிலுள்ள உயிர்வாழ் பிராணியிடம் அமைந்திருக்கும் மூளையில் மனித மூளை நாற்பத் தொன்பது அவுன்சு எடையுள்ளது. யானையின் மூளை இந்த அளவு உள்ளது. ஆனால் மனிதப் பெரு மூளையில் (Cerebrum) பலமடிப்புகள் அமைந்திருப்பதைப் போல் யானையின் மூளை அமைந்திருப்பதில்லை.

இந்த மனம் பண்படும் இடம் காதல் வாழ்க்கை; மனம் பயன்படும் இடம் பொது வாழ்க்கை; மனம் வாழும் இடமே தனி வாழ்க்கை. வள்ளுவப் பெருந்தகை காமத்துப் பாலில் காதல் வாழ்க்கையை விளக்குகின்றார். அவர் காதல் கொண்டவரிடம் நன்றாகக் கலந்தும் கரைந்தும் மனம் பண்படும் வகையைத் தெளிவாக விளக்குகின்றார். பொருட்பாலில் பொதுவாழ்க்கையைத் தெளிவு படுத்து கின்றார். மனிதன் அறிவின் வழியாக இயங்கிப் பொதுக் கடமைகளைப் புரிந்து மனம் பிறருக்கும் தனக்கும் பயன் படும் வகையைத் தெளிவுறுத்துகின்றார். அறத்துப்பாலில் தனி வாழ்க்கையை வரையறுத்து அறத்தைப் போற்றி மனம் தூய்மை பெற்று வாழும் வகையைத் தெளிவாகப் பேசுகின்றார்.

'அறம்' என்ற சொல் விரிந்த பொருளையுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். தமிழர் வாழ்க்கையில் - அகவாழ்க் கையிலும் புறவாழ்க்கையிலும் அறம்- கடைப்பிடிக்கப்பட்டு வருதலைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகவும் தெளி வாகவும் புலப்படுத்தியிருப்பதைக் கண்டு மகிழலாம். 'அறம்' என்ற சொல் நீதியைக் குறிக்கும்; அதற்கு மேலும் பல பொருள்களைத் தரும். இதனை நாளைய சொற்பொருளில் விளக்க முயல்வேன். 'அறம்' என்ற சொல் இடத்திற்கேற்ப பல பொருள் களில் வழங்கப்படுகின்றது. கருத்துப் பொருள் இப்படிப்

பலவகையில் இருந்தாலும் அவையெல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ள அதன் சொற்பொருள் 'அற்றது' என்பதாகும். அது பற்றற்ற நிலை; தன்னலப்பற்று அற்ற தூய்மை; நுட்பமும் ஆற்றலும் கொண்ட அந் நிலையை 'உண்மை' என வழங்கலாம். 'நன்மை' என் றும், 'நேர்மை' என்றும், 'குணம்' என்றும், 'நல்லூழ்' என்றும் 'கடமை' என்றும் பிறவாறும் கருதலாம். ஆகவே தொல்லாசிரியர்கள் 'அறம்' என்பதை பல்வேறு கருத்து களிலும் ஆள்வர்.

பொதுவாக நல்ல கருத்துகளையெல்லாம் 'சிவம்' என்ற சொல்லால் நம் பண்டையோர் உணர்த்துவது போல 'அறம்' என்ற சொல்லும் பல நல்ல கருத்துகளை யெல்லாம் தன்னுள் அடக்கியுள்ளது எனலாம். எல்லாம் வல்ல முழு முதற் கடவுளைச் 'சிவம்' என்று வழங்கி னால், அதன் இயக்கத்தை, செயலை, செயலாற்றலை, அருளை 'அறம்' எனலாம். இக்காரணத்தால் அறம் அம்மையைக் குறிக்கும்; அதாவது சிவத்தின் ஆற்றலை, நெறிமுறையை, எதிரற்ற இயக்க வல்லமையைக் குறிக்கும். அம்மை அப்பன் வேறு என்பது பொருந்தாததைப் போலவே, அறமும் சிவமும் வேறு அல்ல என்பது போதரும். திருக்குறளில் அறத்துப்பாலில் கூறியுள்ள அனைத்துக் கருத்துகளும் 'அறத்தில்' அடங்கும்; ஏனைய இரண்டு பால்களிலும் கூறப்பெற்றுள்ள சில கருத்துகள் ஒரோ வழி அறத்தில் அடக்கிக் காட்டலாம்.

வள்ளுவப் பெருந்தகை அறத்தில்-அறநெறியில்-அழுத் தமான நம்பிக்கையுடையவர். ''மறந்தும் பிறர்க்குத் தீங்கு பயப்பனவற்றை எண்ணக்கூடாது. அவ்வாறு எண் ணினால் எண்ணியவனுக்கே கெடுதி விளையும். அவ்வாறு விளையுமாறு அறமே செய்துவிடும்'' என்கின்றார்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு (204)

என்பது அவர்காட்டும் அறவழி ஒளிவிளக்கு. முடிவு நல்ல தாக ஏற்படுமானால் அதுவே போதும் என்றும், அந்த முடிவை அடைவதற்கு உரியவழி தவறாக இருந்தாலும் கவலை இல்லை என்றும் சில அறநூல்கள் கருதும். வழியைப்பொருட்படுத்தாமல், முடிவைப் பற்றி வற் புறுத்திக் கூறும் (End justifies the means) நூல்களும் உள்ளன. ஆனால், வள்ளுவர் பெருமானுக்கு இக்கருத்து உடன்பாடு அல்ல. கருதிய முடிவை அடைய முடிந்தாலும் முடியாவிட்டாலும் அதற்கு உரிய வழி தூய்மையாகவே இருக்க வேண்டும் என்பதே இப்பெருமானின் அசைக்க முடியாத கோட்பாடு. இதனை அப்பெருமான் பல இடங் களிலும் வற்புறுத்துகின்றார். ''பெற்ற தாயின் பசியையே காணநேர்ந்தாலும், அதனைப் போக்குவதற்காகவும் சான் றோர் பழிக்கும் தீய செயல்களைச் செய்யக்கூடாது'' (656) என்பார். ''பிறர்க்கு உதவியாக ஈதல் நன்று. அதனால் மேலுலக இன்பம் கிட்டும்'' என்பார். ''அந்த மேலுலகம் இல்லையென்று மறுக்கப்பட்டாலும் ஈதலே நல்ல அறச்செய லாகும்'' (222) என்று கூறுவார்.

உயர்ந்த குறிக்கோள் நெறியுடன் வாழ வேண்டும் என்பது அவரது தலையாய நோக்கம். அறநெறியைப் போற்றி வாழ்வதால் இந்த உலக வாழ்வுக்கு இடை யூறாகும் என்றாலும் அந்த இடையூற்றினை ஏற்றுக் கொள்வதே நல்லது என்று கருதுவார் அந்தப் பெருந் தகை. அதனால் உயிர் போவதானாலும் போகட்டும் என்று வலியுறுத்துவதே அவர்தம் போக்கு. ''பிறர் இல் லாத போது பழித்துப் பேசிப் பொய் நெறியில் வாழ்க்கை நடத்துவதை விட, வாழாமல் செத்துப் போவதே நல் லது. அறத்தின் பயனாகிய நன்மை அதனால் கிடைக் கும்'' (183) என்று அவர் வற்புறுத்துவதைக் காணலாம். ''பிறருக்கு உதவியாக வாழும் ஒப்புரவு நெறியால் கேடு வரும் என்றால், தன்வாழ்வை விற்றாவது அந்தக் கேட் டைப் பெறுவது தக்கது'' (220) என்பார். ''நடு நிலைமை

தவறிப் பெறக்கூடிய செல்வம் நன்மையே தருவதாக இருந்தாலும் அதை அப்போதே நீக்கிவிட வேண்டும்'' (113) என்று அறிவுறுத்துவார். இப்படியாக அவர்கூறும் நெறிகளை-அறவாழ்வை-விரித்துக்கொண்டே போகலாம்.

திருமுருகாற்றுப் படையில்,

அறுநான் கிரட்டி இளமை நல்லியாண்(டு)
ஆறினிற் கழிப்பிய அறனில் கொள்கை
(அடி 188-189)

என்ற அடிகளில் குறிப்பிடப்பெறும் 'அறனில் கொள்கை' என்பதற்கு 'நாற்பத்தெட்டுயாண்டு பிரமச்சரியங் காத்து அந்தணர் அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பாட்டினை யுடையவர்கள்' என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். ஈண்டு அற நூல்களில் குறிப்பிடப்பெற்ற கோட்பாடு என்பதற்கு திருக்குறள் போன்ற நூல்களில் நுவலப் பெற்றுள்ள கருத்துகளையே குறிப்பிடுகின்றார் என்று கொள்வதில் தவறில்லை.

பெரும்பாணாற்றுப் படையிலுள்ள 'அறம்புரி செங்கோல்' (அடி-36) என்பதற்கு அறத்தை விரும்பின செங்கோலினையுடைய' என்று பொருள்கூறுவர். ஓர் அரசன் போரில் பெறும் வெற்றி படைபலத்தால் மட்டிலும் அன்று; அஃது அறநெறி வழுவாத ஆட்சியாலேயாகும் என்று கூறும் புறநானூறு.

கடுஞ்சினத்த கொல்களிறும்
கதல்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்[10]

10. புறம்-55

[களிறு-ஆண்யானை; கதல்பரிய-
விரைந்த செலவையுடைய; கலிமா-
மனம் செருக்கிய குதிரை; நெடுங்
கொடி-நீண்டகொடி; நிமிர்தேர்-
உயர்ந்த தேர்; மறவர்-வீரர்]

இது பாண்டியன் இலவஞ்சிகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்கு மதுரை மருதன் இளநாகனார் கூறியதாகும். இதில் படை பலத்தைவிட அறநெறி அதிகமாக வற்புறுத்தப்பெறுவதைக் காணலாம். அரசனுக்கு வெற்றி தருவது அவன் கையில் உள்ள வேல் என்று பலர் எண்ணுகின்றனர். அது தவறு என்றும், அவன் ஏந்திய செங்கோல்தான் உண்மையாக வெற்றி தருவது என்றும் வள்ளுவர் கூறுவார்.

வேலன்று வெற்றி தருவது; மன்னவன்
கோல்; அதூஉம் கோடாது எனின் (546)

என்ற அவரது வாக்கு ஈண்டு சிந்தித்தற்கு உரியது.

மக்களாட்சி நடைபெறும் இக்காலத்தில் தேர்தலில் வெற்றி பெறுவது பணபலத்தால் மட்டிலும் அன்று; தேர்தலுக்கு நிற்பவர் தம்முடைய நற்செயலாலும், உயர்ந்த பண்பாலும் மக்கள் மனத்தைக் கவர்ந்திருந்தால் எதிர்த்தரப்பில் நிற்பவரின் பணபலத்தால் நடைபெறும் பிரசார பலமும்,அதிகாரபலமும் ஒன்றும் செய்ய முடியாது. இவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாது மக்கள் தாமாக வந்து வாக்களித்து விடுவார்கள். 1952-இல் நடைபெற்ற இடைத்தேர்தல் ஒன்றில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை (சுயேச்சை வேட்பாளர்) ஆட்சிப் பொறுப்பிலிருந்த கட்சி வேட்பாளர் தோற்கடிக்க முடியவில்லை என்பதைக் காண முடிந்தது. பெருந்தலைவர் காமராசரே ஒரு தேர்தலில் தோற்றுப் போனார் என்றால், இதைப் பற்றி அதிகம் பேசவேண்டியதில்லை.

இன்று சங்க நூல் ஆராய்ச்சியாளர் இந்நூல்கள் பண்டைய தமிழர்களின் சிறந்த வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்று புகழ்வது எனக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. தமிழ்ச் சான்றோர் களாகிய புலவர்களின் கருத்துகளைக் கொண்டு பொதுமக் களின் வாழ்க்கை உயர்ந்த நிலையில் இருந்தது என்று கூறுவது அவ்வளவு சரியன்று. ஏதோ ஒன்றிரண்டு அர சர்கள் சிறந்த கல்விமான்களாகவும், சான்றோர்களின் அறு வுரைக்குச் செவி சாய்ப்பவர்களாகவும் இருந்தனர் என்பது உண்மையே. இது பல பாடல்களால் உறுதிப்படுகின்றது. ஆனால் பெரும்பாலான பேரரசர்களும், சிற்றரசர்களும், வேளிர்களும் போர்களிலேயே தம் வாழ்நாட்களைக் கழித் தனர் என்ற செய்திகளே மிகுதியாகப் பாடல்களில் காணப்படுகின்றன. பொதுமக்களிடமும், -ஏன்? மேட்டுக் குடிமக்களிடமும்-குடிப்பழக்கம் மிகுதியாக இருந்ததையும் பாடல்களால் நன்கு அறிகின்றோம். ''சங்க கால நூல் கட்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. சங்க காலத்து வாழ்க்கை வேறு, அக்காலத்து நூல்கள் வேறு அல்ல. வாழ்க்கையே நூல்களாக உருவுற்றது'' என்று கூறுவோர் கூற்று சங்க காலச் சான்றோர் வாழ்க்கையையே - அவர்தம் உயர்ந்த குறிக்கோளையே - காட்டுகின்றதேயன்றி பொதுமக்களின் வாழ்க்கையையன்று என்பதே என் உள்ளத்தில் தோன்று கின்றது.

ஆயினும், சங்க இலக்கியங்களில் காணும் சில அர சர்கள் அரச முனிவர்களாகத் திகழ்கின்றனர்; பெரும் பாலான புலவர்கள் அந்தண அறவோராகக் காணப் படுகின்றனர். சில வேளிர்கள் தந்நலம் காணா வள்ளல் களாகத் திகழ்கின்றனர். பிறர்க்கென வாழும் பெற்றியர் களாகப் பிறங்குகின்றனர். வீரர்களும் புலவர்களும் செய்ந்நன்றி மறவாச் செம்மல்களாக விளங்குகின் றனர். மாதர்கள் நடுநிலைப் பிறழாப் பெருந்தொண் டர்களாய்த் திகழ்கின்றனர். எனினும் பொதுமக்கள்

வாழ்க்கை இங்ஙனம் இருந்தது என்றுகூற என் மனம்துணிய வில்லை. சங்க காலப் பொதுமக்கள் வாழ்க்கை சிறந் திருந்தது என்று வானளாவப் புகழ்வது உண்மைக்கு மாறா னது; பொருந்தாதது. பாடல்களில் காணப்படும் குறிப்பு கள் சான்றோர்கள் சிலரது வாழ்க்கையையே காட்டு பவை; அவர்தம் குறிக்கோள் நிலையையும் தெரிவிப் பவை. பொதுமக்கள் வாழ்க்கையைக் காட்டுவனவாகச் சொல்ல முடியாது.

மனத் தூய்மையின் அடிப்படையில் அமைவதுதான் அறவாழ்க்கையாக இருக்க முடியும் என்று குறிப்பிட் டேன். மனத்தூய்மை இல்லையாயின் காதல் வாழ்க்கை யால் மனம் பண்படுவதும் இல்லை. பொது வாழ்க்கை யிலும் அந்த மனம் தக்கவாறு பயன்படுவதுமில்லை; தூய்மையற்ற மனம் தானும் பண்படுவதில்லை. பிறர்க் கும் பயன்படுவதுமில்லை. தூய்மையே மனத்தின் ஆற்றல். தூய்மை மிகுவதற்கேற்ப மனத்தின் ஆற்றலும் பெருகும். வளர்ந்தோங்கும். தூய்மையுள்ள மனமே முற்றிலும் பண் படும்; முழுதும் பயன்படும். முழு வாழ்வு வாழும் இந்தத் தூய்மையை விளக்குவதே திருவள்ளுவரின் அறத்துப் பாலின் நோக்கமாகும். அறத்தின் அடிப்படை மனத் தூய்மை என்பார்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
ஆகுல நீர பிற (34)

என்ற குறளால் விளக்குவார். மனத்தூய்மை காதலியோடு வாழும் போது தெரிவதில்லை; பொது வாழ்வில் கடமையை ஏற்றுச் செய்யும் போதும் அது புலப்படுவதில்லை. மனத் தின் தன்மை இன்னது என்பதைத் தனி வாழ்க்கையில் மட் டுமே தெளிவாகக் காணமுடியும். தனி வாழ்க்கையில்தான் மனநிலை தெளிவுறுகின்றது. அப்பொழுதுதான் மாசுபட்ட நிலையையும், அல்லது மாசுபடா நிலையையும் அறிய முடிகின்றது. திருவள்ளுவர் அறத்துப்பாலில்

விளங்க உரைப்பது இத் தனிவாழ்க்கையேயாகும். மனம், உள்ளம் என்னும் சொற்கள் காமத்துப்பாலிலும், பொருட் பாலிலும் எங்கோ ஓரிரண்டு இடங்களில்தான் காணப்படு கின்றன. அறத்துப்பாலில்தான் இச்சொற்கள் பல இடங் களில் திரும்பத்திரும்ப கையாளப்பெறுகின்றன. அற நெறியில் வாழ்ந்தால்தான் இன்பம் உண்டு என்றும் அந் நெறி தவறினால் துன்பம் உண்டு என்றும், அதனால் மனம் தூய்மைப் பட்டு அறநெறியில் நிற்றலே இன்ப வாழ்க்கைக்கு வழி கோலுவதாகும் என்றும் அறத்துப்பா லில் விளக்கம் அடையச் செய்கின்றார்.

ஆனால் இந்த விளக்கம் யாருக்குப் பயன்படும்? இன்றைய 'நாகரிக உலகில்' பலருக்குத் தனி வாழ்க்கையே இல்லை என்பது தெளிவு. இன்றைய நகர வாழ்க்கையில்—ஏன்? நரக வாழ்க்கையில்—மனிதன் வாழ்வது இயந்திர வாழ்க்கை. ஏதோ தொழிலை நாடிப் பகற்பொழுது முழுதும் அதில் கழிந்து போகின்றது. எஞ்சிய நேரம் தொழில் தொடர்புடையவர்களோடு கழிகின்றது. வழக் குரைஞர்கள், மருத்துவப் பெருமக்கள், ஆசிரியப்பெருமக் கள் போன்ற அறிவாற்றலுள்ள வகுப்பினரும் (Intellectual Class) இதற்கு விலக்கு இல்லை. இரவில் இல்லம் வந்து உறங்கி விடுகின்றனர். நகரங்களில் பெரும்பாலோரின் வாழ்க்கையில் இந்த நிலையைத்தான் காண்கிறோம். தொழிலாளர்கள் நிலையைச் சொல்ல வேண்டியதில்லை. பலர் ஊதிய அளவறிந்து வாழத் தெரியாததாலும், வருவாய் பலருக்குப் போதாமையாலும் வீட்டிற்கு வந்ததும் பொருளாதாரச் சிக்கலமைந்த வாழ்க்கைதான் பலருக்கு அமைந்துள்ளது. அவர்கள் தங்கள் வீட்டிலும் பொருட் பாலைத்தான் காணமுடிகின்றது; அறத்துப்பால் அவர்கள் கண்களுக்குத் தட்டுப்படுவதில்லை; சிந்தையிலும் எழுவ தில்லை. கருத்து ஒருமைப்பாடு இல்லாத கணவனும் மனை வியுமாக வாழ்வோர் பலர். மரபுவழியில் பெற்றோர் கருத்துப்படி மணம் புரிந்து கொண்டவர்களின் நிலையிலும்,

தாமே தேர்ந்தெடுத்துக் கொண்டு களவுமுறையில் மணந்து கொண்டவர்கள் நிலையிலும் இதனைத்தான் காணமுடிகின்றது.

வீட்டிலும் மனநிலை தெளிவாகப் புலப்படுவதற்கு வாய்ப்பில்லை. வெளியுலக வாழ்வில் காணும் பொருளாதாரப் போர் வீட்டிலும் சிறிய அளவில் தலைகாட்டுகின்றது. இந்தச் சூழ்நிலையில் அன்பும் ஆர்வமும் தலையெடுக்க இடம் ஏது? ஆயினும் இந்தச் சூழ்நிலையில் வாழ்கின்றவர்களுக்கும் என்றேனும் ஒரு நாள் ஒரு வேளை தனித்திருக்கும் வாய்ப்புக் கிடைக்கும்போது மனம்எழுந்து தன்னை விளக்கிக் கூறுவதுண்டு. ''தன்நெஞ்சே தன்னைச் சுடும்'' (293) என்றவாறு மனஆற்றல் செயற்படும். இதனைத்தான் நாம் 'மனச்சான்று' என்று வழங்குகின்றோம். இந்தச் சான்றே உள்ளப்போராட்டத்தை நிகழ்த்தி வரும் அற்புதஆற்றல். இங்ஙனம் தனிவாழ்க்கை வாழ்ந்து உள்ளப் போராட்டத்தை உணர்வோரில் சிலர் திருந்தி நல்லவர்களாதலும் உண்டு. இந்நிலையில் அவர்கள் மாசடைந்த மனத்தை நன்கு உணர்ந்து வருந்தி மாசு போக்கித் தூய்மை அடைவதும் உண்டு.

இந்த வாய்ப்பையும் பலர் இழந்து விடுகின்றனர். இத்தனைப் போராட்டத்தைத் தாங்க முடியாமல் புலன்களை மயக்கும் வகையில் ஏதாவது ஒன்றை நாடிச் சென்று விடுகின்றனர். இந்த மயக்கம் வந்து அமைந்தால் மனம் தன் நிலையை விளக்காமல் மங்கி நிற்கும்; ரசம் போன கண்ணாடி போலாகிவிடும். இதனால் மனச்சான்று தன் குற்றத்தை இடித்துச் சொல்லாதவாறும் தடுக்க முடிகின்றது. இதனால் அந்த நேரத்திற்கு அவர்கட்கு நன்மை பயப்பதைக் கண்டவுடன் அடுத்த நேரத்திற்கும் அதையே விடாமல் நாடுகின்றனர். தனி வாழ்க்கை கிடைத்த போதெல்லாம்—மனப் போராட்டம் தொடங்கும் போதெல்லாம்—அதனை நாடி நாடி உளப்போராட்

உத்திற்கே இடம் இல்லாது செய்து விடுகின்றனர். இந்த மயக்கத்தை விளைவிக்கும் மூலங்கள் எவை? வரைவின் மகளிர், மதுபான வகைகள், சூதாட்ட முறைகள், கெட்ட நாடகம் அல்லது படக்காட்சிகள், கெட்ட புதினங்கள் போன்ற தீய கலைப்பகுதி ஆகியவையே இவை. இவற்றில் அடைக்கலம் புகாதிருக்கும் பொருட்டே வள்ளுவர் பெருமான் தமது அறநூலில் கள்ளுண்ணாமை, வரைவின் மகளிர், கூடா நட்பு, சிற்றினம் சேராமை, தீநட்பு, சூது, பிறனில் விழையாமை போன்ற அதிகாரங்களில் நம்மை அந்த வழியில் செல்லாமல் தடுத்து நிறுத்துகின்றார். இத்தகைய அறிவுரைகளைக் கேட்பவர்க்கே இது பயன் படும்; மனச்சான்றும் சுடும். அண்மையில் நம்முடன் வாழ்ந்த பாரதியார் கூடத்தான்,

சென்றதினி மீளாது மூட ரே;நீர்
    எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
    குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டா;
இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நீவிர்
    எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;
    தீமையெல்லாம் அழிந்துபோம் திரும்பி வாரா.[11]

என்று கடந்ததை மறந்து புதிய வழியை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றார். மேலும்,

பேயாய் உழலும் சிறுமனமே
    பேணாய் என்சொல் இன்றுமுதல்;
நீயாய் ஒன்றும் நாடாதே;
    நினது தலைவன் யானேகாண்;
தாயாம் சக்தி தாளினிலும்
    தருமமெனயான் குறிப்பதிலும்

11. பா. க: வே. பா. 'சென்றது மீளாது'

ஓயா தேநின் றுழைத்திடுவாய்
உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.[12]

என்று நமது மனச்சான்றை எழுப்புகின்றார்; மனத்தை நல்வழியில் ஆற்றுப்படுத்துகின்றார். இவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியானால் யார்தான் என்ன செய்ய முடியும்?

உறுதிப்பொருள் நான்கையும் 'அகம்' என்றும் 'புறம்' என்றும் வகைப்படுத்தி மொழியலாம் என்றும், இன்பத்தை நுவலும் பொருள் அகத்தில் அடங்கும் என்றும், ஏனையவை புறத்தில் அடங்கும் என்றும் முன்னர்க் கூறினேன். ஈண்டு முதலில் அகப்பொருளில் 'அறம்' செயற்படுவதைக் காட்டுவேன்.

1. அகப்பொருளில்

இன்பத்தை நுவலும் அகப்பொருள் முழுவதிலும் அறம் இழையோடுவதைக் காணலாம். பருவம் நிரம்பிய ஆண்மையும் பெண்மையும் பார்த்ததும் உள்ளம் ஒன்றிக் காமப் பித்தேறுவதன் காரணம் யாது? உளவியலார் பாலுந்தல் (Sex drive) என்று கூறுவர். எண்ணற்ற நம்பியரும் நங்கையரும் நாடோறும் சாலையிலும், சோலையிலும், இளமரக்காவிலும், படக்காட்சிக் கொட்டகைகளிலும், பிற இடங்களிலும் காணப்படுகின்றனர். என்றாலும் யாரோ ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கின்றான்; யாரோ ஒருத்தி ஒருவன்மீது கண் வலை வீசுகின்றாள். பலரை விலக்கி ஒருவரைத் தேர்ந்து விழையும் இச்சிறப்புப் பார்வை ஆய்தற்குரிய அரிய சிக்கலாகும். எனினும் நம் முன்னோர் இதற்குக்காரணம் காணவும் முனைந்தனர்.

12. ஷெ : ஷெ - 'மனத்திற்குக் கட்டளை'

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப.[13]

[பால்-ஊழ்]

என்ற நூற்பாவால் காரணம் காட்டி விளக்குவர் தொல் காப்பியர். நல்லூழின் ஏவலால் காட்சி நிகழும் என்பது அப்பேராசிரியரின் கருத்தாகும். 'கிழவனும் கிழத்தியும் காண்ப' என்று இருவரையும் எழுவாயாக வைத்துக் காட்டும் சிறப்பியல் முன்னதாகக் காதலித்தவர் யார் என்ற வினாவுக்கு இடம் வைக்கவில்லை என்பது சிந்திக்கத் தக்கது. இப்பாலதாணையை, சங்கப்புலவர்களும் ஒப்புக் கொண்டதைக் காண்கின்றோம்.

பால்வரைந் தமைத்தல் அல்லது அவர்வயின்
சால்பளந் தறிதற்கு யாஅம் யாரோ[14]

[பால் - ஊழ்வினை; வரைந்தமைத்தல் - வரையறுத்துப் பொருத்தப்படுதல்; சால்பு - தகுதி; அளந்து - வரை யறுத்து]

என்று கூறுவர் பேரிசாத்தனார். காப்பு மிக்கதனால் வேறு பட்ட தலைவியின் நிலை கண்டு அதற்குக் காரணம்கேட்ட செவிலிக்குத் தலைவி கூறுவது இது. அறத்தொடுநிற்றல் என்பது துறை. அம்மூவனாரும்,

பிறிதொன் றாகக் கூறும்
ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே.[15]

[பால் - ஊழ், தெய்வம்; பிரிதொன்றாக - வேறொரு வகையாக].

---

13. தொல். களவியல்-5.
14 குறுந். 366
15 ஐங்குறு- 110.

என்று மொழிவர். இது நொதுமலர் வரைவின்கண் தோழி அறத்தொடு நின்றதாகும். ஊழ் குல மகளிர்க்கு ஒருவனைத் தலைவனாக்கிய பின்னர் மற்றொருவனைத் தலைவனாக்கும் ஆற்றலுடையதன்று என்கிறாள் தோழி.

காதற் பாங்கை அழுந்த ஆராய்ந்த மோதாசனார் என்ற மற்றொரு குறுந்தொகைப்புலவர்,

இவனிவள் ஐம்பால் பற்றவும் இவளிவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே.[16]

[ஐம்பால் - கூந்தல்; ஓரி - ஆண்தலை மயிர்; வாங்குநள் - வளைத்து இழுப்பாளாய்; பரியவும்; - ஓடவும்; தவிர்ப்பவும் - தடுக்கவும்; செரு - சண்டை; துணை பிணையல்-இரட்டை மாலை; இயற்கை - இயல்பு; நல்லை - நன்மையயுடையாய்]

என்று கண்டோர் கூற்றாகக் கூறுவர். இவர் கருத்துப் படிக் காதலர் வெவ்வேறு இடத்தவராக இருக்க வேண்டும் என்பதில்லை. முன்பின் அறியாத புதியவராதல் வேண்டும் என்பதுமில்லை. நாடோறும் பல்கால் பழகி வரும் இளையானும் இளையாளும் என்றோ ஒருநாள் திடீரெனக் காதல் தோன்றப் பார்த்தல் இயல்பாகும்! பாலை நிலத்தில் உடன் போக்கில் காதலரைக் கண்டவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். இவர்கள் சிறுபருவம் தொட்டு இவர்களை

16. குறுக். 229

அறிந்தோராதலின் பாலாற்றலை வியந்து கூறுகின்றனர். இப்பாடல் தொல்காப்பியரின் ''பாலதாணையின்'' என் பதற்கு நல்ல விளக்கமாக அமைந்து கிடத்தல் கண்டு மகிழத்தக்கது.

இங்ஙனம் ஊழ்வலியால் களவு முறையில் இணைந்த காதலர் வாழ்வில் அவர்கள் கற்பு நிலைக்கு வரும் வரை யில் அவர்கட்கு உதவியாகப் பாங்கன், தோழி, செவிலி முதலியோர் பங்கு பெறுவதை அக இலக்கியம் காட்டு கின்றது. இங்ஙனம் பங்கு பெறுங்கால் பாங்கன் தலை வியைச் சந்திக்கும் வாய்ப்புகள் உள்ளன. இந்நிலையில் பாங்கனும் தலைவியும் காதலர்களாக மாறுவதில்லை. தோழியும் தலைவனும் சந்திக்கும் வாய்ப்புகளும் உள்ளன. இந்நிலையில் இவர்களும் காதலர்களாக மாறுவதில்லை. தன் மகளைத் தேடித் திரியும் செவிலி வழியில் கண்டோ ரைக் காணும் வாய்ப்புகள் இருக்கும். இந்நிலையில் இவர்கள் பெருந்திணை ஒழுக்கத்தில் இறங்குவதில்லை. உளவியல் பாங்கின்படி இத்தகைய கைக்கிளை, பெருந் திணைக் கூறுகள் இவர்கள் உள்ளத்தில் முகிழ்த்தாலும் அவை நடைமுறைப்படுவதில்லை. இங்ஙனம் நடைமுறைப் படுத்தவும் கவிஞர்கள் விடுவதில்லை. அக இலக்கிய மாந்தர்கள் 'படிதாண்டாப் பத்தினி போல', ஓட்டப் பந் தயத்தில் ஓடும் போட்டியாளர்களைப்போல், ஒரு வரை யறைக்குள்தான் இயங்குவார்கள். இந்த வரையறையைத் தாண்டி - இந்த மரபுகளை மீறி - அகத்திணை மாந்தர்கள் ஒழுகுவதில்லை. உலகில் எந்தமொழி இலக்கியங்களிலும் காணப்படாத ஓர் உயர்ந்த தத்துவம் இது.

இந்த உயர்ந்த ஒழுக்க நெறியில் ஒரு கூறு அறத் தொடு நிற்றல் என்பது. இதை விளக்கினாலே அகஇலக் கியங்கள் அறத்தைக் கட்டிக் காப்பதை அறிந்துகொள்ள லாம். இதனை விளக்குவேன். 'அறத்தொடு நிற்றல்' என்றால் என்ன? தலைவனும் தலைமகளும் காதல் வாழ் வில்-களவு முறையில் நடைபெற்ற காதல் வாழ்வில்-இது

காறும் அறம் வழுவாமல்-அதாவது அறத்தொடு பொருந்தவே - நடந்திருப்பதாகக் காட்டி நிற்பதே இது. ஈண்டு 'அறம்' என்பதை முறை, தக்கது என்று கொள்ளல் வேண்டும். இறையனார் களவியலுரை ஆசிரியரும் ''அறம் என்பது தக்கது, தக்கதனைச் சொல்லி நிற்றல் (தோழிக்கும்) உரித்தென்றவாறு; அல்லதூஉம், பெண்டிற்கு அறம் என்பது கற்பு, கற்பின்தலை நிற்றல் என்பதூஉமாம்''[17] என்று உரைத்துள்ளமை ஈண்டு கருதத்தக்கது. தொல்காப்பியனார் அறத்தொடு நிற்றலைப் 'புரைதீர்கிளவி'[18] என்று குறிப்பிடுவார். இறையனார் களவியலுரையாசிரியர் 'மாறுகோள் இல்லாமொழி'[19] என்று கூறுவார். இந்த நூற்பாவின் உரையில், ''எற்றினொடு மாறுகொள்ளாமையோ எனின், தாயறிவினொடு மாறு கொள்ளாமையும், தலைமகள் பெருமையொடு மாறுகொள்ளாமையும், தலைமகன் கற்பினொடு மாறு கொள்ளாமையும், தோழி தனது காவலொடு மாறுகொள்ளாமையும், நாணினொடு, மாறுகொள்ளாமையும், உலகினொடு மாறுகொள்ளாமையும் எனக் கொள்க'' என்று அதன் உரையாசிரியர் நயம்படக் கூறியிருப்பது பன்முறை படித்துப் படித்து இன்புறற்பாலது. இவற்றின் விகற்பங்களையெல்லாம் எண்ணி எண்ணி அறம் இன்ப உலகில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதைக் கருதும்போது உண்மையிலேயே நாம் வியப்புக் கடலில் அமிழ்ந்து போகின்றோம். தலைவிக்கு வாய்த்த களவொழுக்க நிகழ்ச்சியினால் தன்மீது குற்றம் ஏதும் இல்லை என்று மேற்கூறியவாறெல்லாம் தோழி புலப்படுத்துவாள். மேற்கூறிய அனைத்திற்கும் குற்றமில்லாத வகையாகத் தோழி ஆராய்ந்து கூறுவாள் என்பதை உரையாசிரியர் பெற

17. இறை. கள. நூற்பா. 23 (உரை காண்க)
18. தொல். பொருள். களவியல்-23 (அடி 41-42)
19. இறை. கள. 14. (உரை காண்க)

வைத்தமையைக் கண்டு உண்மையிலேயே இறும்பூது அடைகின்றோம்.

அறத்தொடு நிற்கும் முறையும் ஒருவித ஒழுங்கிலேயே நடைபெறுவதாக அகத்துறை இலக்கணமும், அகத்துறைப் பாடல்களும் உணர்த்துகின்றன. தலைமகளால்தோழிக்கும், தோழியால் செவிலிக்கும், செவிலியால் நற்றாய்க்கும், நற்றாயால் தந்தைதன்னையர்க்கும் களவொழுக்கச்செய்தி வெளிப்படுத்தப்பெறும் என்று இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுவர்.

தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கும் என்ப நெறியறிந் தோரே.[20]

என்பது நாற்கவிராச நம்பியார் கூறும் விதி. களவொழுக்கத்தை யார்யார் யார் யாருக்கு வெளிப்படுத்தலாம் என்ற ஏணி வைத்தாற்போன்ற மனநிலைகளையுடையது என்பது இதனால் தெளியப்படும். தோழியும் அறியாது மறைந்தொழுகிய தலைவி தன் களவினை அவளுக்குக் கூறி அறத்தொடு நிற்பாள். பின்னர்த் தோழி தன் தாயாகிய செவிலிக்கும், செவிலி தலைவியின் தாயாகிய நற்றாய்க்கும் களவைக் கூறுவர். இதுவே வயதுக்கும் உறவுக்கும் ஒத்தமுறையாகும்: நற்றாயோ தலைவியின் தந்தைக்கும் உடன் பிறந்தோருக்கும் சொல்லாற் கூறாது அவர்கள் அறிந்து கொள்ளுமாறு குறிப்பால் தெரிவிப்பாள்.

தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப[21]
[முன்னம் - குறிப்பு]

என்னும் உள்நயம் நினையத் தகும். தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரும் பெண்பாலார்ஆதலின்

20. நம்பிஅகப். 48
21. களவியல்- 47

சொல்லால் சொல்லிக் கொள்ளலாம் எனவும், தந்தையும்' அண்ணனும் நெருங்கிய கேளிரேனும் ஆண்பாலார் ஆதலின் ஒரு குமரியின் களவினைக் குறிப்பால் உணரச் செய்தல் நல்லது எனவும் அகத்திணை இலக்கணம் வகுத்துக் காட்டும் மனப்படிகளின் நுட்பம் எண்ணி உணர்தற் பாலது: **'காமர்கடும்புனல்'** எனத்தொடங்கும் கலிப்பாட்டில் (கலி - 39; குறிஞ்சிக்கலி - 3) அறத்தொடு நிலையை நிகழ்ச்சி முறையால் வைத்துச் சிறுகதைபோல் வேகமாகச் சொல்லிச் செல்வதைக் கண்டு மகிழலாம்.

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்.

என்று அறத்தொடு நிற்கும் முறையினையும் சுட்டிக் காட்டியிருப்பது நோக்கத் தக்கது.

அறத்தொடு நிற்றலின் நன்னோக்கம் சங்ககாலச் சான்றோர்களின் நெஞ்சைப் பிணித்துப் பல அரிய பாடல்களை உருவாக்கியுள்ளது. பிறவழிகள் யாவும் பயனற்றுப் போன பிறகு அறத்தொடு நிற்றல் என்னும் நேர்வழியைத் தலைவியும் தோழியும் மேற்கொள்வர். நாணமும் கற்பும் உயிரனைய இருபேரொழுக்கங்களாகும்; ஒருவந்தம் காத்துப் போற்றத் தக்கவையுமாகும். ஆயினும், நாணை விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றிக் காக்க வேண்டும் என்பது பண்டைத் தமிழர் கண்ட வாழ்க்கை நெறி.

உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று[22].

என்பது தொல்காப்பியம். 'நாணத்தைக் காக்க உயிர் விடுக; கற்பைக் காக்க நாணத்தை விடுக' என்று தெரிவிப்பர் தொல்காப்பியர். அறத்தொடு நிற்பது பெற்றோர்க்கு முன்னதாக இருப்பினும் நாணத்தை விட்டொழிக்க

22. களவியல்- 13(இளம்).

வேண்டுமாதலால் தோழி அறத்தொடு நில்லாத முறையொன்றினால் திருமணம் முடிக்க முயல்வாள். களவுச் சுவடு தெரியாமல் பல தீமைகள் முளைப்பதற்கு முன்னரே தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் என்பது தோழியின் நோக்கம். அகநானூற்றுத் தோழியிடம் இந்த ஆசையைக் காணலாம்.

> வரையின் எவனோ வான்தோய் வெற்ப!
> கணகலை இருக்கும் கறியவர் சிலம்பின்
> மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்
> தொன்றியல் மரபின் மன்றல் அயரப்
> பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி
> நொதுமல் விருந்தினம் போலஇவள்
> புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே[23]

[வரையின் - மணந்து கொண்டால்; எவனோ - என்னை; கணம் - கூட்டம்; கலை - மான்கள்; இருக்கும் - ஒலிக்கும்; கறி - மிளகுக்கொடி; சிலம்பு - மலைச்சாரல்; மணப்பு அரும் - எய்துதற்கு அரிய; மன்றல் - மணம்; அயர - நிகழ்ந்திட]

'வெற்பனே, மான்கூட்டமும் மிளகுக்கொடியும் படரும் மலைப் பகுதியில் நீ நிகழ்த்திய களவொழுக்கத்தை எம் உறவினர் அறியாரன்றோ? அவர் அறியாத நிலையில் மரபு மணம் செய்து கொள்க. கொள்வையாயின் நின்னை முன்பின் அறியாதார் போல் நடந்து கொள்வோம். இவளும் முதன்முதல் நின்னைக் காண்பவள் போல நாணம் அடைவாள். அவள் பொய்யாக நாணி நிற்பதைக் கண்டு நாங்கள் மகிழ்வோம்' என்று தன் ஆசையைச் சொல்லுவதுபோல் அறிவு கொளுத்துவதையும் கண்டு மகிழலாம்.

---

23. அகம்-112

அறத்தொடு நிலை பக்தி இலக்கியத்தில் ஆழ்வார் அமைத்த முறையைக் காட்டுவேன். 'தோழியின் பாசுரமாக'ச்[24] செல்லும் குட்டநாட்டுத் திருப்புலியூர் (மலைநாடு) மாயப்பிரான்மீது நம்மாழ்வார் பாடியுள்ள திருவாய் மொழியில் இத்துறை மிக அருமையாக அமைந்துள்ளது (திரு வாய-8.9). பராங்குச நாயகி[25] வயது முதிர்ந்து மங்கைப் பருவம் அடைகின்றாள். கணவனை நாடி அடைய வேண்டிய வயதல்லவா இது? திருப்புலியூர் எம்பெருமானுடன் 'இயற்கை புணர்ச்சி'யும் நடைபெற்று விடுகின்றது. தலைவியின் உயிர்த்தோழியானவள் தலைவியின் உருவ வேறுபாட்டாலும், சொற்களின் வேறுபாட்டாலும் புணர்ச்சி நடைபெற்றமையை ஒருவாறு அறிகின்றாள். தன் மகளின் உண்மை நிலையை அறியாத தாய் தந்தையர் இவளுடைய திருமணத்தை உறுதிசெய்து மணமுரசும் அறிவிக்கின்றனர். 'பரதனே அரசன்' என்று அறிவித்த முரசொலி கேட்டபோது

---

24. வைணவ பக்தி இலக்கியத்தில் அகத்துறைப் பாடல்கள் 'தோழிப்பாசுரம்', 'தாய்ப்பாசுரம்'' 'மகள் பாசுரம்' என்று வகைப்படுத்தப் பெற்று அவற்றிற்குத் தத்துவமும் கூறப்பெறும். சைவ இலக்கியங்களில் பொதுவாக நாயக-நாயகி பாவனை' என்று சொல்லப்படுமேயன்றி, தத்துவம் கூறப்பெறுவதில்லை.

25. ஆழ்வார்கள் பெண்தன்மை எய்திப் பாசுரங்கள் அமைக்கும்போது நம்மாழ்வார் (பராங்குசர்) 'பராங்குச நாயகி' என்றும், திருமங்கையாழ்வார் (பரகாலர்) 'பரகால நாயகி' என்றும் வழங்கப் பெறுவர். பக்தி இலக்கியத்தில் ஆன்மா - பரமான்மாவுடன் இணைவதுதான் 'புணர்ச்சி' என்பது., இந்த நிகழ்ச்சியில் நடைபெறும் பல்வேறு கட்டங்கள் (துறைகள்) சாதாரணமாக அகப்பொருளில் வரும் துறைகள்போல் அமைத்துக் காட்டப் பெறும்.

பரதாழ்வான் எங்ஙனம் மனக்கிலேசம் அடைந்தானோ அங்ஙனமே தோழி இப்போது துயர் அடைகின்றாள். இவ்வாறு சிந்திக்கின்றாள்; 'மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்'[26] என்று கூறியவள் இவள். 'அன்றிப்பின் மற்றொருவர்க்கென்னைப் பேசவொட்டேன் மாலிருஞ்சோலை மாயற்கல்லால்'[27] என்ற பிடிவாதத்தைப் பிடிக்கின்றவள். மாறாக ஏதேனும் நடைபெற்றால் இவள் உயிர் தரியாள். அப்படி நடைபெறுவதை எப்படியாயினும் தடுத்தேயாக வேண்டும். அங்ஙனம் செய்ய முயலுங்கால் திருப்புலியூர் நாயனாருடன் புணர்ச்சி உண்டானமையை அறிவிப்பின் அஃது என் காவற் சோர்வாலே நிகழ்ந்தது என்று ஏற்பட்டுவிடும்; அறிவியாவது ஒழியில் இவள் வாழாள். இந்நிலையில் செய்ய வேண்டியது என்ன?'' என்பதாக.

தோழி இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது தலைவியின் பெற்றோரும் மற்றோரும் அவளுடைய வடிவ வேறுபாட்டிற்குக் காரணம் யாதானும் இருக்குமோ என்று ஆராயும் நிலையைக் காண்கின்றாள். அந்த முறையைக் கூறுவதாக அமைந்ததே இத்திருவாய்மொழி. இதுவே அகப்பொருள் நூலார் குறிப்பிடும் **''அறத்தொடு நிற்றல்''** என்பதாகும். இத்திருப்பதி எம்பெருமான்மீதுள்ள திருவாய்மொழி இதனையே கூறுகின்றது.[28]

---

26. நாச். திரு. 1:5
27. பெரியாழ். திரு 3.4:5
28. பத்துப்பாடல்களையுடைய தொகுப்பைப் பதிகம் என்று வழங்குவது தமிழ்மரபு. சைவஇலக்கியங்கள் இப்படியே வழங்குகின்றன. நம்மாழ்வாரின் இத்தகைய பத்துப்பாசுரங்களைத் ''திருவாய்மொழி'' என்றும் ஏனைய ஆழ்வார்களின் தொகுப்பைத் ''திருமொழி'' என்றும் வழங்குதல் வைணவ மரபு. எ.டு. பெரியாழ்வார்திருமொழி, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி என்பன

தோழி முதலில் இவ்வாறு தொடங்குகின்றாள்:

கருமா ணிக்க மலைமேல்மணித்
 தடந்தாமரைக் காடுகள்போல்
திருமார்பு வாய்கண்கை யுந்திகா லுடை
 யாடைகள் செய்தபிரான்
திருமால் எம்மான் செழிநீர்வயல்
 குட்டநாட்டுத் திருப்புலியூர்
அருமான் பேரன்றிப் பேச்சிலள்
 அன்னை மீரிதற் கென்செய்கேனே(1)

[மணித்தடம்- தெளிந்த தடாகம்; உந்தி-கொப்பூழ்; கால்- திருவடி; உடை- தரித் திருக்கும்; செய்ய ஆடை எனக் கூட்டுக; பேர்- திருநாமம்]

என்பது பாசுரம். எம்பெருமானின் திவ்விய அவயவங்களின் அழகினைக் கண்டு அவ்வடிவழகு அல்லது மற்றொன்று அறியாதபடி ஈடுபட்டாள் என்று தாய்மாருக்கு உரைக்கின்றாள். அநுபவிப்பார் நெஞ்சு குளிரும்படி கருமையுடையதாய், பிரகாசத்தால் மிக்குஇருப்பதாய், தனக்கு மேல்ஒன்று இல்லாததான இனிமையுடையதாய் இருப்பது ஒருமலைமேலே என்ற கருத்துத்தோன்ற 'கருமாணிக்க மலைமேல்' என்கின்றாள். இத்தகைய ஒரு மலைமீது தெளிந்த ஒருதடாகம் தாமரைக்காடுகள் பூத்தனபோல் எம்பெருமானது எழில்நீலமேனியில் திருமார்பு, திருவதரம்,

காண்க. இராமனைப் 'பெருமாள்' என்றும், அவன் அயோத்தியிலிருந்து கொண்டு வந்துநிறுவிய அரங்கநாதனைப் 'பெரியபெருமாள்' என்றும் இராமனது தம்பி இலக்குவனை 'இளையபெருமாள்' என்றும் வழங்குதல் வைணவ மரபு. இராமன்மீது பக்திகொண்ட குலசேகராழ்வாரைக் 'குலசேகரப்பெருமாள்' என்று வழங்குவதுண்டு. ஆகவே அவர்தம் பதிகங்கள் 'பெருமாள் திருமொழி' என வழங்கப்படலாயிற்று.

திருக்கண்கள், திருக்கைகள், திருவுந்தி, திருவடிகள் முதலிய உறுப்புகள் அமைந்துள்ளன என்பது தோன்ற 'மணித்தடம்தாமரைக்காடுகள்போல் திருமார்பு வாய் கண் கையுந்தி காலுடை யாடைகள் செய்த பிரான்' என்கின்றாள். பக்தர்கட்குப் பற்றுக்கோடாகவுள்ள பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கும் திருமார்பாதலால் அது சிவந்து காணப்படுகின்றது. அப்பிராட்டி வழியால் உறவுசெய்தாருக்கு அநுகூலமான சொற்களைப் பேசுகின்றதுஅவளது திருப்பவளம். இச்சொற்கள் சொல்லப்புக்கு இனியனான தன்னைக் கண்ட காட்சியால் தடுமாறினால் குறையும் தலைக்கட்டிக்கொடுப்பது செவ்வரி படர்ந்த திருக்கண். அவனது நோக்கில் தோற்றாரை அணைப்பது திருக்கை. உத்தேசியமான நிலத்தில் (அதாவது திருவடியில்) விழாநின்றால் காற்கட்ட வல்லது திருவுந்தி. இது நடுவே அமுக்கும் சுழியன்றோ? இவை எல்லாவற்றுக்கும் தோற்று விழும் இடம் எம்பெருமானது திருவடிகள். இவை யாவும் காட்டிலெறிந்த நிலாப்போலாகாமல் பக்தர்கட்கு அநுபவிக்கக் கொடுக்குமவன் என்பதைக் குறிப்பிடவே 'பிரான்' (உபகாரகன்) என்கின்றாள். இங்ஙனம் எம்பெருமானின் திருமேனி அழகினை,

> "என்னரங்கத்து இன்னமுதிதர்
> குழல்அழகர் வாய் அழகர்
> கண்அழகர் கொப்பூழில்
> எழுகமலப் பூஅழகர்.[29]
> [குழல்—திருமுடி]

என்று ஆண்டாள் கூறி அநுபவித்ததையும் நினைந்து பார்க்கின்றோம். மேலும் இங்குப் பர வியூக விபவம் இவற்றிற்குரியத் திருநாமங்களையும் சொல்லாமல், அல்லாத உகந்

29. நாச். திரு 11:2

தருளின திவ்விய தேசங்களில் நிற்கின்றவர்களின் பெயர்களையும் சொல்லாமல் குட்டநாட்டுத் திருப்புலியூர் எம்பெருமானுடைய திருநாமங்களையே வாய்வெருவா நிற்கின்றாள் என்பது தோன்ற "திருப்புலியூர் அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்" என்கின்றாள். அவள் நிலை தனக்கு அப்போதுதான் தெரியும் என்பது தோன்ற 'அன்னைமீர், இதற்கு என் செய்கேன்?' என்கின்றாள்.

இந்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதியைச் சதா புகழ்ந்து கொண்டிருக்கின்றாள் தலைவி என்பதையும் குறிப்பிடுகின்றாள். "புன்னையம் பொழில் சூழ் திருப்புலியூர் புகழும் இவளே" (2) என்பதாக.

அணிமேருவின் மீதுலவும்
துன்னு சூழ்சுடர் ஞாயிறும்
அன்றியும்பல் சுடர்களும்போல்
மன்னு நீள்முடி யாரம்பல்கலன்
தானுடை எம்பெருமான். (2)

[அணி-அழகிய; துன்னு-செறிந்து; ஞாயிறு-கதிரவன்;
பல்சுடர்-கோள்கள், உடுக்கள்; முடி-கிரீடம்;
ஆரம்-மாலை]

என்ற பாசுரப் பகுதியால் அத்திருப்பதி எம்பெருமானது திவ்விய ஆபரண அழகில் தலைவி ஈடுபட்டுப் பேசும் படிகளை எடுத்துரைக்கின்றாள். "மேரு மலையின்மீது ஆயிரம் கதிர்கள் விரித்தாற் போன்ற திருவபிடேகமும் விண்மீன் கூட்டங்கள் மின்னினாற் போன்ற பல மாலை வரிசைகளும், மற்றும் அணிவகைகளும் ஒளிரும் அழகை என்னவென்று சொல்வது?" என்று வாய்வெருவி நிற்கின்றாள் என்று குறிப்பிடுகின்றாள் தோழி. இவற்றாலும் சோலையைப்பற்றிக் குறிப்பிடுவதாலும் இவளுக்கு அத்தலத்து எம்பெருமானோடு கலவி நேர்ந்ததாகவே நினைக்கத் தோன்றுகிறது என்பது தோழியின் குறிப்பு.

ஆழ்வார் நாயகி இரவும் பகலும் திருப்புலியூர் வளத்தையே புகழ்ந்து கொண்டிருக்கின்றாள் எனபதை அடுத்துக் குறிப்பிடுகின்றாள் தோழி.

புகழும் இவள்நின் றிராப்பகல்
பொருநீர்க்கடல் தீப்பட்டு, எங்கும்
திகழும் எரியொடு செல்வதொப்பச்
செழுங்கதிர் ஆழிமுதல்
புகழும் பொருபடை ஏந்திப்போர்
புக்கசுரரைப் பொன்றுவித்தான்
திகழும் மணிநெடு மாடம்நீடு
திருப்புலி யூர்வளமே (3)

[பொருநீர்கடல் - அலையெறியும் கடல்; தீப்பட்டு நெருப்புக் கொளுத்தி; எரி—தீக்கொழுந்து; ஆழி—சக்கரம்; பொருபடை - போர்செய்யும் ஆயுதங்கள்; பொன்றுவித்தான் — அழித்தவன்]

என்பது பாசுரம். கடல்வண்ணனான எம்பெருமான் திருவாழியாழ்வான் முதலான திவ்வியாயுதங்களை அணிந்து கொண்டு எழுந்தருள்வது "ஒருகடல் நெருப்புக் கொளுத்தி நடந்து செல்கின்றதோ" என்று ஐயுறும்படியாக உள்ளதென்கின்றாள். அன்றியும், 'இந்த எம்பெருமான் திருவாழி திருச்சங்கு முதலிய திவ்வியாயுதங்களுடன் போர்க்களத்தில் சென்று அரக்கர்களைத் தொலைத்தருளும் பேராற்றலை இரவும் பகலும் இடையீடின்றிப் புகழ்ந்து கூறாநின்றாள். அதனாலும் இத்திருப்பதி எம்பெருமானுடன் இவளுக்கு ஒரு சம்பந்தம் நிகழ்ந்ததாகத் தோன்றுகின்றது 'என்று குறிப்பாகப் புலப்படுத்துகின்றாள் தோழி.

மேலும், தோழி கூறுகின்றாள்: ''வண்டினம் முரலும் சோலை, மயிலினம் ஆலும்சோலை, கொண்டல்மீ தணவும் சோலை, குயிலினம் கூவும்சோலை, அண்டர்கோன்

அமரும் சோலை"[30] என்றெல்லாம் சோலை வளத்தைப் பேசுகின்றாள். "வயலடங்கலும் கரும்பும் செந்நெலுமாய் வளர்ந்திருக்கும் அழகைச் சொல்லுகின்றாள். அங்கு உழுவதும் நடுவதுமான பண்ணையில் நடைபெறும் செயல்களின் அழகினையும், சுற்றிலும் நீர்நிலைகள் சூழ்ந்திருக்கும் வனப்பையும் வாய்வெருவுகின்றாள். இங்ஙனம் இப்பெண்பிள்ளை பேசும் அழகுகளை என் சொல்வேன்? இத்துடன் நின்றாளா?

சீர்வளம்கிளர் மூவுல
குண்டுமிழ் தேவபிரான்
பேர்வ ளம்கிளர்ந் தன்றிப்பேச்
சிலள்' (4)

இத்தலத்து எம்பெருமானின் "ஆபத்தில்தோழன்" என்றிருக்கும் திருக்குணத்தில் ஈடுபட்டு அவன் பிரளய காலத்தில் எல்லா உலகங்களையும் தன் திருவயிற்றில் வைத்துப் படைப்புக் காலத்தில் அவற்றை வெளிநாடு காண உமிழ்ந்த அற்புதச் செயலையும் பேசுகின்றாள். இவற்றையெல்லாம் சொல்லும்போது 'இவளுடைய வடிவு ஆபரணம் பூண்டாற்போன்று விளங்கும் அழகு சொல்லுந்தரமன்று' என்று குறிப்பிடுகின்றாள். இதனாலும் இத்தலத்து எம்பெருமானுடன் கலவி நேர்ந்திருக்க வேண்டும் என்கின்றாள் தோழி.

இன்னும் இத்தலத்து எம்பெருமானுடன் புணர்ச்சி நடைபெற்றிருத்தல் கூடும் என்பதற்குச் சான்றுகளையும் காட்டத் தொடங்குகின்றாள்.

புணையிழைகள் அணியும் ஆடையுடையும்
புதுக்க ணிப்பும்
நினையும் நீர்மையதன்று இவட்கிது;

30. திருமாலை- 14

நின்று நினைக்கப் புக்கால்
சுமையி னுள்தடந் தாமரை
மலரும்தண் திருப்புலியூர்
முனைவன் மூவுல காளிஅப்பன்
திருவருள் மூழ்கினளே (5)

[புனை-பூணுதல்; புதுக்கணிப்பு-வடிவில் பிறந்த புதுமை; முனைவன் - முன்னோன்; ஆளி-ஆள்பவன்]

என்பது பாசுரம். தலைமகளிடத்துக் காணப்பெறும் **மூன்று** சிறப்புகளை எடுத்துக்காட்டி தன் ஊகத்தை உறுதிப்படுத்துகின்றாள் தோழி. (1) 'அவள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் முன்பு நாம் பூட்டினாற் போல் இல்லை; கலைத்துப் பூண்டாற்போல் தோன்றுகின்றதன்றோ?' என்கின்றாள். (2) 'உடுத்தின ஆடையும் நாம் உடுத்தினபடி இல்லை. தலைப்பு மாற்றி உடுத்தின மாதிரியல்லவா உளது? வேறுபாடு தோன்றவில்லையா?' என்று ஆடையின்மீது கவனத்தை ஈர்க்கின்றாள். (3) இவள் வடிவிலும் பிறந்திருக்கும் புதுமைகள் தோன்றவில்லையா? இதற்கு முன்பு இது கோடையோடின வயல் போலேயன்றோ இருந்தது? இப்போது நீர் பாய்ந்த வயல் போலே தோன்றும் செவ்வியைப் பாருங்கள்' என்கின்றாள். "காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் நின்று ஆராயப் புகுந்தாலும், இவளிடம் பிறந்துள்ள அழகுகள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவை' என்பதையும் உணர்த்துகின்றாள். 'எம்பெருமானுடைய படிகளையே நினைக்க முடியாதபோது அவன் திறத்தில் ஈடுபட்டாருடைய (அடியார்கள்) படிகள் நினைக்கும் தரமன்று. இவற்றால் 'முனைவன் மூவுல காளியப்பன் திருவருள் மூழ்கினளே' என்று இயற்கை புணர்ச்சி நடைபெற்று விட்டதை உறுதிப் படுத்துகின்றாள்.

'மேற்கூறிய சான்றுகள் மட்டிலுமா? வேறு சான்றுகளும் உள்ளன' என்கின்றாள்.

திருவருள் மூழ்கி வைகலும்
செழுநீர்நிறக் கண்ணபிரான்
திருவருள் களும்சேர்ந் தமைக்(கு)அடை
யாளம் திருந்தஉள் (6)

என்று கூறுவதை நோக்குங்கள். 'எப்பொழுதும் அவன் திருவருளிலேயே மூழ்கிக் கிடக்கின்றாள். அவனுடைய திருவருள் இவளிடம் சேர்ந்தமைக்கு மறைக்க முடியாத அடையாளங்கள் பல உள்ளன' என்று கூறி ஒன்றினை மட்டிலும் காட்டுகின்றாள்.

திருவருள் கமுகு ஒண்பழத்தது
மெல்லியல் செவ்விதழே (6)
[கமுகு-பாக்குமரம்; இதழ்-உதடு]

"எம்பெருமான் திருவருளால் இத்திருப்பதியில் வளர்ந்த கமுகு-திருவருள் கமுகு-ஈன்ற செவ்விய பழத்தின் நிறத்தையல்லவா ஒத்துள்ளது இவளது உதடுகளின் நிறம்? இதனை நீங்களே ஆய்ந்து பார்க்கலாமே" என்கின்றாள். இவ்விடத்தில் "திருவருள் கமுகு" என்றதற்கு இன்சுவை மிக்க ஈட்டின் "திருவருட் கமுகென்று சில உண்டு; அதாவது நீரால் வளருகை யன்றிக்கே பெரிய பிராட்டியாரும் சர்வேசுவரனும் கடாட்சிக்க, அத்தால் வளருவன சில'" என்ற பகுதி எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

இத்திருப்பதியின் இயற்கைச் சூழலைக் கூறுவாள்போல் அங்கு அஃறிணைப் பொருள்களும் கூட ஒன்றோடொன்று கலந்து பரிமாறி வாழாநிற்கும் என்பதனையும் காட்டுகின்றாள். மெல்லிய இலைத் தழைப்பையும் அழகினையும் உடைய வெற்றிலைக் கொடி முதிர்ந்து இளகிப் பருத்த கமுகமரத்தைத் தழுவி நிற்கின்றது. "(வெற்றிலை) தன் கணவனான கமுகுக்குத் தன் உடம்பை முற்றூட்டாகக் கொடுக்கும் போலே காணும்" என்பது ஈடு. இதற்குமேல் தென்றற் காற்று வாழைத் தோப்பில் வீசா

நிற்கின்றது. இப்படிப்பட்ட வாய்ப்பு அமைந்த தலத்தில் இவளும் தான் உகந்த பொருளை அணையப் பெற்றது வியப்பு அன்று. முறையே' என்று குறிப்பிடுகின்றாள். ''மல்லல்அம், செல்வக் கண்ணன் தாள் அடைந்தாள் இம் மடவரலே'' (7) என்ற தோழியின் கூற்றினை நோக்குங் கள். மேலும், ''படஅரவு அணையான்தன் நாமம் அல் லால் பரவாள் இவளே'' (8) என்ற தோழியின் கூற்றை யும் சிந்தியுங்கள். இத்திருப்பதி எம்பெருமானின் திரு நாமமே யன்றி வேறொரு பெயரையும் சொல்வதற்கில்லை. அங்ஙனமே ''பரவாள் இவள் நின்றுஇராப்பகல் ... திருப் புலியூர் புகழன்றி மற்றே''(9) என்ற பாசுரப்பகுதியால் திருப்புலியூரின் புகழை வாய்விட்டுச் சொல்லுவது தவிர வேறொன்றும் அறியாள் இத்தலைவி' என்கிறாள்.இதனா லும் இத்தலத்து எம்பெருமானுடன் இவளுக்குக் கலவி நேர்ந்திருக்க வேண்டும் என்பதனை மேலும் உறுதிப் படுத்துகின்றாள்.

இறுதியாக மேற்கூறிய காரணங்கட்கெல்லாம் முத் தாய்ப்பு வைத்தமாதிரி இதற்கு வேறு விதமான முடிவும் கூற இயலாதவாறு பிறிதொரு காரணம் காட்டுகின்றாள் தோழி.

அன்றிமற் றோருபாய மென்?இவள்
அம்தண்து ழாய்க்கமழ்தல்
....
நின்ற மாயப்பி ரான்திரு
வருளாமிவள் நேர்பட்டதே (10)

[உபாயம்-காரணம்; கமழ்தல்-மணம் வீசுதல்]

''இவளது உடம்பில் அழகிய குளிர்ந்த திருத்துழாயின் மணம் வீசுவதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? என் உடம்பிலாவது உங்கள் உடம்பிலாவது திருத்துழா யின் மணம் வீசுகின்றதா? எம்பெருமான் திருமேனியை அணைந்தாலல்லது இம்மணம் வீசுவதற்குக் காரணம்

உண்டோ?' என்கின்றாள். ''இராஜ புத்திரனை அணையா தார்க்குக் கோயில் சாந்து நாறுகைக்கு விரகுஉண்டோ?'' என்பது ஈடு. இதனால் திருப்புலியூரில் நின்ற மாயப்பிரானுடைய திருவருளுக்கே இவள் இலக்காயினாள் என்று தோழி சொல்லித் தலைக்கட்டுகின்றாள். தோழியின் மதிநுட்பம் எல்லாம் புலப்படுமாறு அமைந்த இத்திருவாய் மொழியால் ஆழ்வாரின் ஆழ்ந்த தமிழ்ப்பண்பாடு தெள்ளிதின் விளங்குவதைக்கண்டு மகிழ்கின்றோம்.

அறத்தொடு நிற்கும் சந்தர்ப்பங்களையும் இலக்கண நூலார் விதந்து கூறியுள்ளனர். இறையனார் களவியலாசிரியர் இவற்றை,

காப்பு கைமிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவர் மறுப்பினும்
அவன்ஊறு அஞ்சும் காலம் ஆயினும்
அந்நால் இடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ
அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே[31]

[காப்பு-இற்செறிப்பு; கைமிக்கு-அதிகமாகி; நொதுமலர் - அயலார்; எதிர்கொள்ளாது - ஏற்றுக்கொள்ளாது; தமர் - உறவினர்; மெய்ந்நாண் ஒரீஇ-உடலின்கண் நின்ற நாண் நீங்கி]

என்று தொகுத்துக் கூறுவர். தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பால் உணர்ந்த பெற்றோர்கள் அவளை இற்செறிக்கும்போதும், பிறர் தலைவியை மணம் பேச வருங்காலத்திலும், தலைமகனுடைய பெற்றோர் பரிசத்தோடு தலைவியை வரைவதற்கு வருங்கால் தலைவியின் பெற்றோர் பரிசம் குறைவு என்று கூறியோ பிறவாறோ மணத்தை மறுத்தபோதும், தலைவன் இரவுக் காலத்தில்

31. இறை. கள. 29.

தலைவியை நாடிவருங்கால் அவனுக்கு யானை, பாம்பு முதலியவற்றால் துன்பம் நேரிடும் என்று எண்ணித் தலைவி வருந்தும்போதும் தோழி அறத்தொடு நிற்பாள். தோழி நிற்கவே, ஏனையோரும் நிற்பர். இச்சந்தர்ப்பங்களைத் தவிர, வேறு சந்தர்ப்பங்களில் தோழி அறத்தொடு நிற்பதில்லை இதனைத் தொல்காப்பியர்,

அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப[32]

என்று கூறுவர். அகத்திணை இலக்கியத்தில் தோழியின் பங்கு மிகப்பெரியது. வரம்பற்ற உரிமையையும் உடையவள் அவள். தலைவியின் உரிமையையும் செயலையும் தன்னுடையனவாகவே கொண்டு செயற்படும் உறவினையுடையவள். எனினும், தலைவியின் இசைவின்றி அறத்தொடு நிற்றல் மட்டும் தோழிக்குஇல்லை.இதனையே மேற்குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பா அறிவிக்கின்றது. காரணம் என்ன? அறத்தொடு நிற்பதால் நாணத்துக்கு இழுக்கு வரும். அந்த நாண் இழுக்குக்கு உரியவள் தலைவி. கற்பின்பொருட்டு நாணக் குறைவு வரினும் வருக என்று துணிய வேண்டியவள் அவள். அத் துணிவை அறிந்த பின்னரே தோழி அறத்தொடு நிற்றலை மேற்கொள்ள வேண்டும். நொதுமலர் வரைவும், வெறியாட்டெடுத்தலும் போன்ற அரிய பெரிய தொல்லைகள் நிகழும் காலமே அறத்தொடு நிற்றற்குரிய காலம் என்பது நச்சினார்க்கினியரின் கருத்தாகும்.[33] இந்தக் காலத்தன்றித் தலைவி நாணைத்துறந்து அறத்தொடு நிற்பதை விரும்பாள். கலித்தொகைத் தலைவி யொருத்தியின் கூற்றுஇது: ''தலைவன் என் மெய்யைத்தடவித் தலையளி செய்தான்.

32. தொல். பொருளியல்-11 (இளம்)

33. ஷை— 12(நச். உரை).

அவன் என்னை மணப்பது தவறுமாயின், நம்குடிக்கு அது வடுவாக அமைந்து விடும். தோழி, நயம்புரிந்து ''இன்னது செய்தாள் இவள்' என மன்னா உலகத்து மன்னுவது புரையே''[34] என நொதுமலர் வரைவுக்கு மணமுரசு இயம்பியவழி, கற்புடை நல்லாள் தாய்க்கு அறத்தொடு நிற்க வேண்டும் என்ற குறிப்பைத் தோழிக்கு உணர்த்துவது அறியத்தகும். 'இன்னது செய்தாள் இவள்' எனத் தலைமகள் தன் களவை வெளிப்படையாகப் பகரப் பணிக்குங்கால் கற்புக்கு நாண் பலியாதலைக் காணலாம்.

இவ்வறத்தொடு நிற்றல் ஏழு பகுதிகளாக நடைபெறும் என்று கூறுவர் தொல்காப்பியர்.

எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்
கூறுதல் உசாவுதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்[35]

என்பது அவர் கூறுவது நூற்பா. இதில் எளித்தல் என்பது, தலைவன் நம்மாட்டு எளியவன் என்று கூறுதல். அதனது பயன் மகளுடைத் தாயர் தம்வழி ஒழுகுவார்க்கு மகட்கொடை வேண்டுவாராகலின் எளியன் என்பது கூறி அறத்தொடு நிற்கப்பெறும். ஏத்தல் என்பது, தலைவனை உயர்த்துக் கூறுதல். அது மகளுடைத் தாயர் 'தலைவன் உயர்ந்தான்' என்றவழி மனமகிழ்வாராகலின் அவ்வாறு கூறப்பெற்றது; உயர்த்துக்கூறி அறத்தொடு நிற்கப்பெறும். வேட்கையுரைத்தலாவது, தலைவன்மாட்டுத் தலைவியுவேட்கையும்' தலைவிமாட்டுத் தலைவன் வேட்கையும் கூறுதல்; வேட்கை கூறி அறத்தொடு நிற்கும். கூறுதலாவது, தலைவியைத் தலைவர்க்குக் கொடுக்க வேண்டும் என்பது படக் கூறுதல். உசாவுதல் என்பது, வெறியாட்

34. கலி — 54.
35. தொல். பொருளியல்-12 (நச்)

டும் கழங்கும் இட்டு உரைத்துழி வேலனேடாதல் பிற ரோடாதல் தோழி உசாவுதல். ஏதீடு தலைப்பாடு என்பது, யாதானுமோர் ஏதுவை இடையிட்டுக்கொண்டு தலைப் பட்டமை கூறுதல். உண்மை செப்பும் கிளவியாவது, படைத்து மொழியாது பட்டாங்கு கூறுதல். " 'அவ்வெழு வகைய' என்றதனால் உண்மை செப்புங்கால், ஏனைய ஆறு பொருளினுள் சில உடன் கூறி உண்மை செப்பலும், ஏனைய கூறுங்காலும் தனித்தனி கூறாது இரண்டும் மூன்றும் உடனே கூறுதலும் கொள்க" என்பர் நச்சி னார்க்கினியர்.

அறத்தொடு நிற்றலை அகப்பொருள் நூல்கள் பலப்பல வகையாகக் கூறும். இவ்வாறு அறத்தொடு கூறும் வகை களில் எல்லாம் இக்களவொழுக்க நிகழ்ச்சியினால் எவரும் எவரிடத்தும் குற்றம் காணா வகையாகத்தான் கூறப் பெறும். அறத்தொடு நிலைக் கூற்றுகள் தலைவியாலும் தோழியாலும் படைத்து மொழிவதான வெறும் பொய் மொழிகளாக இருக்கின்றமையின் அங்ஙனம் அவர்கள் பொய் புணர்த்துக்கூறுதல் அறத்தொடு பொருந்துமோ என வினவலாம். -பாலதாணையால் நடைபெற்ற இந் நிகழ்ச்சியினை நிகழ்ந்தவாறே வெளிப்படையாகக் கூறப் புகின், நற்றாய் முதலிய உறவினர் உண்மை அறியாமை யான் கூறுவாரையும் வெகுள் வராதலாலும், இஃது எவர்க்கும் தீங்கு பயவாத நிலையில் இருப்பதனால் அதனை ஒளித்துரைத்தேனும் பாதுகாத்து நிற்பது நன்றே யாமாதலாலும் அவை உண்மையல்லாவிடினும் பொய்யு ரைகள் ஆகமாட்டா. காரணம், இதனால் பழியும் பாவமும் ஒருவருக்கும் ஏற்படுவதில்லை.

> பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த
> நன்மை பயக்கும் எனின். (292)

என்பது வள்ளுவம்.

அறத்தொடு நிற்றல் என்ற துறைபற்றி 51 பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இத்துறையின் கூறுபாடுகளையெல்லாம் நன்கு விளக்கும் முறையில் சில பாடல்கள் அமைந்துள்ளன. ஐந்திணைக் களவுத் துறைகளுள் இத்துறை முதற்பெருஞ் சிறப்புடையது. இதனாலன்றோ ஆரிய அரசன் பிரகத்தனுக்கு தமிழ் மொழியின் தனிஇலக்கிய மதிப்பை அறிவுறுத்த விரும்பிய கபிலர் பெருமான் இத்துறையில் 'குறிஞ்சிப்பாட்டை' யாத்து வழங்கி அழியாப் புகழ்பெற்றார்.

வெறியாட்டு: களவின்வழியொழுகும் தலைவி யொருத்தியின் மேனி நாள்தோறும் மெலிந்து வருவதைச் செவிலித்தாய் (நற்றாய்) காண்கின்றாள். மரபு வழிப்பட்ட இத்தாய் உண்மையை ஊகித்தறியாமல் இவ்வேறுபாடு எற்றினானாயிற்று?' என்று அறிவரை வினாவ, அவர்கள் குறி பார்த்தலால் தெய்வத்தினானாயிற்று என்று கூறினர். தாய் முருகனால் வந்ததுஎன்று நம்பி முருகனுக்குப்பூஜையெடுக்கத் துணிகின்றாள். இதுவே தக்கவழிஎன்று அக்கம் பக்கத்து முதுப்பெண்டிரும் கூறுகின்றனர். வீட்டில் நல்லதோர் இடத்தில் புதுமணல்பரப்பிய வெறியாடற்களத்தில் முருகபூசை தொடங்குகின்றது. முருகபூசை செய்விப்பவன் வேலன் எனப்படுவான். இந்த வேலன் தலைவி முருகேறப் பெற்றவள் என்று கூறுகின்றான். தலைவியின் நோய்க்குப் பிறிதொரு காரணம் கற்பிக்கப் பெறுவதைத்தோழியால் பொறுக்கமுடியவில்லை. அக்காரணம் தெய்வச் சாபத்தினால் ஆயிற்று என்று கூறிய வேலன் சொல்லுக்கு மதிப்பு தரவில்லை. தெய்வத்தையே சாடத் தொடங்குகின்றாள் தோழி.

அருவி யின்னியத் தாடும் நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின்னணங் கன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி

வேலன் கண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே.[36]

[இன்னியம் - இனிய வாச்சியம்; படர்மலி-கருதுதலில்; அருநோய்- காமநோய்; அணங்குதல்- வருந்தித் தரப்பெறுதல்; அண்ணாந்து - தலைநிமிர்ந்து; கடம்பின்கண்ணி- கடம்ப மலர்களாலான தலைமாலை; வெறிமனை- வெறிக்களம்; மன்ற - திண்ணமாக; வாழிய - இத்தகைய இடங்களில் வாராது வாழ்வாயாக]

இங்குக் கற்பு, தெய்வத்தையே எள்ளுகின்றது. 'தலைவியின்நோய், காதல்நோய்; தலைவனின் மார்புத்தழுவலால் ஏற்பட்டநோய். கடவுளாக இருக்கும் நீ இதனை அறிந்திருப்பாய். ஆயினும் மரபு அறிவு அன்றி மெய்யறிவில்லாத வேலன் அழைக்கத் தோன்றிய முருகா! என்சொல்வேன்? நீகடவுளாக இருப்பினும் உனக்குச் சொந்த புத்திஇல்லை. இத்தகைய இடங்கட்கு இனிவாராது வாழ்க' என்கின்றாள் தோழி.

இந்த வேலன் கழற்சிக்காயிட்டு நோய்க்குக் காரணம் கூறுவதும் உண்டு.[37] இத்தகைய வழக்கம் உண்மையைத் தொல்காப்பியர்,

களம்பெறக் காட்டினும்[38]

என்றும்,

கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டியதிறத்தால் செய்திக் கண்ணும்.[39]

என்றும் கூறுவர், களமாவது, கட்டும் கழங்கும் இட்டுரைக்

36. நற்றிணை— 14.
37. ஐங்குறு-248.
38. தொல், களவியல்-23(அடி.39-நச்)
39. ஷை - ஷை - 24 அடி (3-4) - (நச்).

கும் இடமும் வெறியாட்டிடமும் என்று பொருள் கூறுவர் நச்சினார்க் கினியர். மேலும் இவர் 'கட்டினும் கழங்கினும்' என்பதற்குக் 'கட்டுவிச்சியும் வேலனும் தாம் பார்த்த கட்டினானும் கழங்கினானும்' என்று பொருள் கூறுவர். இதனால் கட்டுவிச்சிக்குக் கட்டெடுத்தலும் வேலற்குக் கழங்குபார்த்தலும் முறையே உரியவைஎன்பது பெறப் படும். யார்நோய்க்கும் முருகெனமொழிதல் இவன் வாய் மரபாகும் 'அன்னைக்கு முருகென மொழியும் வேலன்'[40] என்ற ஐங்குறு நூற்றுப் பாடலால் இஃது அறியப்படும். ஐங்குறுநூற்றுத் தோழியொருத்தி,

> கழங்கினால் அறிகுவது என்றால்
> நன்றால் அம்ம நின்ற இவள் நோயே[41]

என்று கூறுகின்றாள். காதல் நோயைக் கழற்சியால் அறி யப்புகுவது கற்புமேன்மைக்கே அவமானம் என்பது இவள் கருத்து.

சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்துக்காட்டு ஒன்றைக் காண்போம். அன்னையொருத்தி தன்மகளின் காதல் நோய் முருகனால் வந்தது என்று தவறாகக் கருதி வெறி யாட்டயர்கின்றாள். இதனைத் தலைவி தோழியிடம்கூறி அன்னையின் அறியாமைக்கும் வேலனின் அறியாமைக்கும் ஏன்? முருகக் கடவுளின் அறியாமைக்கும் கூட நகையாடு கின்றாள்.

> இறைவளை நல்லாய் இதுநகையா கின்றே
> கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
> அறியாள் மற்றன்னை அலர்கடம்பன் என்றே
> வெறியாடல் தான்விரும்பி வேலன் வருகென்றாள்.[42]

40. ஐங்குறு - 249
41. ௸ - 245.
42. சிலப்- குன்றக்குரவை - 11

[கறி- மிளகுக்கொடி; சிலம்பன் - குறிஞ்சிநிலத்தலைவன்; நோய் - காமநோய்; கடம்பன் - முருகன்; வேலன்- வேல்மகன்].

ஆய்வளை நல்லாய் இதுநகையா கின்றே
மாமலை வெற்பன்நோய் தீர்க்கவரும் வேலன்
வருமாயின் வேலன் மடவன் அவனிற்
குருகு பெயர்க்குன்றம் கொன்றான் மடவன்.[43]

[ஆய்வளை- அழகிய வளை; வெற்பன்- மலைநாடன்; மடவன்- அறிவிலி; குருகுபெயர்க்குன்றம்- கிரவுஞ்சமலை; கொன்றான்- முருகன்]

"நோய் நாடி நோயின் முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்' செயல்புரிதல்முறை. அன்னையோ இதனை யறியாது எதுபற்றி வெறியாடினும் இறுதியாக இது முருகன் குறை என்றே கூறும் வேலனை வெறியாடற் பொருட்டு அழைத்து வருமாறு பணித்தனள். இதனை நினைக்குந்தோறும் எனக்கு நகைப்பு உண்டாகின்றது." என்கின்றாள் தலைவி. மேலும், அவள் "மலை நாடனாகிய நம்பெருமான் அளித்த நோயைத் தீர்க்க வேலன் வந்தாலும் வருவான். அங்ஙனம் வந்தால் அவன் அறிவிலியே. அவ்வேலன் அழைக்குங்கால் முருகன் வருமாயின் அவனைவிட அக்கடவுளும் அறிவிலியாவான். இஃது எனக்குச் சாலவும் நகைப்பினைத் தருகின்றது" என்கின்றாள். வெறியாடலை அறிவிக்கும் இந்த இரண்டு பாடல்களிலும் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலை அறியலாம்.

நம்மாழ்வார் திருவிருத்தத்தில்[44] வெறியாட்டு அமைந்த ஒரு பாடலைக் காட்டுவேன். தலைமகள் மேனி நாடோறும் மெலிவதைப்பார்த்து நற்றாய் (செவிலித்தாய்) மனம் கவல்

43. ஷை - ஷை 12.

44. நம்மாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்ற 100 பாசுரங்களைக் கொண்ட ஒருபிரபந்தம். அகத்துறைகளாலானது.

கின்றாள். உண்மையின் காரணத்தை அவளால் அறிந்து கொள்ள இயலவில்லை. உடனே கட்டுவிச்சியைக் குறி கேட்க, அவள் தன் வழக்கப்படி ஆய்ந்து தலைவியின் மெலிவு முருகக்கடவுளால் வந்தது என்று குறி சொல்லு கின்றாள். உடனே வெறியாட்டாளனை அழைப்பித்து, முருகபூசை செய்யத் துணிகின்றாள் செவிலித்தாய். இதனைக் கண்ட தலைமகள் மிகவும் வருந்துவதைக் காண் கின்றாள்தோழி. உடனே அவள் வேலனையும் தாயரை யும்நோக்கிக் கண்டித்துச் சில கூறி வெறி விலக்கு வதாகச் சொல்வன இத்துறைப் பாசுரங்கள். திருவிருத் தத்தில் இத்துறை அமைந்த பாசுரம் இது:

சின்மொழி நோயோ கழிபெருந்
 தெய்வம், இந்நோய் இனதென்(று)
இன்மொழி கேட்கும் இளந்தெய்வம்
 அன்றிதுவேல! நில்நீ
என்மொழி கேண்மின்! என்அம்மனை
 யீர்! உல கேழும்உண்டான்
சொன்மொழி மாலையந் தண்ணந்
 துழாய்கொண்டு சூட்டுமினே.[45]

[சின்மொழி- சிலபேச்சுகளே பேசவல்லவள்; கழிபெரு- மிகப்பெரிய; இனது - இப்படிப்பட்டது; சொல்மொழி- திருநாமத்தைச் சொல்லுதல்]

''இந்த நங்கைக்கு இப்பொழுது நேர்ந்துள்ள நோயா னது இவர்கள் நினைக்கின்றபடி சிறு தெய்வமடியாக வந்ததன்று; மிகப்பெரிய தெய்வமான எம்பெருமான் விஷயமாக உண்டானது'' என்று வெறியாடும் வேலனை யும், தாய்மாரையும் நோக்கிக் கூறும் தோழி மீண்டும்

45. திருவிருத் : 20

வேலனை நோக்கி ''நீ விலகி நிற்பாயாக'' என்று அவன் வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்தி, பின்னர் அன்னை மாரைநோக்கி ''நீங்கள் இங்ஙனே கலங்குவது உசிதமன்று; உங்களைவிட யான் மிகச்சிறியளேயாயினும் இப்போது என் பேச்சைக் கேளுங்கள். இந்த விபரீதமுறைகளைக் கைவிட்டு உலகம் உண்ட பெருவாயனுடைய திருநாமங்களை இவள் செவிப்படுமாறு சொல்லுங்கள்; அவன் மாலையில் திகழும் திருத்துழாய்ப் பிரசாதத்தைக் கொணர்ந்து கொடுங்கள். இதுவே இவளுடைய நோய்க்கு ஏற்ற மருந்தாகும்'' என்கின்றாள் தோழி. 'மறந்தும் புறம் தொழா மாந்தர்' வழிவந்தவளாதலால் 'இளந்தெய்வ' வழிபாட்டை நீக்கிக் 'கழிபெருந் தெய்வத்தை' வழிபடுமாறு கூறுவது எண்ணி மகிழத்தக்கது. இது தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் முறையில் அமைந்த வெறிவிலக்குப் பாசுரம்.

மணிவாசகப்பெருமானின் திருக்கோவையாரில் ஒரு பாடலைக் காட்டுவேன். தலைவியின் நோயைத் தவறாகப் புரிந்து கொண்டு செவிலி எடுக்கும் வெறியாட்டம் நிகழாவண்ணம் தடுக்க நினைத்து வேலனை நோக்கிக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

விதியுடை யார்உண்க வேரி
விலக்கலம் அம்பலத்துப்
பதியுடை யான்பரங்குன்றினில்
பாய்புனல் யாம்ஒழுகக்
கதியுடை யான்கதிர்த் தோள்நிற்க
வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேஇல்லை
கொல்இனி வையகத்தே[46]

[விதியுடையார் - உரிமையுடையவர்கள்; வேரி - கள்; விலக்கலம் - விலக்கேம்; பதி - இடம்; கதி - இயக்கம்; கதிர்த்தோள் - ஒளியுடைய தோள்; மதி - அறிவு]

46. திருக்கோவை - 292.

இங்குத் தோழி வேலனை நோக்கி "அட கடவுளே! நின் செயல் அழகிது. எம்பெருமாட்டியின் நோய்க்குக் காரணம் அன்றொருநாள் அவள் புனலில் மூழ்கியபோது அப்புன லினின்றும் அவளைக் கரையேற்றி அவளுக்கு உயிர் தந்து உதவினானே ஒரு வள்ளற் பெருமான், அவனுடைய ஒளி மிக்க தோள்களாகும். அங்ஙனமிருக்க நீ வெறியாடுத லால் யாது பயன்? வெறியாடலால் நீங்கள் கள்ளுண்ண லாம். கள் உண்பாரை யான் தடுக்கிலேன். வேண்டும் அளவு உண்க. காரணம் காணாமல் நோய் தீர்க்க முயலும் உன் புத்தியே புத்தி. உன்னையன்றி என் அன்னைக்கு அறிஞர் பிறர் யாரும் கிடைத்திலர் போலும்" என்று எள்ளி உரைக்கின்றாள்.

பேரன்பர்களே, பொதுவாக வெறியாட்டு அறத் தொடு நிற்கவும் வரைவு கடாவவும் பயன்படுவதைக் காணலாம். சமுதாயச் சடங்கிற்கும், கற்பொழுக்கத்திற்கும் ஒரு போராட்டம் நடைபெறுவதை வெறியாட்டில் கண்டு மகிழலாம். முதுமை வழிவழியாக வரும் மரபைக் கண் மூடித்தனமாகப் பின்பற்றுவதையும், உண்மையை அறிந்த இளமை முதுமையை எள்ளி நகையாடுவதையும் பொரு ளாக அமையும் நிலையில் வெறித்துறைப் பாடல்கள் திகழ்வதையும் காணலாம். எதிர்ப்புணர்ச்சிகள் புலவர் கள் கிளர்ச்சியுடன் பாடுவதற்குக் கவர்ச்சியுள்ள இடங் களாகும். சங்க இலக்கியத்தில் இத்துறைபற்றி 40பாடல் கள் காணப்படுகின்றன. காமக்கண்ணி (காமாட்சி) யார் என்ற பெண் புலவர் இத்துறை பற்றி மூன்று பாடல்களை யாத்துள்ளார்.[47] அன்னைக்கும் அருமை மகளுக்கும் இடையே எழும் ஒரு பூசலைப் பெண் புலவர் பாடுவது சிறப்பல்லவா? இங்ஙனம் ஒரு துறைபற்றி ஆழ்ந்து அழ குறப் பாடவல்ல புலமை பற்றி '**வெறி பாடிய காமக்கண்ணி யார்**' என்று இவர் சிறப்பினைப் பெற்றார் என அறிகின்

47. அகம் - 22, 98; நற். 268

றோம். விரிவஞ்சி அப்பாடல்களை நன்கு விளக்குவதைத் தவிர்க்கின்றேன்.

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணையில் கபிலரால் பாடப்பெற்ற பத்துப் பாடல்கள் **'வெறிப்பத்து'** என்ற தலைப்பின் கீழ்க் காணப்பெறுகின்றன.[48] இவை அன்னையின் அறியாமை, வேலனின் மடமை, தோழியின் எதிர்ப்பு முதலியவற்றைத் தொடர்பாக நமக்கு அறிவூட்டி நிற்பதை அறியலாம். எல்லாப் பாடல்களிலும் கற்பின் வென்றியே தலைதூக்கி இலங்கக் கண்டு மகிழ்கின்றோம்.

தலைவியின் காதல் நோய்க்குத் தெய்வமூலம் கூறுவதாக அமைந்த வெறியாட்டைக் கற்புக்கு மாசாகச் சமூகம் கருதுவதில்லை. இந்நிலையில் தலைவியும் தாயர் வெறியாட்டு அயர்வதைப்பற்றி அத்துணையாகக் கவல்வதில்லை. இது நடைபெறாது தடுக்கத் தோழியும், தலைவியும் முன்னேற்பாட்டை மேற்கொள்வதும் உண்டு. நடந்தால் நடந்து ஒழியட்டும் என்று தடையின்றி அது நடந்தொழிய விட்டு விடுதலும் உண்டு. வெறியாட்டு என்பது அன்னை அறியாமையால் முதுவாய்ப்பெண்டிரின் யோசனையால் அரிநரைக் கூந்தல் செம்முதுச் செவிலியரால் நடைபெறும் ஒரு கேலிக் கூத்தேயாகும் என்பது தலைவியின் கருத்தாகும்.

தலைவியுடன் களவுக்கூட்டம் நேர்ந்த தலைமகன் அவளை மணந்து கொள்வதில் இருமுறைகள் உள்ளன. அவை களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல், களவு வெளிப்பட்ட பின் வரைதல் என்பனவாகும்.

> வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்(று)
> ஆயிரண்டு என்ப வரைதல் ஆறே [49]

---

48. ஐங்குறு. 241-250

49. தொல். களவியல் - 50 (இளம்)

என்று விதி அமைத்துக் காட்டுவர் தொல்காப்பியர். தலைவி அறத்தொடு நின்றதை எல்லாரும் ஒப்புக்கொண்ட பின் மணந்து கொள்ளுதல் களவு வெளிப்பட வரைதல் ஆகும். தலைவியர் தோழிமார் இவர்கள் கூற்றாக வரும் களவுப் பாடல்களைத்தொகுத்து ஆராய்ந்தால், உற்றார்க்கும் ஊரார்க்கும் களவை அறவே மறைத்து விரைவில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என அப்பெண்டிர்க்கு இருந்த நாணமும் கவலையும் நாட்டமும் புலப்படும். இம்மறைவு முயற்சியைத்தான் 'படாமை வரைதல்' என்று தொல்காப்பியம் வழங்கும். மரபு மணத்தை "தமரிற் பெறுதல்"[50] என்று கூறுவர் தொல்காப்பியர். களவை முற்றிலும் மறைத்தோ அன்றிச் செவ்விதாக வெளிப்படுத்தியோ எவ்வாறேனும் பெற்றோரின் இசைவையும் வாழ்த்தையும் பெற்று மரபு மணம் கொள்ள வேண்டும் என்ற பெருவிழைவு அகத்திணைப் பெண்டிரிடம் காணப்பட்டது என்பது அறியத் தக்கது. மேலும் தலைவியை ஒருவரும் அறியாமல் உடன் அழைத்துச் சென்று அவள் சுற்றத்தார் கொடுத்தலின்றியே மணம் செய்து கோடல் முற்காலத்தில் அறநெறியாகவே கருதப்பெற்றது. வாழ்வியல் ஆசான் தொல்காப்பியரும்,

> கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
> புணர்ந்துடன் போகிய காலை யான.[51]

என்று இதற்கு விதியும் செய்து பச்சை விளக்கு காட்டியுள்ளார். ஆயினும், களவு வெளிப்பட்டபின் தலைவியின் தமர் உடன்பட்டுக் கொடுத்தலே முற்காலத்துப் பெரு வழக்கமாக இருந்தது.

---

50. தொல். செய்யு - 179

51. தொல். களவியல் - 2 (இளம்)

மறைவெளிப் படுதலும்
தமரிற் பெறுதலும்[52]

என்ற தொல்காப்பியரின் கூற்றால் இது தெளியப்படும். இது களவின் வழிவந்த மணமாகும். இவற்றால் தமிழ்ச் சமுதாயம் களவொழுக்கத்தை ஒப்பியது என்பதும், ஊக்கியது என்பதும், ஆயினும் தலைமைக் காதலே முதன்மைக் காதல் என்று தலைமையளிக்கவில்லை என்பதும், திருமணத்திற்குக் களவே வாயில் என்று ஒரேவழி சுட்டவில்லை என்பதும் ஈண்டு எண்ணி உணர்தற்குரியவை. மேலும், களவுக்கும் கற்புக்குமுள்ள தொடர்பையும் இத்தகையச் செய்திகள் அறிவிக்கின்றன. கற்பு என்பது நல்வாழ்வு என்றும், களவுஎன்பது அகவாழ்வை எய்துவிக்கும் ஒரு நன்னெறியே என்றும் இவற்றால் அறிகின்றோம்.

மாமயி லன்னார் மறையிற் புணர்மைந்தர்
காமம் களவிட்டுக் கைகொள் கற்புற்றென[53]
[மறை-களவு; காமச்சிறப்புடைய களவு]

என்று நல்லந்துவனார் களவு,கற்பு இவற்றின்தொடர்பைப் புலப்படுத்துவர்.களவு கொண்டு விடுதற்குரியது. கற்பு கைகொள்ளுதற்குரியது என்று களவின் நிலையாமையையும், கற்பின்நிலையையும் உறவுபடுத்திக் காட்டி விளக்குவர். எனவே, கற்புவாழ்க்கைக்குக் களவு நல்ல தோற்றுவாயே யன்றி, இத்தோற்றுவாயின்றிக் கற்பியல் அமையாது என்று கோடல் தவறு. நல்லகாதல் வாழ்க்கை களவானே முகிழ்க்கும் என்பது பொருளன்று. எனவே, இறையனார் களவியல் ''கற்பெனப்படுவது களவின் வழித்தே''[54] என்று விதி செய்திருப்பது அகத்திணைநெறியன்று என்பது அறியத்தக்கது.

கற்பியலாம் இல்லறம் புகுவதற்கு இருநெறிகள் உள்ளன. ஒன்று களவுநெறி; இதுகாறும் இந்நெறியையே விளக்கினோம். மற்றொன்று மரபுநெறி. இதுவே தொல்

52. ஷை செய்யு - 179 (இளம்)
53. பரிபாடல்- 11அடி. 41-42
54. இறை. கள. 15.

காப்பியர் குறிப்பிடும் 'தமரிற்பெறுதல்' ஆகும். இவற்றுள் களவுநெறியே சங்கஇலக்கியத்தில் பாடல்பெற்றுத் திகழ்கின்றது. இது கற்புடைய காதல் களவாதலின் களவுப் பாடல்கள் காலம் கடந்த இலக்கியமாய் இலக்கணமும் அமையப்பெற்று அழியா வாழ்வு பெற்றன. பெற்றோர் பேசி முடிக்கும் திருமணப் புணர்ச்சியில் காதலர்க்கு எண்ணக்கிளர்ச்சியும் விறுவிறுப்பும்இல்லை.(இதனால்தான் மரபுமுறையில் தெய்வயானையை மணந்த முருகன் களவு முறையில் வள்ளியைக் கைப்பற்றி வாழ்கின்றான் போலும்!) இதனால் புலவரின் கற்பனைக்கும் இடம்இல்லை; எண்ணத் துடிப்பும் இல்லை. ஆதலால் சங்கச் சான்றோர்கள் ஆற்றொழுக்குபோன்ற இயல்பு மணத்தை - மரபுவழித் தோன்றும் மணத்தை - பாட முன்வரவில்லை. சங்கச் சான்றோர் பாடியதனால் களவுநெறி உயர்ந்தது என்றோ, அவர்கள் பாடல்கள் பெறாமையால் மரபுநெறி தாழ்ந்தது என்றோ கொள்ள வேண்டா. இரண்டையும் சமுதாயம் ஒன்றுபோலவே கருதுகின்றது.

பேராசிரியர் மு. இராகவய்யங்கார் அவர்கள், ''களவொழுக்கமின்றியே தனிக்கற்பு வழங்கியதில்லை'' என்று கூறி மேற்குறிப்பிட்ட இறையனார் களவியல் நூற்பாவினை சான்றாகக் காட்டுவர். இஃது ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்து என எனக்குத் தோன்றவில்லை. களவுவழியாகத் தான் கற்புஅமைகின்றது என்ற ஒரேவழி நிலவியிருப்பின் மகள் தன் களவைப் பெற்றோர்க்கு மறைக்க வேண்டியதில்லை. உடன்போக்கினை மேற்கொள்ள வேண்டியதுமில்லை. கற்புக்குக் களவு இன்றியமையாத நெறியாயின் களவினை மறை என வழங்க வேண்டியதில்லை. களவாளர்கள் தம் மறையொழுக்கம் புலனாகி விடுமோஎன்று சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் அஞ்சினதாகவே பாடல்கள் காணப் படுகின்றன. வெறியாட்டு, அறத்தொடு நிற்றல், மடலேறுதல் முதலிய ஒவ்வொரு கட்டத்திலும் காதலர்களிடையே இவ்வச்சஉணர்ச்சியைக் காணலாம்.

மறையொன்று நிகழ்ந்ததாகப் பிறர்அறியாமலேயே மணம் நடந்துவிட வேண்டும் என்று தோழி தலைவனை வரைவு முடுக்கம் செய்கின்றாள்; பல்வேறுவிதமான வரைவுகடா வும் பாடல்கள் இதனைப் புலப்படுத்துகின்றன.

'தொன்றியல் மரபின் மன்றல்' என்ற தொடர் அகப் பாட்டொன்றில் (அகம். 112) இயல்பு மணத்தைச் சுட்டி யிருத்தலால் மரபுவழித் திருமணமும் உண்டென்று புலப் படுகின்றது. காமக்களவினைப் பெற்றோர்அறியாமுன்னரே மரபு மன்றல் செய்துவிட வேண்டும் என்று தோழி விரும்பு கின்றாள். நீடித்த களவின்பம் பழி தருவது என்று தலை வனை இடித்துரைக்கின்றாள். களவு நெறியே நெறியாயின் மகள் களவைப் பெற்றோர் உணர்தலும், உடன்படுதலும், கொதித்தெழுதலும் பொருளற்றது; கற்புக்கு வழி இரண்டென்று இருத்தலால் மரபு நெறிப் பட்ட பெற்றோர் சினந்தெழுந்தனர் என்பதை அறிகின் றோம்.

மரபு நாட்டம் பண்டைத் தமிழர்களிடையே ஊறிக் கிடந்தமையைக் குறுந்தொகைப் பாடலும் (374)கலிப்பாட் டும் (41) தெரிவிக்கின்றன. இங்ஙனம் சங்க இலக்கியங் களில் பல்வேறு பாடல்களையும் அகத்துறைத் தோற்றத் திற்குரிய மனப்பாங்குகளையும் நோக்கினால் மரபுநெறிக் கிருந்த நன்மதிப்பு தெளிவாகும். இத்தகைய நெறியொன்று நிலவினமையைப் புறப்பாடல்களும் அரண் செய்கின்றன. சங்கச் சான்றோராகிய கபிலர், களவியல் பாடிய காதற் புலவர், பாரி மகளிரை விச்சிக்கோபாலும் வேள்பாலும் கொண்டு சென்று 'யான் கொடுப்ப நீ மணந்து கொள்' என்று இரந்த செய்திகள் மரபு நெறி வழக்கினைப் பறை சாற்றுகின்றன அன்றோ? இது தொல்காப்பியர் கூறும் 'கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'[55] என்ற அகத்திணை நெறியுடன் ஒத்துள்ளதைச் சுட்டுகின்ற

55. தொல். கற்பியல் - 1

தன்றோ? எனவே, தமிழர் திருமணத்திற்குக் களவு நெறியே யன்றி தமர் கொடுப்பக் கொள்ளும் மரபு நெறியும் பழைமையுடையது என்பது அறியப்படும். மரபுநெறிக்கு மதிப்பின்றேல் பாரியின் பெருமை சிறுமைபடக் கபிலர் பெருமான் 'நினக்கு யான் கொடுப்பக் கொள்'(புறம்-200) 'யான் தர இவரைக் கொள்' (ஷை-201) என்ற மரபு நெறியை மேற்கொள்ளா ரன்றோ?

சங்கப் பாடல்களை நுணுகி ஆராயின் களவின்வழி வந்த பழைய காதலர்க்கும் களவின்வழி வராத புதிய காதலர்க்கும் இன்ப நிலையிலும் அன்பு நிலையிலும் அற நிலையிலும் யாதொரு வேறுபாடும் இல்லை என்பதை அறியலாம். இந்தக் களவு நெறியும், கற்பு நெறியும் காப்பியங்களில் அமைத்துப் போற்றப் பெற்றதையும் உன்னினால் இரண்டின் செல்வாக்கையும் ஒருவாறு தெளியலாம். மரபுநெறிப்படி காவியம் அமைத்த இளங்கோவடிகள் களவுக் காட்சியைச் சுட்டவில்லை. திருத்தக்க தேவர் சீவகனின் பல மணத்தைப் புனையும் போதெல்லாம் களவினையும் காட்சி, ஐயம், தெளிவு, தேறல் முதலான துறைகளையும் வைத்துப் பாடியதைக் காண்கின்றோம். தேவர் வழி வந்த கம்பநாடனும் மிதிலைக் காட்சிப் படலத்தில் இராமனும் சீதையும் உள்ளம் ஒன்றிக் களவுப்புணர்ச்சியைச் சுவையுற அமைத்துக்காட்டுவதைப் பார்க்கின்றோம். சேக்கிழார் பெருமான் சுந்தரர் - பரவையார் திருமணத்தைக் களவு நெறியாகவும், காரைக்கால் அம்மையாரின் திருமணத்தை மரபு நெறியாகவும் அமைத்துப் பாடி இருநெறிகளையும் சிறப்புறச் செய்தார் என்பதனையும் அறிகின்றோம். இந்தக் காப்பியக் குறிப்புகளும் இந்த இருவகை மணநெறிகளும் தொன்றுதொட்டு வருபவை என்பதை வலியுறுத்துகின்றன. இரண்டு நெறிகளையும் எண்ணி ஆராய்ந்தால்தான் அகவிலக்கியத்தின் முழு வனப்பும் தட்டுப்படும். அறவழிப்பட்ட தமிழ்ச்சமுதாயத்தின் நாகரிகத்தின் முழுவடிவமும் தெளிவாகத் துலக்கமுறும்,

2- புறப்பொருளில்

இனி, புறப்பொருளில் 'அறம்' செயற்படுவதில் நம் கருத்தைச் செலுத்துவோம். இன்றையப் பொழிவின் தொடக்கத்தில் அறம்பற்றிக் கூறிய சில கருத்துகள் புறப்பொருள் பற்றியவையேயாகும். மனத்தூய்மையே அறத்திற்கு அடிப்படை என்று வள்ளுவர் பெருமான் கூறியுள்ளதைச் சுட்டினேன். மேலும், அவர் காட்டும் அடிப்படையில் ஈண்டும் குறிப்பிடுவேன். பொய்யாமொழியார், 'அறமே வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பைத் தரும்; செல்வத்தையும் தரும்; ஆகையால் அறத்தைவிட உயிருக்கு ஆக்கமானது வேறு எது? என்று வினவுவார்.

> சிறப்பீனும்; செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு (31)

என்பது அவர்தம் வாய்மொழி; திருவாய்மொழி. 'அறத்தை விட ஆக்கமும் இல்லை; அதனை மறந்து கைவிடுவதைவிடக் கெடுதியும் இல்லை' என்று தாம் விடுத்த வினாவுக்கு விடையும் தருவார்.

> அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
> மறத்தலின் ஊங்கில்லை கேடு. (32)

என்பது அவர் வாக்கில் அவர் தந்த விடை. இங்ஙனம் அறத்தின் சிறப்பை வற்புறுத்திய பெருமான் 'ஆகையால் அறச்செயல்களை இயலும் வகையால் ஓயாமல் செய்ய வேண்டும்; செய்யத்தக்க வழியால் எல்லாம் செய்தல் வேண்டும்' என்கின்றார்.

> ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
> செல்லும்வாய் எல்லாம் செயல் (33)
>
> [ஓவாதே-ஒழியாமல்]

என்பது அவருடைய திருவாய் சிந்திய முத்து.

சிலர் 'இப்போது இளமைப் பருவம் தானே' ஆகையால் அறத்தைப்பற்றி இப்போது கவலை வேண்டா; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று அறம் செய்வதைத்

தள்ளிப் போடுவார்கள்; காலதாமதம் செய்வார்கள். இது தவறு; இளமை முதற்கொண்டே அறம் செய்யவேண்டும்; அவ்வாறு செய்யப்படும் அறமே, அழிவு வருங்காலத்தில் அழியாத் துணையாக நின்று காக்கும்' என்று கூறுவார் அப்பெருந்தகை.

> அன்றறிவாம் என்னாது அறம்செய்க; மற்றது
> பொன்றுங்கால் பொன்றாத் துணை (36)

[பொன்றுதல்-உயிர் போதல்]

என்பது அவருடைய திருவாக்கு. 'செய்த உடம்பு அழி யவும், (அவ்வறம்) உயிரோடு ஒன்றி ஏனைய உடம்பினும் சேறலின், பொன்றாத் துணை என்றார்' என்று உரை கூறு வர் பரிமேலழகர். இத்தன்மையுடைய அறத்தினை நிலை யற்ற யாக்கை நிலைத்து நிற்கும்பொழுதே செய்ய வேண்டும் என்று இக்குறளில் வற்புறுத்துவதைக் கண்டு மகிழலாம்.

சமண முனிவரின் பாடல் ஒன்றினால் விரைந்து அறஞ் செய்யுமாறு ஆற்றுப்படுத்துதலை ஈண்டு நினைக்கின்றோம்.

> வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
> வைகலும் வைகலை வைகும்என்(று)இன்புறுவர்
> வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
> வைகலை வைத்துண ராதார்.[56]

[வைகலும் - நாள்தோறும்;வைகல் - பொழுதுகழிதல்; வைகும்- (மேன்மேல்) இருக்கிறதென்று]

''நாடோறும் பொழுதுகழிதலைத் தமதுஆயுள்நாளிலே கழிதலாக வைத்து நாள் கழிதலின் உண்மை நிலைமையை அறியாதவர்கள்,நாள்தோறும்நாள்கழிதல்வந்துகொண்டே இருக்க, அதனை நேரில் கண்டிருந்தும் அதன் உண்மை யை அறிந்து (இரங்கி விரைந்து)அறஞ் செய்யாதவர்களாய்

56. நாலடியார்-39.

நாள்தோறும் ஆயுள்கழிதலை மேன்மேல் இருக்கின்ற தென்று எண்ணிமகிழ்ச்சி அடைவர்'' என்பது இப்பாடலின் கருத்து. இதில் மக்களின் அறியாமைக்கு இரங்குவது காணத்தக்கது.

இளமைநிலையாமையை உணர்த்திக் காலதாமதமின்றி விரைந்து அறஞ்செய்யுமாறு உணர்த்தும் பல பாடல்கள் ''அறநெறிச்சாரம்'' என்ற நூலில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று:

> மின்னும் இளமை உளதாம் எனமகிழ்ந்து
> பின்னை அறிவென்என்றல் பேதைமை
> -தன்னைத்
> துணித்தானும் தூங்கா அறஞ்செய்க கூற்றம்
> அணித்தாய் வருதலும் உண்டு''[57]

[மின்னும் - மின்னல்போலும்; பின்னை - முதுமையில்; பேதைமை - அறியாமை; துணித்தானும் - வருந்தியேனும்; தூங்காது - காலதாமதம் செய்யாமல்; கூற்றம் - எமன்; அணித்தாய் - இளமையிலேயே]

என்பது, 'மின்னல் போலும் இளமைப் பருவமானது நிலைத்திருக்கும் என மகிழ்ந்து முதுமையில் அறத்தினைப் பற்றிக் கருதுதல் அறியாமையாகும். எமன் இளமையிலும் வருதல் உண்டு. ஆதலால் தனது உடலை வருத்தியேனும் ஒவ்வொருவரும் காலதாமதமின்றி அறம் செய்தல் வேண்டும் என்று இதில் தெருட்டுதலை அறியலாம். இளமை நிலையாமையை,

> முற்றி யிருந்த கனியொழியத் தீவளியான்
> நற்காய் உதிர்தலும் உண்டு.[58]

[தீவளி - கடுங்காற்று; நல்காய் - நல்ல காய்கள்]

57. அறநெறிச்சாரம்-21; பிறபாடல்கள்-16,17,18, 19, 20, 24, 26.

58. நாலடியார் - 19

என்ற பாடற் பகுதியில் 'பருவம் முதிர்ந்த கிழவர்கள் மாத்திரமேயன்றி உடம்பு வலிய இளையவர்களும் இரக்க மற்ற எமனால் இறத்தலும் உண்டு' என்று 'கடுங்காற் றினால் முதிர்ந்துள்ள பழங்கள் மாத்திரமேயன்றி நல்ல காய்களும் உதிர்தலும் உண்டு' என்ற உவமையால் பெற வைக்கும் நேர்த்தி கண்டு இன்புறற் பாலது.

சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் அறம் வற்புறுத்திப் பேசப்பெறுகின்றது. மாடல மறையோன் சீறி எழுந்த செங்குட்டுவன் சீற்றத்தைத் தணிக்கும் முறையில் இதனை எடுத்தோதுகின்றான். யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை முதலியவற்றை ஏதுக் களால் எடுத்துக்காட்டி உயிரின் தன்மையை விளக்கி, 'இன்றே வேள்வி செயல் வேண்டும்' என்று தூண்டும் முறை யில்,

வானவர் போற்றும் வழிநினக்கு அளிக்கும்
நான்மறை மருங்கில் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்.
'நாளைச் செய்குவம் அறம்'எனின் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்;
இதுஎன வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை'[58]

என்று கூறுவதைக் காணலாம். 'இதுநாள்வரை வாழும் நாளை வரையறுத்தவர் உலகெங்கினும் இலர்' என்று காட்டிய உண்மை நம் சிந்தனைக்குரியது.

அறம் செய்தலை வலியுறுத்தும் போக்கில் வள்ளுவர் கூறுவதை நோக்குவோம். அறம் ஒன்றே மனச்சான்றை மகிழ்விக்கும்; அந்த மனச்சான்றின் மகிழ்ச்சியே உண்மை யாகும். 'தன் நெஞ்சே தன்னைச் சுடும்' (293) என்ற

---

58. சிலப். நடுகல்காதை - 175 - 182

வாறு மனச்சான்று ஒருவனைச் சுடும்போது 'தன்நெஞ்சம், தானறி குற்றப்படின்' (272) என்றவாறு அது குற்றம் சாற்றும் போதும், 'பூதங்கள், ஐந்தும் அகத்தே நகும்' (271) என்றவாறு அது 'வஞ்சமனத்தான் படிற்றொழுக் கத்தை' எள்ளி நகைக்கும்போதும், ஒருவன் கண்ணுக் கும் செவிக்கும் மூக்கிற்கும் நாக்கிற்கும் உடம்பிற்கும் இன்பமாக எவ்வெவற்றைத் தேடித்தரினும், அவை இன்பம் நல்கா; அவற்றால் மனம் அமைதியுறாமல் மேன்மேலும் அலைந்து வருந்திக் கொண்டே இருக்கும். ஆகையால் அறத்தால் வருவதே உண்மை இன்பமாகும்; மற்றவை எல்லாம் போலி இன்பமாகும்; புகழும் இல்லாதவை யாகும். அதனால் ஒருவன் வாழ்நாளில் செய்யத் 'தக்கது அறமே; செய்யாமல் ஒதுக்கத் தக்கது பழியே.

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல (39)

[புறத்த - துன்பத்தினிடத்த]

செயற்பாலது ஒரும் அறனே; ஒருவற்கு
உயற்பாலது ஒரும் பழி (40)

[உயற்பாலது - ஒழிதற் பான்மையது; ஒரும் என்பன இரண்டும் அசை நிலை]

என்ற பொய்யாமொழிகளை நம் மனம் அசை போட்டு மகிழட்டும்; அதனால் உண்மை ஒளி தோன்றட்டும்.

அறம் - வகையும் தொகையும் : 'அறம்' பற்றிப் பேசும் போது முப்பால் எனப்படும் திருக்குறள் முழுவதையும் 'அறம் என்றே சொல்லும் வழக்கு உண்டு என்பது நம் நினைவிற்கு வருகின்றது. இதனால் அறம் என்பது பொருளையும் இன் பத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருத்தல் தெளிவா கின்றது. இதனால் 'அறம்' என்பது தொகை எனவும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலும் வகை எனவும்

ஒரு முறைமையைக் கொள்ள இடம் தருகின்றது. இனி அறத்துப்பாலை மட்டிலும் எடுத்துக் கொண்டால் இல்லறம் **இருபது** அதிகாரங்களிலும் துறவறம் **பதின்மூன்று** அதிகாரங்களிலும் கூறப்பெற்றிருப்பதைக் காணலாம். துறவற இயல் 'நோன்புப் பகுதி' 'ஞானப் பகுதி' என்ற இரு பிரிவுகளைக் கொண்டது. நோன்புப் பகுதியில் **ஒன்பது** அதிகாரங்களும், ஞானப் பகுதியில் **நான்கு** அதிகாரங்களும் உள்ளன. மக்களில் துறவற நிலைக்கு உயர்வோர் சிலராகவே இருப்பதால் துறவற இயலின் அதிகாரங்கள் சுருக்கமாகவே உள்ளன.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் - இவற்றில் வரும் செயல் முகமான கடமைகள் பொதுவாக அறச்செயல்கள் என்று கருதப்பெறுகின்றன. இதனால் செய்கை ஒவ்வொன்றும் அறத்தின் வகையாகின்றது. அந்த அறச்செய்கைகட்கும் வகைகள் உள்ளன. வகைகட்கு அறத்துப்பாலில் வரும் கடமைகள் முக்கியமானவை.

இல்லறவியலில் குறிக்கப்பெறும் அறச் செயல்களின் வகைகள் பின்னும் முதன்மையானவையாக அமைகின்றன. அவற்றிற்குரிய பக்குவத் திறன்கள் துறவற இயலின் நோன்புப் பகுதியிலும், ஞானப் பகுதியிலும் வருகின்றன. மேலும் அப்பக்குவப் பகுதிகள் சமய நெறிகளிலும், குறிக்கப்பெறுகின்றன. இக்காரணத்தால் **'சீவன்முக்தி'** வாழ்க்கை என்று கருதப்பெறும்; பெரியபுராணத்தில் வரும் நாயன்மார்களின் இல்வாழ்க்கையைப் போன்றது அது. திருக்குறள் இல்லற இயலில் வரும் 'நடுவு நிலைமை' 'அடக்க முடைமை', 'ஒழுக்க முடைமை', 'பொறையுடைமை', வெஃகாமை', 'பயனில சொல்லாமை' போன்ற அதிகாரக் குறிப்புகள் யாவும் பிறவும் துறவுத் தகுதி பெறும் சிறந்தோர்க்கே இயலக் கூடியவை என்பது தெளிவு. ஆதலால், அறத்தின் வகைகள் என்பவை சிறப்பாக இல்வாழ்க்கைக் கடமைகளையே முக்கிய

மாகக் குறிக்கும். இல்வாழ்வானின் நோன்பும் ஞானமும் அறத்துப்பாலில் வரும் துறவற இயல்புகள். அறத்தின் வகைகள் இல்வாழ்வாரின் மிகுநுட்பமான கடமை வகைகள் ஆகும்.

அறத்தின் செய் வகைகள்: வள்ளுவர் பெருமான் குறிப்பிடும் அறத்தின் செய் வகைகளை இனிக் காட்டுவேன். மனத்தால், சொல்லால் அறத்தின் இயல்பும் அடிப்படையும் கொள்ள வேண்டும் என்றாலும், செயல் வடிவில் தோன்றும் அறத்திறனே, முதன்மையாக அறம் எனக் கொள்ளப்படும். செய்கைக்கு உதவாத நிலையில் மனத்தாலும் வாக்காலும் அறத்திறன் இருக்கும்போது, அறத்திறனால் யாருக்கும் பெரும் பயன் இல்லை என்பது வெள்ளிடைமலை. மனத் தறமும், சொல்லறமும் செயலில் வரும்போதுதான் அவை '**அறச் செயல்**' என்று சிறப்பிக்கப்பெறும்; போற்றப்பெறும்.

'அறன் வலியுறுத்தல்' என்ற பாயிர அதிகாரத்தில் அறத்தைச் செயலின்மேல் வைத்தே ஆசிரியர் பல குறள்களில் பகர்கின்றார் இந்தத்தொகை அதிகாரத்தில் வரும்

அறவினை ...செல்லும்வாயெல்லாம் **செயல்**(3).
அறம் **செய்க** (36)
நன்று (அறம்) **ஆற்றின்**(38).
செயற்பாலது **அறம்**(40)

என்ற குறள்களில் இப்போக்கைக் காணலாம். அழுக்காறு முதலியவற்றிற்குக் காரணமான மன மாசு கூடாது என்று கூறும் குறள்(34) அறச் செயலுக்கு அடிப்படை கூறியதாகக் கொள்ளப்பட வேண்டுமேயன்றி, மனத்தறமாகிய அதுவே அறம் என்று வரை படுத்திக் கூறியதன்று என்பதை நாம் உளம் கொள்ள வேண்டும். மனஅழுக்குடன் இருப்போர் மேற்பூச்சாகப் பல செயல்களை மேற்கொள்ளலாம். இவை பிறர்க்குப் பயன்தருவனவாக இருக்கலாம்; நற்செயல்களாகவும் தோன்றலாம்; முறைபொருந்தியசெயல்கள

வும் காணப்பெறலாம்; கடமைச் செயல்களாகவும் கருதப் பெறலாம். ஆயினும், அவை அறம் ஆகா என்பது வள்ளுவர் கருத்து. இவற்றை அவர் ''வீண்ஆரவாரமானவை'' என்றே கருதுகின்றார். ஈண்டு தூய்மைக்கு முதல் இடம் தருகிறதையும் அத்தூய்மையின் அளவே பயன் எனவும் வரையறுத்துக்காட்டுவதை நாம் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

மனம் மாசு இல்லாமல் செய்யும் அறமே சிறந்தது என்று வற்புறுத்தும் வள்ளுவப் பெருந்தகை 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல்' என்ற நான்கையும் கொண்டு உள்ளத்தின் அடிப்படை அழுக்குகளாகத் திரட்டிக் காட்டுவார். இதில் வெகுளியை அடுத்து இன்னாச்சொல் வருதல் இன்னா செய்தலுக்கு வெகுளி காரணம் என்பது புலப்படுகின்றது. இவண் கூறப்பெற்ற 'அழுக்காறு', 'இன்னாச் சொல்' என்ற இரண்டும் **இல்லற இயலிலும்**, 'அவா, 'வெகுளி' என்ற இரண்டும் **துறவற இயலிலும்** அமைந்துள்ளன. ஆனால் கூர்ந்து நோக்குமிடத்து இல்லற இயலில் வரும் இரண்டு அதிகாரப் பொருள்களாகிய 'அழுக்காறு' 'இன்னாச் சொல்' என்பவற்றின் இடையே தான் துறவற இயலின் இரண்டு அதிகாரப்பொருள்களாகிய 'அவா' 'வெகுளி' என்பன இக்குறளில் தொகுத்துக் கூறப் பெறுகின்றன. இதிலிருந்து ஓர் உண்மையை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்த நான்கு அதிகாரப் பொருள் களும் அறன் வலியுறுத்தல் என்னும் பாயிர அதிகாரத்தில் தொகுப்பாக வந்துள்ளன; வகுத்துக் கூறுமிடத்து இடை யிலுள்ள 'அவா' 'வெகுளி' என்பன துறவறவியலுக் காகப் பிரித்துக் கொள்ளப்பட்டன என்றாலும், இந்த நான்கும் இரு நெறியாளர்க்கும் பொருந்தும் என்பதே என் கருத்து. காரணம், துறவற நெறியினரும் தம் அமைப்புக்கு என்று தனி நிலையமும் சூழலும் அமைத்துச் செல்வம் சேர்ப்பதே சிறப்புறுவதற்கு வழி என்று காணும் காட்சியாக இருக்கும் போது துறவிகளுக்கும் பாசம்பற்று

போன்றவை இல்லையென்று உறுதியாகச்சொல்ல முடியாதல்லவா?

(அ) இல்லற இயல்

இதன் முதல் இயலாகிய "இல்வாழ்க்கை" என்பதில் நல்லாற்றின் நின்ற துணை' (41) என்பதில் "**நல்லாறு**" என்ற பெயரும், 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றின் போஒய்ப் பெறுவதெவன்? (46) என்பதில் "**அறத்தாறு**" என்ற பெயரும் வருகின்றன. 'ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா' (48)இல் "**ஆறு**" என்ற பெயரும் உள்ளது. இதனால் "நல்லாறு" என்பது 'அறத்தாறு' தான் என்பதை அறிய முடிகின்றது. மேலும்(46)-இல் வரும் 'புறத்தாறு' என்னும் சொல் வெளித் துறவைக் குறிப்பதோடு 'அறத்தாறு' என்பதற்கு எதிர்ச்சொல்லாகவும் அமைகின்றது. இதனால் 'அறத்தாறு' என்பது வெளித்துறவைக் குறிக்காமல் சிறப்பாக இல்லறநெறியைக் குறித்தல் துணியப்படும். 'அறன்இழுக்கா இல்வாழ்க்கை', 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற தொடர்கள் இக்கருத்தை மேலும் வலுப்படுத்தும். அப்படியாயின் 'நல்லாறு' என்பதும் இல்லறத்தையே குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது. 'இல்லறம் அல்லது நல்லறம் அன்று'[60] என்று ஔவைப்பாட்டி பாராட்டிய அறத்துப்பாலின் 'இல்வாழ்க்கைச்' சிறப்புப் பெயராக வருவதால் அறத்துப்பாலில் திருவள்ளுவர் 'புறத்துறவுக்கு' ஒருப்படவில்லை என்பது தேற்றமாக அமைகின்றது. இதனால் இல்லற இயலும் இதன் அதிகாரங்களும் அதிகாரப்பொருள்களும் அவற்றில் வரும் அறக் கடமைகளும் முதலிலேயே இடம் பெறுகின்றன.

இல்வாழ்வான் அறமாகக் கருதவேண்டிய கருத்துகள் **இருபது** அதிகாரங்களில் கூறப்பெறுகின்றன. இவற்றை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஆராயலாம்.

60. கொன்றை வேந்தன்-3

முதற்பகுதியில் இல்வாழ்வான், வாழ்க்கைத்துணை, மக்கட் பேறு என்ற மூன்றுஅதிகாரங்களை அடக்கலாம். இவை மூன்றிலும் இல்லறம் புரியும் குடும்பத்தாரை - அதாவது குடும்பத்தின் உறுப்பினரைப்பற்றி எடுத்தோதப்படு கின்றன. இவற்றில் நம் கவனத்தைச் செலுத்துவோம்.

1. இல் வாழ்வான் : 'இல்வாழ்வான்' என்ற சொல் இல் லாளோடு கூடி வாழ்க்கைக்குரிய கடமைகளைத்தவறாமல் செய்து கொண்டு சிறந்த மகனாய் வாழ்கின்றவன் என்பது பொருள். இவ்விடத்தில் அறச்செயல்கள் புரிந்து வரும் சிலரது நிலைகளைக் கருத்தில் கொள்வது இன்றியமை யாதது. திருமணம் புரிந்துகொள்ளாதவர்கள் சில பொதுப் பணிகள் புரிந்துகொண்டு உயிர் வாழ்ந்து வந்தாலும் உண்மையில் அவர்கள் வாழாதவர்கள், அதாவது, வாழ்வு இழந்தவர்களாகின்றனர். திருமணம் புரிந்து கொண்டவர் களில் மனைவி கணவனை இழந்த நிலையிலும் கணவன் மனைவியை இழந்த நிலையிலும் அவர்கள் உரியநோன்பு களைப்புரிந்து உயிர்வாழ நேரிடினும்,அவர்களும் வாழ்க்கை வாய்ப்பு அற்றவர்களாவர். திருமணம் புரிந்துகொண்ட வர்கள் மறுமணம் செய்துகொள்ள நேர்ந்து பலஅறசெயல் களைச் செய்துகொண்டு நீண்டகாலம் வாழ்ந்தாலும், உண்மையில் அவர்களும் வாழாதவர்களே; அவர்களுடைய செயல்களும் முழுஅறம் அல்லாதனவேயாகும்.

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவொர்க் கெதிர்த்தலும் தொல்லோர்சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை[61]

என்று இளங்கோவடிகள் கண்ணகியின் வாயில் வைத்துப் பேசுவதால் இதனைத் தெளியலாம். இல்வாழ்க்கையில் காதலர் இருவரும் ஒருமனப்பட்டு அறச்செயல்கட்காக தியாகம் செய்து வாழ்கின்றனர். (திருக்குறளில் மறுமணம் புரிந்துகொள்வதற்கு விதியில்லை).இங்குக் காதலர்கள் இரு

61. சிலப். கொலைக்களக் காதை - (71-73).

வரும் தம்மை மறந்து பிறரிடம் அன்புசெலுத்துகின்றனர். இருவரும் ஒருமனம்உடையவராய் உலக நன்மை கருதி வாழும் சிறப்பை இல்லறம் காட்டுகின்றது. இங்குக் கணவனும் மனைவியும் ஒத்த மனமுடையவராய் வாழ்கின்றனர். ஆதலின் இன்ப துன்ப உணர்வுகளையும் மற்ற மனநிலைகளையும் ஒருவர் மற்றவருக்கு மறைத்து வாழும் வாழ்க்கைக்கு இங்கு இடம் இல்லை. கோவலனும் கண்ணகியும் புகார் நகரில் வாழ்ந்த இல்லற வாழ்க்கையை இளங்கோ அடிகள்,

வார்ஒலி கூந்தலைப் பேர்இயல் கிழத்தி
மறப்புஅரும் கேண்மையொடு அறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெரும்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமொடு ஒருதனிப் புணர்க்க[62]

[வார்ஒலி- நீண்டதழைத்த; கேண்மை - சுற்றம்; அறப் பரிசாரம் - அறநெறியாளரை ஓம்பல்; புறந்தரூஉம்- பேணும்; வேறுபடு திரு- நானாவிதமான செல்வம்; வீறு பெற- உயர்ச்சிபெற; ஒருதனி புணர்க்க - வேறாகஇருக்கச் செய்ய]

என்றுவிளக்குவர். தனித்தனியாக வாழும் வாழ்க்கையில் உணரும் உணர்வெல்லாம் இத்தகைய இல்லறவாழ்விலும் உணரலாம். இங்கு ஒருவர்குறை மற்றொருவருக்கு நன்கு புலப்படுமாதலால் இன்னும் தெளிவாக மனநிலை விளங்கவும் இடம்உண்டு. இதன்காரணமாகவே, மனம் வாழும் நிலையையும் அதற்கு உரிய அறநெறியையும்தனி வாழ்க்கை வாயிலாக வள்ளுவர்பெருமான் முதலில் இல்வாழ்க்கையை விளக்குகின்றார்; பிறகு அதன் சார்பானவைகளையும் விளக்குகின்றார். இந்தப் பயிற்சியின் பயனாகப் பரந்த அன்பு அருளாக வளர்ந்து பற்றற்ற வாழ்க்கையான துற

62. சிலப். மனையறம் படுத்த - (84-88.)

வற வாழ்க்கையாக மாறுகின்றது. இதனை வள்ளுவர்பெருமான் "அருளென்னும் அன்பீன்குழவி" (757) என்று பேசுவர். இத்தகைய துறவற வாழ்க்கையை இப்பொழிவின் இறுதியில் விளக்குவேன். இவற்றையெல்லாம் ஆழ்ந்து ஆராய்வோமாயின் வள்ளுவர் பெருமான் அறத்துப்பால் முழுவதிலும் மனத்தின் வாழ்வையே விளக்குகின்றார் என்றும், அம்மனம் தூய்மைப் படுவதற்கு வேண்டிய அறநெறியை அறிவுறுத்துகின்றார் என்றும் அறியமுடிகின்றது.

2. **இல் வாழ்க்கை:** அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பாகும்; அறத்தைப் போற்றி வாழ்வதே அதன் பயனாகும்:

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

என்பது அறநெறி அருள்மொழி. அவர்காட்டும் அறநெறியில் வாழ்ந்தால் போதும்; வேறுநெறியில் (துறவறநெறியில்) போய்ப் பெறத்தக்க பயன் ஒன்றும் இல்லை(46). அறத்தின் பயன் எல்லாம் பிறங்கும் இல்வாழ்க்கை வாழ்கின்றவனே வாழ முயன்றவர்கள் எல்லோரிலும் தலையானவனாகத் திகழ்வான் என்பார் (47).

இல்லறம் துறவறம், என்ற இரண்டிலும் அறப்பண்பு இழையோடுமாறு வாழவேண்டும் என்பதை வள்ளுவம் உணர்த்தும். ஆயின் இந்த இரண்டு நெறிகளிலும் எது சிறந்தது என்ற வினா நம்பால் எழலாம். இதுபற்றிச் சிந்திப்போம். பொதுவாக நம்முடைய வாழ்க்கை தொடங்குவது இல்லறத்தில்; அதுவும் இளமைக்காலத்தில், நம்முடைய வாழ்க்கை முடிவது துறவறத்தில். தன்னையும் காத்துப் பிறரையும் - துறந்தார், நல்கூர்ந்தார், இறந்தார், மாணிநிலையிலும், வானப்பிரத்த நிலையிலும், முற்றத்துறந்த யோகநெறியிலும் வாழ்பவர்களையும், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவர்

களையும் - காக்கவல்லது இல்லறம். அதற்கு உழைத்துப் பொருளீட்டும் ஆற்றலும், பகுத்துண்ணும் திறனும் வேண்டும்; இளமைக்காலமே இதற்கு ஏற்றது. ஆற்றலும் திறனும் குறைந்த முதுமைக் காலத்தில் முன்போல் பொருளீட்டவும் பகுத்துண்ணவும் இயலாத நிலைமை வந்தெய்தும். அப்போது வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொண்டு அனைத்தையும் துறந்து வாழ நேரிடும். இந்த இரண்டில் எது கொள்ளத் தக்கது என்று ஆய்வதில் பயன் இல்லை. ஆனால் இந்த இரண்டில் எது சிறந்தது என்று ஒப்பிட்டுக் காணலாம். அவ்வாறு காணும்போது எதனால் பிறர்க்குப் பயன் மிகுதி என்று ஆராய்ந்து நோக்கவேண்டும். மற்றவர்களையும் அறவழியில் வாழச் செய்து தானும் அறநெறியிலிருந்து வழுவாது வாழவல்லது இல்வாழ்க்கை என்பது தெளிவு. தாம் மட்டிலும் நன்மை அடைவதற்காகத் தவம் செய்வோர் மேற்கொள்வது துறவற வாழ்க்கை. இவற்றுள் பின்னதை விட முன்னதே சிறந்தது என்பது வள்ளுவர் கருத்து.

ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து (48)

என்பது அவர் திருவாக்கு. இல்லறநெறிப்படி வையத்தின்கண் வாழ்பவன், வையத்தானேயானாலும் உம்பர் உலகில் உறையும் தேவருள் ஒருவனாகவே கருதப்பெறுவான் (50)

3. **வாழ்க்கைத்துணை நலம்:** இல்லறம் நல்லறமாகச் சிறக்க வேண்டுமானால் அதற்குத் தக்க நல்ல பண்புடைய வாழ்க்கைத்துணை அமைய வேண்டும். அங்ஙனமே நல்ல மனைவிக்குத் தக்க கணவனும் வாய்க்க வேண்டும். தக்க நல்ல பண்புடைய வாழ்க்கைத்துணை பற்றிச் சமண முனிவர் கூறுவது:

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குஉடையாள் ஊராண் இயல்பினாள் - உட்கி
இடன்அறிந்து ஊடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்[63]

[காதலன் - கணவன்; காதல்வகை - ஆசையின்படி; உட்கு - அச்சம்; ஊராண் - உபகாரியாம் தன்மை; உட்கி - அஞ்சி]

இதில், கண்ணுக்கு இனிய உருவமுடையவளாகியும், கணவனது ஆசையின்படி தன்னை அலங்கரித்துக்கொள்பவளாகியும், அச்சத்தை உடையவளாகியும், உபகாரியாந் தன்மையுடையவளாகியும், தன் கணவனிடத்து அஞ்சி சமயமறிந்து பிணங்கி, இன்பமுண்டாம்படி உடனே அறிந்து ஊடல் தீர்க்கின்ற கபடமில்லாத இன்சொற்களையுடையவளாகியும் இருப்பவளே மனைவியாவாள்' என்று கூறப் பெற்றிருத்தல் அறியத்தகும். 'கழிவினும் வரவினும்' (தொல். கற்பியல்-12) என்ற நூற்பாவில் இச்செய்யுளை எடுத்துக்காட்டி, 'கட்கு இனியாள் - இது காமம்; வகை புனைவாள் - இது கற்பு; உட்குடையாள் - இது ஒழுக்கம்; ஊராண்மை - இது சுற்றம் ஓம்பல்; ஊடி உணர்தல்-இது அல்லவை கடிதல்' என்று விளக்குவர் நச்சினார்க்கினியர்.

வாழ்க்கைத்துணை 'இல்லறத்திற்குத் தக்க நல்ல பண்புடையவளாகவும், தன்னைத் துணையாகக் கொண்ட கணவனுடைய வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்துபவளாகவும் இருத்தல் வேண்டும்' என்பார் வள்ளுவப்பெருந்தகை. மேலும் அவர், 'இவ்வாறு இல்லறத்திற்கு ஏற்ற பண்பு அவளிடம் இல்லையானால், அந்த இல்வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் பயனில்லை என்றும், கூறுவார்.

63. நாலடி-384

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (52)

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல் (52)

என்று அவர்தம் திருவாக்குகள் இவற்றைப் புலப்படுத்தும்.

இல்லறம் நடைபெறும் இல்லத்துக்கு உரியவள் பற்றிச் சமண முனிவர் கூறுவது:

உள்ளத்து உணர்வுடையாள்; ஓதிய நூல்அற்றாள்;
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள்-தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்,[64]

[உணர்வு - நல்லறிவு; நூல்அற்று - நூல்போலும்; வள்ளன்மை - ஈகைத்தன்மை; ஒண்பொருள்- மிக்க செல்வம்; வாள்- வாளாயுதம்]

இதில் 'இல்லத்தரசி தெளிந்த அறிவுடையான் கற்ற நூல் போலவும்,கொடையாளிக்குக்கிடைத்த செல்வம் போலவும் சுத்தவீரன் கையில் பிடித்த வாள் போலவும் இருத்தல் வேண்டும்' என்று கூறுவதைக் காணலாம். தொல்காப்பியக் கற்பியல் நூற்பா-5 இல் ''அஞ்ச வந்த உரிமைக்கண்ணும்'' என்ற பகுதிக்கு இப்பாடலை எடுத்துக்காட்டி, இப்பாடலில் 'நலம்' என்றது, இல்லறம் நிகழ்த்துமாறு தன் மனத்தால் பலவகையாகக் காணலும், பிறர்க்குத் தான் செய்தலும், கற்புச் செய்தலும் என்ற மூன்றினையும் விளக்கிப் பாடலிலுள்ள மூன்று கருத்துகளையும் இம்மூன்றுடன் பொருத்திக் காட்டித் தெளிவுபடுத்துவர். மேலும், இதனைத் தலைவன் தலைமகள் உரிமைகளை வியந்து கூறும் கூற்றாகவும் கொள்வர்;

இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியேன்று வற்புறுத்தும் வள்ளுவர்பெருமான் பெண்ணின் தனிச்

64. நாலடி- 386

சிறப்பையும் எடுத்துக்காட்டுவார். கற்பு என்னும் உறுதி உண்டாகப்பெற்றால் பெண்ணை விடப் பெருமையுடைய நிலை வேறுஇல்லை(54). பெண்கள் நிறை என்னும் பண்பினால் தம் நெஞ்சத்தை நெறியில் நிறுத்திக் காத்துக் கொள்ளும் காப்பே மிகச் சிறந்த காப்பாகும். இதை நோக்க மதில்முதலியன அமைத்துக் காப்பவர்களின் காவல்முறை பயனற்றதாகும் (56). இந்தப் பண்பினால் தன்னையும் காத்துக் கொண்டு, தன்னைத் துணையாகக் கொண்ட கணவனையும் காத்து, இருவரும் ஒருமனத்தோடு நடத்தும் இல்வாழ்க்கையின் நன்மை மிக்க புகழையும் காத்துச் சோர்வு இல்லாமல் வாழ்கின்றவளே இல்லத்தரசி என்னும் சிறப்புடையவள் ஆவாள்(57). இவற்றால் இல்லறவாழ்க்கைக்கு முக்கிய விசை (Main spring)போன்றவள் பெண்ணே என்பது தெளிவாகின்றது. இல்லற வாழ்க்கைக்குச் சார்பானவற்றுள் தலையானவள் வாழ்க்கைத்துணையாவாள். ‘வாழ்க்கைத்துணை’ என்றுகூறாமல், ‘வாழ்க்கைத்துணை நலம்’ என்று கூறியதில் ‘நலம்’ என்ற சொல்லாட்சி மிக அற்புதமாக அமைந்திருக்கும் சிறப்பை உன்னுந்தோறும் புத்தொளி காட்டி நிற்கின்றது.

வள்ளுவர் கற்பைபற்றிப் புகழுங்கால்,

> பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
> திண்மையுண் டாகப் பெறின்?(54)

என்று கூறுவார். இந்தக் கற்பைச் சீதையின்மேல் வைத்து அநுமன் வாய்மொழியாக கம்பநாடன் கூறுவதைக் காண்போம். அங்கதன் தலைமையில் சீதையை நாடித் தென் திசைச் சென்ற வானர வீரர்கள் வெற்றியுடன் திரும்புகின்றனர். அநுமன் வரவை நோக்கியிருந்த இராமனின் மொய் கழலைத் தொழாமல், ‘முளரி நீங்கிய தையலை நோக்கிய தலையன் கையினன்’ என்ற நிலையில் அநுமனைக் காண்கின்றனர். குறிப்பினால் அறியும் திறன்படைத்த இராமனும்

வண்டுஉறை ஓதியும் வலியள்; மற்றிவன்
கண்டதும் உண்டுஅவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன்?[65]

இராமனை அடைந்த அநுமனும்,

'கண்டனென் கற்பினுக்(கு)
அணியைக் கண்களால்'[66]

என்று விநயமாகக் கூறுகின்றான். 'பிராட்டியை' என்று முதலில் கூறினால் அவளது நிலைமை என்னாயிற்றென்று கூறுவனோ என்னும் சங்கையினால் இராமனுக்கு மிக்க துன்பம் உண்டாகக் கூடுமென்று கருதி 'கண்டனென்' என்று முதலில் கூறினன் அநுமன். இதனை யடுத்து 'கற்பினுக்கு அணி' என்று கூறிய தன்காரணம், தானேவிளங்கும்; அவள் கற்பில் சிறவாதிருப்பின், அவளைக்கண்டது பயன் படாமை போகுமன்றோ? 'கற்பினுக்கு அணி' என்பதன் கருத்து யாதோ எனின்: பிராட்டி ஒருத்தி மிகவும் நெருக்கடியான நிலையிலும் மன உறுதியோடு கற்பு நிலையில் சிறிதும் வழுவாது இருப்பதனாலே பதிவிரதா தர்மம் உலகில் சிறந்து விளங்கிற்று என்பதை உணர்த்துதற்கு, 'கற்பினுக்கு அணியைக் **கண்களால்** கண்டேன்' என்றது, ''அந்தச்சீதாப் பிராட்டி உன்னைப் பிரிந்து சிறைப்பட்டிருக்கின்ற அங்குக் கண்களினின்றும் நீரைத் தாரைத் தாரையாகப் பெருக்கிக் கொண்டிருப்பதனால், அவள் கற்பினுக்கு அணியாவள் என்பதை உணர்ந்தேன்' என்பதைத் தெரிவித்தற்கு, கற்புநிலை கெட்டிருப்பின் துயர்க்குக் காரணம் இல்லையாதலால் இவ்வாறு கூறினான் இராமதூதன் என்று நயங் கண்டு மகிழலாம்.

65. சுந்தர. திருவடிதொழுத-56
66. ஷெ. ஷெ - 58

இங்ஙனம் குறிப்பினால் கூறியதனை அநுமன் வகுத்துக் கூறும்போதுதான் 'கற்பின் விசுவ ரூபத்தை' நன்கு அறியமுடிகின்றது. அநுமன் கூறுவான்:

உன்பெருந் தேவி என்னும்
  உரிமைக்கும், உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும்
  வாய்மைக்கும், மிதிலை மன்னன்
தன்பெரும் தனயை என்னும்
  தகைமைக்கும், தலைமை சான்றாள்
என்பெரும் தெய்வம் ஐயா!
  இன்னமும் கேட்டி என்பான்.[67]

[உரிமை-தகுதி; மருகி-மருமகள்; தனயை-மகள்; தகைமை - தன்மை ; தலைமை - சிறப்பு ; கேட்டி - கேட்பாயாக]

இராமன், புருடோத்தமன்; அவனுக்கேற்ற உரிமைஉடைய வளானாள்; தசரதன் மா மன்னன்; அறந்திறம்பாதவன்; அவனுக்கேற்ற மருமகளானாள். சனகன் அரச முனிவன்; வைதிக ஆசார முறைமை சிறந்த பரம்பரையினன்; அவனுக்கு ஏற்ற மகளானாள். இந்த மூன்று நிலைக்கும் தலைமையுளதாதற்கு ஏற்ப சால்புடையவளாகத் திகழ்கின்றாள் என்று மாருதி உணர்ச்சியுடன் பேசுகின்றான். இன்னமும் கேட்டி என்பதைத் தொடர்ந்து,

உன்குலம் உன்ன தாக்கி
  உயர்புகழ்க்கு ஒருத்தி யாய
தன்குலம் தன்ன தாக்கித்
  தன்னைஇத் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்(கு) ஈந்துஅவ்
  வானவர் குலத்தை வாழ்வித்து
என்குலம் எனக்குத் தந்தாள்
  என்இனிச் செய்வது எம்மோய்![68]

67. சுந்தர - திருவடிதொழுத - 59
68. சுந்தர - திருவடி தொழுத - 91

[உன்னதாக்கி - உரியதாகச் செய்து; ஒருத்தி - ஒப்பற்றவள்; தன்குலம் - தான் பிறந்த குலம்; தனிமை செய்தான் - தனித்திருக்கும்படிச் செய்தவன்; வன்குலம் - வலிய குலம் (அரக்கர்குலம்); கூற்று - யமன்; வானவர்குலம் - தேவர்குலம்; என்குலம் - அநுமகுலம்; எம்மோய் - என் தாயாகிய பிராட்டி]

என்று பேசுவான். உலகில் தன்குடிப்பிறப்பொன்றை மேம்படுத்துவதே ஒருவர்க்கு அரிது. ஆனால் பிராட்டியோ தனது கற்பு நிலை கலங்காத தன்மையினால் தனக்கேயன்றித் தன்குலத்திற்கும் பிறர் குலத்திற்கும் பெருமையைத் தந்தாள் என்பதை இவ்வாறு பெற வைக்கின்றான். 'உன்குலம் உன்னதாக்கி' : இதற்குமுன் இராமன் பிறந்த குலத்தை, 'சூரியகுலம், மநுகுலம், ககுத்தகுலம், இரகு குலம்' என்று பெயரிட்டு வழங்கினர் முன்னோர். கற்பினுக்கு அணியைப் பெற்றதனால், இனி இராமன் பேரிட்டு, 'இராமகுலம்', 'இராகவகுலம்' (இரகுவமிசம்) என இவ்வாறு வழங்குமாறுச்செய்வித்தாள். 'தன்குலம்தன்னதாக்கி'; இதற்கு முன் சீதை பிறந்த குலம் 'ஜனக குலம்' என்று வழங்கப்பட்டு வந்தது; இனி 'ஜானகி குலம்' என்று அக்குலத்தை இவள் பெயரிட்டுச் சொல்லும்படி செய்துவிட்டாள். 'என்குலம் எனக்குத் தந்தாள்'; என் குலம் - வானரர் குலம். வானரர் குலத்துப் பிராணிகளையெல்லாம் அநுமன் என்று வழங்குமாறு செய்தாள் என்பது கருத்து; குரங்குகள் 'அநுமார்கள்' என்று இப்போதும் வழங்கப்படுகின்றன அன்றோ? வன்குலம் - அரக்கர் குலம். கூற்றுக்கு ஈதல் - அழித்தல். இவற்றுள் அவரவர் பிறந்த குலம் அவரவர் குலமாக மாறியதையும், அரக்கர் குலம் கூற்றுக்கு ஈந்ததையும், இதனால் தேவர் குலத்தை வாழ்வித்ததையும் இங்குக் கண்டு மகிழ்கின்றோம்.

மேலும் இராமதூதன் பேசுகின்றான்:

விற்பெருந் தடந்தோள் வீர!
வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டேன் அல்லேன்;
இற்பிறப்பு என்ப தொன்றும்,
இரும்பொறை என்ப தொன்றும்,
கற்பெனும் பெயர தொன்றும்,
களிநடம் புரியக் கண்டேன்.[69]

[தடந்தோள் - நீண்ட தோள்; வெற்பு-திரிகூடமலை; தவத்தள் - கற்பொழுக்கமாகிய தவத்தை யுடையவள்; நங்கை-பிராட்டி; இல்பிறப்பு - உயர்ந்தகுடியில் பிறத்தல் என்ற குணம்; பொறை - பொறுமை; கற்பு - பதிவிரதா தர்மம்; களிநடம் - கூத்தாடுதல்]

பிராட்டி ஒரு பெண்ணரசியாக உள்ளாள் என்பது மாத்திரமன்று; உயர்குடிப்பிறப்பு, பொறுமை, கற்புநிலை என்பவற்றின் சொரூபமாகவும் உள்ளாள் என்ற கருத்து இப்பாடலால் புலனாகின்றது. பிராட்டியைக் காணக் கருதுமிடத்து இற் பிறப்பு முதலியனவே முந்திரிக்கொட்டை போல் முற்பட்டுத் தோன்றுகின்றன. பிராட்டியிடமுள்ள இற்பிறப்பு முதலிய குணங்களைத் தெரிவித்தல், இவ்வாறு கூறியதன் பயனாகின்றது. பிராட்டிக்குத்தவம்: இராமனை மணந்து கொள்ளுமாறு செய்த நோன்பு. பெருந்தவம் - காட்டில் பிரிந்த நிலையிலும் இராமனுடைய மனத்திலிருக்க நேர்ந்தது. ஆகவே 'நற்பெருந்தவத்தள்' என்றது; இராமனை மணந்து கானகத்திற்கு அவனுடன் போந்து பிரிந்த நிலையிலும் அவன் மனத்தால் நினைந்திருக்குமாறு உள்ளவள் என்பதைத் தெரிவித்ததற்கு. பிறிதொரு பாடலில், 'உம்பி புல்லினால் தொடுத்த தூய சாலையில் இருந்தாள் ஐய! தவம் செய்த தவமாம் தையல்'[70] என்று

69. சுந்தர. திருவடி தொழுத-92
70. சுந்தர: திருவடி தொழுத-64

கூறுவான் அநுமன். ''பதிவிரதா தருமம் என்னும் தவம், தான் செய்ததொரு தவத்தின் பயனாக உள்ளவள்'' என்பதால், 'தவம் செய்த தவமாம் தையல்' என்று சுட்டிக் காட்டப்பெற்றது. இதனைக் கருத்தில் கொண்டே அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்,

> 'இதிகாச சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிலிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது'[71]

என்று சிறப்பித்தார். நம்மாழ்வாரும் 'தனிச் சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்'[72]என்றுஅருளிச்செய்துள்ளார்.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாகவுள்ள இன்னொரு பாடலில் வாயுகுமாரன் பேசுவது:

சோகத்தா ளாய நங்கை
கற்பினால் தொழுதற் கொத்த
மாகத்தாள் தேவி மாரும்
வான்சிறப்பு உற்றார்; மற்றைப்
பாகத்தாள் அல்லள், ஈசன்
மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள்; மாயன்
ஆயிரம் மோலி ஆனாள்[73]

[சோகம் - துக்கம்; மாகத்தார் - பெருவானத்தில் உள்ளவர்; தொழுதல் - வணங்குதல்; வான் சிறப்பு - மிக்க பெருமை; பாகம் - இடப்புறம்; பதுமத்தாள் - திருமகள்; ஆகம் - மார்பு; மோலி - திருமுடி]

'தக்கவன் ஒருவன் வாழத் தன்குலம் எல்லாம் வாழும்' என்பது ஒரு முதுமொழி. ஓர் இனத்தாரில் ஒருவரது

71. ஸ்ரீவசன பூஷணம்-5. (புருடோத்தமநாயுடு பதிப்பு-சென்னைப் பல்கலைக்கழகம்)
72. திருவாய் 4.8:5
73. சுந்தர. திருவடி தொழுத-67

நன்மை தீமைகளினால் அவ்வினத்தவர்க்கெல்லாம் பெருமை சிறுமைகள் உண்டாதல் இயல்பு. அது போலவே சீதாப்பிராட்டியின் கற்பு நிலையினால் மண்ணுலகத்து மாதரேயன்றி விண்ணுலகத்து மாதரும் சிறப்படைந்தனர் என்பதை இதனால் பெற வைக்கின்றார் கவிஞர். 'நங்கை கற்பினால் மாகத்தார் தேவிமாரும் வான் சிறப்புற்றார்' என்ற பகுதி இதனைத் தெரிவிக்கின்றது. 'பாகத்தாள் அல்லள் ஈசன் மகுடத்தாள்'; அம்மை அப்பர் மூர்த்தத்தில் சிவபெருமான் இடப்பாகத்தில் உள்ள அம்பிகை அப்பெருமானின் தலைமேல் இருக்கத்தக்க சிறப்படைகின்றாள்.' 'பதுமத்தாளும், ஆகத்தாள் அல்லள் மாயன்ஆயிரம் மோலி ஆனாள்': 'அகலகில்லேன் இறையும்' என்று திருமாலின் திருமார்பில் வீற்றிருக்கும் திருமகளும் அப்பெருமானின் ஆயிரம் திருமுடிகளின்மேல் இருக்கத்தக்கவளாகின்றாள். கற்பில் சிறப்புற்ற பிராட்டியால் மாதர் குலத்திற்கே ஒரு மதிப்பு உண்டாகி விட்டது. 'சிறையிருந்தவள் ஏற்றத்தால் மாதர்குல ஏற்றம் சொல்லுகிறது' என்கின்றான் கம்ப நாடன், பரம வைணவனாதலின்.

4. மக்கட்பேறு; இல்வாழ்க்கையில் பெற வேண்டிய பல பேறுகளுள் ஒன்று நன்மக்களைப் பெறுதல். அறிவறிந்த மக்களைப் பெறுவதுபோல் மற்றப்பேறுகள் அவ்வளவு சிறப்புடையவை அல்ல என்பது வள்ளுவர் கருத்து. மக்கள் பேற்றில் ஆணா? பெண்ணா? என்பதை வள்ளுவர் வரையறுத்துக் காட்டவில்லை. மனைக்கு விளக்கு மடவார்; மடவார்க்கு விளக்கு மக்கள். இதுவே நல்ல குடும்பத்திற்கு நல்ல தோர்அணிகலம்!

> மனைக்கு விளக்கு மடவாள்; மடவாள்
> தனக்குத் தகைசால் புதல்வர்[74]

என்று கூறும் நான்மணிக்கடிகை. இங்கு தந்தை, தாய், மக்கள் இவர் கடமை இன்னதென எடுத்துக் காட்டப்பெறு

74. நான்மணிக்கடிகை - 101

கின்றது. மக்களைக் கல்வியிற் சிறந்தபெரியோர் ஆக்குதல் தந்தைக்குக் கடன். 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடன்' (புறம் - 312) என்பது பொன்முடியாரின் (பெண் பாற்புலவர்) வாக்கு. மக்கள் அறிவுடையவர்களாய் வளர்ந்து அறிஞர் கூட்டத்தில் முன் நிற்கும்படியாகச் செய்வதும் தந்தையின் கடமையாகும். தம் மக்களிடம் அறிவு நிறைந்தால் பெற்றோரும் மகிழலாம்: உலகத்தாரும் மகிழலாம். தம் மக்கள் அறிவுடையவர்களாக இருப்பது தம்மைவிட உலகத்தார்க்கு மிக நல்லதாகும். 'தந்தை என் நோற்றான் கொல்?' (70) என்னும் தொடரால் "தவம்புரிதல்' இல்வாழ்வார்க்கு உரியதே என்பது பெறப் படும். நன்மக்கட்பேறு தவத்தின் பயனாகவே ஏற்படும்

தாயின் கடமை மக்களைக் குணத்திற் சிறந்த சான் றோர்களாக வளர்த்தல். ஈன்ற தாய் எப்போதும் மகிழும் இயல்புடையவள். குழந்தையைப் பெற்ற அன்றே அவள் மகிழ்ச்சி அடைகின்றாள்; 'முந்தித்தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே... தொந்தி சரியச் சுமந்து பெற்ற' துன் பத்தையெல்லாம் ஒரு நொடியிலேயே மறக்கத்தக்க அவ் வளவு மகிழ்ச்சி அடைகின்றாள்.

> ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
> சான்றோன் எனக்கேட்ட தாய் (69)

என்பது வள்ளுவம். தன் மகனுடைய நற்பண்புகளை அவள் எண்ணி உணர்ந்து மகிழ்ந்தாலும், அதே பண்பு களை மற்றவர்கள் உணர்ந்து மகிழ்ந்து போற்றுவார் களாயின், அவள் மகிழ்ச்சி - தனி மகிழ்ச்சி - பன்மடங்கு பெரிதாகும்.

மக்கள் பெற்றோர்க்கு நற்பெயர் ஈட்டிக்கொடுத்தல் அவர்களின் தலையாய கடன். 'இவன் நல்ல பண்புகள் நிறைந்தவன் - சான்றோன்' என்று பிறர் பாராட்டுதலைக் கேட்டுத் தாயின் உள்ளம் குளிருமாறு மக்கள் நடந்து

கொள்ள வேண்டும். நல்லவன் என்று கேட்டுத்தாய் மகிழ்வது போல வல்லவன் என்று கேட்டுத் தந்தை மகிழ்வது இயல்பு. இக்குறிக்கோளை நிறைவேற்றுவதே மக்களின் கடமையாக அமைதல் வேண்டும். இதுவே 'நன்மக்கட்பேறு.'

அன்புடைமை: அன்புடைமை என்பது, இல்வாழ்க்கையின் அடிப்படைப் பண்பைக் குறிப்பது. இஃது **இரண்டாவது பகுதியில்** தனித்து விளக்கப்பெறுகின்றது. அன்பு எல்லோரிடத்திலும் இயற்கையாக அமைந்திருக்கும் உணர்வு. இதனை நச்சினார்க்கினியர், 'தன்னால் புரக்கப்படுவார் மேலுளதாகிய காதல்' என்பர். 'தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி' என்பர் இறையனார் களவியலாசிரியர். உலகில் அன்பு இலாதவர்களைக் காண்பது அருமை. கண்ணீர் விடாதவர்கள் உலகில் இருந்தால் அவர்களைத்தான் அன்பு இல்லாதவர்கள் என்று சொல்ல வேண்டும். மக்கள் வாழ்க்கையில் தம் துன்பத்திற்காக விடும் கண்ணீரும் உண்டு; பிறர் துன்பத்திற்காக விடும் கண்ணீரும் உண்டு. வாழ்க்கை பண்பட பண்பட பிறர் துன்பத்திற்காகக் கண்ணீர்விடுவதே மிகுதியாகின்றது. இந்தக் கண்ணீரில்தான் மக்கள் வாழ்க்கையின் சிறப்பியல்பு அமைந்துள்ளது. இல்லற நெறியில் ஒழுகுவோர் தாம் அன்பு செலுத்துகின்றவர்களுக்கு ஏதேனும் துன்பம் நேரிடக் கண்டால், உடனே கலுழ்கின்ற கண்ணீர் உள்ளத்தில் கொண்ட அன்பைப் பலர் அறிய வெளிப்படுத்துகின்றது. ஆகையால் அன்புக்குத் தடை ஏற்படுத்த முடியாது; அதனை அடைத்து வைக்கும் தாழும் இல்லை.

அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் (71)

என்று கூறுவர் வள்ளுவப் பெருந்தகை. இந்த அன்பு பக்தியாக முறுகும் போதும் கண்ணீர் பெருகுவதைக்

காண்கின்றோம். என்னையும் உருக்கவல்ல இலக்கியமாம் திருவாசகத்தை ஒருகால் ஓதின் ஏற்படும் விளைவு,

திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே[75]

என்று விளக்குவர் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.[76]

என்று ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுவார் பெறும் பயனைக் கூறுவர் ஞானசம்பந்தப்பெருமான். எட்டெழுத்து மந்திரத்தை ஓதுவார் பெறும் பயனைப் பிரகலாதன்,

காமம் யாவையும் தருவது
அப்பதம் கடந்தால்
சேம வீடுறச் செய்வதும்
செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபதம்
உய்ப்பது ஒருவன்
நாமம் அன்னது கேள் 'நமோ
நாராய ணாய'.[77]

[காமம் - விரும்பிய; சேம - அழிவில்லாத; செந்தழல் - நெருப்பு; முகந்த - மொண்டுசொரியும்; வேள்வி - யாகம்; ஒருவன் - ஒப்பற்றஎம்பெருமான்; நாமம் - திருப்பெயர்]

75. நால்வர் நான்மணிமாலை - 4.
76. தேவாரம் 3.49:1
77. யுத்த - இரணியன்வதை - 42

என்றுவிளக்குவான். தந்தைக்கு மைந்தன் நாராயண நாமத்தை விளக்குவது இத்திருப்பாடல். திருமூலர் அன்பைச் சிவத்துடன் ஒற்றுமைப் படுத்திப் பேசுவர்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்[78]

என்று அவர் திருவாக்கைக் காண்க.

அன்புக்கும் தன்னலத்திற்கும் தொடர்பு உண்டு. அன்பு குறையக் குறைய தன்னலம் பெருகும். அன்பு பெருகப் பெருகத் தன்னலம் தேயும். அன்பற்றவர்கள் தன்னலம் மிக்கவர்களாக இருப்பதை வாழ்க்கையில் காணலாம். அவர்கள் எல்லாப்பொருள்களும் தம் நன்மைக்காகவே இருப்பதாகக் கருதுவதையும் பார்க்கலாம். அன்புமிக்கவர் கள் தன்னலம் இன்றி எல்லாப் பொருள்களையும் பிறர் நன்மைக்காக இருப்பதாகக் கொள்வதையும் நாம் காண முடிகின்றது. தம் உயிர்வாழ்க்கைக்குக் காரணமான உடம்பில் உள்ள எலும்பும் பிறர் நன்மைக்காக இருப்ப தாகவே கருதுவார்கள் இவர்கள்; 'தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கொள்கையைக் கடைப் பிடிப்பவர்கள்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72).

என்பது வள்ளுவம். பற்றற்ற வாழ்க்கைப் பண்புக்கு வாழைமரமே சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ் கின்றது.

வாழைமரம் குலை விடுகின்றவரை வாழ்கின்றது. பின்பு அது வீழ்கின்றது. குலை விடுவதற்காகவே அஃது அடுக்கடுக்காய் இலை விட்டு வளர்ந்து வருகின்றது. அந்த நோக்கம் நிறைவேறியவுடன் தன் கடமை தீர்ந்ததாகவும்

78. திருமந்.270.

தான் தோன்றி வளர்ந்த முயற்சி வெற்றியுற்றதாகவும் துணிந்து தன் உயிர் வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றது. இங்ஙனம் வாழ்வின் ஒரே நோக்கமாய், ஒரே தடவையாய், ஒரே குலையை வழங்கிவிட்டு உயிர்விடுகின்ற இந்நிகழ்ச்சி மிகவும் உருக்கந் தருவதாகும். இந்த ஒரே குலையையும் தனக்காகவோ தன் கன்றுகளுக்காகவோ ஒருசிறிதும் வைக்காமல் முழுதும் பிறர்க்காகவே வழங்கி விடுகின்றது. தன் உடலின் நடுத்தண்டையும் பிறர்க்கே உரியதாக்கி விட்டு மறைந்து விடுகின்றது. 'என்பும் உரியர் பிறர்க்கு' என்னும் உயரிய பண்புக்கு மனிதர்களில் எல்லோரும் இப்படியுள்ளனரா? ஆனால் வாழைகள் யாவுமே இப்படிச் சால்பு நிறைந்தனவாய் உள்ளன!

இந்நிலையில், ஆண்டவனும் அன்பு வலைக்குள் அகப்படுவான் என்பதை வள்ளற்பெருமான்,

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே!
அன்பெனும் குடில்புகும் அரசே!
அன்பெனும் வலைக்குள் படும்பரம் பொருளே!
அன்பெனும் கரத்தமர் அமுதே!
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே!
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே!
அன்பெனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே!
அன்புரு வாம்பர சிவமே.[79].

என்று பாடுவர்.

அன்பினால் வளர்வது விருப்பம். அது நட்பு என்னும் அருஞ்சிறப்பைத் தேடித் தரும். அதனால் உலகில் தனித்து வாழ்ந்து துன்புறும் நிலைமை நீங்கும். அன்புடைய பலர்க்கிடையில் வாழும் பெருமையும் வாய்க்கும். உலகில் இன்பமாக வாழும் பேறு பெற்றவர்கள் அடைந்துள்ள சிறப்புக்குக் காரணம் இதுதான்; இவ்வாறு

79. ஆறாம் திருமுறை - பரசிவ வணக்கம்.

அன்பு பொருந்தி வாழும் வாழ்க்கையே இதற்குக் காரணமாகும்.

அன்பீனும் ஆர்வ முடைமை; அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு(74)

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு (75)

நெஞ்சம் நெகிழ்ந்து இயைந்து வாழ்வதற்கு அன்பு துணையாக அமையும் என்பதைக் காண்கின்றோம். எங்கோ பிறந்து வளர்ந்த ஒருவனும் எங்கோ பிறந்து வளர்ந்த ஒருத்தியும் அன்புடன் நெஞ்சம் கலந்து இணைகின்றனர்; இந்தக் கலப்பு பின்னர் இல்லற வாழ்க்கையாக மாறுகின்றது.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தான்கலந் தனவே.[80]

[யாய் - என்னுடைய தாய்; ஞாய் - நின் தாய்;
புலம் - வயல், நிலம்]

என்ற குறுந்தொகையில் தலைவன் - தலைவியின் இணைப்பைக் காண்கின்றோம். இங்குச் செம்புலப்பெயல் நீர் போல் அன்புடையார் கலக்கின்றனர். அதுவும் அவர்தம் இல்வாழ்க்கையை அமைக்கின்றது.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

என்றன்றோ வள்ளுவர் கூறிப் போந்தார்?

நரிவெரூஉத்தலையார் என்ற புலவர் சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்

---

80. குறுந். 40

பொறையை நாடிப் பரிசு பெற்று வறுமை நிலைமை மாறி பண்டைய நிலையை அடைகின்றார். இந்தச் சேரமான் சிறந்த மெய்ப் பொலிவுடையவன். தன்னைக் கண்டார்க்கு நலம் செய்யும் இவனது தோற்றச் சிறப்பு, நரிவெரூஉத் தலையாருக்கு உற்ற மெய் வேறுபாடு-இவனது காட்சியால் பண்டைய நலத்தை அடைந்தது என்பர். இவனது தோற்றப் பொலிவை வியந்து, தனக்குச் செய்தது போலப் பிறர்க்கும் இன்பம் செய்யும் இயல்பு குன்றாதிருப்பது காரணமாக, இத்தோற்றப் பொலிவு செல்வக் குறைவாலும், சிற்றினச் சேர்க்கையாலும் மக்கள்பால் அளியின்மையாலும் குன்றுமென நினைத்து,

> அருளும் அன்பும் நீங்கி நீங்கா
> நிரயம் கொள்பவரொ டொன்றாது காவல்
> குழவி கொள்பவரின் ஓம்புமதி
> அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே[81]

[நிரயம் - நரகம்; ஓம்புமதி - பாதுகாப்பாக]

என்று அறிவுறுத்துகின்றார். "பெரும! நீ கானக நாடனாதலால் செல்வக் குறைவில்லை. ஆதனால் நீ நிரயம் கொள்ளும் சிற்றினத்தைச் சேராது நாட்டினைக் குழவி வளர்ப்பாரைப்போல பாதுகாப்பாயாக" எனத்தெருட்குவதைக் காணலாம். இல்வாழ்வானுக்கு அன்போடு அருளும் இருக்க வேண்டும் என்பது இதனால் அறிகின்றோம்.

அன்பு இல்லாத உயிர், வாழ்க்கைக்கு உரிமை இல்லாத உயிர் என்று சொல்லலாம். எலும்பு இல்லாத உடம்பு வெயிலில் திரிவதற்கு உகந்ததன்று; அதை வெயில் அழிப்பது போல, அன்பு இல்லாதவரை அறம் அழிக்கும். உயிர் வாழ்க்கைக்கு இடம் பொருள் முதலிய வசதிகளும்

81. புறம்-5

வாய்க்க வேண்டும். ஆனால் அன்பு மட்டிலும் இல்லை யாயின் இவற்றால் யாதொரு பயனும் இல்லை. அன்பு அடிப்படையாக வாழும் உடம்பே உயிர் நின்ற உடம்பு; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்திய உடம்பு; உயிருடன் வாழ்ந்தும் பயனற்ற உடம்பு; அதனை உயிரற்ற பிணம் எனவே பொருந்தும்

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம் (77)

அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (80)

என்ற வள்ளுவங்கள் இவற்றை விளக்குகின்றன.

நெஞ்சம் நெகிழ்ந்து வாழ்வதற்கு அன்பு இன்றியமை யாதது என்று கண்டோம். அது மட்டும் அன்று; ஒரு சிலர்மீது பகை கொண்டு ஒருவன் செய்யும் வீரச்செயல் கட்கும் அன்பே காரணம் ஆகின்றது. மனைவியிடம் உள்ளம் கலந்து வாழ்கின்ற அன்புடையவன் அவளைக் காப்பதற்காகக் கொடியவர்களை அஞ்சாமல் எதிர்க்கின் றான். குழந்தையிடம் அன்புடன் கொஞ்சும் தாய் கொடிய விலங்கினிடமிருந்தும் அதனைக் காக்க அஞ்சாமல் போரிடு கின்றாள். வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திராமல் மெல் லியலாய் வாழ்ந்த கண்ணகி கணவனுடைய புகழைக் காப்பதற்காக நாடாளும் வேந்தனையும் சீறி வழக்கு ரைக்கின்றாள். இங்ஙனம் நெஞ்சை நெகிழ்விக்கும் அன்பே நெஞ்சை வன்மையுறச் செய்து இரும்பாகி பகைக்கவும் எதிர்க்கவும் அழிக்கவும் ஆற்றல் அளிக்கின்றது. இதனால் நாம் அறியும் உண்மை என்ன? அறத்திற்கு மட்டுமே அன்பு துணை என்று சிலர் சொல்வது அறியாமை; மறத் திற்கும் அதுவே துணையாகும்.

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை (76)

என்பது பொய்யாமொழி. அன்புக்குக் கண்ணப்ப நாயனாரை எல்லை நிலமாகக் கொள்வர் மணிவாசகப்பெருமான். (திருவா. திருக்கோத்தும்பி-4)

மூன்றாவது பகுதியில் விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், ஒப்புறவு அறிதல் ஈகை என்ற செயல் நலங்களை விளக்கும் ஐந்து அதிகாரங்களில் உள்ள கருத்துகளை விளக்குவேன். இல்வாழ்வானுக்குரிய இந்த கடமைகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை இந்த விளக்கத்தில் கண்டு தெளியலாம். ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வோம்.

1. விருந்தோம்பல்: இல்லறத்தின் ஒரு சிறந்த கூறு விருந்தோம்பல் என்பது. இல்லற வாழ்க்கையில் துன்பம் மிகுதி. வீடு அமைத்துக் கொண்டு நாளைக்கு எனப் பல பொருளும் தேடி வருந்தி அவற்றைக் காத்துக் கவலையுறுவது இல்வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் துன்பத்திற்கேற்ப நன்மையும் இருக்க வேண்டும் அல்லவா? இந்த நன்மைதான் புதியராய் வந்தவர்க்கு உதவி செய்து வாழும் நன்மையாகும். இதனைச் சிறந்ததோர் அறம் என்று கூறுவர் வள்ளுவப் பெருந்தகை.

> இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
> வேளாண்மை செய்தற் பொருட்டு (81)

என்பது அவருடைய திருவாக்கு. திருவள்ளுவர் கூறும் விருந்து இக்காலத்தில் நாம் விருந்து என்று கருதுவதனின்றும் முற்றிலும் வேறுபட்டது. இக்காலத்தில் பலகாலும் பழகி அறிந்தவர்க்குச் சிறந்த உணவு அளிக்கின்றனர். தம்மை விடச் சிறந்த செல்வமுடையவர்க்குப் புகழ் கருதிப் போற்றி ஆடம்பரமாகச் சிறப்புச் செய்கின்றனர். ஏதேனும் நன்மையை எதிர்பார்த்து அதற்காக ஒருவர்க்குச் சிறந்த உணவு நல்குகின்றனர். இதற்காகச் சிலர் மூன்று - நட்சத்திர, ஐந்து - நட்சத்திர உணவு விடுதி

களில் விருந்து அமைத்துப் போற்றுகின்றனர். இதனை இக்கால மக்கள் 'விருந்து' எனக் கருதுகின்றனர். தீபாவளி அல்லது பொங்கல் திருநாளுக்குப் பெரிய பட்டுத் துணி கடைகட்குச் செல்லும்பொழுது காஃபி அல்லது தேநீர் வணிகரால் வழங்கப்படுவது போன்ற வாணிக விருந்து இது. திருவள்ளுவர் கூறும் விருந்து இக்காலத்தில் நாட்டுப்புறங்களில், பட்டி தொட்டிகளில், மூலைமுடுக்குகளில், ஏழைகளாய் வருவோர்க்கு வேளாண் மக்கள் சூழ் வார்க்கும் உதவியில் காணலாமேயன்றி உணவு விடுதிகள் மலிந்த நகரங்களில் காண முடியாது. கணவனும் மனைவியும் அலுவல் பார்க்கும் இல்லங்கட்கு நேரம் தவறி வருவோரை தொல்லை தருவோராகக் கருதும் மனப்பான்மையும் இன்று காண முடிகின்றது. காலையில் பிள்ளைகளைக் குளிப்பாட்டி, ஆடை புனைந்து உணவூட்டிச் சிற்றுண்டியுடன் பள்ளிக்கனுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கின்றாள் இல்லத்தலைவி. கணவர் உணவருந்தி அலுவலகத்திற்குப் போகத் தயாராகின்றார். இவரை அனுப்பிய பிறகு உணவு கொண்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு தானும் அலுவலகத்திற்குப் போக வேண்டும். இங்ஙனம் பரபரப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது, தாம் பிறந்த குக்கிராமத்திலிருந்து நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒருவழக்கின் நிமித்தம் உறவினர் ஒருவர் இவர் வீட்டில் தங்குவதற்கு வந்தால், அவரை எப்படிக் கவனிக்க முடியும்? எங்ஙனம் விருந்தோம்ப முடியும்? விருந்தோம்பும் பண்பு இந்த இல்லறத்தாருக்கு இல்லையென்று சொல்ல முடியுமா?

வள்ளுவர் பெருமான் வாழ்ந்த காலம் அமைதியான காலம்; பரபரப்பே இல்லாத காலம். உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் இல்லாத காலம். தவிர பண மாற்றும் அக்காலத்தில் இல்லை. வெளியூர்க்குச் செல்வோர் பல நாட்களுக்கு வேண்டிய கட்டமுதைக் கையில் கொண்டு செல்ல முடியாது; பலதிங்களுக்கு வேண்டிய அரிசி முதலி

யவற்றைக் கொண்டு செல்லவும் முடியாது. பெரிய பிரபுக்கள், செல்வர்கள் இவர்கள் சொந்த ஊர்திகளில் செல்லும்போது மட்டுமே அவ்வாறு உணவுப் பொருளை உடன் கொண்டு செல்ல முடிந்தது. ஏனையோரால் அவ்வாறு கொண்டு செல்ல முடிவதில்லை. இதனால் அக்காலத்தில் விருந்தோம்பல் ஊர்தோறும் இன்றியமையாத அறமாகப் போற்றப் பெற்று வந்தது. தாம் வெளியூர்க்குச் சென்றபோது பட்ட துன்பத்தை நினைந்து அவ்வாறு தம்மூர்க்கு வருவோர் வருந்தக் கூடாது என்று உணர்ந்து இந்த விருந்தோம்பல் அறத்தை மக்கள் பெரிதாகப் போற்றி வந்தார்கள்.

இக்காலத்தில் நாம் 'விருந்து' என்று போற்றப்படுவதற்கும் இந்த அறத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இக்காலத்து விருந்து எனப்படுவது வறியாரை மறப்பது; செல்வரை ஓம்புவது; ஆடம்பரத்தைப் போற்றுவது; பயனை எதிர்நோக்கி வாணிக முறையில் செய்வது. பசித்தவர் முகம், திக்கற்றவர் முகம் ஆகியோரை இன்முகத்துடன் வரவேற்று அன்புடன் போற்றி உதவுவதைக் கடமை என்று உணர்ந்து செய்யும் அறத்தையே உண்மையான விருந்து என்று போற்றத்தகும். பழகியவர்களை அன்போடு வரவேற்று உணவளிக்கும் வழக்கத்தை அதற்கடுத்த நிலையில் வைத்துப் போற்றும் அறமாகக் கருதலாம்.

விருந்து என்னும் பண்பு தமிழனுக்கு உரியது.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (90)

என்ற இலக்கணமறிந்து செயலாற்றுவான் அவன். விருந்தினர் வீட்டின் புறத்தில் இருக்கத் தான்மட்டும் உண்ணும் சிறுமதி கொண்டவனல்லன் தமிழன். சாவா மருந்தாகிய அமிழ்தமே யானாலும் விருந்தினரை விட்டுத்தான் மட்டி

லும் உண்ணும் பழக்கம் அவனிடம் என்றுமே இருந்த தில்லை. விருந்தோம்புதலை ஒருவேள்வி என்றும் அந்த வேள்வியின் பயன் இவ்வளவு என்று கூறுவதற்கு ஓர் அளவு இல்லை என்றும், விருந்தினராக வந்தவரின் தகுதிக்கு ஏற்ற பயன் உண்டாகும் என்று வள்ளுவர் கூறியதைப் பொன்னேபோல் போற்றுபவன் தமிழன். இதற்கு அதியமான் நெடுமான்அஞ்சியின் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்று சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. ஒருகால் வேட்டைக்குச் சென்ற அதியமான் மலையிடத்தே பிளவின்கண் கண்ட அருநெல்லி மரத்தினின்று இனிய கனியைப் பறித்து வந்தான். அதனை உண்டோர் நெடிது வாழ்வர் என்பதை அறிந்தவன். அவ்வமயம் ஔவையார் அவன் அவைக்கு வந்திருந்தார். அக்கனியை அதியமான் ஔவைக்கு ஈந்து அவரை உண்ணுமாறு செய்தான்: உண்ட பின்னரே புலவர் அக்கனி வாழ்நாளை நீட்டிக்கும் என்பதை அறிந்தார்.

ஔவையார் பெருவியப்புற்று "நீ நெடிது வாழ நினையாது, எனக்குத் தந்து என்னை நெடிது வாழப் பண்ணிய நின் பெருந்தகைமையை என்னென்பேன்? இந்நெல்லிக் கனியின் அருமை கருதாது எனக்குத் தந்து சாதலை நீக்கிய நீ, நீலமணி மிடற்றுக் கண்ணுதலப்பன் போல மன்னுவாயாக" என்று வாழ்த்துகின்றார்.

'பால்புரை பிறைநுதல் பொலிந்து சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும! நீயே; தொன்நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா(து)
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எனக்கீந்த தனையே[82]

82. புறம் - 91

[விடர் - பிளவு]

என்ற புறப்பாட்டால் இதனை அறிகின்றோம். இக்கருத்தையே,

உண்டா லம்மஇவ் உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே.[83]

என்ற கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் பாடல் பகுதியாலும் அறிய முடிகின்றது.

முகம் மலர்ந்து அளிக்கும் விருந்துபற்றியும் முகம் திரிந்து அளிக்கும் விருந்து பற்றியும் பிற்காலக் கவிஞரொருவர்,

ஒப்புடன் முகம லர்ந்து
உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழ்இட் டாலும்
உண்பதே அமிர்த மாகும்;
முப்பழ மொடுபால் அன்னம்
முகம்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு
கடும்பசி ஆகும் தானே[84]

என்று பாடியிருப்பது மேற்குறிப்பிட்ட திருவள்ளுவரின் ''மோப்பக் குழையும்'' என்ற குறள் மணியின் கருத்தையொட்டியே பாடியிருப்பதாகக் கருத முடிகின்றது.

'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை'[85] என்பது ஔவைப் பாட்டியின் திருவாக்கு. 'அறுசுவை உண்டி அமர்ந்து இல்லாள் ஊட்ட' அந்த உண்டிக்கே ஒரு தனிச்சுவை உண்டு. உண்ணும் போது

83. புறம் - 182
84. விவேக சிந்தாமணி-7
85. 'வாக்குண்டாம்'-21

உண்டி பரிமாறுவதற்கு மனைவி வேண்டும். மனைவியுடன் இல்லறத்தில் வாழ்பவனே துணை என்பதை,

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை (42)

என்று உரைப்பார் வள்ளுவப் பெருந்தகை. இவற்றையெல்லாம் அசோக வனத்தில் அரக்கியர் கூட்டத்திடையே வருந்தியிருக்கும் சீதையின் மனம் எண்ணுகிறது.

அருந்து மெல்லட(கு) ஆர்இட
அருந்தும்என் (று) அழுங்கும்;
விருந்து கண்டபோ(து) என்னுறு
மோஎன்று விம்மும்.[86]

[மெல்அடகு - மென்மையான இலைஉணவு; இட - பரிமாற; அருந்தும் - அமுதுசெய்வார்; அழுங்கும்-வருந்துவாள்; விருந்து - விருந்தினர்; என உறுமோ - என்ன துன்பப்படுவாரோ; விம்மும் - அழுவாள்]

என்று சீதாப்பிராட்டி மனம் கவல்கின்றாள். 'அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை' அல்லவா? இப்படியெல்லாம் எண்ணிக் கவல்பவள்தான் தருமபத்தினி நிலைக்கு உரியவளாகின்றாள். இதனால்தான் வள்ளுவப் பெருந்தகை 'மங்கலம் என்ப மனைமாட்சி' (60) என்று வாழ்க்கைத்துணை நலத்தினைச் சிறப்பித்தார் போலும்.

நம்காலத்தில் வாழ்ந்த டி. கே. சி. அவர்கள் விருந்தோம்பலில் புகழ் பெற்றவர். இலக்கிய விருந்து ஒருபுறமிருக்க, வயிற்றுக்கும் வாய்க்கும் அளிக்கும் விருந்தும் ஒப்பற்றது. எந்த வேளையில் எத்துணை பேர்கள் கள் எதிர்பாராத விதமாக டி. கே. சியின் இல்லறத்திற்குப் போனாலும் அத்தனை பேரையும் மரியாதை நிறைந்த மனப்பூர்வமான, மலர்ந்த முகத்தோடு வரவேற்று, அவர்

86. சுந்தர. காட்சி-15

களை விருந்தோம்பி உபசரிக்கும் அற்புத இயல்பு டி.கே.சி.யின் பிறவிக்குணம். பழகினவர்கள் பழகாதவர்கள் என்ற வேறுபாடின்றி டி.கே.சி. அவர்களை சாப்பிட வேண்டு கிற முறை மிகவும் சிறப்பானது; அழகானது. இலை போடச் சொல்வதும், விருந்தினர்களைப் பொருத்தமான முறையில் உட்காரவைப்பதும் டி.கே.சி.யிடம் நாம் படிக்க வேண்டியவை. அனைத்தையும் தாமே நேரில் கவனிப்பார்கள். டி.கே.சியின் துணைவியார் இத்தனைக்கும் ஒத்துக் கொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கது. குறுந்தொகைத் தலைவன் ஒருவன் பரத்தையிற் பிரிகின்றான். தலைவியின் ஆற்றாமையைக் கண்ட தோழி இழிவுக் குறிப்புத் தோன்றத் தலைவன் ஒழுகலாற்றினை எடுத்துரைக்கின்றாள்.

இதுமற் றெவனோ தோழி துணியிடை
இன்னார் என்னும் இன்னாக் கிளவி
இருமருப் பெருமை ஈன்றிணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாஅற் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய எமக்கே'[87]

[துணியிடை - புலவிக்காலத்தே, இன்னாகிளவி இனிமை இல்லாத சொல்; இருமருப்பு - பெரியகொம்பு; காரான் - எருமை; பாஅல் - பக்கத்திலுள்ள; குழவி-கன்று; ஆரும் - மேயும்]

என்ற பாடலில் இதனைக் காணலாம். தலைவன் பரத்தை பால் சென்றிருந்த காலத்தில் தலைவி ஆற்றாமையுடையவளானாள்; அப்பொழுது தலைவனுடைய பரத்தமையை எடுத்துக் கூறின் அவள் தன் துயர்க் காரணமறிந்து கூறுகின்றாள் என ஆற்றியிருப்பாள் என்று எண்ணிய தோழி, 'இன்னார் என்னும் இன்னாக்கிளவி'

87. குறுந். 181

யால் தலைவன் ஒழுகலாற்றை எடுத்துரைத்தாள். தான் தன் அன்புடைமையினால் ஆற்றாளாயினும் பிறர் தன் தலைவனது குறையைக் கூறப்பொறாத கற்புடையாளா தலின் தலைவி அவளை நோக்கி "அவரோடு புலந்து உறையும் இக்காலத்தில் அவரைப் பற்றிக் குறை கூறுவ தனால் பயன் ஒன்றும் இல்லை. இல்லறம் நடத்தும் பெண் டிராகிய நாம் செய்யக் கடவதான அறங்கள் பல உண்டு; இன்பம் ஒன்றையே பெரிதாகக் கருதும் இளமையையும் நாம் கடந்து முதுமை எய்தினோம். ஆதலின் தலைவர் எங்ஙனம் இருப்பினும் நம் கடப்பாடுகளை நாம் செய்தல் சாலும்" என்று கூறினாள்.

'அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை'[88]

என்று பெருங்கதைக் கூற்றை ஈண்டு நாம் நினைக்கின் றோம். எருமை, உழவனால் கட்டப்பெற்ற தன் குழவி யினின்றும் அகலாமல் அருகேயுள்ள பயிரை ஆரும் ஊரன் என்றது, தலைவன் இல்லின்கண் உறையும் தலைவிபால் கொண்ட அன்பு குறையாமல் தனக்கு வேண்டிய இன் பத்தை அருகிலுள்ளாற்பால் பெறுகின்றான் என்ற குறிப் பைப் புலப்படுத்துவது.

இந்தக் குறுந்தொகைப் பாடலில் காட்டப்பெறும் தலைவி கற்புக்கடம் பூண்ட கண்ணகியையொத்தவள். மதுரையில் கோவலன் சிலம்பை எடுத்துக் கொண்டு விற் பதற்குப் போகுமுன் கண்ணகியை நோக்கி தன் கழிந்த வாழ்க்கையை நினைந்து இரங்கிக் கூறுகின்றான்.

வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி, நெடுநகை புக்கு
பொச்சாப் புண்டு பொருள்உரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு நல்நெறி உண்டோ?

88. பெருங்கதை. 4. 14 : 98 - 99.

இருமுதுக் குரவர் ஏவலும் பிழைத்தேன்;
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
வழுஎனும் பாரேன்; மாநகர் மருங்குஈண்டு
எழுகஎன எழுந்தாய்; என்செய்தனை[89]

[வறுமொழியாளர் - பயனில் சொல்வார்; வம்ப-புதிய; குறுமொழி - சிறுசொல்; கோட்டி - கூட்டம்; பொச்சாப்பு - மறவி; இருமுது குரவர் - தாய் தந்தையர்; சிறிமுதுக்குறைவி - கண்ணகி; வழு - குற்றம்]

என்பது அவன் பேச்சு. அப்போது கற்பில் சிறந்த கண்ணகி,

அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்துஎதிர்க் கோடலும் இழந்த என்னை[90]

என்று இல்லக் கிழத்தியின் கடமைகளை எடுத்துக் கூறுகின்றாள்; இவைதாம் குறுந்தொகைத் தலைவி 'திருமனைப் பல கடம்' என்று கூறியதில் அடங்குபவை.

விருந்தோம்பலில் இல்லத்தரசி இணைந்து செயல்படாவிட்டால் இவ்வறச் செயல் சரியாக நடைபெறாது; நடைபெறவும் முடியாது. ஔவையார் பாடலொன்றில் குறிப்பிடப்பெறும் நிகழ்ச்சியொன்று இதற்கு எடுத்துக் காட்டாக அமையும்.

இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.[91]

என்ற பாடலில் ஏழைக் குடியானவன் மேற்கொண்ட விருந்தோம்பல் சித்திரிக்கப் பெற்றிருப்பதைக் கண்டு

89. சிலப் - கொலைக்களக் காதை - அடி 63-70
90. ஷை - 71 - 73
91. தனிப்பாடல்

மகிழலாம். இன்றைய மேட்டுக்குடி மக்களைச் சார்ந்த சில குடும்பங்களிலும் இல்லத்தரசிமார்கள் விருந்தோம்ப லில் தடைக்கற்கள் போடுவதை நான் நன்கு அறிவேன்.

2. இனியவை கூறல் : அன்பு கலந்தனவாய், வஞ்சனை யற்றவைகளாய், மெய்ப் பொருள் உணர்ந்தவர்களின் வாயில் பிறக்கும் சொற்கள் இன் சொற்களாகும் (91) விருப்பத்துடன் முகம் மலர்ந்து இன் சொல் கூறும் தன்மை இருந்தால், அது மனம் உவந்து பொருளைக் கொடுத்து உதவுவதை விட நல்லது (92). ஒருவரைக் கண்டால் முகத்தில் விருப்பம் தோன்ற இனிமையாக நோக்கி, மனம் கலந்த இன்சொல் கூறவதே அறநெறியாகும்.

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம் (93)

என்பது வள்ளுவம். சொற்களுள் நல்லவை உண்டு; தீய வையும் உண்டு; இனியவை உண்டு; இன்னாதவையும் உண்டு. நல்ல சொற்கள் கடுமையாக இருத்தலும் உண்டு; தீய சொற்கள் இனிமையாக இருத்தலும் உண்டு. இவ்வாறு சொற்களைப் பகுத்து நன்மையும் இனிமையும் ஒருங்கே விளையும் படியாகப் பேசிப் பழக வேண்டுவது இல்வாழ்வான் கடமை; எல்லோர் கடமையுமாகும். நல்ல சொற்களை ஆராய்ந்து அவற்றுள்ளும் கடுமையான வற்றை நீக்கி இனிய சொற்களையே பேசிப் பழகினால் வாழ்க்கையில் பாவங்கள் தேய அறம் பெருகும்.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின் (96)

என்பர் பொய்யா மொழியார். வாழ்க்கையில் இன்பம் பயக்கத் தக்க இனிய சொற்கள் உள்ளபோது கடுஞ் சொற்களை ஏன் கூற வேண்டும்? இங்ஙனம் கூறுவது இனிய கனிகள் இருக்கும்போது காய்களைத் தேடிக்

கவர்ந்து உண்பது போன்ற அறியாமையாலன்றோ? என்று கூறுவர் அப்பெருந்தகை. ஒலியால் இனிமையும் உள்ளத்தில் இரக்கமும் கொண்டு வஞ்சனை இல்லாமல் சொல்லுதல் இனியவை கூறலுக்கு முதன்மையானவை. முகத்தில் இனிமையும் அகத்தில் இணக்கமும் கொண்டு இல் வாழ்வார் நடந்து கொள்வது அறக் கடமையாகும் என்பது உளங் கொள்ளத்தக்கது. இவர்களே 'செம்பொருள் கண்டவர் (91). இதனால் இல்வாழ்வார் சிறந்த ஞானிகளாய் இருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இவர்களையே வள்ளுவர் பெருமான் ஞானப்பகுதியில் 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பவராகக்' (358) குறித்தல் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. இதுவே 'சிவநிலை'. மணிவாசகப்பெருமான் 'செம்மையே ஆய சிவபதம்[92] என்று குறித்ததையும் காண்க. இதுவே 'நாராயண பதம் - பரம பதமும்' ஆம். அருந்தமிழ் நாட்டில் 'செம்பொருள் கண்டார்' வாய்ச்சொல்லாக - ஆழ்வார்கள், நாயன்மார்களின் அருட்பாடலாக - ஏராளமாய் உள்ளன. வாழ்க்கையில் இனியவை கூறல் என்பதற்கு இவற்றை விட வேறு என்ன வேண்டும்?

3. **செய்ந்நன்றி அறிதல்:** அறநெறியில் நின்று வாழ்க்கை நடத்தும் போது அறத்தின் ஒரு கூறாகிய 'செய்ந்நன்றி அறிதல்' என்பதையும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்யாவிட்டால், உலக வாழ்க்கை நடைபெறாது. அவ்வாறு உதவி செய்தோரை மறவாமல் அவர் செய்த நன்மையைப் போற்றுவது நமது கடமையாகும். ஒருவருக்கொருவர் செய்யும் உதவிகளுள் பலவகை உண்டு. இதற்குமுன் அவருக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்கும்போது காரணமில்லாமல் ஒருவர் மனம் உவந்து தாமே உதவி செய்வதும் உண்டு. அந்த உதவிக்குக் கைம்மாறு இல்லை எனலாம்; மண்ணுலகமும் விண்ணுலகமும் கொடுத்தாலும் அதற்கு அவை ஈடாகா.

92. திருவா. பிடித்தபத்து - 3

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது (101)

என்பது வள்ளுவம். இந்த வாக்கு மேலோட்டமாக நோக்கப் படும்போது புனைந்துரைபோல் காணப்படும். ஆனால் இது மெய்யுரை. நான்கும் நான்கும் சேரின் எட்டாகும் என்பது, கணிதமுறையில் எவ்வளவு மெய்யுரையோ, அவ்வளவு மெய்யுரை இது. இந்த உரையை ஆழ்ந்து நோக்குவோம்.

கைலைநாதன் பாற்கடலானுக்கு உதவி ஒன்றும் செய்ய வில்லை என்று கொள்வோம். இந்நிலையில் கைலைநாதனின் பசியைத் தீர்ப்பதற்கு நான்கு வெண் பொற்காசுகள் பெறும் உணவளிக்கின்றான் பாற்கடலான். பசிப்பிணி தீரப்பெற்ற கைலைநாதன் பிறிதொரு சமயம் பாற்கடலானுக்கு நூறாயிரம் வெண்பொற்காசுகள் அளிக்கின்றான். நூறாயிரம் வெண்பொற்காசுகளும் நான்கு வெண்பொற்காசுகளுக்கு நிகராகா. நிகராகாமை எங்ஙனம் எனில், காட்டுவேன். பாற்கடலான் நான்கு வெண்பொற் காசு உதவி செய்தக்கால் கைலைநாதன் செய்த உதவி ஒன்றும் இல்லை. கைலைநாதன் செய்த உதவியோடு பாற்கடலான் செய்த உதவியைக் கணித வாய்ப்பாட்டால் கூறுவேன்.

கைலைநாதன் உதவி —0
பாற்கடலான் உதவி — 4.
அதாவது 0 : 4

இங்ஙனமே பாற்கடலான் செய்த உதவியோடு கைலை நாதன், செய்த உதவியை ஒப்பு நோக்கிக் கணித வாய் பாட்டால் காட்டுவேன்.

பாற்கடலான் உதவி — 4
கைலைநாதன் உதவி — 100000.

அதாவது 4 : 100000.
0 : 4 = எண்ணிலி (Infinity)
4 : 100000 = 25000.

இருபத்தையாயிரம் எண்ணிலிக்குச் சற்றும் ஒப்பாகாது என்பது புனைந்துரையா? அன்று. அன்று, இப்போது மேல் நோக்காகக் காண்பார்க்குப் புனைந்துரையாகக் காணப்பட்ட உரை முற்றிலும் மெய்யுரையாக உள்ளமை தெளிவாகின்றதல்லவா?

இவ்விடத்தில் சமண முனிவரின் கருத்தை நினைத்தல் தகும்.

உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழல்பயந் தாஅங்(கு) - அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.[93]

[உறக்கும் - மிகச் சிறிய; ஈண்டி - வளர்ந்து; இறப்ப - மிகவும்; பயத்தல் - தருதல்; தக்கார் - தகுதியுடையோர்; வான் - ஆகாயம்; அறப்பயன் - தருமத்தின் பயன்]

என்பது அம்முனிவரின் திருவாக்கு. ‘ஆலமரத்தின் விதை சிறிதாயினும் அது வானுற ஓங்கி வளர்ந்து மிக்க நிழலைத் தருவது போல, தானம் செய்யப்பட்டபொருள் சிறிதாக இருந்தாலும், அது தகுதியுடைய நல்லோர் கையில் சேர்ந்தால் அஃது ஆகாயமும் சிறிது என்னும்படி தருமத்தின் மேலான பயனைப் பரப்பி விடும்’ என்ற கருத்து நம்மை வியக்க வைக்கின்றது. இது கம்பநாடனின் திருவாக்கையும் நினைக்கச் செய்கின்றது.

93. நாலடியார் - 38 (அறன்வலியுறுத்தல்)

'பாத்தெதிர'
வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய உதவி ஒப்பவே.[94]

இதில் வாமனவதாரக் கதை பொதிந்துள்ளது. மாவலியால் உதவி செய்யப்பட்டவன் மாதவன். அவனுக்குச் செய்த உதவி மூவடி மண்; ஆகலின் அது சிறியது. அதன் உதவிப் பயனோ அந்த மாதவனின் சால்பு போல மூவுலகையும் அவர்க்கு ஆக்கி விட்டது என்று விரித்துப் பொருள் கொண்டு மகிழலாம். இக்கருத்து,

உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து (105)

என்ற குறளில் வந்துள்ளதைக் காணலாம். 'கைம்மாறான உதவி காரணத்தானும், பொருளாளனும், காலத்தானுமாகிய மூவகையானும் முன்செய்த உதவியின் அளவு அல்ல; உதவி செய்யப்பட்டார் சால்பின் அளவாயிற்று" என்பது இதன் கருத்து. இக்குறளின் கருத்தே எடுத்துக் காட்டாக நின்று கற்றோர்க்கினிய கம்ப நாடனின் கவிதையின் ஈற்றடியைப் பூரிக்கச் செய்து விட்டது என்று கருதலாம். இன்னும்,

தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே'[95]

என்ற அதிவீரராம பாண்டியனின் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. மேலும்,

94. கம்ப. பால. வேள்வி - 35.
95. நறுந்தொகை-17,

இணைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன் (87)

என்ற குறளின் உரையில் பரிமேலழகர் ''பொருளளவு 'தான் சிறிதாயினும் தக்கார்க் கைப் பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்து விடும்' ஆகலின், 'இணைத்துணைத்து என்ப தொன்றில்லை' என்றும் கூறினார்'' என்று விரித் துரைத்ததையும் சிந்தித்து மகிழலாம்.

பெரிய துன்பம் நேர்ந்து நெருக்கடி ஏற்பட்ட காலத் தில் ஒருவர் செய்த உதவியும் சிறந்த உதவியே யாகும். அந்த உதவி சிறிய உதவியாக இருக்கலாம்; என்றாலும் தக்க காலத்தில் செய்யப்பட்டதாதலால் அது மண்ணுல கத்தை விடப் பெருமை உடையதாகும்.

காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது (102)

[நன்றி - உபகாரம்; மாண - மிக]

என்பது வள்ளுவம். இவருக்கு இப்போது உதவினால் நாளைக்கு இன்ன கைம்மாறு கிடைக்கும் என்று பயனை ஆராயாமல் ஒருவர் செய்த உதவியும் சிறப்புடையது; அதன் தாரதம்மியத்தை ஆராய்ந்தால், அது கடலை விடப் பெரிய நன்மையுடையதாக இருக்கும்

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலினும் பெரிது (103)

என்பது வள்ளுவரின் சொல்லோவியம்.

ஒருவர் செய்யும் உதவியில் சிறுமை பெருமை காண முடியாது. உதவியைப் போற்றுவதில் பயன் கண்டவர் கள், தினையளவு பயன் பெற்றாலும், அதையே பனையள வாகக் கொள்வார்கள். ஆதலால் உதவிக்கு ஈடானது கைம்மாறு என்று சொல்ல முடியாது. அந்த உதவியை

ஏற்றுக் கொண்டவர்களின் பெருந்தன்மைக்கு ஏற்ற அளவாகவே அது திகழும் (104, 105) என்பவை வள்ளுவரின் பொய்யாமொழிகள். ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறம் ஆகாது; ஆனால் அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது அறம் ஆகும் என்பதும் அப்பெருமானின் வாய்மொழி (108). கொல்லுவதைப் போன்ற கொடுமையை ஒருவர் இழைத்தாலும் அவர் அதற்குமுன் செய்துள்ள ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் தீமை மறந்து போகும் (109). இங்ஙனம் வள்ளுவர் பெருமான் செய்ந்நன்றிபற்றி நுவன்ற கருத்துகள் பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் ஊடுருவி நிற்பதைக் காணலாம்.

ஆலத்தூர் என்பது சோழ நாட்டிலுள்ள ஓர் ஊர். அவ்வூரில் வாழ்ந்த புலவர் ஒருவரின் இயற்பெயர் தெரிந்திலது. அவர் ஆலத்தூர் கிழார் என்றே வழங்கப்படுகின்றார். ஒருசமயம் இவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் அரசவைக்கு வருகின்றார். இக் கிள்ளிவளவன் சோழ நாட்டிலுள்ள சிறுகுடியில் வாழ்ந்த வேளாளர்த் தலைவனான பண்ணனின் கைவண்மையை விதந்தோதுமாற்றால் அவனது இல்லத்தைப் 'பசிப் பிணி மருத்துவன் இல்லம்' (புறம் - 173) என்று 'பாணாற்றுப் படையாகப்' பாடியுள்ளான். இவன் அவைக்கு வந்த புலவர்பெருமான் இவனை மிகவும் சிறப்பித்துப் பாடிப் பெருஞ் செல்வத்துடன் திரும்புகின்றார். அரசன் புலவரை நோக்கி, 'எம்மை நினைந்து மீளவும் வருதிரோ?' என்று வினவ, அதற்கு அப்புலவர் பெருமான் உரைத்த மறுமொழி பாடலாக அமைந்தது.

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கின் கழுவாயும் உளவென

நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே[96]

[அறனில்லோர் - தீயோர்; இழை - ஆபரணம்; குரவர்-தந்தை தாயர்; வழுவாய் மருங்கின் - பாதகத்தினை ஆராயுமிடத்து; கழுவாய் - போக்கும் வழி; புடை பெயர்தல் - கீழ் மேலாம் காலம்; செய்தி - செய்த நன்றி; கொன்றோர் - சிதைத்தோர்; உய்தி - உய்யும் வழி, பிழைத்தல்]

என்பது இப்பாடற் பகுதி. இங்கு 'அறம்' என்பது அற நூலைக் குறிக்கின்றது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (110)

என்ற குறளுரையில் 'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, ஆன்முலை அறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்' என இப்பாடற்பகுதியை உரை நடையிலமைத்தனர் பரிமேலழகர். இப்பாடலின் 'குரவர் தப்பிய கொடுமையோர்க்கும்' என்ற மூன்றாம் அடி பரிமேலழகர் காலத்திலேயே 'பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்' எனத் திருத்தப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது. இப்பாடலில் உள்ள 'கழுவாயும் உள' என்ற தொடரைப் பரிமேலழகர் 'நோய் நாடி' (948) என்ற குறளின் உரையிலும் எடுத்தாண்டுள்ளார். திருவள்ளுவரின் 'எந்நன்றி' என்ற சொற்றொடருக்கு இப்புறநானூற்றுப் பாடல் விரிவுரை தருவதாக அமைந்துள்ளது. 'செய்ந்நன்றி கோறல்' என்ற கருத்து திருக்குறளில் அறத்துப்பாலில் அமைந்துள்ளதாதலால் புறநானூற்றுப் புலவர் 'அறம் பாடிற்றே' என்று

96. புறம்-34

கூறியுள்ளதையும் அறிய முடிகின்றது. திருக்குறள் தமிழர் களின் தலையாய அற நூலாதலின் பொதுவாக இதிலுள்ள கருத்துகள் யாவும் அறத்தின் பாற்பட்டன என்றாலும் சிறப்பாக அறத்துப்பாலிலுள்ள கருத்துகள் யாவும் அறம்பற்றியவை என்று கொள்ளுதற்கு ஐய மில்லை.

புறநானூற்றில் செய்ந்நன்றி யறிதலை விளக்க இன் னோர் எடுத்துக்காட்டு தருவேன். ஆதனுங்கன் வேங் கடத்தை ஆண்ட ஒரு குறுநில மன்னன். இவன் இரவ லர் இன்மை தீர்க்கும் இனிய உள்ளமும் சான்றோர் சால்பறிந்து பேணும் பெருந்தகைமையும் உடையவன். இவன்பால் தொண்டை நாட்டைச் சார்ந்த கள்ளில் என்ற ஊரிலுள்ள ஆத்திரையனார் என்பவர் வேங்கடத்துக் குச் சென்று ஆதனுங்கனைக் கண்டு அளவளாவி இருந்தார். இருவரும் சொல்லாடுகையில், ஆத்திரையனார் தமக்கு ஆதனுங்கன்பால் உள்ள அன்பினை எடுத்தோத வேண் டிய நிலை உண்டாயிற்று. அஃது ஒரு பாடலாக வடிவம் பெற்றது.

எந்தை வாழி ஆத னுங்கஎன்
நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்கும் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவன், வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புற வெதிர்ந்த அறத்துறை நின்னே.[97]

97; புறம்-175

[மறக்கும் காலை - மறக்கும் காலம்; யாக்கை-உடல்; மறப்பின் - மறக்கும் காலம் உண்டாயின்; வென் வேல் - வெற்றி வேல்; பலர் புரவு - பலரையும் காத்தலையுடைய]

என்பது பாடல். இதில் ''இறைவ, நீ எப்போதும் என் நெஞ்சில் இடம் பெற்றுள்ளாய்; என் நெஞ்சைத் திறப் போர் நின்னை அங்கே காண்பர்; பலரையும் புரத்தலை மேற்கொண்டிருக்கும் அறத்துறையாகிய நின்னை ஒருகாலும் மறவேன்; மறத்தற்குரிய காலம் ஒன்றுண் டாயின், அஃது என் உயிர் என் யாக்கையை விட்டுப் பிரிந்தேகும் காலமாமேயன்றிப் பிறிதில்லை'' என்று குறிப் பிட்டிருப்பதைக் காணலாம்.

இராம காதையில் செய்ந்நன்றியறிதலைப் பற்றி அநுமன் பேசுகின்றான். 'சேனையும் யானும் தேடித் தேவியைத் தருவேன்' என்று சொல்லிச் சென்ற சுக்கிரீ வன் சிற்றின்பத்தில் மூழ்கி விடுகின்றான். இலக்குவன் சினத்துடன் கிட்கிந்தையை நோக்கி வருகின்றான். கதை நமக்குத் தெரியும். தாரையின் சந்திப்பினால் இலக்கு வனின் சினம் தணிகின்றது. இப்போது அநுமன் இளைய பெருமாளின் அருகில் வர, 'அந்தமில் கேள்வி நீயும் அயர்த் தனை போலும்!' என்று வினவுகின்றான். மறுமொழி தரும் அநுமன்,

சிதைவகல் காதல் தாயைத்
தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவிஅந் தணரை ஆவைப்
பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம்
மாற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன் றார்க்(கு)ஒன் றேனும்
ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?[99]

99. கிட்கிந்தைப்படலம் - 62

[சிதைவு- கெடுதல்; காதல் - அன்பு; தெய்வப்பதவி - தெய்வத்தின் தானத்தையுடைய; வதை புரிகுநர்- கொலை புரிந்தவர்கள்; ஆற்றல்-உபாயம்; மாயா- அழியாத; உபாயம்-வழி]

இதில் பெரிய பாவங்களனைத்தினும் கொடியது இச் செய்ந்நன்றிக் கொலை என்று செய்ந்நன்றி மறத்திலின் கொடுமையை அநுமன் வாக்கில் காணலாம். இவ்விடத் தில் மாருதி வாக்கில் ஆறு பாடல்களை அமைக்கின்றான் கம்ப நாடன். இன்னொரு பாடல்:

உதவாமல் ஒருவன் செய்த
உதவிக்குக் கைம்மா றாக
மதயானை அனைய மைந்த!
மற்றுமுண் டாக அற்றே
சிதையாத செருவி லன்னான்
முன்சென்று செறுநர் மார்பில்
உதையானேல் உதையுண்(டு) ஆவி
உலவானேல் உலகின் மன்னோ?[100]

[உதவாமல் ஒருவன் செய்த உதவி - கைம்மாறு கருதாத உதவி; செரு - போர்; செறுநர் - பகைவர்; உதையானேல்-படைக்கலங்களைச் செலுத்திடானாயி னும்; உதையுண்டு-அடிபட்டு; ஆவி-உயிர்; உலவா னேல்-ஒழிந்திடானாயினும்; கைம்மாறு-மாற்றுதவி]

செய்யாமல் செய்த உதவியாளனுக்காக ஒருவன் போர்க் களத்திற்குச் சென்று அவனுடைய பகைவனை அழித்தலே முறை; அஃது இயலாவிடில் அப்பகைவர் கையால்தான் உயிர் மாயலாம். இந்த இரண்டும் செய்தால் 'செய்யாமல் செய்த உதவிக்கு ஒருவாறு ஈடாகலாம். இவையன்றி வேறு என்ன உளது?'' என்ற அநுமன் வாக்கில் 'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும், வானகமும் ஆற்றல் அரிது'

100. ஷை. 66

என்ற வள்ளுவத்தின் கருத்து அமைந்திருத்தலைக் கண்டு மகிழலாம்.

செஞ்சோற்றுக் கடன் கழித்தல்' ஒரு வகையில் செய்ந் நன்றி அறிதலுக்கு ஒப்பாகும். சுக்கிரீவன் கருத்துப்படி போர்க்களத்தில் தோன்றிய கும்பகருணனைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்வதென முடிவு செய்கின்றான் இராமன். வீடணன்மூலம் அழைப்பும் அனுப்புகின்றான். சகோதரர் களிடையே நடைபெற்ற பேச்சை நாம் அறிவோம். 'தம்பியை எடுத்து மார்பில் தழுவிக்கொண்டு தன் தறுகண் களில் வெம்புநீர் சொரிய' நிற்கும் நிலையில் பேசுகின்றான் கும்பகருணன்.

> நீர்க்கோல வாழ்வை நச்சி
> நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
> போர்க்கோலம் செய்து விட்டார்க்கு
> உயிர்கொடாது அங்குப் போகேன்
> தார்க்கோல மேனி மைந்த!
> என்துயர் தவிர்த்தி யாகில்
> கார்க்கோல மேனி யானைக்
> கூடுதி கடிதின் ஏகி.[101]

[நீர்க்கோலம்-நீரில் எழுதிய கோலம்; நச்சி-விரும்பி; தார்-மாலை; மேனி-உடல்]

தன்னை ஊட்டி வளர்த்த அண்ணன் பொருட்டுப் போர்க்களத்தில் தன் உயிரைக் கொடாது திரும்புவ தில்லை என்ற உறுதியோடு பேசுகின்றான் கும்பகருணன். இன்னும்,

> கருத்திலா இறைவன் தீமை
> கருதினால் அதனைக் காத்துத்
> திருத்தலாம் ஆகில் நன்றே
> திருத்தலாம் தீரா தாயின்

101. கும்பகருணன் வதை-155

பொருத்துறு பொருளுண் டாமோ
பொருதொழிற் குரிய ராகி
ஒருத்தரின் முன்னம் சாதல்
உண்டவர்க் குரிய தம்மா.[102]

[கருத்து-ஆலோசனை; இறைவன்-தலைவன்; தீரா தாயின்-திருத்த முடியாதாயின்; பொருதொழில்-போரிடும் தொழில்; ஒருத்தர்-ஒப்பற்ற தலைவர்]

என்கின்றான். "ஆலோசனை இல்லாத தலைவன் தீய தொழிலை மேற்கொள்ளக் கருதினால், அதனைத் தடுத்து அவனைத் திருத்துவது கூடுமாயின் திருத்துதல் நல்லது; அங்ஙனம் திருத்துவது முடியாதாயின் மாற்றாரைச் சேர்த லால் அடையக்கூடிய பொருளுண்டோ? ஒருவருடைய சோற்றை உண்டவர்க்கு உரிய செயல், பொருதொழிற்கு உரிமையுடையவராக இருந்து ஒப்பற்ற தலைவர்க்கு முன்னம் உயிர் விடுதலே ஆகும்" என்று தான் செஞ் சோற்றுக் கடன் கழிப்பதே கருமமும், தருமமும் ஆகும் என்ற உறுதியை எடுத்தியம்புகின்றான்.

'செஞ்சோற்றுக் கடன் கழித்தல்' என்ற அறத்தை வில்லி பாரதத்திலும் காண்கின்றோம். கண்ணனின் தூண்டுதலால் குந்திதேவி கன்னனிடம் வருகின்றாள். தான் அவனுடைய ஈன்ற தாய் என்பதை மெய்ப்பித்துஐவர் பக்கம் வந்து சேருமாறு வேண்டுகின்றாள். "என் மகனே, ஐவர் பக்கம் வந்து சேர்க. அப்படிச் செய்தால் ஐவரும் நின் மலரடியை அன்பினால் வணங்குவார்கள். உரிமை யால் மனம் ஒத்து ஏவல் புரிவார்கள். நீ தனிமையாகப் பேரரசனாவாய். பிற அரசர்கள் யாவரும் நின் வாயிற் படியில் வந்து காத்துக்கிடக்க, நீ ஆண்மையும், செல்வமும் விளங்க குரு குலக் குரிசிலாய்த் திகழலாம். நின் கடனும் அதுவேயாகுக" என்பது அவள் வேண்டுகோள்.

102. கும்பகருணன் வதை-157.

அதற்குக் கன்னன் தந்த மறு மொழி: ''அருமை அன்னையே, என்னைப் பெற்ற நீ அன்பு இல்லாமையாலோ, அல்லது பெரும்பழியை நாணியோ என்னைக் கைவிட்டீர்; அற்றை நாள் தொடங்கி என்னைத் துரியோதனன் இன்றளவும் ஆர் உயிர் துணை எனக் கருதுகின்றான். அங்க தேசத்து அரசனாகக் கொற்றமா மகுடம் புனைந்து, அரசுப் பொறுப்பை வழங்கினான். இருவரும் சேர்ந்து உண்கின்றோம். தம்பியரும் சுற்றமானவரும் என்னை வணங்கச் செய்து தோற்றமும் ஏற்றமும் அளித்துள்ளான். இத்தகையவனை நடுவில் கைவிட்டு (இக்காலத்துக் கட்சி மாறிகள் போல்) வருதல் அழகோ?

திடம்படுத் திடுவேல் இராசரா சனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே எனக்கினிப் புகழும்
கருமமும் தருமமும்! என்றான்[103]

[செருமுனை-போர் முனை

இது மட்டுமா? 17-ஆம் நாள் போர் நடைபெற்றபோது கண்ணன் கன்னனிடம் அவன் செய்த புண்ணியம் அனைத்தையும் பெறுகின்றான். பின்னர் 'ஆதி மூலமே!' என்றழைத்த கசேந்திரன்முன் அன்று தோற்றிய வடிவில் சேவை சாதிக்கின்றான். அப்போது கன்னன் தெளிந்த மனத்துடன் கண்ணனை நோக்கிப் பேசும் பேச்சு கல்நெஞ்சத்தையும் உருக்கக் கூடியது. அப்பேச்சாக அமைந்த ஒரு பாடல் :

தருமன்மகன் முதலான அரிய காதல்
தம்பியரோ(டு) எதிர்மலைந்து தறுகண் ஆண்மைச்
செருவில்என(து) உயிர்அனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்களித்தேன் தேவர் கோவுக்கு

103. வில்லி பாரதம்-கிருட்டிணன் தூது 252.

உரைபெறுநல் கவசமும்குண் டலமும் ஈந்தேன்;
உற்றபெரு நல்வினைப்பே(று) உனக்கே தந்தேன்;
மருதிடைமுன் தவழ்ந்தருளும் செங்கண் மாலே!
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே[104]

[செரு - போர்; தேவர்க்கோ - இந்திரன்; மருது - இரட்டை மருத மரம்.]

இதில் கண்ணன் தன் தோழர்க்காகச் செஞ்சோற்றுக் கடன் கழித்தமையை மிக்க மனநிறைவுடன் பேசுவதைக் காண்கின்றோம்.

4. ஒப்புரவு அறிதல்: ஒப்புரவு அறிதல் என்பது தக்கார்க்கு உதவியாக இருத்தலாகும். எவ்வளவு ஆற்றலுடையவர்களும் இந்த உலகில் பிறர் உதவியின்றி வாழ முடியாது. நாம் வாழும் வீடு எத்தனையோ தொழிலாளர்களின் உழைப்பால் கட்டப்பெற்றது. அந்தக் கட்டமைப்பிற்கு வேண்டிய செங்கல், மணல், இரும்பு, மரம் முதலியவை யார் யாராலோ எங்கோ உற்பத்தி செய்யப் பெற்று கொணரப் பெற்றவை. உண்ணும் உணவுப் பொருள்களைப்பற்றிக் கருதினால் அவை வந்து வழியும், பல்லோர் உழைப்பினால் வந்தவை என்பதும் தெளிவுபடும். இப்படியே ஒவ்வொன்றையும் எண்ணினால் அவற்றில் பங்கு கொண்ட பல்லாயிர உழைப்பாளிகள் நம் கண் முன் நிற்பர். எனவே, உலகில் பலருடைய உழைப்பாலாகிய உதவி இல்லாமல் தனியொருவனின் வாழ்க்கை நன்முறையில் அமையாது. இந்த உண்மையை அறிந்தவர்கட்கே தம் வாழ்க்கை முழுவதும் பிறர்க்குப் பயன்பட வேண்டும் என்ற ஆர்வம் பிறக்கும்; கைம்மாறு கருதாமல் பலர்க்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணமும் இயல்பாக அமைந்து விடும். இவர்களே ஒப்புரவு அறிந்த இல்லறத்தார்கள்.

---

104. ஷை. 17-ஆம் நாள் போர். 248.

ஒப்புரவாளரின் வாழ்க்கையை மழையின் தன்மையோடு ஒப்பிட்டுப் பேசுவர் வள்ளுவப் பெருந்தகை. பல இடங்களிலிருந்து கதிரவன் வெப்பத்தால் சேர்த்துக் கொண்ட நீர்த்துளிகளே ஆவி உருவாக மேகமாய் உள்ளன. இந்த மேகமே திரும்பவும் கைம்மாறு கருதாமல், இன்னார்க்கு இன்ன பயன் கருதி என்ற வரையறையும் இல்லாமல் உதவுகின்றது. ஒப்புரவாளர் செய்யும் உதவிகளும் மழை பயக்கும் உதவிகளைப் போன்றவைகளே. இந்த உதவிகளும் கைம்மாறு கருதாதவையே (211). ஒப்புரவாளர் முயன்று உழைத்துச் சேர்த்த பொருள்கள் யாவும் பிறர்க்கு உதவி செய்யும் பொருட்டேயாகும் (212). இந்த ஒப்புரவு போன்ற நன்மையை விண்ணுலகிலும் மண்ணுலகிலும் பெற முடியாது (213). உலகம் எல்லாம் ஒரு குடும்பமாய் இயங்கும் தன்மையை ஒப்புரவால் அறிந்தவனே உயிருடன் வாழும் சிறப்புடையவன். இதையறியாதவன் செத்தவருள் ஒருவனாகவே கருதப் பெறத்தக்கவன்.

உலகம் வாழ வேண்டும் என்று விரும்புகின்ற பேரறிஞனின் செல்வம் ஊருணியில் சேர்ந்த நீர் போன்றது. வெள்ளம் பெருகி வந்த காலத்திலே யன்றி பிற சமயங்களிலும் குளம் ஊரார்க்கு நீர் உதவிக் கொண்டேயிருக்கும். ஒப்புரவாளரின் வாழ்க்கையும் குளத்தைப் போன்றதே.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு (215)

என்பது வள்ளுவம். ஒப்புரவாளனிடம்இருக்கும்செல்வத்தை ஊர் நடுவே பயனுள்ள மரம் பழம் நிறைந்து பழுத்ததற்குஒப்பிட்டுக் காட்டுவார் அப்பெருந்தகை.பழுத்த காலத்தில் மரம் எல்லோர்க்கும் பழம் உதவும். பழம் தீர்ந்த காலத்தில் தன் பழங்களை இழந்ததற்கு வருந்தாமல் ஊரார்க்கு நல்கப் பழம் இல்லையே என்று வாடி நிற்கும்.

அன்பு நிறைந்த ஒப்புரவாளன் வாழ்க்கையும் இதைப் போன்றதே (216). அவன் செல்வம் குறைந்து வறுமை யுற்றபோது அந்த வறுமை நிலைக்கு அவன் வருந்துவ தில்லை. பிறர்க்குச் செய்யத்தக்க உதவிகளைச் செய்ய முடியவில்லையே என்று நினைத்து வருந்துவான் (219).

இன்னும் வள்ளுவர் பெருமான் அருள் வடிவமான பெருந்தகையாளனை மருந்துக்குப் பயன்படும் மரத்துடன் ஒப்பிட்டு விளக்குவார். மருந்து மரம் வேர், பட்டை, இலை, பூ, காய், பழம் முதலிய எல்லாவற்றையும் அளித் துப் பயன்படும். அருள் வடிவான பெருந்தகையாளன் தன் செல்வம் முழுவதையும் அவ்வாறு பயன்படுத்துவான். இதனை,

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யாளன்கட் படின் (517)

என்ற குறள் ஒளியால் காட்டுவர் அப்பெருந்தகை. மருந் தாகப் பயன்படும் மரம் தான் இல்லாமல் தன்னை முழு வதுமே அழித்துக் கொள்வதும் உண்டு. பெருந்தகையா ளன் நிலையும் அப்படிப்பட்டதே. ஒப்புரவினால் வரும் கேட்டை அவன் தன்னை விற்றாவது ஏற்றுக் கொள் வதே தகுதி என்று துணிவான்.

5. **ஈகை:** மூவேழு வள்ளல்கள் வாழ்ந்த நம் நாட் டில் ஈகையைப்பற்றிப் பேசுதல் கொல்லத் தெருவில் ஊசி விற்பதோடொக்கும். அறம்நிறைந்த இல்லறவாழ்க்கை யில் ஈகை ஒரு சிறந்த கூறு. இல்லறத்தில் வாழும் அன் புடையவர் பிறருடைய வறுமைத் துன்பத்தைக் கண்டு வாளா இருத்தல் இயலாது. வெறும் பேச்சும் எண்ணமும் பிறருடைய துன்பத்தைத் தீர்க்க முடியாது. ஆகையால் தம்மாலான வறுமைத் துன்பத்தைத் தீர்க்க முயல் வதே இல்வாழ்வானுடைய கடமையாகும்; இதுவே ஈகை எனப்படும். ஈகை என்னும் பெயரால் பொருளுடைய

வருக்கே மேன்மேலும் கொடுத்து உதவுவதால் பயன் இல்லை; அஃது ஈகையும் ஆகாது.

> வறியார்க்கொன்று ஈவதே ஈகை;மற் றெல்லாம்
> குறியெதிர்ப்பை நீரது உடைத்து (221)

என்பது வள்ளுவம். வறியவர்க்குத் தம்மால் இயன்ற ஒன்றை ஈவதே ஈகை ஆகும். வறுமையற்ற மற்றவர்களுக்குப் பொருள் தருதல் ஈகை அன்று; அஃது ஒரு பயன் நோக்கிக் கொடுத்து வாங்கிக் கொள்ளும் முறையே ஆகும். 'குறியெதிர்ப்பையானது, அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது' என்ற பரிமேலழகரின் உரை இதனைத் தெளிவாக்கும். எ-டு. திருமணத்தில் வழங்கும் அன்பளிப்பு, மொய் போன்றவை. கைம்மாற்றுக் கடனும் இவற்றையொத்தவை. 'வறியார்க்கு ஈவதால் பெறும் இன்பமே 'ஈத்துவக்கும் இன்பம்' (228) ஆகும் என்பது வள்ளுவர் வாய்மொழி: காரைக்குடி வள்ளல் அழகப்பரிடம் இதனை நான் கண்டு மகிழ்ந்ததுண்டு. தம்முடைய பொருளை ஈயாமல் வைத்துப் பாதுகாத்துப் பின்னர் இழந்து தவிக்கும் 'கஞ்சப் பிரபுக்கள்' இந்த இன்பத்தை என்றுமேஅறிய முடியாது.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடலொன்றால் ஈகையின் சிறப்பை அறிய முடிகின்றது. இவர் தமிழகம் முழுவதையும் நன்கறிந்த பெருமகன். முருகாற்றுப்படை பாடி முருகன் திருவருள் சிறக்கப்பெற்றவர். இவர் அந்தணர் அல்லர் என்பது ஔவை துரைசாமி பிள்ளையின் கருத்து. இவர் மலையும் காடும் நாடும் கடலுமாகிய நானிலப் பகுதிகளில் வாழும் மக்கள் பலருடைய முயற்சியை முற்றும் தம் புலமைக் கண்ணால் நோக்கினார். எல்லாருடைய உள்ளமும் பொருளீட்டலில் பேரார்வமுற்று இயங்குவதைக் கண்டார். நாடுகட்குத் தலைமை தாங்கிய வேந்தர் பொதுச்சொற்பெறாது

அரசு புரிவதும், காடுகளில் வாழும் விலங்குகளை வேட்டையாடித் திரியும் வேட்டுவர் இரவும் பகலும் தமக்குரிய விலங்குகளைப் படுப்பதையே எண்ணி முயல்வதும் இப்புலவர் கருத்தினை ஈர்த்தன. இவர் தம் உழைப்பின் முடிவென்னை என்பதனை ஆய்ந்தார். இவரனைவர்க்கும் உண்பது நாழியும் உடுப்பவை இரண்டுமாம்[105] என்றும், பிறவகையில் ஒரு வேற்றுமையும் இல்லை என்றும் துணிந்தார். இவற்றை நோக்கின் வேண்டுவன சிறிதும் ஈட்டுவன பெரிதுமாதலின், மிக்கு நிற்கும் செல்வத்தால் செய்ய வேண்டுவது ஈதலாகிய அறமே என்றும், செய்யாது தாமே துய்க்கக் கருதின் அறமும், பொருளும், இன்பமும் பெறப்படாவாம் என்றும் கண்டு தெளிந்தார். இத் தெளிவு ஒரு பாடலாக வடிவம் பெறுகின்றது.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புன பலவே[106]

[வளாகம்-உலகம்; யாமம்-நள்ளிரவு; கடுமா-விரைந்த செலவினையுடைய மாக்கள் (விலங்குகள்); இரண்டே-அரைக்கு நான்கு முழம், மேலுக்கு இரண்டு முழம் ஆகிய இரண்டாடை; பிற-உண்டல், உறங்கல், இனம் பெருக்குதல் முதலியன; பல-அறமும் பொருளும் இன்பமும்]

பெரிதீட்டித் தமித்துண்பவர்பால் செல்வம் மிகுதலால் அம்மிகுதிக் காட்சி சிறிதீட்டிப் பலர் சூழ இருந்துண்

105. ஔவையார் : நல்வழி - 28. பாடல் காண்க.
106. புறம். 189.

பவராகிய வறியார்க்கு, அறிவு நலம் கேடெய்துவதற்கு ஏதுவாகின்றது. இதனால் செல்வர் ஈதலைக் கடனாகக் கோடல் அறனாக அமைகின்றது. இது செல்வர்க்கேயன்றி மக்கள் உலகுக்கே நலம் பயக்கின்றது. இந்த அற உணர்வுக் குறைவே இக்காலத் தொழிலாளர் கிளர்ச்சிக்கும் பொருள் முட்டுப்பாட்டிற்கும் வாழ்வு நிரம்பாமைக்கும் வாயிலாதல் தெற்றெனத் தெளியப்படுகின்றது. இந்த ஈகை குறைந்து வருவதனால்,

....

கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தை யெல்லாம்
கொத்திக்கொண் டேப்பமிட்டு வந்த தாலே
கூலிமக்கள் அதிகரித்தார், என்ன செய்வேன்
பொத்தல்இலைக் கலமானார் ஏழை மக்கள்
புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்.
அதிகரித்த தொகைதொகையாய்ச் செல்வ மெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம்போய் ஏறிக் கொண்டு
சதிராடு தேவடி யாள்போல் ஆடிற்றுத்!
தரித்திரரே புழுப்போலத் துடிக்கின் றார்கள்!

....

....

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகி விட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாநீ![107]

என்பன போன்ற அடிகளையுடைய பாவேந்தரின் 'உலகப் பன்பாட்டு' தோன்றக் காரணமும் ஆயிற்று.

ஒருவர் கொடுக்கும் பொருளைப் பெற்று அதனால் வயிறு வளர்க்கும் வாழ்க்கை நல்ல வாழ்க்கையன்று. அவ்

107. பாரதிதாசன் கவிதைகள்; 53, உலகப்பன்பாட்டு.

வாறு வாழ்வதற்குக் காரணமான வறுமை ஒழிய வேண்டும் என்பதை '**நல்குரவு**' என்ற அதிகாரத்தில் விளக்குவார் வள்ளுவப் பெருந்தகை. வறுமை வந்தாலும் பிறர் உதவியைப் பெறாமல் வாழ்வதே நல்லது என்பதை '**இரவச்சம்**' என்ற அதிகாரத்தில் தெளிவாக்குவர் வள்ளுவர் பெருமான். வறுமையற்ற நல்லுலகம் வரவேண்டும் என்று அவர் விரும்பிய போதிலும் அதுவரையில் வறியவர்கள் உயிர்வாழ்வது எவ்வாறு என்பதை இரக்கத்தோடு எண்ணிய எண்ணங்களையே '**இரவு**' என்ற அதிகாரத்தில் தெரிவிக்கின்றார். அவ்வாறு இரப்பவர்க்கு ஈந்து உதவ வேண்டும் என்னும் கருத்தையே '**ஈகை**' என்ற அதிகாரத்தில் குறள் மணிகளாகப் பதிவு செய்து வைக்கின்றார். அவற்றின் ஒளியே அமைதியற்ற இன்றைய உலகிற்கு வழி காட்டும் விளக்கு. பிறரிடம் பொருள் உதவி பெறாமல் வாழ வழி அமைப்பது எதிர்கால நல்லுலகம்; அந்த நல்லுலகம் வரும் வரையில் அவ்வாறு பிறர் உதவி பெறாமல் வாழவல்லவர்கள் வாழ்ந்துகாட்ட வேண்டும். பிறரிடம் சென்று கையேந்தி இரக்கும் கொடுமை இல்லாதவாறு அமைவது எதிர்கால நல்லுலகம்; அந்த நல்லுலகம் வரும் வரையில் அவ்வாறு வறுமையால் வாடி இரந்து வாழத் தொடங்கியவர்கள் கையேந்திக் கேட்காதபடி குறிப்பாலேயே அவர்கள் குறையை உணர்ந்து பொருள் கொடுத்துக் கையேந்தும் காட்சி இல்லாமல் செய்ய வேண்டும். இந்தக் கருத்துகளையே 'ஈகை' என்ற அதிகாரத்தில் விளக்குவார் நல்வாழ்க்கைக்கு ஒளி காட்டும் வள்ளுவப் பெருந்தகை.

நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று (222)

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள (223)

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல் (229)

என்ற குறள் மணிகளின் ஒளியில் சிந்திப்போம். கம்ப ராமாயணத்தில் வரும் மாவலிக் கதையில் சுக்கிராச் சாரியை நோக்கி மாவலி பேசுகின்றான் :

.... மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில? இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்[108]

இதில் 'நல்லாறு எனினும்' (222) என்ற குறளின் கருத்து நிழலிடுவதைக் கண்டு மகிழலாம்.

'வல்லார் கிழான் பண்ணன்' என்பவன் கைவண்மை யும் போர்வண்மையும் உடையவன். இவன்மீது பாடிய பாட்டின்கண் சிறுகருந்தும்பியார் என்ற புலவர் பாணர்க் குக் கூறும் பாங்கில் (பாணாற்றுப்படையாக) இவனது வள்ளன்மையை எடுத்து விளக்குவார். "பாணனே, பண்ணன், வல்லார் என்னும் ஊரின்கண் உள்ளான்; வறுமையால் உண்ணாது வருந்தும் நின் சுற்றம் உண்டு வாழ்தல் வேண்டுவையாயின், வல்லார் கிழானான பண்ணன் பகைப்புலம் நோக்கிச் செல்வதற்குள்ளே உன் பசிக்குப் பகையாகிய பரிசில் பெறுவதற்கு இப்பொழுதே செல்வாயாக" என்று ஆற்றுப்படுத்துகின்றார்.

புலாஅல் அம்பின் போரரும் கடிமிளை
வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்
உண்ணா வறுங்கடும்பு உய்தல் வேண்டின்
இன்னே சென்மதி நீயே; சென்றவன்
பகைப்புலம் படரா அளவைநின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே[109]

[புலால் அம்பு-புலால் நாறும் அம்பு; கடிமிளை-காவற் காடு; வறும்கடும்பு-வறிய சுற்றம்; உய்தல்-பிழைத்தல்;

108. பால. வேள்விப்படலம்-29
109. புறம்-181.

இன்னே - இப்பொழுதே; சென்மதி - செல்வாயாக;
பகைப்புலம்-போர்க்களம்]

என்ற பாடற்பகுதியில் இதனைக் காணலாம்.

கழைதின் யானையார் என்ற சான்றோர் வல்வில் ஓரியின் ஈகைப் பண்பை எடுத்து விளக்குகின்றார். ஒரு பாடலில். பரிசில துறையில் அமைந்த இப்பாடலில், ஈவோர்க்கும் ஏற்போர்க்கும் உள்ள உயர்வு தாழ்வுகளை எடுத்தோதுகின்றார். ஈவோர் ஈயேன் என்பதால் ஏற்போரினும் இழிந்தவராவர் என்றும், ஏற்போர் கொள்ளேன் என்பதால் ஈவோரினும் உயர்ந்தவராவர் என்றும், விளக்குகின்றார். உண்ணும் நீர்நிலை வற்றிச் சேறு பட்டதாயினும் அதனை நாடிச் செல்வோர் பலராவது போல, வரையா ஈகையுடையோரை நாடிப் பலரும் வருவர்; வருவோர் ஒருகால் தாம் வேண்டியது பெறாவிடின் அவர் தம்மை நொந்துகொள்வதன்றிக் கொடாத வள்ளியோரை நோவார் என்று இதில் குறிப்பிடுவர். பாடலின் பகுதி இது;

ஈயென இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று[110]

[இழிந்தன்று - இழிந்தது; உயர்ந்தன்று - உயர்ந்தது]

என்பது. ஈயென இரத்தலும் ஈயேன் என மறுத்தலும் இழிவென்றும், இரப்போர் குறிப்பறிந்து கொள்ளெனக் கொடுத்தலும் கொடுக்கும்போது கொள்ளேன் என மறுத்தலும் உயர்வு என்றும் எடுத்தோதி ஓரியை நோக்கி ''இவ்விரண்டனுள் நீ விரும்புவதைச் செய்க'' எனப்புலவர் கூறுகின்றார். இரத்தலின் இழிவு தோன்ற இழிந்தோன்

110, புறம் 204

கூற்றால் ஈயெனச் சொல்லி இரத்தல் இழிந்தது எனக் காட்டினார். 'ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே' என்பது தொல்காப்பியம் (தொல், எச்ச,49). இழிவு பயக்கும் இன்மைச் சொல்லைச் சொல்லி இரப்பார்க்கு இன்மை உண்மையான் இரத்தலானுண்டாகும் இழிவன்றிப் பிறிதில்லை; ஈயேன் என மறுக்கும் செல்வர்க்கு தாம் தம் உடைமையை மறைத்துப் பொய் மொழிந்து அவ்வின்மைச் சொல்லால் பிறக்கும் இழிவையும் மேற்கொண்டு அதனைக் கூறி மறுத்தலால், இவன் என்னும் எவ்வமும்,பொய்மொழியால் உளதாகும் இழிதகவும் ஆக மிக்க இழிவு உண்டாதல் பற்றி 'ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று' என்று கூறினார். ஏற்பார் பால் ஈயென்னும் சொல் பிறவாமையால், கொள்ளெனச் சொல்லிக் கொடுத்து ஏற்பித்தால், செல்வர்க்குப் பிறர்பால் இழிவை மறைத்து, ஓம்புதலால் புகழ் உண்டாகி உயர்வு தருதலின் 'கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று' என்றும் கூறினார். தான் இரந்து கொடுத்தலாவது ஏற்பாரைத் தான் பணிந்து நின்று தான் கொடுப்பதை ஏற்பித்தல்; இப் பணிவு செல்வர்க்குப் பெருஞ்செல்வமாம் தகைமையுடையதெனப் பொய்யா மொழியாரும் புகல்வர்.

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு (224)

என்பது வள்ளுவம். கொள்ளேன் என்பதால் பிறக்கும் பெருமிதம், கொடுக்கப்படும் பொருள் பிறர்க்குக் கொடுக்கப்பட்டுப் பயன்படுமாற்றால் பிறக்கும் புகழினும் தான் உரிமை எய்தி மேம்படுதலின் 'அதனினும் உயர்ந்தன்று' என்றார். இங்ஙனம் சிந்தித்து நயங்கண்டு மகிழலாம்.

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை இவை ஒருவரால் எடுத்துச் சொல்லப்படாமலேயே எவர்க்கும் விளங்கும். அப்படியிருந்தும், சிலர் ஈயாமல் சாகின்றனரே என்று கழிவிரக்கம் கொள்ளுகின்றார் பட்டினத்தடிகள்.

பிறக்கும் பொழுது கொடுவந்தது
இல்லை; பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ(து)
இல்லை; இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்கஅறியாது
இறக்கும் குலாமருக்கு என்சொல்லு
வேன்; கச்சி ஏகம்பனே.[111]

என்று கச்சி நகர் ஏகாம்பர நாதரை நோக்கிப் பேசுவது போல் நம்மைத் தெருட்டுகின்றார்.

சமண முனிவர் ஒருவர் ஈயாமைக் குணமுடையாரை நோக்கிப் பேசுவது மிகவும் நயமுடையதாகும்.

துய்த்துக் கழியான் துறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியும் மடவோனை - வைத்த
பொருளும் அவனை நகுமே உலகத்து
அருளும் அவனை நகும்.[112]

'அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை' (குறள் — 247), 'அறனும் அருளுடையான் கண்ணதேயாகும்' ( ) என்று கூறியவாறு தானம் முதலிய நற்கருமங்களைச் செய்து நற்கதியை அடைவதற்குக் காரணமான அருளைச் சிறிதும் உடையனாகாமல் பொருளைப் பாழ்படுத்தினது பற்றி அவ்வருள் இவனை நோக்கிச் சிரிப்பதாயிற்று; அருளுடையவனாக நின்றுப்பிறர்க்குக் கொடாவிட்டாலும் தானாவது துய்க்கலாமே; அதுவும் செய்யாமல் பொருளை ஈட்டுதலையே பயனாகக் கருதிக் காலம் கழித்த அறியாமையை நோக்கி அதே பொருளும் சிரிப்பதாயிற்று. இங்கே நகுதல் இகழ்தல் காரணமாக உண்டாயிற்று என்பது அறியத்தக்கது. பட்டினத்தடிகளும் ஓரிடத்தில்,

111. பட்டினபிள்ளை-பாடல் - திருஏகம்ப மாலை-7
112. நாலடியார்-273

ஈயா மனிதரை ஏன்படைத்
தாய்கச்சி ஏகம்பனே[113]

என்று கழிவிரக்கம் கொள்வார்.

நான்காவது பகுதியில் இல்வாழ்வானிடம் அமைந்திருக்கவேண்டிய குணநலன்களைக் கூறும் நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்க முடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை, தீவினை அச்சம், புகழ் என்னும் பதினோர் அதிகாரங்கள் ஒரு தொகுப்பாக அமைந்துள்ளன. இவற்றையும் ஒவ்வொன்றாக் கருதுவோம்.

1. நடுவு நிலைமை: அறநெறி வாழ்க்கையில் நடுநிலை தவறாமல் நீதியைப் போற்றுதல் வேண்டும். நம்மவர், பிறர் என்ற பாகுபாட்டுடன் வகை செய்து நடத்தல் ஆகாது. அறம் எல்லோருக்கும் பொது என்ற உணர்வு மேளக் கச்சேரியில் 'ஒத்து ஊதுதல்' போன்று இடையறாது இருக்குமாறு செயல்கள் ஆற்றப் பெறுதல் வேண்டும். நடுநிலையைக் கடந்த செயலால் நற்பயன் விளைவதில்லை. ஒருகால் நன்மை உண்டாவதாக இருந்தாலும், நடுநிலை தவறி உண்டான ஆக்கம் என்று உடனே அதனைக் கைவிடுதல் வேண்டும். தன் நன்மை தீமையை மறந்து அறத்தைப் போற்றுவதற்கு அதுவே நேரிய நெறியாகும்.

நன்றே தரினும் நடுஇகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் (113)

என்பது வள்ளுவம்.

தன்னலத்தால் நடுவுநிலை கடந்து வாழ்பவர்கள் நன்மை பெற்று வாழலாம்; செல்வாக்குடனும் திகழலாம்.

---

113. பட்டினத்து பிள்ளை பாடல்-திரு ஏகம்ப மாலை-21

இந்தச் செல்வாக்கினால் நடுநிலை கடந்த குற்றமும் மறைக்கப் பெறலாம். ஆனால் ஒருகாலத்தில் இந்தக் குற்றம் அம்பலமாகி விடும். வாழ்நாட் காலத்தில் செல்வாக்கின் போர்வையால் மாசற்றவர்போல் தோன்றினாலும் பிற்காலத்தில் உண்மையே ஒளிவிட்டுப் பொலிவு தரும். தக்கவர், தகாதவர் என்ற உண்மை வாழும்போது மாயைபோல் புலனாகாவிடினும், அவரவர்கட்குப் பின்னர் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் தெளிவாக அறியப்படும்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும் (114)

என்பது வள்ளுவர் வாய்மொழி. இறந்த பின்பும் அழியாமல் நிற்பதால் 'பழியும் புகழும்' எச்சம் எனப்பட்டது. 'இசை என்னும் எச்சம்' (238) என்பது வள்ளுவர் பெருமான் குறிக்கும் அருமையான சொற்றொடர்.

நடுநிலைமையைச் சிறந்த அறமாகக் கொண்டு போற்றுவோர் கடைப்பிடிக்க வேண்டிய பேருண்மை ஒன்று உண்டு. வாழ்வு என்பது எப்போதும் உயர்வும் தாழ்வும் உள்ள ஓர் அமைப்பு. இதைச் செய்தால் உயர்வு பெறலாம் என்ற அவா உறுதலும், இதைச் செய்தால் தாழ்வு நேரும் என்ற அச்சம் உறுதலும் இயல்பு. இவ்வாறு அவாவும் அச்சமும் கொள்வதால் நடுநிலைமை கடந்தாவது உயர்வு பெற வேண்டும் என்ற எண்ணம் முகிழ்க்கும். கேடும் ஆக்கமும் வாழ்க்கையில் இயல்பானவை என்று உணர்ந்து நெறி தவறாமல் வாழ முற்பட்டால், வருவதைக் கருதாமல் கடமையை நடுநிலையில் நின்று ஆற்றலாம். நடுநிலையைப் போற்றுவோர் துலாக்கோலை நோக்கினால் ஒரு பேருண்மை தட்டுப்படும். தான் சமமாக நின்று பிறர்க்கு வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் தன்னிடம் வைக்கப் பெற்ற பொருளின் எடையை துலாக்கோல் உள்ளவாறு அறிவிப்பதைக்

காணலாம். இதுவே பெருமைக்குக் காரணமாக இருப்பது. அதுபோல் சமநிலையில் நின்று ஒரு சார்பாகக் கோணாமல் நடப்பதே சான்றோர்க்கு அழகாகும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி (118)

என்பது பொய்யாமொழி. உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையே முன்னர் உறுதியானால் சொல்லில் கோணல் பிறக்காது (119). இந்த நடுநிலைமை சிறப்பாக வணிகர்கட்கு மிகவும் இன்றியமையாதது. பொருளைக் கொடுத்துப்பணமாக்கும் அவர்களுடைய தொழிலில் கொடுப்பதையும் குறையக் கொடுக்காமல் கொள்வதையும் மிகக் கொள்ளாமல் நடுநிலைமை வேண்டும். பிறருடைய பொருளையும் தம் பொருளெனப் போற்றி வாழ்வார்களானால் வாணிகத்தைத் தொழிலாகச் செய்வார்க்கு நன்மை பயக்கும் (120). இக்கால வணிகர்களில் பலர் துலாக்கோலையே தந்திரமாக இயங்கச் செய்து கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றதை எம்மருங்கும் காணலாம். 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்' போன்ற நல்ல வணிகரை,

கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்[114]
[பகல் - பகலாணி]

என்று பேசும் பட்டினப்பாலை. இவர்களின் செயலையும்,

கொள்வதும் மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது,
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை[115]

114. பட்டினப் பாலை - அடி 205 - 207.
115. ஷை. அடி. 210-212

என்று விளக்கும். இக்கருத்தை கலித்தொகையிலும் (கலி - 86)

பால்கொளல் இன்றிப்
பகல்போல் முறைக்கொல்கா
கோல்செம்மை யொத்தி பெரும!
[பகல் - பகலாணி]

என்ற அடிகளில் காணலாம். இது தலைவி மகனை நோக்கி (மறைந்து நிற்கும் தலைவன் கேட்பக்) கூறியது. தொல்காப்பிய - அகத்திணையியல் நூற்பா (28) உரையில் நச்சினார்க்கினியர் ''வணிகர்க்குரிய விரதமாவன: கொள்வதுமே மிகை கொள்ளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது பல்பண்டம் பகர்ந்து ஈதல்'' என்ற பட்டினப் பாலை அடிகளை அப்படியே எடுத்தாள்வர். பழமொழி யாசிரியரும்,

—ஒத்துச்
சகத்தனாய் நின்றொழுகும் சால்பு தவமே
நுகத்துப் பகலாணி போன்று[116]

[ஒத்து - (மனம்) பொருந்தி; சகத்தனாய் - ஒன்றுபட்ட வனாகி; சால்பு - அமைதி]

என்று இப்பண்பை எடுத்துக் காட்டுவர். இவை யாவும் இல்வாழும் வணிகரின் அறத்தை எடுத்துக் கூறுவனவாகும்.

2. **அடக்கமுடைமை :** எண்ணத்தாலும், பேச்சாலும், செயலாலும், இல்வாழ்வார் அறத்தைப் போற்ற வேண்டு மானால் மனம்,மொழி,மெய் என்பவற்றைத் தம்ஆட்சியின் கீழ் வைத்திருக்கும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும். உடல் அடக்கம், நிலை அடக்கம், புலன் அடக்கம், நாஅடக்கம், சினம் அடக்கம் என எல்லா அடக்கங்களும் அடங்கி ஒத்துழைக்கும் வாழ்வே சிறந்த வாழ்வு ஆகும். இவை எல்லாம் நிலையில் உயர்ந்தவர்கட்கு முக்கிய மானவை என்பது,

116. பழமொழி - 339

எல்லார்க்கும் நன்றாம் பணிதல், அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. (125)

என்ற வள்ளுவத்தால் பணிக்கப்பெறுகின்றது. அடக்கம் ஒருவனை மேன்மேல் உயர்த்தவல்லது; சிறந்த நன்மக்களிடம் சேர்க்கவல்லது; அடங்காமையே, செறிந்த இருள் போன்ற தீய வாழ்க்கையில் கொண்டுசெலுத்திவிடும்(121). ஆகையால், உயிர்க்கு உறுதி பயப்பதில் அடக்கத்தை விட வேறொன்றும் இல்லை. அஃது உயர்ந்த சூழலை உண்டாக்கித் தந்து அருஞ்செயல்களை ஆற்றும் வல்லமையை மிகுவிக்கின்றது. அடக்க முடையார், மலைபோல மதிக்கப்பெறுவர். மேற்குறிப்பிட்ட அடக்கங்களுள் எதனைக் காக்க முடியாமற் போனாலும் நாவடக்கத்தையாவது முக்கியமாகக் காத்தல் வேண்டும். ஏன் எனில், தீயால் சுட்ட புண் புறத்தில் வடு ஏற்படுத்தினாலும் உள்ளத்தில் ஆறிவிடும்; ஆனால், நாவினால் சுட்டபுண் உள்ளத்தில் வடுஏற்படுத்தும்; அந்த வடு எப்போதும் ஆறுவதில்லை. நாவடக்கத்திற்கு வழி மனத்தை வெகுளி இல்லாமல் காத்தல். இவ்வாறு ஒழுக வல்லவனை அறம் தானே தேடிச் செல்லும்; உரிய வழியில் சென்று அவனுடைய செவ்வியை அறம் பார்த்துக்கொண்டிருக்கும் (130).

3. **ஒழுக்கமுடைமை** : உயிர் எல்லாப் பொருளையும் விடச் சிறந்தது என்பதை நாம் அறிவோம். ஆயினும் அந்த உயிருக்குச் சிறப்புத் தரவல்லது ஒழுக்கம். ஒழுக்கம் என்பது தொடர்ந்து நடக்கும் நடக்கையாகும். மழையொழுக்கு, ஆற்றொழுக்கு என்ற வழக்குகளை நினைவு கூறலாம். சமய நூல் வல்லார் பக்தியை தைலதாரையாக-தைல ஒழுக்காக-விளக்குவதையும் காணலாம். வள்ளுவர் வாய்மொழியில் ஒழுக்கம் என்பது நல்லொழுக்கத்தையே குறிக்கும். பல அதிகாரங்களில் பல சந்தர்ப்பங்களில் குறித்த நல்லொழுக்கங்களை இடைவிடாமல் தொடர்ந்து கடைபிடித்து ஒழுக வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவே இதற்குத் தனி அதிகாரம் நிறுவப்

பெற்றுள்ளது. மனத்தை அளந்தறிவதற்கு வாய்ச்சொல் ஒரு கருவியாக அமைகின்றது. வாயில் பிறக்கும் சொற்களின் நன்மை தீமையைக் கொண்டு ஒருவருடைய ஒழுக்கத்தை இன்னதென அறியலாம். ஒழுக்க முடையார் வாயில் தவறியும் தீயசொற்கள் பிறக்கா. 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' (138). இதற்கு எதிர்மறையான தீ யொழுக்கத்தை இதே குறளில் காட்டுவார் - அஃது என்றும் இடும்பை தரும் ஒன்று விளக்குவார்.

'பிறப்பொழுக்கம்' என்று ஒன்றை நினைவு கூட்டும் வள்ளுவர் ''பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' (134) என்று விளக்குவார். 'குலம் சுரக்கும் ஒழுக்கம்'[117] என்று கம்பன் பிறந்த சூழலின் நல்லொழுக்கத்தை விளக்குவார். பழமொழி ஆசிரியரோ,

> இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
> ஒழுக்கத்தின் மிக்க உயர்வு.[118]

என்று விளக்குவார். இது வள்ளுவரின்,

> ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை: இழுக்கத்தின்
> எய்துவர் எய்தாப் பழி (137)

என்ற குறளுக்கு விரிவுரைபோல் அமைந்துள்ளது.

'குடிமையாவது குடிப்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கம்' (தொல் - சொல். 57) என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் கூறுவார்; வள்ளுவர் ஒழுக்கமுடைமையைக் குடிமை (133) என்று விளக்குவர். இல்வாழ்க்கைக்குக் 'குடித்தனம்' அல்லது 'குடிமை' என்ற பெயர்களும் உண்டு. அது, தொடர்ந்த நல்லொழுக்கத்தால் நற்குடியாகவும், இடைவிடுவதால் இழிந்த பிறப்பாகவும் எண்ணப்படும் (133). 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'

117. பாலகாண். நாட்டு - 38.
118. பழமொழி - 15.

(140) என்ற ஒரு கருத்தை நினைவூட்டுகின்றது வள்ளுவம். இங்கு 'உலகம்' என்பது சான்றோர் உலகத்தைக் குறிக்கின்றது. இந்தச் சான்றோர் உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் - பொருந்த ஒழுகுதல்-கற்கப்பட வேண்டும். பல நூல்களைக் கற்றவர்கள் - கற்றுத் தேர்ந்தவர்சள்-இதைக் கல்லாதவர்கள் அறிவில்லாதவர்கள். உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலை 'உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றால் ஒழுகுதல்' என்று விளக்குவர் பரிமேலழகர். சமண முனிவர் உலகம் அறியாமையை 'நெய்யிலாப் பாற் சோற்றிற்கு நேர்' என்று ஒப்புமை காட்டி விளக்குவர்.

> குலம்தவம் கல்விகுடி மைமூப் பைந்தும்
> விலங்காமல் எய்திக் கண்ணும் - நலம்சான்ற
> மையறு தொல்சீர் உலகம் அறியாமை
> நெய்யிலாப் பாற்சோற்றின் நேர்.[119]

[குலம் - உயர்குடிப் பிறப்பு; தவம் - விரத ஒழுக்கம்; குடிமை - குடித்தனச்செல்வ வளம்; மூப்பு-பிராய முதிர்ச்சி; பால்சோறு - வெண்ணிறமான சோறு]

என்ற நாலடியார் காண்க. 'நெய் இல்லா உண்டி பாழ்'[120] என்ற ஔவையார் பொன்மொழியையும் ஈண்டு நினைத்தல்தகும். இத்தகைய ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பிக் காக்க வேண்டும் என்பதை,

> பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்; தெரிந்தோம்பித்
> தேரினும் அஃதே துணை (132)

என்ற குறள்மணி ஒளியால் தெளியலாம்.

பாலுணர்வை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் ஒழுக்கத்தை அறுதியிடும் பழக்கம் நடைமுறையிலிருப்பதை நாம் அறிவோம். இவர்கள் அகத்துறையிலுள்ள 'உடன் போக்கு' முறையைக் கூட பழித்தும் இழித்தும் கூறும்

119. நாலடி-333.
120. நல்வழி-24.

'பிரகஸ்பதிகள்'. இவர்கள் தம் அறியாமையால் இளமங்கையரைக் காமுகர் கடத்திச் செல்வதுடன் ஒப்பிட்டுப் பேசுவதாகத் தெரிகின்றது. முன்னையதில் தலைவி, தோழி, தலைவன் ஆகிய மூவரும் நன்கு யோசித்துத் தலைவியின் கற்பை நிலை நிறுத்துவதற்காக மேற்கொள்ளும் முறை; அக இலக்கணம் ஒப்புக் கொண்ட முறை. பின்னதில் கற்பழிப்புக்காகக் காமுகர் கையாளும் முறை; இது சமூகத்தில் நடைபெறும் பெருங் குற்றமாகும். தவிர, பாலுணர்வு பற்றிய வழக்குகளில் பெரும்பாலும் ஆண்களே குற்றம் புரிபவர்களாக இருக்கின்றனர்; பெண்கள் அப்பாவிகள். இதைக் கருதிதான் ஔவையாரின்,

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே[121]

என்ற புறப்பாட்டும் எழுந்தது போலும்!

4. பிறன் இல்விழையாமை: இல்வாழ்வாருக்கு அமைய வேண்டிய குண நலன்களுள் தலையாயது இப்பண்பு. ஆடவன் ஒருவன் மங்கை நல்லாள் ஒருத்தியைத் திருமணம் புரிந்து கொள்ளும் நோக்கம் இல்லறக் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கேயல்லாமல் பிறிதில்லை என்பதில் தெளிவு இருந்தால் பிறன்இல் விழைதல் நிகழாது. உலகத்தில் பிறருக்குத் தீங்கு இழைத்தல் கூடாது என்ற அறநூலின் முடிவையும், பிறருடைய உரிமையைக் கெடுக்கக் கூடாது என்ற பொருள் நூலின் முடிவையும் ஆய்ந்து கண்டவர்களின் வாழ்க்கையில் பிறருடைய மனைவியை விரும்பி ஒழுகும் அறியாமை இல்லை என்பர் வள்ளுவப் பெருந்தகை (141). அறநெறி தவறி வாழ்வோர் பலவகைப் படுவர். அவர்களுள் பிறன் மனைவியை விரும்பிப் பிறன் வாயிலில் சென்று நிற்பவர்களே கீழ்ப்பட்டவர்கள். அவர்களையொத்த பேதைகள் இவ்வுலகில் யாண்டும் இலர்.

121. புறம் - 187

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல் (142)

என்பது வள்ளுவம். இத்தகையவர்களைப் பிணம் போல் கருதி ஒதுக்க வேண்டும். இவர்கள் உயிருடன் இருப் பினும் நடைப்பிணத்திற்கு ஒப்பாவார்கள். இல்லற தர்மத்தில் நிலை நிற்பவர்கள் தம் நிலையை விட்டுத் தாழ்ந்தால் அவர்கள்,

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை (994)

என்று பிறிதோரிடத்தில் கூறப்பெற்ற வள்ளுவத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாவார்கள். தினையளவும் எண்ணிப் பாராமல் காமத்தால் மயங்கி இச்சிறு செயலில் இறங்கினால் அவர்கள் தம் பெருமைகளை எல்லாம் இழந்து சிறுமையையே அடைவார்கள் (144). இச்சிறிய செயல் எளிதில் கைகூடுகின்றது என்ற காரணத்தால் அறத்தை மறந்து பிறன் மனைவியை நாடுகின்றவன் எக்காலத்திலும் தீராத பெரும் பழியை அடைவான்.

எளிதென இல்இறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி (145)

என்பது வள்ளுவம். மேலும் பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கும் பிறன் மனையாளை விரும்புகின்றவனிடம் நீங்காமல் சேரும்.

அறநெறிப்படி இல்வாழ்க்கை நடத்துகின்றவன் பிறன் மனைவியின்மீது காமப் பார்வை செலுத்தாமல் வாழ்வது பேராண்மையாகும்; இந்தப் பேராண்மையே சான்றோர்க்கு அறமுமாகும்; ஆன்ற ஒழுக்கமுமாகும்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (148)

காம நோக்கம் ஒழுக்கக் கேட்டிற்கு வழி அமைத்து அப் பெண்மணியின் மனத்தை கெடுப்பதாதலின், அவ்வாறு நோக்காமல் வாழ்வதை வள்ளுவர் போற்றுகின்றார்; பேராண்மை என்கின்றார்; அறம் என்கின்றார்; நிறைந்த ஒழுக்கம் என்கின்றார். ஒரு மாதுக்கு வேறாக இன்னொரு மாதை விரும்புவது இயற்கைத் தவறு. இத்தவறு இழைத்த காரணத்தாலும் தம்பிரான் தோழருக்குக் கண்கெட்டு நோய் மூண்டு இன்னல் மிகுந்தது. பிறன் மனைவியை விரும்பிய இராவணேசுவரன் சுற்றத்தோடு அழிந்தான். விரதசாரிணி வடிவில் இருந்த திரௌபதியை விரும்பிய கீசகன் பலாயனன் வடிவில் இருந்த வீமனால் விண்ணுலகுக்கு அனுப்பப்பட்டான்.

> மார சர்யகத் தால்உயிர் மாளினும்
> வசைஇலாத மரபின்வந் தோர்,பிறர்
> தாரம் ஆனவர் தம்முகம் பார்ப்பரோ?
> தக்கவர்க்குத் தகவுஇவை யேகொலாம்[122]

என்று பேசுகின்றார் வில்லிபுத்தூராழ்வார். இது கீசகனை நோக்கி திரௌபதி கூறியது. சீதைக்கு உரிய இராமனை விரும்பியதால் சூர்ப்பணகை மூக்கறுபட்டாள். மணிமேகலையில், காயசண்டிகை வடிவுடன் வந்த மணிமேகலையை விரும்பிய உதயகுமாரன் காயசண்டிகையின் கணவனான காஞ்சனனால் கொலையுண்டதும் இக் காரணம் பற்றியே.

5. **பொறையுடைமை:** பொறையுடைமை இல்லறக் குணங்களுள் ஒன்று. 'பொறுத்தவர் பூமியாழ்வார்' என்பது பழமொழி. பாண்டவர்களில் தருமன் பொறையுடைமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றான். பொறுமையைப் போற்றுகின்றவர் நிலத்தை நோக்கிக் கற்க வேண்டும். 'தனக்கே குழிப்பறிக்கின்றவர்களையும்' அது

122. வில்லி பாரதம்-கீசகன் வதை-6

தாங்குகின்றது! அதனால் நிலத்தின் ஆற்றல் குறைந்து போவதில்லை. அதுபோல தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்வது சிறந்த அறம்.

> அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை (151).

என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாறு பொறுக்கப் பொறுக்க ஆற்றல் வளருமேயன்றிக் குறையாது என்பது அப்பெருமானின் கருத்து. இல்வாழ்வார் ஒவ்வொருவரும் பிறரோடு தொடர்பு கொள்ளுகின்றபோது அவரால் தமக்கு உண்டாகும் சுமைகளையும், இடர்களையும், துன்பங்களையும் எவ்வளவுக் கெவ்வளவு தாங்கிப் பொறுக்க முடியுமோ அவ்வளவும் பொறுத்துக் கொண்டு பழக வேண்டியுள்ளது. பலர் விலங்கு போன்றவர்கள்; நல்லது கெட்டது அறியாதவர்கள்; தக்கவர்களைத் தக்கபடி மதித்து நடக்கத் தெரியாதவர்கள்; இனித்தான் அவர்கள் வாழ்க்கை வளர்ச்சி அடைதல் வேண்டும். இவர்களையும் அணைத்துக்கொண்டு வாழவேண்டியது இல்வாழ்வானின் கடமை; இவர்கள் அறியாமையால் தீங்கு செய்யும்போதும் அதனைப் பொறுத்துக்கொள்ளவும் வேண்டும் என்றும், அதுதான் வல்லமையுள் வல்லமை யாகும் என்றும் கூறுவார் அப்பெருந்தகை.

தீமை செய்தவர்க்குத் தீமையே செய்து அவர்களைத் தண்டிப்பதும் ஒருமுறை. இதனால் ஒருவர்க்கும் பயன் இல்லை. தண்டித்தவர் சினத்தால் அவ்வாறு செய்கின்றாராதலின் அவர் மனம் கெடுகின்றது; அவர் மனவலிமை அற்றவராகவும் கருதப்படுவார். தண்டிக்கப்பட்டவர் இதனால் திருந்துகின்றாரா? அதுவும் இல்லை; அவர் மனமும் கெட்டழிகின்றது. அதனால் சான்றோர் தீமைக்குத் தீமை செய்து ஒறுத்தவரை ஒரு பொருளாக மதிப்பதில்லை; பொறுத்தவரையே பொன்போல் போற்றி இடைவிடாமல் நினைத்து மதிப்பார்கள் (155). இது

தவிர, இந்த இருவரிலும்-ஒறுத்தவரிலும் பொறுத்தவரிலும்— உள்ளத்தளவில் யார் இன்பம் உற்றவர் என்றும் யோசிக்கலாம். ஒறுத்தவர் அடைவது சினம் கொண்டு ஒறுத்த அந்த ஒரு நாள் இன்பமே; பொறுத்தவர்க்கோ நிலைத்த இன்பமும் உண்டு; உலகம் அழியும் வரைக்கும் புகழும் உண்டு.

> ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
> பொன்றுந் துணையும் புகழ் (156)

என்பது பொய்யாமொழி. ஆகையால் பிறர் தீமை செய்த போதிலும், அதற்காக அவர்கள்மேல் சினம் கொள்ளாமல், அத் தீய செயலால் அவர்கட்கு வரக்கூடிய துன்பத்திற்காக மனம் வருந்தி, பதிலுக்குத் தீமை செய்யாமலிருப்பதே நன்மையாகும் (156). தீமை செய்தவரை எதிர்த்தடக்கி வெல்ல வேண்டும் என்று முயல்வது உலகியற்கை; சிலர் இந்த வழியைக் கடைப்பிடிக்க முயல்வதும் உண்டு. மனச்செருக்கினால் அவர் தீமை செய்கின்றார் என்பதை அறிந்தும் அவரை எதிர்ப்பதால் பயன் ஒன்றும் இராது. அதைவிடத் தம் பொறுமையால் பொறுத்திருப்பதே வெல்லும் வழியாகும் என்கின்றார் வள்ளுவர் பெருமான். 'நோ நொந்து அறனல்ல செய்யாமை நன்று' (157) என்பதும், 'தாம் தம் தகுதியான் வென்றுவிடல்' (158) என்பதும் அப்பெருந்தகையின் அமுத மொழிகள்.

'பொறுமைக்குத் தருமன்' என்று முன்னர் குறிப்பிட்டேன். அதனை ஈண்டுச் சிறிது விளக்குவேன். கிருட்டிணனோடு பாண்டவர்கள் கலந்து யோசிக்கின்றனர். சந்து செய்தருளுமாறு வேண்டுகின்றான் தருமன். சிந்துரத்தின் மருப்பு ஒசித்த செங்கண்மாலை - கண்ணனைத் தருமன் வேண்டுவது :

> முந்துஊர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
> நடந்து, உழவர் முன்றில் தோறும்

நந்துஊரும் புனல்நாட்டின் திறம்வேண்டு;
　　நாடுஒன்றும் நல்கான் ஆகில்;
ஐந்துஊர்வேண்டு;அவைஇல்எனில் ஐந்துஇலம்வேண்டு;
　　அவைமறுத்தால் அடுபோர் வேண்டு.[123]

இதைக்கேட்டிருந்த வீமனால் பொறுக்க முடியவில்லை; வெறுத்துக் கூறுகின்றான் :

'விரிகுழல்பைந் தொடிநாணி வேத்தவையில்
　　முறையிடுநாள் வெகுளேல்!' என்று,
மரபினுக்கும் நமக்கும்,உலகு உள்ளளவும்
　　தீராத வசையே கண்டாய்!
எரிதழல்கா னகம்அகன்றும் இன்னமும்செம்
　　பகைமுடிக்க இளையா நின்றாய்!
அரவுஉயர்ந்தோன் கொடுமையினும் முரசுஉயர்த்
　　　　　　　　　　தோய்!
　　உனது அருளுக்கு அஞ்சி னேனே![124]

என்று, இதில் தருமன் மற்றவர்கள் பொறுக்க முடியாத அளவுக்குப் பொறுமை காட்டியதை அறிகின்றோம்.

இந்தக் கதையில் வேறொரு நிகழ்ச்சியின் மூலம் பாரதி தருமனின் பொறுமையை வீமன் மூலமாகவே காட்டுகின்றான். துச்சாதனன் திரௌபதியை அவைக்கு இழுத்து வருகின்றான். 'ஆடை குலைவுற்று நிற்கின் றாள்!-அவள், ஆவென்று துடிக்கின்றாள்!' இந்த பரிதாப நிலையைக் கண்டு வீமன் வெகுண்டு கூறுவது :

'சூதர் மனைகளி லே-அண்ணே!
　　தொண்டு மகளி ருண்டு
சூதில் பணயமென்றே-அங்கோர்
　　தொண்டச்சி போவ தில்லை.

123. வில்லிபாரதம் - கிருட்டிணன் தூது -9
124. ஷை. ஷை-11

'ஏது கருதிவைத்தாய்?-அண்ணே!
யாரைப் பணயம் வைத்தாய்?
மாதர் குலவிளக்கை - அன்பே
வாய்ந்த வடி வழகை

....
ஆடி யிழந்து விட்டாய்
தவறு செய்து விட்டாய் - அண்ணே!
தருமங் கொன்று விட்டாய்.

சோரத்தில் கொண்ட தில்லை;-அண்ணே!
சூதிற் படைத்த தில்லை!
வீரத்தி னாற்படைத் தோம்-வெம்போர்
வெற்றியி னால்படைத் தோம்;

சக்கர வர்த்தி என்றே - மேலாம்
தன்மை படைத்திருந் தோம்;
பொக்கென ஓர்கணத்தே - எல்லாம்
போகத் தொலைத்து விட்டாய்.

நாட்டையெல் லாந்தொலைத் தாய் --அண்ணே!!
நாங்கள் பொறுத்தி ருந்தோம்
மீட்டும் எமைஅடிமை செய்தாய்
மேலும் பொறுத்தி ருந்தோம்.

துருப தன்மக ளைத்-திட்டத்
தூய்நன் உடற்பி றப்பை
இருபகடை என்றாய் - ஐயோ!
இவர்க் கடிமை என்றாய்!

இதுபொ றுப்ப தில்லை'-தம்பி!
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந் தான் - அண்ணன்
கையை எரித்திடு வோம்[425]

425. பா. ச: சபதச் சருக்கம்-273, 274, 276, 277, 278, 279, 280, 281.

இங்கு தருமனின் அளவற்ற பொறுமையையும் காண்கின்றோம்; தம்பியரின் பொறுமையையும் ஓரளவு பார்க்க முடிகின்றது. அறத்தின் உருவம் போல்வான் பொறையுடைமைக்கு இன்றளவும் எடுத்துக்காட்டாக நிற்கின்றான். 'பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழோடு' பொலிகின்றான்.

6. **அழுக்காறாமை :** அக்கம் பக்கத்தார் சீருடனும் சிறப்புடனும் நன்றாக வாழும்போது அன்புடையவர்கள் அதைக் கண்டு நன்கு மகிழ்வார்கள். அதுவே அன்பின் நெறியாகும்: பிறர் சிறப்புடன் வாழ்வதைக் கண்டு மனம் பொறுக்காமல் புழுங்குவது அன்பற்ற குறையையே காட்டும். ஆகையால் அன்பு நெறியில் வாழ்வோருக்குப் பொறாமை கூடாது. தன்நெஞ்சத்தில் பொறாமையின்றி வாழும் தன்மையையுடையவனாக இருப்பின் அதுவே சிறந்த ஒழுக்க நெறியாகக் கொள்ளப்படும். நண்பர், பகைவர் என்ற வேறுபாடு இன்றி வாழும் தன்மையை ஒருவன் பெற்றால் அதுவே அவன் பெற வேண்டிய பேறுகளுள் நிகரற்றதாக இருக்கும்.

ஒழுக்காறாகக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு (161)

விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லை யார்மட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின் (162)

நெஞ்சத்தில் பொறாமை இருந்தால் அது பிறர்க்குத் தீங்கு செய்யத் தூண்டும். அவ்வாறு தீங்கு செய்தால் செய்தவருக்கே தீங்கு நேரிடும்; துன்பம் உண்டாகும். ஆதலால் அறிவுடையோர் பொறாமை காரணமாகத் தீங்கு செய்யார்.

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து (164)

என்பது பொய்யாமொழி. பொறாமைக்கு இலக்கணமாய்த். துரியோதனனைப் படைத்துக் காட்டுகின்றான் பாரதி. துரியோதனனுக்கு ஒரு குறையும் இல்லை. 'கரியோராயி ரத்தின்-வலி, காட்டிடுவோன்' என்று வேதமுனி பேசிடும் படியான தோள்வலியுடையவன். அவன் செல்வச் செழிப் பைப் பாரதி,

எண்ணிலாத பொருளின் குவையும்
யாங்க ணுஞ்செலும் சக்கர மாண்பும்
மண்ணி லார்க்கும் பெறலரி தாமோர்
வார்க டற்பெருஞ் சேனையு மாங்கே
விண்ணி லிந்திரன் துய்ப்பன போன்று
வேண்டும் இன்பமும் பெற்றவன்[126]

என்று காட்டுவான். ஆனால் தருமபுத்திரன், அரச வேள்வி இயற்றிப் பெருஞ் சிறப்புடன் இந்திரப் பிரஸ்தத் தில் வாழ்கின்றதைக் கண்டும், பாரத நாட்டிலுள்ள முடி வேந்தர் கொண்டுவந்த திறைப் பொருள்களையும் பரிசுப் பொருள்களையும்[127] கண்டும் அவன் 'காய்ந்த நெஞ்சில்' பொறாமைத் தீ கொளுந்துவிட்டு எரிகின்றது. மனம் புழுங்குகின்றான். இவற்றை எண்ணி 'ஏழையாகி இரங்க லுற்றான்' என்கின்றான் கவிஞன். 'தான் பொறாமைத் தீ அவன் நெஞ்சில் பற்றி எரிகின்றது' என்றான். பாரதி சொல்வதைக் கண்டு மகிழ்வோம்.

குன்ற மொன்று குழைவுற் றிளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்து எழுந்து வெளிப்படல் போல

126. பாஞ். சப : 19

127. இவற்றின் விவரங்களை பா. ச. 20-37பாடல் களில் கண்டு மகிழலாம்.

நெஞ்சத் துள்ளோர் பொறாமை எனுந்தீ
நீள்வதால் உள்ளம் நெக்குரு கிப்போய்
மஞ்சன் ஆண்மை மறத்திண்மை மானம்
வன்மை யாவும் மறந்தனன் ஆகிப்
பஞ்சை யாமொரு பெண்மகள் போல
பாலர் போலும் பரிதவிப் பானாய்[128]

என்று காட்டுவான். வில்லி கூட துரியோதனனிடம் எழுந்த பொறாமையை இங்ஙனம் வருணிக்கவில்லை. இந்தப் பொறாமையே அவனை அழித்து விடுவதைப் பாரத இதிகாசம் நமக்குக் காட்டும் படிப்பினை.

பொறாமையுடையார்க்கு வேறு பகை வேண்டா; பொறாமையே போதும். பகைவர் கெடுதி செய்யத் தவறினாலும் பொறாமை தவறாமல் கேடு விளைவித்து விடும். ஆகையால் நெஞ்சில் எழும் பொறாமையைப் பொல்லாத பகையாகக் கருதிப் போக்கவேண்டும்.

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்; ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது (165)

என்பது வள்ளுவம். துரியோதனனின் பொறாமையே பாரதப் போருக்குக் காரணமாதலால், அவன் பொறாமை யால் படும் மனக்குமுறலையும் அதனால் அவன் படும் அவத்தையையும் பாரதியார் இதிகாசத்திற்கேற்ற விரி வுடன் அழகு பெறச் சித்திரித்துக் காட்டுவார்.

—'அந்தக்
காளை யருச்சுனன் கண்களிலும்
மாண்ட திறல்வீமன் — தட
மார்பிலும் எனதிகல் வரைந்துளதே.[129]

---

128. பாஞ்ஞாலி சபதம்-38, 39
129. பாஞ்சாலி சபதம் - அழைப்புச் சருக்கம்-20

என்று துரியோதனன் வாக்காக வெளிப்படும் அடிகட்கு 'அட்சரலட்சம்' கொடுக்கலாம் என்று பழைய முறையில் சொன்னாலும் மனநிறைவு கொள்ள முடியவில்லை. இந்தப் பொறாமையே தீய சிந்தனையைத் தூண்டி தீய வழியைக் காணச் செய்கின்றது.

யாது நேரினும் எவ்வகை யானும்
யாது போயினும் பாண்டவர் வாழ்வைத்
தீது செய்து மடித்திட எண்ணிச்
செய்கை யொன்றறி யான்திகைப் பெய்தி
சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட
துட்ட மாமனைத் தான்சரண்[180]

எய்துகின்றான். பின்னர் நடைபெற்ற கதையை நாம் அறிவோம்.

பிறருடைய ஆக்கத்தைக் கண்டு மனம் பொறுக்காத தன்மையே பொறாமை ஆதலின், ஒருவர் மற்றொருவர்க்குப் பொருள் கொடுப்பதைக் கண்டாலும் பொறாமை ஏற்படுவதுண்டு; அவ்வாறு பொறாமை கொள்கின்றவன் தான் அழிவதும் அல்லாமல் தன்னைச் சார்ந்தவர்கள் அழிவதற்கும் காரணம் ஆவான்; அவனுடைய சுற்றமும் உணவு உடை முதலியன இல்லாமல் வறுமையால் கெட்டொழிந்து வாடிக் கெடும்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதும்
உண்பதும் இன்றிக் கெடும் (166)

என்பது வள்ளுவம். இதனால் வள்ளுவரும் 'அழுக்காறு என ஒரு பாவி' (168) என்று கூறி தன் வெறுப்பைப் புலப்படுத்துகின்றார். அது இம்மையில் செல்வத்தைக் கெடுத்து மறுமைக்கண் நரகத்தில் செலுத்தி விடும் என்றும் கூறுகின்றார். மேலும் திருமகள் அவன் குணத்

130. பா. ச. அழைப்புச் சருக்கம்-39

தைப் பொறுக்காமல் தன் மூத்தவளைக் (மூதேவி) காட்டி விடுவாள் (167).

மாவலி வாமனனுக்கு மூன்றடி மண் வழங்குவதைத் தடுத்து நிறுத்தும் சுக்கிரனை நோக்கி ஈகையின் சிறப்பை எடுத்தோதுகின்றான் — கம்பநாடன் ஏழுகவிகளில். இவற்றுள் முதல் ஆறு கவிகள் படர்க்கையாக அமைந்துள்ளன; ஏழாவது கவி முன்னிலையில் அமைந்துள்ளது.

எடுத்தொரு வருக்கொருவர்
 ஈவதனின் முன்னம்
தடுப்பது நினக்கழகி
 தோ? தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி
 யோய்!உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும்
 இன்றி விடுகின்றாய்[131].

[தகவு - நற்குணம்; வெள்ளி - சுக்கிரன்]

இந்தப் பாடலில் மேற்குறிப்பிட்ட வள்ளுவரின் கருத்தமைந்து இருப்பதைக் கண்டு மகிழலாம்.

பொறாமைப்படுவதால் ஒரு பயனும் இல்லை. வேண்டுமானால் இரத்தக்கொதிப்பு கிடைக்கலாம். பிறருக்கு உள்ள நன்மையையும் இன்பத்தையும் தான் அடைவதாக இருந்தாலும் பொறாமைப் படலாம். ஆனால் பொறாமைப்படுவதால் உள்ள வளமும் கெடும்; முன்னேற்றம் அடைய வழியும் அமையாது (169), பெரும்பாலும் பொறாமைப்பட்டு முன்னேறியவர்களும் இல்லை;

அழுக்காற்றால் நெஞ்சம்
 அழுங்கியபுன் மாக்காள்

131; பால: வேள்விப்படலம்-33.

இழுக்காற்றால் இன்பநலம்
எய்தார்; பராபரமே![132]

என்ற தாயுமானவர் வாக்கைச் சிந்தித்தல் வேண்டும்.

7. **வெஃகாமை :** பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப் படுதலே குற்றமாகும்போது பிறர் பொருளை வெளவக் கருதுவது பெருங்குற்றம் என்பதைச் சொல்ல வேண்டா. அன்புடையவர் பிறருக்குப் பொருள் கொடுத்து உதவுவாரேயன்றி பிறருக்கு உரிமையான பொருளை வெளவக் கருதார். இது உயிரில் அமைய வேண்டிய நல்ல பண்பாகிய நடுவு நிலைமை என்னும் தெய்வப் பண்பு கெட்டொழிந்து விடுகின்றது. இதனால் ஒருவரது குடியும் அழியும்; குற்றங்களும் அப்பொழுதே விளையும் (171). நடுவு நிலைமையிலிருந்து கோணுவதற்கு நாண வேண்டும்; அவ்வாறு நாணுவோர் பிறர் பொருளால் தமக்கு ஏற்படும் பயனை விரும்பார்; அந்தப் பயனை விரும்பிப் பழியான செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர் (172)

என்பது வள்ளுவம்.

பிறர் பொருளை வெளவுதலால் வரும் இன்பம் சிறிது; அறநெறியில் வரும் இன்பமோ பெரிது. ஆகையால், அறவோர் நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறமல்லாத செயல்களைச் செய்யார் (173). மனம் மிகவும் கொடியது. புலனடக்கம் இல்லாமையால் மனம் பிறர் பொருளை விரும்பிச் சிறிய இன்பத்தைப் பெற அலையும். புலன்களை வென்றோரே குற்றமற்ற அறவுடையோர்; அவர், வறுமையுற்ற காலத்திலும், கவலையுற்றுப் பிறர்

132. தா. பா. பராபரம் - 297

பொருளை விரும்பார் (174). பிறர் கைப்பொருளை வெளவ அவாவினால் எதிர்பார்க்கின்றபடி செல்வம் பெருகாது; மாறாக இருக்கும் செல்வமும் குன்றிவிடும். "பிறன் கைப்பொருள் வெஃகாமை செல்வத்திற்கு அஃகாமை" (178) என்பர் வள்ளுவப் பெருந்தகை. இஃது அறம் என்பதை அறிந்து பிறர் பொருளை விரும்பார் அறிவுடையார்; இதனால் செல்வத்திரு தான் அடைய வேண்டிய இடம் இது என்று அங்கே சென்றடையும் (179). உடனே பயன் கிடைக்கும் என்று எதிர்பார்த்து வெஃகினால் அது வர வரப் பயன் அவிந்து கெடும் என்பதை,

> வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம் விளைவயின்
> மாண்டற்கு அறிதாம் பயன் (177)

என்று தெரிவிப்பார் வள்ளுவர் பெருமான்.

பொருள், அருள் என்னும் இரண்டனுள் அருளே சிறந்தது. இதனை நம்பித் தெளிந்து அதனையே விரும்பி அதற்குரிய அறநெறியில் நின்றவர்கள் பிறர் பொருளை நம்பி அலைதல் ஆகாது. அவர்கள் பிறர் பொருளை விரும்பித் தீய வழிகளைக் கருதுவார்களாயின் அவர்களுடைய வாழ்க்கை கெடும் (176). அறிவுடையவர்களும், அருளுடையவர்களும் பிறர் பொருளை நாடி அலையக் கூடாது என்று அறிவுறுத்துகின்றார். அறிவை நாடியவர்களும் அருளை நாடியவர்களும் பிறருடைய பொருளுக்காக அலைவார்களாயின், இவற்றைச் சிறிதும் அறியாத ஏழை மக்கள் நிலையை என்னவென்பது? அதனால் அப் பெருமான் அறிவில்லாத வறியவர்கட்கு ஒன்றையும் கூறாமல் அமைதியுறுகின்றார். அவர் அறிவுரை அறிவாளிகட்கும் அருளாளர்கட்கு மட்டுமே என்பது அறியத் தக்கது. இவர்களே தாமும் திருந்த வல்லவர்கள் பிறரையும் திருத்த வல்லவர்கள்.

வள்ளுவத்தில் 'அவாவறுத்தல்', 'வெஃகாமை' 'கள்ளாமை' என்னும் மூன்று அதிகாரங்கள் ஒரே கருத்தை

நவில்வது போன்று தோற்றலாம். ஆனால் உண்மை அது வன்று. அவாவுதல் பிறர் பொருளை மட்டுமன்று; தாமே உழைத்துத் தேடினாலும் தேவையற்ற அளவுக்குத் தேட அவாவுதலும், பற்று விட்ட பின்னரும் பழக்கங் காரண மாக அவாவுதலும் அவாவுதலைச் சாரும். கள்ளாமை, அவாவி வெளவுதல் மட்டுமின்றிப் பொருளுக்குரியார் அறியாத வகையில் மறைவாய்க் கவர்ந்து கொள்ளுதலைக் குறிக்கும். களவு செய்யாமை - கள்ளாமை. இவை இரண் டும் துறவறப் பகுதியில் இடம் பெற்றன. வெஃகாமை என்பது பிறர் பொருளை வெளவும் கருத்துடன் அவா வுதல். இஃது இல்லறவியலில் இடம் பெற்றது.

8. **புறங்கூறாமை :** தீங்கு விளைவிக்கும் கருத்தோடு பிறர் மறைவில் அவரைப்பற்றிக் கோள் சொல்லுதல் 'புறங்கூறுதல்' என்பது. மறைவில் நல்லது கூறுதல் விரும் பத்தக்கது; அஃது 'அறங்கூறுதல்' என்று வழங்கப்படும். புறத்தில் பழித்துக்கூறி நேரில் கண்டபோது பொய்யாகப் பழகுவது வஞ்சகம்; அன்பு நிறைந்த வாழ்க்கைக்கு முற்றிலும் முரண்பட்டது. புறத்தே இகழ்ந்துரைத்து நேரில் காணும்போது நண்பர் போல் பொய்யாக நடித்துச் சிரித்துப் பழகுதல் தீமையுடையது. அஃது, அறத்தைக் கைவிட்டு அறம் அல்லாதவற்றைச் செய்வதைவிட மிகத் தீமையுடையது (182). இத்தகையோர் நிறைந்தது இந்த உலகம். பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற பெருமக்களிடையே இப்பண்பு நடைமுறையில் காணப்படுவது மிகவும் வருந்தத்தக்கது. எதிருக்கெதிர் ஒருவருக்கொருவர் தீமை செய்து கொள்ளுவதைவிடக் கொடுமையானது இப்புறங் கூறுதல் என்று வள்ளுவர் கருதுகின்றார். காணாதபோது இவ்வாறு பழித்துச் சொல்லிப் பொய்யாக நடித்துப் போலி வாழ்க்கை வாழ்ந்து ஒருவன் பயன் அடைவதாக வைத்துக்கொள்ளலாம்; அப்போதும் அவ்வாறு உயிர் வாழ்வதைவிட, பொருள் இல்லாமல் வறுமையுற்று இறந்துவிடுவது நல்லது; அந்த

மரணம் அவனுக்கு அறநெறிப்பட்ட நன்மையைத் தரும்; ஆகையால் அதுவே மேலானது.

> புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
> அறம்கூறும் ஆக்கம் தரும் (183)

என்பது வள்ளுவம்.

ஒருவருடைய எதிரில் நின்று கண்ணோட்டம் இல்லாமல் கடிந்து சொன்னாலும் சொல்லலாம்; ஆனால் அவர் எதிரில் இல்லாதபோது பின்வரும் தீமையை ஆராயாமல் பழிச்சொல்லைக் கூறுதல் ஆகாது.

> கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
> முன்நின்று பின்நோக்காச் சொல் (184)

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஒருவர் அறநூல்களைக் கற்கலாம்; கற்றவற்றை விரித்துரைத்துப் புகழ்ந்து பேசலாம். இது சாத்தான் வேதம் ஓதுவது போல. அவன் வாயிலிருந்து வரும் சொல்லால் நெஞ்சத்தின் நிலைமை தட்டுப்படும். புறத்தே இகழ்ந்து பேசும் குறைபாடு இருந்தால், அதனால் அவர் நெஞ்சத்தில் அறம் இல்லை என்பது தெளிவு (185)

புறங்கூறலின் இயல்பை வள்ளுவர், 'புறன் அழீஇப் பொய்த்துநகை'(182)'புறங்கூறிப்பொய்த்து உயிர்வாழ்தல்' (183), 'முன்னின்று பின்நோக்காச் சொல்' (184) 'பழி கூறுதல்' (186), 'பகச் சொல்லிக் கேளிர்ப்பிரித்தல்' (187), 'புறன் நோக்கிப் புன் சொல் உரைத்தல்' (189) என்றெல்லாம் இந்த அதிகாரத்தில் பிட்டுப்பிட்டு வைக்கின்றார். ஆனால் நல்லது கூறாவிடினும், அல்லன செய்தாலும், 'புறன்கூறான் என்றல் இனிது' (181) என்று முத்தாய்ப்பாகக் கூறுவர்.

புறங்கூறல் வழக்கத்தைக் கைவிடுவதற்கு வள்ளுவர் பெருமான் வழியொன்றைத் தெரிவிக்கின்றார். புறங்

கூறுவோர் மற்றவர்களின் குற்றங்களைக் காண்பது போல் தம் குற்றம் காண்பதனால் இத்தீய பழக்கம் உண்டாகா தென்று கூறுவர்.

ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? (190)

என்பது வள்ளுவர் வான்மறை.

9. **பயனில் சொல்லாமை** : இல்வாழ்வானின் பயனற்ற சொற்களைத் தவிர்த்துச் சுருக்கமாய் உரைக்கும் குணம் வேண்டும் என்று கருதுவர் வள்ளுவர். பயனற்ற சொற் களைப் பேசுவதால் காலம் வீணாகின்றது. ஆற்றலும் வீணாகின்றது; கடமையையும் மறக்கச் செய்கின்றது. அடையும் பயனோ பொய்யான இன்பம்; போலி இன்பம்; அறத்தைப் போற்றி வாழ வேண்டியவன் வீண் வாழ்வில் இறங்குதல் கூடாது. இதற்கு வள்ளுவர் கூறும் காரணம், பயனற்ற சொற்கள் பலர்க்கு வெறுப்பைத் தரும் என்பது ஒன்று; தேவையற்றவை என்பது மற்றொன்று; நன்மைதர மாட்டா என்பது இன்னொன்று; ஒழுங்கையும் நிலைமை யையும் கெடுக்கும் என்பது பிறிதொன்று; பொருளற்ற சொற்கள் உள்ளத்தில் மருளையும் மாசையும் சேர்க்கும் என்பது வேறொன்று.

வாய்ச்சொற்கள் நெஞ்ச நிலையைக் காட்டவல்லவை. நெஞ்சில் அறநினைவு இருப்பின், பயனில்லாத சொற்கள் தோன்றா; அந்த எண்ணங்களின் விளைவான பயனில்லாத சொற்களைப் பேசுதலும் இயலாது. நாவடக்கம் இல்லா மலும் மன அமைதி அற்ற நிலையிலும்தான் பயனற்ற சொற்கள் பிறக்கும். ஆகவே, பயனில்லாத சொற்களை ஒருவன் விரிவாகப் பேசும் பேச்சு அவனை அறம் இல்லா தவன் - நயனிலன்-என்பதை அறிவிக்கும் (183) அந்தச். சொற்களைப் பாராட்டிக் கொண்டிருப்பவனை மனிதன் என்றும் சொல்லலாகாது; மக்களுக்குள் காணப்படும் பதர் என்றே வழங்கவேண்டும்.

பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்;
மக்கட் பதடி எனல் (196)

என்பது வள்ளுவம்.

வாழ்க்கையில் அரிய பயன் இன்னது என்று ஆராயும் அறிவுடையோர், பெரும் பயன் இல்லாத சொற்களைச் சொல்ல மாட்டார்கள் (198). மயக்கம் தீர்ந்த மாசற்ற அறிவுடையோர் பொருளற்ற சொற்களை மறந்தும் பேசார் (199). ஆகவே பயனுள்ள சொற்களையே சொல்ல வேண்டும்; பயனற்ற சொற்களைச் சொல்லக் கூடாது. பேசுவதால் பயனுண்டா என்று ஆய்ந்து அறிந்த பிறகே வாய்திறக்க வேண்டும்; இல்லையேல் நாவடக்கத் தோடு அமைதியுறவேண்டும் (200). உலகில் செயற்கரிய செயல் செய்த பெரியோர்கள் பலரும் சில சொற்கள் சொல்வதிலே பயன் கண்டவர்கள். ஆகையால் பயனற்ற சொற்களைப் பகர்தல் பண்படாத மனத்தின் குறையாகும் என்று கருதியே வள்ளுவர் பெருமான் பயனில் சொல்லா மையையே ஓர் அறமாகக் காட்டியுள்ளார்.

10. **தீவினையச்சம்:** இல்வாழ்க்கைக்குரிய குணங்களில் தீவினைக்கு அஞ்சுதலும் ஒன்று. ''வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினைஅறுப் பான்'' என்பது நம்நாட்டில் வழங்கும் ஒரு முதுமொழி. விதைக்கப் பெறுவது எதுவோ அதுவே விளைந்து பயன் தரும். அதுபோல நல்ல செயல் நன்மையையே பயக்கும்; தீயசெயல் தீமையையே பயக்கும். நன்மையோ தீமையோ ஏதாவது செய்தால் முதலில் அதற்குச் செயல் என்று பெயர். ஒருகாலத்தில் நிகழ்ந்து விட்ட அச்செயல் பின் னொருகாலம் வரையில் முற்றி வளர்ந்து பயன் கொடுக்கத் தொடங்கினால் அப்போது அச்செயல் **'வினை'** என்ற பெயரால் வழங்கும். ஆதலால் தீய செயல் வேறு, தீய வினை வேறு; அங்ஙனமே நற்செயல் வேறு; நல் வினை வேறு. தீச்செயல் அச்சத்தை விட அஞ்சத்தக்கது.

'அச்சமே கீழ்களது ஆசாரம்' (1075) என்று பிறிதோரிடத்தில் கூறிய வள்ளுவர் பெருமான் இந்த அதிகாரத்தில் வினைகளுக்கு அஞ்ச வேண்டும் என்கின்றார். 'அஞ்சல் அறிவார் தொழில்' (428) என்று அவர் வேறோர் இடத்தில் கூறுவது அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்கு. 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' யாதலால் வினைக்கு அஞ்சுதலைச் சான்றோர் முக்கியமாகக் கொள்வர். 'விழுமியார் அஞ்சுவர்' (201) என்பது அவர் கூற்று.

பிறர்க்கு எது செய்தாலும், செய்வாரும் அதன் பயனை அடைந்தே தீரவேண்டும். இதனைத் தெளிவாக உணர்ந்திருந்தால் மட்டுமே அவர்கள் தீவினைக்கு அஞ்சி வாழ்க்கையில் எவர்க்கும் யாதொரு கேடும் செய்யாமல் நடந்து கொள்ள முடியும்; நாட்டு மக்களுக்குத் தீவினையில் அச்சம் இல்லையென்றால் நாடு கொடுமையான வனமாகக் கெட்டொழியும். 'மறந்தும் பிறன் கேடு சூழற்க' (204), 'இலன் என்று தீயவை செய்யற்க' (205) 'எனைத் தொன்றும் துன்னற்க தீவினைப்பால்' (209). என்பவையெல்லாம் இந்த அதிகாரத்தில் ஒளிரும் அறிவுடைச் சுடர்கள். நம் போலியருக்கு வாழ்க்கையில் வழி காட்டும் ஒளி விளக்குகள்.

வள்ளுவர் பெருமான் தீயவைகளைத் தீயைவிட மிகுதியாக அஞ்சுகின்றார். அழிவு செய்யும் தீ அப்போது அந்த இடத்தில் மட்டும் தீமை விளைவிக்கும்; ஆனால் தீய செயல் வேறு காலத்திலும் வேறு இடத்திலும் வந்து தீமை செய்யும். ஆகையால் தீயைவிட மிகுதியாகத் தீச் செயலுக்கு அஞ்ச வேண்டும் (202). இதை உணர்வதே அறிவின் பயன். அறிவு நிலைகள் பலவற்றிலும் தலையாயது பகைவர்க்கும் தீமை செய்யாமல் விடுவதாகும் (203).

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும் (207).

புறத்தில் தோன்றும் பகை எவ்வளவு பெரும்பகையாக இருந்தாலும் ஒருவாறு ஓடி ஒளிந்து தப்பித்துக் கொள்ள முடியும்; தீவினையாகிய பகை விட்டு நீங்காமல் தொடர்ந்து வருத்தியே தீரும் என்பது இதன் கருத்து. இதனை ஓர் அருமையான உவமையால் விளக்குவார் அப்பெருந்தகை.

ஒருவருடைய நிழல் எங்குச் சென்றாலும் விடாமல் அடியின் கீழ் தங்கியிருப்பது போல் தீமையும் செய்தவனை விடாமல் தொடரும் (208). இதனைச் சற்று விரிவாக விளக்குவோம். வெயிலில் ஒருவர் நடக்கும்போது அவரை அவருடைய நிழல் விடாது பின்பற்றிச் செல்வதைக் காண்கின்றோம். அதோடு, நடக்கும் அவர் காலடியை நன்றாகப் பற்றிக்கொண்டு உடும்புப் பிடியாய்த்தொடர்ந்து செல்லுகின்றது. அகன்ற சாலைவழி, குறுக்கு சந்து பொந்து வழிகள், காடு மேடு பள்ளம் வயல் கடற்கரை, கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழி-இவற்றுள் எந்த வழியாகச் சென்றாலும், அந்த நிழல் அவரை விட்டு நீங்குவதில்லை. அவர் அடியை அந்த நிழல் பற்றியது பற்றியதுதான். அவர் நிழல் அவர் காலடியிலேயே உறைகின்றது என்றும் சொல்லலாம். தவிர, அந்த மனிதரது உயரம், குட்டை, அழகு, அழகின்மை, இவற்றிற்கேற்ப அவர் நிழல் மாறுபடுவதில்லை; ஒரே இருள் நிலையில்தான் பின்பற்றுகின்றது. தீவினையை விளக்குவதற்கு இஃது ஓர் அற்புதமான உவமை.

இந்த உவமையை மேலும் சிந்தித்தால் வேறு சில இயைபுகளும் புலனாகும். மக்கள் தாம் செய்யும் தீவினை தம்மைப் பின்தொடர்வதை அவ்வளவாகக் கவனிப்பதில்லை. நிழல் அவர்களைப் பின்பற்றுவதையும் மக்கள் அவ்வளவாக நினைவு கொள்வதில்லை. சில நேரங்களில் பகல் பன்னிரண்டு மணிக்குக் காலடியின் அடியில் கூட அவர்கள் அறியாமல் நிழல் பதுங்கியுள்ளது; விடாமல் உறைகின்றது. இப்படித் தங்கியிருக்கும் நிழல் ஒளி ஒரு

பக்கம் தெரிகின்றபோது மட்டும் ஏதோ பிரிந்து நீளுவது போலவும் விலகிச் செல்வது போலவும் தோற்றமளிக்கின்றது. அப்போது கூட காலடியைப் பற்றிய பிடியை விடுவதில்லை. தரை மட்டத்திலும் ஏதாவது பக்கவாட்டிலும் ஒளிக்கு அஞ்சி ஒளிந்து கொள்வது போலவும் மறுபுறத்தில் காணப்படுகின்றது. இங்ஙனமே மக்கள் அறவழியில் ஒழுகுகின்றபோது அந்த ஒளிக்கு அவர் தீவினை சற்று அசி ப் பின்வாங்கி விலகுவதாக உள்ளது.

ஆகையால் ஒருவர் தம்மைத்தாம் விரும்பிக் காத்துக் கொள்ள வேண்டுமானால் தீய செயல் சிறிதளவும் செய்யாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால் (209)

என்பது வள்ளுவர் வாய்மொழி.

11. புகழ்: இல்லற இயலில் இறுதியாக அமைந்திருப்பது 'புகழ்' என்னும் அதிகாரம். வையத்தில் வாழ்வாங்கு வாழும் கணவனும் அவர் வாழ்க்கைத்துணைவியும் அவர்தம் மக்கட் செல்வங்களும் இல்லறத்திற்குரிய விருந்தோம்பல் முதலிய அறச்செயல்களை நடுவுநிலைமை முதலிய இல்லறத்தாருக்குரிய உயர் குணங்களோடு ஒழுங்காகச் செய்து வந்தால், அவர்கள் மறைந்தாலும் இவ்வுலகில் மறையாமல் எஞ்சி நிற்பது புகழ்தான். வள்ளுவர் பெருமானும் 'புகழ் அல்லால் பொன்றாது நிற்ப தொன்று இல்' (233) என்று தெரிவித்தார். இவ்வுலகில் 'புகழ் ஒன்றுதான் ஒன்றாக உயர்ந்தது' என்பது அவர்தம் சீரிய கருத்துமாகும்.

மக்கள் வாழும் முறையில், தானாகப் புகழ் உண்டாக வேண்டும். புகழ் இயல்பாகத் தோன்ற வேண்டும். புகழ் பெறுவதற்காக அறச்செயல்கள் செய்தல் ஆகாது; அறச்செயல்கள் செய்தலால் புகழ் தானே அமைதல் வேண்டும்.

இதனால்தான் இந்த அதிகாரத் தலைப்பைப் 'புகழ் செய் தல்' என்று அமைக்காமல் 'புகழ்' என்றே அமைத்தார் ஆசிரியர். புகழுக்கு 'இசை' என்றும் ஒரு பெயர் உண்டு. சான்றோர்களின் இசைப் பாட்டால் இஃது எக்காலத்தும் நிலைபெறுதலால் இப்பெயர் ஏற்பட்டது. ''இசை என்னும் எச்சம்'' (238) என்பர் வள்ளுவப் பெருந்தகை. இதற்கு எதிர்ச்சொல் 'வசை'. இல்லறத்தால் தேட வேண்டுவது 'இசை' (புகழ்]; தவிர்க்க வேண்டியது 'வசை'.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; இசையொழிய
வாழ்வாரே வாழா தவர் (240)

என்பது வள்ளுவம். புகழ் விளைவதற்குரிய நற்செயல்களைச் செய்யாவிட்டால் வளம் குறைந்து விடும் (239) என்றும் கூறுவர்.

சிலர் இல்லறத்தாருக்குரிய அறச்செயல்கனைச் செய்து புகழுடன் வாழ்பவர்களைப் பார்த்துப் பொறாமை கொண்டு அவரை அடிக்கடி வசை கூறுவதுண்டு. புகழுக்கு அறச்செயல் முக்கியம். அதனைச் செய்தால் புகழ் தானே பெருகும். இம்முறையைப் பின்பற்றாமல் சிலர் பிறரை நொந்து கொள்கின்றனர். புகழ்பட வாழாதார், தம்மை நொந்து கொள்வதில்லை. புகழ் இல்லையானால் இகழ் உண்டாவது இயல்பு. தம்மை இகழ்வாரை நொந்து பயன் இல்லை. வள்ளுவர் பெருமான் இத்தகையவர்களைக் கண்டு அவர்கள்மீது கழிவிரக்கம் கொண்டு,

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்? (237)

என்று கூறுவார்.

ஈகையினால் புகழ் ஏற்படுவதால், 'ஈகை' என்னும் அதிகாரத்தை அடுத்துப் 'புகழ்' என்னும் அதிகாரம் அமைக்கப்பட்டதாகக் கருதுவர் பலர். இது பொருந்துமாயினும், இதைவிட இல்லறவியலின் குணநலம், செயல் நலம் முதலி

யவற்றால் உலகில் புகழ் விளைகின்றது என்பதற்காகவே இல்லறவியலின் இறுதி அதிகாரமாகப் 'புகழ்' அதிகாரம் அமைந்துள்ளது என்று கருதுவது பெரிதும் பொருந்தும். "ஈதல் இசைபட வாழ்தல் உயிர்க்கு ஊதியம்" (231) என்னும் குறளில் ஈதல் காரணமாகவும் இசை ஏற்படுகின்றது என்னும் கருத்து பெறப்படுகின்றது என்றாலும், ஈதலால் மட்டுந்தான் இசை உண்டாகும் என்று அதில் வரையறை செய்யப்பெறவில்லை. வேறு பல காரணங்களாலும் இசைபட வாழ்தலும் உண்டு. ஈதல் மற்றெல்லாவற்றையும் விடச் சிறந்த காரணமாதலால் அது மட்டிலும் ஈண்டு குறிப்பிடப் பெற்றது. உரையாசிரியர் பரிமேலழகரும் "இசைபட வாழ்வதற்குக் கல்வி ஆண்மை முதலிய பிற காரணம் உள" (231-ன் உரை) என்றும், "ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக ஈதல் என்றார்" என்றும் விளக்கம் கூறியுள்ளதையும் கண்டு தெளியலாம்.

செய்தித் தொடர்பு முறைகள் வளர்ந்துள்ள இக் காலத்தில் புகழை அண்மைப் புகழ் என்றும், சேய்மைப் புகழ் என்றும் இருவகையாகப் பிரித்து உணரும் முறையில் அதன் சிறப்புத் தெளிவாகும். அண்மைப் புகழ் என்பது, ஒருவனைச் சுற்றி வாழும் மக்கள் அவனுடைய குண நலன்களையும் செயல் வகைகளையும் அறிந்து புகழ்வதாகும். சேய்மைப் புகழ் என்பது, ஒருவனைச் சுற்றியுள்ளவர்கள் வெறுத்தாலும் பழித்தாலும் தொலைவிலுள்ளவர்கள் அவனுடைய உண்மையான பண்புகளை அறியாமல் சிற்சில செயல்களை மட்டிலும் அறிந்து புகழ்வதாகும். வள்ளுவர்காலத்தில் சிறப்பாக விளங்கியதுஅண்மைப்புகழாகும். அக்காலத்தில் சேய்மைப்புகழ் விளங்குவதற்கு வேண்டிய வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. இக்காலத்தில் நவீன வசதிகளால் சேய்மைப் புகழ் ஓங்க வழி அமைந்தது; அண்மைப் புகழ் தேயக் காரணம் ஆயிற்று. அறநெறியில் வாழ்கின்றவர்கட்குப் புகழ் பெறும் வாய்ப்பு மிகவும் குறைந்து போய் விட்டது.

இன்றும் அண்மைப் புகழ் ஓரளவு இருப்பதைக் காண லாம். நல்ல குணங்களையுடையவர்கள் நற்செயல்களை ஆற்றி வருவதைக் கண்டு அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஓரளவு அறிந்து புகழ்வதைச் சிற்றூர்களில் காணலாம். பேரூர்களிலும் அவர்களோடு நெருங்கிப் பழகுகின்றவர்கள் மட்டிலும் அறிந்து போற்றும் நிலைமையைக் காணலாம். சேய்மைப் புகழ் உண்மையின் அடிப்படையில் அமைவதும் உண்டு; உண்மையின் அடிப்படை இல்லாமல் அமைவதும் உண்டு. இக்காலம் விளம்பரப் புகழ் பரவி வரும் காலமாகி விட்டதை நாம் உணராமல் இல்லை.

சிலர் புகழுக்காகக் காரியங்கள் செய்யப்போய் அந்த நோக்கத்தாலேயே பிறரால் இகழப்பெற்று இகழ்ச்சி அடைகின்றதையும் நாம் காண்கின்றோம். இதிலிருந்து கருவிலிருந்தே புகழுக்குரிய போக்கு அமைய வேண்டும் என்பது புலனாகின்றது. இந்த இயல்பு நுட்பமாகப் புலப்படும்படியாக வள்ளுவர் பெருமான் ''தோன்றின் புகழொடு தோன்றுக'' (236) என்று அருளிச் செய்துள் ளதை நாம் கண்டு மகிழலாம். அப்பெருமான்,

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ் (232)

என்றும் கூறியுள்ளார். இக்குறள் சிந்திக்கத்தக்கது. இங்கு உரைப்பார் என்று குறிக்கப்படுவர் பொதுவாக உலக மக்கள். சிறப்பு மக்களாகிய சான்றோர் செய்யுட் களால் இசைக்கும் புகழ் அதைவிட உயர்ந்தது. ஈகை யல்லாத பிற குணநலன்களையும் செயல்களையும் அவர் தம் பாடல்கள் இயைத்தும் மேம்படுத்தியும் பேசும். இத்த கைய பாடல்களால்தான் உயர்ந்தோரின் புகழ் எக்காலத் திலும் நின்று நிலவும். கொடை வள்ளலாகிய பாரியின் புகழ், நெல்லிக்கனி ஈந்த அதிகமானின் புகழ், தலையையும் ஈயத் தயாராக இருந்த குமணனின் புகழ், கபிலர், ஔவை

யார் முதலிய சான்றோர்களின் செய்யுட்களால் நின்று நிலவுவதைக் காணலாம். இவர்கள் யாவரும் சிறந்த முறையில் இல்வாழ்க்கையில் நின்று வாழ்ந்த பெரியோர்கள்.

> மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
> தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்த [133]

பெரியோர்கள் ஆவர்.

(ஆ). துறவறஇயல்

இவ்வுலகில் வாழ்க்கை நீடு நிற்பதன்றாய்ச் சடுதியில் எதிர்பாராது மறைந்தொழிவதாலும், நிலை பேறில்லாப் பொருள்கள் நிலையற்ற சிற்றின்பத்தையே தரக்காண்டலாலும் தொல்காப்பியர்,

> பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
> நில்லா வுலகம் புல்லிய நெறித்தே. [134]

என்ற காஞ்சித் திணை நூற்பாவில் 'நிலையாமையை' வற்புறுத்தித் தவ வாழ்க்கையின்மூலம் நமக்கு ஒப்பற்ற துணைவனாகவுள்ள இறைவனை இறுகப் பற்றும்படி ஆற்றுப் படுத்துகின்றார். இவ்வாறு ஐம்புலன் நுகர்ச்சியில் பற்று தீர்தலைத் தொல்காப்பியர் '**காமம் நீத்த பால்**' என்று சிறப்பிப்பர்.[135] 'ஆசை நீக்கிய பக்கம்' என்பது இதன் பொருள். மிக்க காமத்து வேட்கை நீங்கின கணவனும் மனைவியும் வீடுபேற்றினை விரும்பிப் பற்றற்று வாழும் துறவு நிலையை ஆசிரியர், '**அருளொடு புணர்ந்த அகற்சி**' என்று குறிப்பிடுவர்.[136] இதனை

133. புறம் - 165
134. புறத்திணை - 18 (இளம்)
135. ஷை - 17 (இளம்)
136. புறத்திணை - 17 (இளம்)

இளம்பூரணர், "அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு என்பனவற்றைப் பொருந்துதலாம். அவற்றுள் அருளுடைமை யொழிந்த எல்லாம் விடுதலால் 'அகற்றி' என்றார்" என்று விளக்குவர். இத்தகைய அருள் வாழ்வினை விரும்பி வேந்தர்களும் தங்கள் அரச பதவியினைத் துறத்தல் உண்டு. இங்ஙனம் துறக்கும் இயல்பினைக் **'கட்டில் நீத்த பால்'** என வழங்குவர் ஆசிரியர்.[137]

துறவறம் என்பது துறவு வாழ்க்கை என்று கூறப் பெறுவதில்லை. ஆதலால் அது வாழ்க்கையாகாது. இல்வாழ்க்கை நடத்துவோரே உள்ளத்தால் வரவர பற்றற்ற துறவியராய் விளங்க வேண்டும் என்பது கருத்து. வாழ்க்கை இழந்தவர்களும் உள்ளத்தால் துறவு கொண்டு நடந்து கொள்ளக் கூடும். புறத்துறவு இங்கே குறிப்பிடப்பெற வில்லை. புறத்துறவு தமிழகத்தின் வழக்கமும் அன்று; இடைப்பட்ட காலத்தில் அயலவர் வருகைகளால் இந்த நாட்டில் கலந்து விட்ட ஒரு புதிய முறை. துறவறவியலில் எந்த இடத்திலும் புறத்துறவு குறிக்கப்பெறாமையே இதற்குச் சிறந்த சான்றாகும். அன்றியும், அது மறுக்கப் பட்ட இடங்களும் இக்கருத்திற்கு அரணாக அமைகின்றன.[138] நற்செயல்கள் செய்கின்றபோது சிறந்த குண நலங்கள் வேண்டுமாதலால் அவற்றைப் பற்றி மட்டுமே துறவறவியலில் முற்றிலும் ஆசிரியர் வற்புறுத்துவதைக் காணலாம்.

இல்வாழ்க்கை நடத்துவோரே வரவர உள்ளத்தால் பற்றற்ற துறவியராய் விளங்க வேண்டும் என்பதாக மேலே

---

137. ஷை ஷை - 17. 'கடிமனை நீத்த பால்' என்பதும் பாடம்.

138. திருக்குறள் - 'கூடாவொழுக்கத்தில்' பல குறள்கள் காண்க.

குறிப்பிட்டோம். ஆகவே, துறவற இயலில் நாம் காண்பது அகத்துறவு பற்றியேயாகும். 'இந்த அகத்துறவு நோன்புப் பகுதி' 'ஞானப்பகுதி' என்ற இரு பிரிவுகளில் அடங்கும். நோன்புப்பகுதி என்றாலும், தவப்பகுதி என்றாலும் ஒன்றே. நோன்புப் பகுதியை **ஒன்பது** அதிகாரங்களாலும், ஞானப் பகுதியை **நான்கு** அதிகாரங்களாலும் விளக்குவர் வள்ளுவப் பெருந்தகை. மக்களில் அகத்துறவு நிலைக்கு உயர்வோர் சிறுபான்மையோராதலின், அதிகாரங்களைச் சுருக்கமாகவே அமைத்துள்ளார் ஆசிரியர்.

முதலில் நோன்புப் பகுதியை நோக்குவோம் :

1. **அருளுடைமை :** இல்லற இயலுக்கு 'அன்பு' அடிப்படையாவது போல துறவற இயலுக்கு அடிப்படையாக இருப்பது அன்பின் முதிர்ச்சியாகிய 'அருள்' 'அருள்என்னும் அன்பு ஈன் குழவி' (757) என்பது வள்ளுவர் வாக்கு. தன்னலப் பற்றில் தான் என்னும் பற்றும் அற்று, எல்லா உயிர்களிடத்தும் நெஞ்சம் நெகிழ்ந்து நிற்கும் பண்பு 'அருள்' எனப்படும். தம் மக்கள் நன்றாக வாழவேண்டும் என்றும், தம் சுற்றம் நன்றாக வாழவேண்டும் என்றும், அன்பு வளர்ந்து எல்லாரும் நன்றாக வாழவேண்டும், எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற அருள் நோக்கம் அமையும்.

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.[139]

என்பர் தாயுமான அடிகள். உயிர் இரக்கம் அதாவது சீவகாருண்யம் என்பது தொடர்புடைய உயிர்கள், அல்லாத உயிர்கள் ஆகிய எல்லா உயிர்கள் மேலும் தோன்றுவதாகிய ஆன்ம நெகிழ்ச்சி! இது தோன்றினால் உள்ளத்தில் பற்று பெரும் பகுதி அறும். அதன்பின்

139. பராபரக் கண்ணி-221

திருவருள் தோய முற்படும்; அப்படி முற்படும்போது பற்று முற்றும் அற்றுவிடும். பயன், வீடுபேறு.

அற்றது பற்றெனில்
உற்றது வீடுஉயிர்[140]

என்பது நம்மாழ்வாரின் திருவாக்கு.

இத்தகைய அருள் ஒருவனிடத்து அமைதல் மிகவும் அரிது. சிறிது முயன்றவரிடத்திலும் பொருள் அமையும்; முயலாதவரிடத்திலும் அமையும்; தகாதவரிடத்திலும் அமையும்; ஆகையால் பண்பட்டவர்களிடத்தில் மட்டும் காணப்படும் அருட்செல்வம் செல்வத்தில் சிறந்த செல்வமாகும். பொருட் செல்வம் கீழ் மக்களிடத்திலும் இருப்பதால் அதற்கு அத்தகையச் சிறப்பு இல்லை.

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள (241)

[பூரியார் - இழிந்தார்]

என்பது வள்ளுவம். இவ்விடத்தில் 'அருள்' 'திருவருள்' என்ற இரண்டினிடத்துள்ள வேறுபாட்டை நோக்குதல் இன்றியமையாதது. ஆண்டவன் எல்லா உயிர்களிடத்தும் செலுத்தும் ஆற்றலே திருவருள். அந்த ஆற்றல் இரக்கமுடைமையாகிய அருள் (சீவகாருண்யம்) மட்டுமன்று. அது நீதியுடைமை முதலிய பல வல்லமைகளின் தொகுப்பு மாகும். இரக்கமுடைமையை ஒத்ததாக உயிர்கள் பிற உயிர்களிடத்தில் காட்டும் இரக்கமும் இருப்பதால் 'திருவருள்' என்பதில் உள்ள அருட்பெயர் இந்த உயிரிரக்கத் திற்கும் அமைந்து விட்டது.

அருளுடைமை என்பது துறவற இயலுக்குரிய நோன்புப்பகுதி, ஞானப்பகுதி என்ற இரண்டிற்கும் அடிப்

140. திருவாய் 1:2:5

படையானது. ஆயினும் நோன்பிற்கு முக்கிய காரணமாக இருப்பதால் அது முதலில் கூறப்படுகின்றது. திருவருள் ஞானப் பகுதிக்கு முக்கிய காரணம்; திருவருளின் சாயலே உயிரிரக்கம். இதனால் தாயுமான அடிகள்,

எவ்வுயிரும் என்னுயிர் போல்
எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை
செய்யாய் பராபரமே.[141]

என்று அந்தத் திருவருட்சாயலை வேண்டுகின்றார் என்பது அறியத்தக்கது.

இன்னொரு கருத்தும் நம் சிந்தையில் எழுகின்றது. ஈண்டு வள்ளுவர் திருவருட் சாயலாகிய உயிரிரக்கம் வாழ்க்கையில் 'செல்வத்துட் செல்வம்' என்றார். ஆனால் பொருட்பாலில் உள்ள **'கேள்வி'** என்னும் அதிகாரத்தில் செவிச் செல்வம் 'செல்வத்துட் செல்வம்' என்று கூறுவதோடு அமையாது 'தலைசிறந்த செல்வம்' என்றும் அதனை மேலும் உயர்த்திக் கூறுவார்.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை (411)

என்று காண்க. இதனால் அருட்செல்வத்திற்கும் கேள்விச் செல்வத்திற்கும் ஏதோ வேறுபாடு இருப்பதாகத் தோன்றுகின்றது. அந்த வேறுபாடு யாதாக இருக்கலாம் என்பதைக் காணலாம்.

பொருட்பாலில் செவிச் செல்வத்தைச் 'செல்வத்துள் எல்லாம் தலை' என்று சொன்னதனால் அது மற்ற பொருட் செல்வம் எல்லாவற்றையும் விட தலைமையானது என்று பொதுவாகப் பொருள் தரக் கூடும் மேலோட்டமாகப் பார்ப்பதனால். ஆயின் இதைச் சற்று ஊன்றி நோக்கினால்

141. தா - பா : பராபரம் - 65,

உயிரிரக்கமாகிய அருட் செல்வத்தினும் அது தலையானது என்ற நுட்பக் கருத்தும் பொருந்தியுள்ளமை தட்டுப் படாமல் போகாது. பொருட்பாலேயாயினும், இன்பப்பாலே யாயினும் அதில் அறத்தின் சுவடு ஊடுருவி உள்ளது என் பதை முன்னர்ச் சுட்டியுள்ளேன். அதனால் கேள்வி பொருட்பாலில் அமைந்திருந்தாலும் பொருள் பற்றிய உலகக் கேள்விகளை மட்டிலும் அது குறிப்பதன்று; ஞானக் கேள்விகளையும் அஃது உள்ளடக்கிக் கொண்டுள்ளது என் பது அறியப் படும். அதாவது, ஞானக் கேள்வியாகிய செல்வம் - திருவருளால் உணர்ந்து ஆற்றல் கொள்ளும் செல்வம் - 'பொருட்செல்வம்' 'கல்விச் செல்வம்' உயிரிரக் கமாகிய' 'அருட்செல்வம்' என்னும் எல்லாச் செல்வங்களை விடவும் தலை-சிறந்ததாகும் என்பது தெளியப்படும். இது நிற்க,

வாழ்க்கையில் நன்னெறியில் நின்று உண்மையை ஆய்ந்து அருளுடையவராக விளங்க வேண்டும் என்பது கோட்பாடு. பலவகையில் ஆராய்ந்தாலும், அருளே வாழ்க்கைக்குத் துணையாக இருப்பது புலனாகும்; அது தவிர வேறு துணை இல்லை என்பதும் தெளிவாகும்.

> நல்லாற்றான் நாடி அருளாள்க; பல்லாற்றான்
> தேரினும் அஃதே துணை (242)

என்பது பொய்யாமொழி. எல்லா உயிர்களையும் போற்றி அருள் செலுத்துவோனுக்குத் தன் உயிர் அஞ்சத்தக்க தீவினை இல்லாமல் போகும் என்பர் வள்ளுவப்பெருந்தகை (144). எல்லோரும் நன்றாக வாழ வேண்டும் என்பதே அருளாளர் நோக்கம். ஆதலால் அவருடைய நெஞ்சம் தன்னலம் அற்ற தூய நெஞ்சம் ஆகின்றது. மற்றவர்களின் துன்பமே தம் துன்பமாகவும், மற்றவர்களின் இன்பமே தம் இன்பமாகவும் அவர்கள் உணர்வதால், அவர்களுடைய உயிர்க்கு வரும் துன்பம் இல்லை. ஏதேனும் இடர் வரினும், அந்த இடர் அவர்களை வருத்துவதில்லை. அந்த இடரைத்

தாம் தாங்குவதால் உலகம் இன்பமுறும் என்று எண்ணி மகிழ்ச்சியோடு அந்த இடரை ஏற்பார்கள்; அதனைக் கண்டு கலங்கித் துன்பம் உறும் தன்மையை அவர்களிடம் காணமுடியாது.

பொருள் இல்லாதவர்க்குப் புற உலக வாழ்க்கை இல்லை; அதுபோல அருள் இல்லாதவர்க்கு அக உலக வாழ்க்கை இல்லை. பொருளற்ற வறியவர்கள் உண்ணல் உடுத்தல் முதலியவற்றில் அல்லல் உறுவர். அருள் இல்லாதவர்கள் சிந்தனையிலும் நினைத்தலிலும் இன்பமின்றி வருந்துவார்கள் (247). புற வாழ்க்கையில் பொருள் இல்லாதவர்கள் ஒரு காலத்தில் திடீரென்று செல்வம் பெற்றுச் செழிப்பதும் உண்டு; ஆனால் அருள் இல்லாதவர்கள் அகவாழ்க்கையில் அழிந்தவர்களே; அவர்கள் செழித்து முன்னேறுவது அரிது.

பொருளற்றார் பூப்பர் ஒருகால்; அருளற்றார்
அற்றார்; மற்றுஆதல் அரிது (248)

என்பது வள்ளுவம். இதில் 'அருள் அற்றார் அற்றார்' என வரும் இடத்தில் 'அற்றார்' என்பதற்குப் 'பொருள் பூப்பது அற்றார்' எனவும் மீண்டும் ஒருகால் அருள் பூப்பதும் அற்றார் எனவும், பொருள்படுதலை அறிக. 'ஆதல் அரிது' என்பதற்கு மீண்டும் அருளுடைமை மலர்தலும் அதனால் பெறுதற்குரிய திருவருட் பேற்றில் முன்னேறுதலும் அவ்வளவு எளிதில் இல்லை எனவும் கருத்தாதலை அறிக. முதலில் பொருள் இருந்து பின்னால் அற்றுப் போனவர்களும், பிறவியிலேயே பொருளற்றவர்களும், தம் வாழ்க்கையில் இன்னொரு காலத்தில் பொருட் செல்வம் பெறுதல் கூடும்; வறுமையில் இருப்பவர்களில் அருளுடையார் பின்பு நல்லூழ் மலர்ந்து நல்லமுயற்சிகளும் அறிவும் உடையராகிச் செல்வ நிலையில் உயர்வதையும் காண்கின்றோம்.

அருள் இல்லாதவனுக்கு ஒரே ஒரு வழி உண்டு என்கின்றார் வள்ளுவர் பெருமான். அதாவது: தான் தன்னைவிட மெலிந்தவரைத் துன்புறுத்தச் செல்லும்போது, தன்னைவிட வலியர் ஒருவர் தன்னைத் துன்புறுத்த வருங்கால் தான் படும் துன்பத்தை நினைக்க வேண்டும். அவ்வாறு நினையுங்கால் அருளுணர்வு நெஞ்சில் தானாகவே பிறக்கும்.

வலியார்முன் தன்னை நினைக்க தான்தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து (250)

என்பது வள்ளுவம். இவ்விடத்தில்,

தம்முயிர்போல் எவ்வுயிரும்
தான்என்று தண்ணருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று
செய்வேன் பராபரமே[142]

என்ற தாயுமான அடிகளின் திருவாக்கும் சிந்திக்கத்தக்கது.

2. புலால் மறுத்தல்: உள்ளத்துறவுக்குப் புலால் மறுத்தல் மிகவும் இன்றியமையாதது. புலால் உண்பவன் அருளாளனாக இருக்க முடியாது. 'அருட்பெருசோதி, தனிப் பெருங்கருணை' என்ற மூல மந்திரத்தை அருளிய வள்ளல் பெருமான் புலால் உண்டதைக் கண்டித்த அளவுக்கு வேறெதனையும் கண்டித்ததில்லை. புலால் மறுத்தலை வற்புறுத்திய அளவுக்கு வேறெதனையும் வற்புறுத்தியதில்லை. சாதி சமயம் முதலிய எல்லாவற்றாலும் ஒருமைப் பாட்டினைக் கண்ட அடிகள் புலை ஒழுக்கம் ஒன்றை மட்டும் கருதி மக்களை அகஇனம், புற இனம் என இரு இனங்களாகப் பிரித்தார். புலால் மறுத்தோர் அக இனத்தார்; அஃதுண்போர் புறஇனத்தார்.

---

142. தா. ப : பராபரம்-149

உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும்
உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர் அவர்
புறஇனத்தார்.[143]

என்று இறைவனே தனக்கு அருளினான் என்று கூறுவர். புலால் உண்பவராகிய புறவினத்தாரை அடிகள் தமது உடன் கூட்டத்திலும் சன்மார்க்க சங்கத்திலும் சேர்த்துக் கொண்டதே இல்லை. புலால் உண்ணும் மக்களைக் கண்டு மயங்கி உள்ளம் நடுங்கி ஆற்றாமல் எலும்பெலாம் கருக இளைத்ததாக இறைவனிடம் விண்ணப்பிப்பர்.

வண்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு
மயங்கிஉள் நடுங்கிஆற் றாமல்
என்பெலாம் கருக இளைத்தனன்[144]

என்ற அடிகளில் இதனைக் காணலாம்.

அருளாளன் எல்லா உயிர்க்கும் தீங்கு செய்யாமல் வாழக் கருதுவான். அத்தகையவன் தன் உடம்பு வாழ விரும்புவது போலவே மற்ற எல்லா உயிர்களின் உடம்பும் வாழ வேண்டும் என்று விரும்புவான். புலால் உண்டு உடல் உரம் பெறுவதைப் பற்றி எண்ண நேர்ந்தால் அது தன்னலமான கொடுமை என எண்ணுவான். இவ்வாறு எண்ணாமல் தன் ஊன் பெருக்குவதற்காகப் பிறிதோர் உயிரின் ஊனைப் புசிக்கின்றவன் எப்படி அருளுடையவனாக முடியும்?

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்? (251)

என்பது வள்ளுவம். அறநெறிச்சார ஆசிரியர்,

143. 6 (இடை) அருள்விளக்க மாலை - 71
144. 6 (முன்). பிள்ளைப் பெருவிண்ணப்பம் - 41

தம்புண் கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர்[145]

என்று பரிகசிப்பர். 'புலால் பிறிதோர் உடம்பின் புண்' (257) என்ற வள்ளுவர் கருத்தும் ஈண்டு நினைக்கத்தக்கது.

ஊன் உண்டாகும் நெஞ்சில் அருள் கெடாமல் வாழ முடியாதா? என்று வினவலாம். ஊன் உண்பதில் சுவை கண்டு பழகி விட்டால் மனத்திற்கு வளர்ச்சி இல்லை. அந்த மனம் மற்றோர் உயிரைக் காணும்போது அருளுணர் வோடு எண்ண முடியுமா? அதன் உடம்பையும் உண்ண வேண்டும் என்ற சுவையுணர்வுதான் பிறக்கும். ஆதலால் அவ்வாறு உண்டவர் மனம் நல்ல எண்ணம் எண்ணாது; கொலைக்கருவியைக் கையில் தாங்கியவரின் மனம் கொலையைத் தவிர்த்து நல்லதை எண்ண முடியுமா? ஊன் உண்டவரின் மனமும் அப்படிப்பட்டதே.

படைகொண்டார் நெஞ்சம்போல்
நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம் (253)

என்பது வள்ளுவர் பெருமானின் வாய்மொழி.

சிலர் புலால் உண்பதற்குப் போலிக் காரணங்கள் சிலவும் கற்பித்துக் கொள்வர். நேரில் உயிர்களைக் கொன்றால் தானே பாவம்? 'யாரோ கொல்கின்றனர்; அதனால், தின்பதனால் உயிர் இரக்கக்குணம் கெடுவதில்லை' என்பர். இதற்கு வள்ளுவரே மறுமொழி தருவார். ஊன் தின்பவர் இல்லையானால், கொல்வாரும் இரார். ஆகவே, தின்பது கொலைக்குக் காரணமாகின்றது; அது குற்றமேயாகும்.

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல் (256)

என்பது வள்ளுவர் வாக்கு.

145. அறநெறிச்சாரம் - 102.

மற்றொரு காரணம் சொல்லுகிறவர்களும் உண்டு. வேள்வி முதலியவற்றைச் செய்து வாழ்க்கையில் சிறப்புப் பெறுவதைவிட, புலால் உண்ணாத நோன்பால் பெறும் சிறப்பு மேலானது. நெய் முதலியவற்றைச் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்வதைவிட, ஓர் உயிரைக் கொன்று புலால் உண்ணாமல் வாழ்வது நல்லது.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று (259)

என்று கூறுவர் பொய்யாமொழியார்.

கொல்லாமல், புலால் உண்ணாமல், வாழ்கின்றவன் எல்லா உயிரும் கைகூப்பித் தொழக்கூடிய சிறப்பைப் பெறுவான்,

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (260)

என்று முத்தாய்ப்பாகக் கூறுவர் வள்ளுவப்பெருந்தகை.

இந்த இயலில் வரும் சில குறிப்புகளைக் கவனமாகக் கருத்தில் இருத்துவது நன்று. செல்வர்கள் பொருட் செல்வத்தை எப்படிப் பாதுகாத்து மேலும் மேலும் பெருக்கு கின்றார்களோ அப்படி அருட்செல்வத்தையும் இழப்பில் லாமல் பாதுகாத்து மேம்படுத்திக் கொள்ளவேண்டும். ஊன் உண்பது அருட்செல்வத்தைக் குறைக்கின்றது.

ஒரு சமயம் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் சொன்னார்: 'புலால் மறுத்தல் துறவற இயலில் சொல்லப்பெற்றுள்ளது. ஆதலால் துறவிகள் இதனை செயலுரிமை ஆணை (Mandatory) யாகக் கொண்டு புலால் உண்ணக் கூடாது. இல்லற வியலில் இது கூறப்பெறாததால் இதனைப் பரிந்துரை யாகக் (Recommendatory) கொண்டு இல்லறத்தார் உண்ண லாம்' என்றார். வள்ளுவர் மறையில் அறம் ஊடுருவி நிற்ப தால் எவரும் உண்ணக் கூடாது என்பதே கொள்ளத்

தக்கது. நிதிபதி சொன்னது வள்ளுவர் கருத்துக்கு முரணானது; சிறிதும் ஒவ்வாதது. என் கருத்துக்கு அற நெறிச் சாரத்திலுள்ள கருத்து அரணாக அமைகின்றது.

கொன்றான் நுகரும் கொடுமையை உள்நினைந்து
அன்றே ஒழியவிடுவானேல்,-என்றும்
இடுக்கண் எனஉண்டோ இல்வாழ்க்கைக்கு உள்ளே
படுத்தானாந் தன்னைத் தவம்[146]

[நுகரும்-உண்ணும்; கொடுமை-தீச்செயல்; உள்-மனம்; என்றும்-எக்காலத்தும்]

கொல்லும் தீச்செயலை நினைந்து ஒருவன் புலாலுண்ணலை முற்றிலும் தவிர்ப்பானேயானால் அவன் இல்லறத்தானா யினும் துறவற நெறியினின்று தவம் செய்வாரை நிகர்ப்பன் என்பது இதன் கருத்து.

3. **தவம்:** புலால்மறுத்தவரே தவத்திற்குரியவர். தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளல், மற்ற உயிர் கட்குத் துன்பம் செய்யாதிருத்தல் ஆகிய அவ்வளவே தவத் திற்கு உருவம்.

உற்றநோய் நோற்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு (261)

என்று இரத்தினச் சுருக்கமாகத் தவத்தை விளக்குவர் வள்ளுவப் பெருந்தகை. இந்த அளவில் அமையாமல் சிலர் 'தவக்கோலம்' என்று தனியே தேடிக் கொள்கின்றனர். ஆனால் அந்தக் கோலம் மட்டிலும் இருந்தால் போதாது. தவக்கோலமும் தவ ஒழுக்கம் உடையவர்கட்கு மட்டி லுமே பொருந்தும்; மற்றவர்கள் அதனை மேற்கொள் வது வீண்.

தவமும் தவமுடையார்க்கு ஆகும்; அவம் அதனை
அஃதிலார் மேற்கொள் வது (262)

என்பது வள்ளுவம்.

---

146. அறநெறிச்சாரம்-101

சிலர் தவம் என்னும் பெயரால் பசியை அடக்கல், பல நாள் பட்டினி கிடத்தல், வெயிலிலும் மழையிலும் காட்டிலும் மேட்டிலும் கிடத்தல் முதலிய துன்பங்களை உடலுக்குத் தாமே வருவித்துக் கொள்ளல் என்ற முறைகளே தவம் என்று கருதுவர். இது தவறு; இப்போக்கு நம் நாட்டிற்கு உரியதும் அன்று. இம் முறை திருவள்ளுவர்க்கு இணக்கமில்லாதது.

காயிலை தின்றும் கானில்
உறைந்தும் கதிதேடி
தீயிடை நின்றும் பூவலம்
வந்தும் திரிவீர்காள்!
தாயினும் அன்பன் பூமகள்
நண்பன் தடநாகப்
பாயல் முகுந்தன் கோயில்
அரங்கம் பணிவீரே[147]

என்று தவத்தை வரையறை செய்து காட்டுவார் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார். திருமங்கையாழ்வாரும்,

ஊன்வாட உண்ணாது உயிர்காவல் இட்டு
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா[148]

என்றும்,

காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவம்செய்ய வேண்டா[149]

என்று கூறுவர்.

தவக்கோலம் கொண்டு துறவிகள் வாழ்வதைக் கண்டு இல்லறத்தார் தவம் நமக்கு உரியதன்று என்று அதனைக்

147. திருவரங், கலம். 18
148, பெரி. திரு. 3.2:1
149. ௸. 8.2:2

கைவிடுகின்றனர். இது தவறு. தவம் அனைவர்க்கும் பொதுவானது; சிலர் குடும்ப வாழ்க்கையிலிருந்தே செய்யமுடியும்; சிலர் குடும்ப வாழ்கையைத் துறந்தும் செய்ய முடியும். உண்மை இவ்வாறு இருக்க, இல்லறத்தார் தவத்தை மறப்பதற்குக் காரணம் யாதோ? துறந்தார்க்கு உணவு முதலியவற்றை உதவுவதே தம் கடமை என்று தவத்தை அவர்கட்கு உரியதாக்கி விட்டு மறந்தார் களோ?

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்? (263)

என்பது வள்ளுவம். விரும்பியவற்றை விரும்பியவாறு பெறக்கூடிய தன்மை இருப்பதால் செய்வதற்கு உரிய தவத்தை இல்வாழ்க்கையிலும் முயல வேண்டும் என்பது வள்ளுவர் பெருமானின்கருத்து (265). இவ்வாறு தவம் செய்பவர்களே தம் கடமைகளைச் செய்தவர்களாவர்; மற்றவர்கள் ஆசையாகிய வலையில் அகப்பட்டு வீணான தீமை செய்கின்றவர்கள். புலன் ஒடுக்கம் உயிர்ப்பு ஒடுக்கமாய்த் தவப் பழக்கத்தை மேற்கொண்டு வந்தால் உட்கருவிகள் சிறந்த ஆற்றலைப் பெறுகின்றன. அதனால் உயிராற்றல் நாளுக்குநாள் பெருக்கெடுக்கின்றது. அவர்கள் ஆற்றல் மனிதர்களாய்த் திகழ்கின்றனர். மனிதராய்ப் பிறந்தவர்க்கு உட்கருவியின் ஆற்றலும் உயிராற்றலும் பெறவேண்டியதே கடமை. மாந்தர்க்கு முயற்சி என்பதும் இதுவே. முயல்வோர் என்றால் தவம் முயல்வோரே. இல்வாழ்வார் அருளோடும் அன்போடும் பிற உயிர் களையும் காக்கும் நோக்கத்தோடு அதற்குரிய ஆற்றலைத் தவத்தால் பெறும் மாட்சியர்.

தவப் பயிற்சியில் துன்பம் மேன்மேலும் வரும்; அதைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். பொன் ஒளிவிட வேண்டுமானால் அதனைத் தீயிலிட்டுக் காய்ச்சுகின்றோம். இதனால் பொன்னின் மாசு நீங்கி ஒளிவிடும் பொன்னா கின்றது. சுடச்சுடரும் பொன்போல் சுடச்சுட நோக்கிற்

பவருக்கு மாசுநீங்கி தேசு பொலிவுறும் (267). இவ்வாறு தவம் செய்து ஆற்றல் பெற்றவர்கட்குக் கூற்றுவனையும் கடந்து போகமுடியும் (269). இத்தகைய ஆற்றலற்றவர் களே உலகில் பலராகக் காணப்படுகின்றனர். தவம் செய் தார் சிலராகவும். செய்யாதவர் பலராகவும் இருப்பதே இத்தகைய நிலைக்குக் காரணம் ஆகும்.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பவர்
சிலர்;பலர் நோலா தவர் (270)

என்பது வள்ளுவம்.

4. **கூடாவொழுக்கம்:** திருவள்ளுவர் எல்லா அதிகாரங் களிலும் மனிதன் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளைக் கூறியபோதிலும் **'ஒழுக்கமுடைமை'** என்ற தனி அதிகாரத்தை வகுத்து 'இல்லற இயலில்' அடக்கிக்காட்டினார். உடன்பாட்டிலேயே கூறுவதில் வழக்கமாகக் கொண்ட வள்ளுவர்பெருமான் சில சமயம் தாம் கூறுவதை வலியுறுத்தும்பொருட்டு எதிர்மறையிலும் கூறுவதுண்டு. அங்ஙனம் கூறுவதில் இல்லறவியலில் கூறிய 'பிறனில் விழையாமையும்', துறவறவியலில் கூறிய 'கூடா வொழுக்கமும்' அந்தந்த நிலையில் இருப்பவர்களுக்கு மிக முக்கியமானவை. இல்வாழ்வார் மேற்கொள்ளும் உள்ளத் துறவறம் மேலுக்கு ஆடம்பரமாய்ப் புறத்தே நிகழ்வதன்று. அவரவர் உள்ளம் நிறைவு கொள்ளும்படி அகத்தே நிகழ்வது. கரவு மனம் இதற்கு நேர்மாறானது.

தவ ஒழுக்கம் உடையவர்கட்கு முற்றிலும் பொருந்துவது தவக்கோலம். தீய ஒழுக்கம் உடையவர்கள் தவக் கோலத்தைக் கொண்டு வாழ்வது குற்றம்; பெருங்குற்றம். மிகுதியாகத் தீங்கு இழைப்பதற்கு அந்தக் கோலத்தைப் பயன்படுத்துவது வஞ்சம் ஆகும். வஞ்ச மனத்தானின் பொய்யொழுக்கம் புறத்தார்க்கு உடனே புலனாகா விடினும், அவன் உடம்பில் கலந்துள்ள ஐந்து பூதங்களுக்கு

மறைத்தல் இயலாது. இவனுடைய கரவொழுக்கத்தைக் கண்டு அவை தமக்குள்ளே சிரிக்கும்-அகத்தே நகும்-என்கின்றார்.

> வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
> ஐந்தும் அகத்தே நகும் (271)

என்பது வள்ளுவம். இந்த ஐந்து பூதங்களும் இவன் தீயவொழுக்கத்திற்குச் சான்றாக நின்று குற்றவாளியாக்கி அவனை மிக வருத்தி விடும். தன் நெஞ்சம் அறிந்த குற்றத்திற்கு ஆளாகும்போது புறத்தில் வானம்போல் உயர்ந்த தவக்கோலம் கொள்வதால் யாது பயன்? (272).

மனத்தை நன்னெறிப்படுத்தும் ஆற்றல் இல்லாமல் தவக்கோலம் கொள்வதால் பிறரை வஞ்சிக்கும் தன்மை மிகுதியாகும். தவக்கோலத்தைக் கண்டு ஒரு தீங்கும் இல்லையென்று நம்பி மகளிரும் பிறரும் ஐயமின்றி நெருங்கி அன்புடன் பழகுவதற்கு வாய்ப்புகள் உண்டாகும். அந்த வாய்ப்பைத் தன் தீயொழுக்கத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது எளிதாகும். இவ்வாறு தன் தவக்கோலத்தைக் கொண்டு நம்பியவர்களை வஞ்சிப்பது பசு புலித்தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்வதை ஒத்தது. பசு தன் வடிவில் பயிரை அணுகினால் அது பயிரை மேய்ந்து விடும் என்று காவலர் கடிவர்: புலித்தோலைப் போர்த்து வந்தால் புலி பயிரை ஒன்றும் செய்யாது என்று எண்ணியும் புலிக்கு அஞ்சியும் வாளா இருப்பர். அது போல் தீய ஒழுக்கமுடையான் மற்றவர்களைப்போல் வந்தால் மகளிரும் பிறரும் அவனைக் கடிந்து தம் ஒழுக்கத்தைக் காத்துக் கொள்வர்; ஆனால் அவனே தவக் கோலத்துடன் தோன்றினால், 'இந்தத் துறவியால் நம் வாழ்வுக்குக் கேடில்லை' என்று எண்ணியும், 'தவக்கோல முனிவர் நமக்கு ஆசி கூறி நம் வாழ்வையும் மேம்படுத்துவர்' என்று போற்றியும் இறுதியில் ஏமாற்றமும் அடைவர்.

வலிஇல் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று (273).

என்பது வள்ளுவம். ஆகையால் தவக் கோலத்தில் மறைந்து வாழ்ந்து குற்றங்களைச் செய்வது பொல்லாதது. அது, வேடன் ஒருவன் புதரில் மறைந்து நின்று கண்ணி வீசிப் புட்களைப் பிடிப்பதை யொத்தது (274).

கரவு உள்ளத்துடன் தோன்றும் துறவியர்களை நம்பும் நல்லவர்களை வஞ்சித்து வாழ்வோரைப்போல கொடியவர்கள் உலகத்தில் இல்லை. அவர்கள் குன்றி மணி போன்றவர்கள். வெளித்தோற்றத்தில் குன்றிமணியின் செந்நிறம்போல் தோன்றும் அவர்கள் நெஞ்சம் அதன் கருநிறம் போல் இருண்டிருக்கும் (277). மனத்தில் மாசு நீங்காத நிலையில் தவத்தால் மாட்சி பெற்றவர்கள்போல் நீராடித் தூய்மை காட்டித் தம் குற்றங்களை மறைத்து வாழும் பல 'ஆஷாடபூதிகள்' நிறைந்தது இவ்வுலகம் (278). ஆகையால் உண்மையாளர்களைக் கண்டறிய வேண்டுமானால் வெறுந்தோற்றத்தால் அவர்களை அறுதியிடல் முடியாது. அம்பு நேரானதுதான்: ஆனால் கொடுமை செய்வது. யாழின் கோடு வளைந்த வடிவம் உடையதானாலும் இனிய பயன் தருவது; செவிக்கினிய இசையை நல்குவது. இதனை மனத்தில் கொண்டு மக்களை ஆய்ந்தறிதல் வேண்டும். தோற்றத்தால் மயங்கி விடாமல் அவரவர் செய்யும் செயல்களின் நன்மை தீமையால் கண்டறிதல் வேண்டும் (279).

தவத்திற்கென்று தனிக்கோலம் நாட வேண்டிய தில்லை. தலைமயிரை மழித்து மொட்டையாக்கிக் கொள்ளவும் (திருவாவடு துறை வழி), நீட்டி சடையாக்கிக் கொள்ளலும் (தருமபுர வழி) வேண்டா. உலகம் பழிக்கும் குற்றத்தைச் செய்யாமல் விட்டு வாழ்தல் அதுவே போதும்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (280)

என்பது வள்ளுவம். இந்தக் குறளில் 'நீட்டல்' என்பது பற்றி ஒரு குறிப்பு : நீட்டல் என்பது வளர்த்தலேயன்றி சடையாக்கிக்கொள்ளுதலும் அடங்கும். மடத்துடன் நன்கு தொடர்பு கொண்டவர்கட்கு இது நன்கு தெளிவாகும். ஒரு சமயம் எனக்குத் தெரிந்த மடம் ஒன்றில் இருவர் சந்நியாசம் பெற்றனர். அதில் ஒருவர் வழக்கறிஞர்; மற்றொருவர் படைத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இருவரையும் கிராப்புத் தலையுடன் கண்ட துண்டு. ஒரு வாரத்தில் இருவரும் 'தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவம் மேற்கொண்டதைக்' கண்டு வியந்து போனேன். முதல் நாள் பட்டம் கட்டிக்கொண்டு பாராளவேண்டிய இராமனுக்கு ஓரிரவில் நீண்ட சடைமுடி எப்படி வந்தது? இஃது எனக்கு விளங்காப் புதிராகவே இருந்தது. நாடகத்தில் சந்நியாசிக் கோலம் கொள்வது எளிது. ஏனெனில், தயாராக இருக்கும் சடைமுடியை அப்படியே எடுத்துக் கவிழ்த்துக்கொள்ள வேண்டியதுதான்! யதார்த்த உலகில்-உண்மையில் சந்நியாசம் கொள்வோருக்குத் தலையில் எப்படி நீளமான சடை ஏற்படும்? அதுவும் கிராப்புத்தலையுடன் இருப்போருக்கு இடுப்புக்குக் கீழ் தொங்கும் சடை எப்படி ஏற்பட்டது? இதனைப் படைத் துறையில் பணியாற்றித்'துறவுக் கோலம்' கொண்ட அன்பர் தம் அறைக்கு என்னை இட்டுச் சென்று செய்முறையை விளக்கினார். தலையின் இழிந்த மயிர்த்துண்டுக் குவியலைக் காட்டினார். ஆலம் பிசின் போன்ற செயற்கை முறையில் தயார் செய்யப்பெற்ற கூழ் போன்றபசையையும் (Fevicol போன்றது) காட்டினார். துண்டு மயிரையும் பசையையும் பயன்படுத்தி முருங்கைக்காய் போன்ற சடையை ஒட்டும் முறையையும் விளக்கினபோதுதான் **'நீட்டல்'** என்ற சொல்லின் பொருள் தெளிவாகியது. அயோத்தி அண்ணல் இப்படித்தான் 'தாழிருஞ் சடைகள்' தாங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவாயிற்று. ஓராண் டிற்குள் துறவுக்கோலம் கொண்ட இந்த இரு நண்பர்களை யும் காணமுடியவில்லை. துறவுக் கோலத்தின் தொல்லை

யைப் பொறுக்கமுடியாமல் அவர்கள்தத்தம் பூர்வாசிரமத்திற்கே திரும்பி விட்டதாகக் கேள்விப்பட்டேன்.

5. **கள்ளாமை** : பிறர் பொருளை மறையக் கவரும் நிலை நெஞ்சின் நினைவிலேயே அழிக்கப்பெறுதல் வேண்டும். கருதுதலும் செய்தலோடு ஒக்குமாதலால் அதனையும் தவிர்த்தல் வேண்டும். உள்ளத்தில் எண்ணுவது முதல்படி; செயல் அதன் இரண்டாம் படி. ஆதலால் இவ்வாறு கூறினார். 'கள்ளாமை காக்கத் தன் நெஞ்சு' (281), 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' (282) 'களவின்கண் கன்றிய காதல்' (284) 'களவென்னும் கார் அறிவு' (287), 'களவறிந்தார் நெஞ்சில் கரவு' (288) என்னும் குறள்களின் தொடர்களால் நெஞ்சின் கரவு நினைவே வன்மையாகக் கண்டிக்கப்படுவதைக் காணலாம்.

தீய முறையில் செல்வம் சேருதல், ஆவது போலத் தோற்றுமே தவிர நிலைக்காது. 'தீயன, ஆவதே போன்று கெடும்' இந்தச் செல்வம் போகுங்கால் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் உடன் கொண்டு போய் விடும்.[150] புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் கொண்டு போவதுபோல, தீய முறையில் ஈட்டும் செல்வம் வந்த அளவினும் மிகுந்து போய்விடும். ஆகவே, இல்வாழ்வார் தம் உழைப்பினால் கூடி வரும் பொருளில் வாழ்க்கை நடத்தப் பார்க்க வேண்டும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்(479)

என்று வள்ளுவர் பிறிதோர் இடத்தில் கூறியதைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அவரவர் அளவில் நின்று வாழ்க்கை நடத்துதல்பற்றி வள்ளுவர் பெருமான் அருமையான குறிப்பொன்றை இல்வாழ்வானுக்கு வழங்குகின்றார். அளவில் நின்று வாழ்க்கையை ஒழுங்கு படுத்திக் கொண்டு

150. பழமொழி-213

வாழ முடியாதவர்கள் களவில் முதிர்ந்த வேட்கையுடையவர்கள் ஆவர் (286). அளவு அறிந்து வாழும் ஆற்றலை விரும்பி மேற்கொண்டவரிடத்தில் களவு என்னும் குற்றம் காணப்படாது. அளவறிந்து வாழாத பெரிய அரசு ஊழியர்கள் கூட அளவற்ற கையூட்டுக்கு அடிமையாகி மறைகாவலர்களால் பிடிபட்டு மானத்தையும் மதியையும் இழந்து தண்டனைக்குள்ளாவது இன்றைய சமூக வாழ்வில் அன்றாட நிகழ்ச்சிகளாவதைக் காண்கிறோம். இதனை ஔவைப் பாட்டி,

> ஆன முதலில் அதிகம் செலவானால்
> மானம் அழிந்து மதிகெட்டு, போனதிசை
> எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
> நல்லார்க்கும் பொல்லனாம; நாடு[151]

என்றவாறு பண்டே பகர்ந்துள்ளமையை நாம் நினைந்து பார்க்கின்றோம். அளவறிந்து வாழ்கின்றவர்களின் நெஞ்சில் அறம் விளங்குவதுபோல களவு உடையவர்களின் நெஞ்சில் வஞ்சம் நிற்கும் (288). களவு தவிர மற்ற நல்வழிகளை நம்பித் தெளியாதவர்கள் அளவு அல்லாதவற்றைச் செய்து அவ்வாறே அழிந்தும் போவார்கள்.

> அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
> மற்றைய தேற்றா தவர் (289)

என்பது வள்ளுவம். இந்த அதிகாரத்தில் பாதிக் குறள்கள் அவரவரும் அவரவர் அளவில் நின்று வாழ்க்கை நடத்த வேண்டுமென்றே வழி காட்டும் ஒளி விளக்குகளாகத் திகழ்கின்றன.

6. வாய்மை : பொய்ம்மை என்னும் எதிர்மறையால் கூறாமல் 'வாய்மை' என்னும் உடன்பாட்டால் வள்ளுவர் பெருமான் கூறுவது உள்ளத்துறவு மேற்கொள்ளும் நோன்புக்கு எவ்வளவு முத்கியம் என்பதை எடுத்துக்

---

151. நல்வழி-25

காட்டும். உள்ளத்துறவு என்பது அவரவர் நெஞ்சமே அறியக் கூடிய அகநெகிழ்ச்சி; வாய்மை என்னும் பெயர் உண்மையின் தேவைக்காக எழுந்தது. எள்ளத்தில் உள்ள உண்மையை வாயால் கூறுவதே வாய்மை. உள்ளத்தில் உள்ளதற்கும் வாயால் கூறுவதற்கும் பொருந்தியவாறே செயலிலும் ஒழுகவேண்டும்; அதுவே மெய்ம்மை எனப்படும். உள்ளத்தில் உண்மை, வாயில் வாய்மை, செயலில் (மெய் யளவில்-மெய்யால் செய்யும் செயலளவில்) மெய்ம்மை என வாழும் வாழ்வே அருள் வாழ்க்கை ஆகும். இதனால் வாய்மை சிறந்த அறமாகின்றது. உண்மை பொருந்தி ஒழுகுவது வாழ்க்கைக்கே ஒரு வாய்ப்பு; பொருத்தம். அப்படிப் பொருந்தும் ஒழுக்கமே, நிலையே, சொல்லே வாய்மை எனப்பட்டது என்பது அறியப்படும்.

> வாழ்தல் வேண்டிப்
> பொய்கூறேன் மெய்கூறுவல்[152]

என்று நாஞ்சில் வள்ளுவன் வாய்மையாகிய விழுமிய அறத்தைப் பாராட்டுவதையும் காணலாம். இத்தகைய பேரறத்தின் பெருமையை உணர்ந்த வள்ளுவர் பெருமான்,

> யாம்மெய்யாக் கண்டவற்றுள்
> இல்லை எனைத் தோன்றும்
> வாய்மையின் நல்ல பிற (300)

என்று சிறப்பித்துப் பேசுவர்.

பிறருக்கு யாதொரு தீமையும் செய்யாத சொற்களைக் கூறுவதே வாய்மை எனப்படுவதாகும் (291). இதனால் நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு சொல்லுதல் மட்டுமே வாய்மை ஆகாது; பொருந்துவதைப் பொருந்தும் முறையில் சொல் லுவதே வாய்மை என்பது தெளியப்படும். இதனால்தான் வள்ளுவர் 'பெருமான் 'யாதொன்றும் தீமை இலாத

152. புறம்-139

சொலல்' (291) என்றும், 'புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின் பொய்ம்மையும் வாய்மை இடத்த' (292) என்றும் வாய்மைக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

கரவு கலந்தால், அதாவது பொய் வஞ்சனைகள் புகுந்தால், ஆற்றல் அழிந்துவிடுகின்றது! உடன் பயனை எதிர்பார்த்துப் பொய்யர் நிலையான பெரும் பயனை இழந்து விடுகின்றனர். ஆண்டவனும் உண்மைக்கு இரங்கு வானேயன்றிப் பொய்மைக்கு இடம் கொடான்.

பொக்கம் மிக்கவர் பூவும்நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே?[153]

என்பதுவும்,

கரவாடும் வன்னெஞ்சர்க்கு
அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை[154]

என்பதுவுமான அப்பர் பெருமானின் அருள்வாக்குகள் இன்றைய பொய்நின்ற ஞாலத்தைப் புனிதப்படுத்தட்டும்.

நெஞ்சறியத் தீங்கின்றி வாழ்வார் உலகத்தார் எல்லாராலும் மதிக்கப்படுவர். 'அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை'[155] என்ற ஆரியவரசன் யாழ்ப் பிரமதத்தனின் வாக்கும் ஈண்டு நினைவுகூர்தற்பாலது. நெஞ்சம் நினைப்பது மறைவாக நிகழ்வதாய் இருந்தாலும் பிறர் நெஞ்சோடு நமது நெஞ்சு உண்மையில் தொடர்புடையதாகவே உள்ளது. இஃது ஓர் உளவியல் உண்மை. ஒருவர் நினைவு உலகில் எல்லார் நினைவோடும் யாரையும் அறியாமலேயே தொடர்பு கொண்டுள்ளது என்பர்.

153. அப்பர் தேவாரம் 5.90:9
154. ஷை ஷை 4.7:1
155. குறுந். 184.

உளவியலார். நினைவோட்டம் காற்றோட்டம் போன்று புறக்கண்களுக்குத் தெரியாமல் இயங்கும்.

பொய் என்று தன் நெஞ்சுஅறிந்த ஒன்றைப் பிறர் அறியார் என்று எண்ணியும் சொல்லல் ஆகாது; பொய் புகன்ற பிறகு பிறர் அறியாமல் தப்பினும் தன் நெஞ்சே தன்னைச் சுடும். (293) ஆகையால் பிறர்க்கு அஞ்சி வாய்மையைக் கடைப்பிடிப்பதை விட, தன் மனச்சான்றுக்கு இயைந்து வாய்மையைப் போற்றுவதே நம் கடமை. ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் வாழ்வானானால், அவன் உலகத்தாரின் உள்ளத்தில் எல்லாம் வாய்மையாளனாய்த் திகழ்வான் (294). மனத்தோடு பொருந்த வாய்மை செப்புவோன் தவமும் தானமும் ஒருங்கே செய்வோரை விடச் சிறந்தவன் (295).

7. **வெகுளாமை:** ஆழ்ந்து சிந்தித்தால் தீமைகளெல்லாம் வெகுளியிலிருந்து பிறக்கின்றன என்பது தெரியவரும். உள்ளத்திலுள்ள வெறுப்பும் பகையுமே வெகுளியாய் வெளிப்படும். அது துறந்தார்க்கு இன்றியமையாததான அருளுடைமைக்கு மாறானது. ஆகையால் அதற்கு இடம் இல்லாமல் காத்துக்கொள்ள வேண்டும். சினத்தின் கேட்டைப்பற்றிப் பாரதியார்,

சினங்கொள்வார் தமைத்தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவார் ஒப்பாவார்; சினங்கொள் வார்தாம்
மனங்கொண்டு தங்கழுத்தைத் தாமே வெய்ய
வாள்கொண்டு கிழித்திடுவார் மானு வாராம்;
தினங்கோடி முறைமனிதர் சினத்தில் வீழ்வார்;
சினம்பற்றிச் சொல்லுவதற் களவே இல்லை;
சினம்பிறர்மேல் தாங்கொண்டு கவலை யாகச்
செய்ததெணித் துயர்க்கடலில் வீழ்ந்து சாவார்.[156]

156. பா.க : பாரதி அறுபத்தாறு - 8

என்று கூறுவார். ஆகவே, வெகுளியை விடத் தீயது இல்லை என்று சொல்லவேண்டும். வாழ்க்கையில் மனமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் வாழ்நாளைப் பெருக்குவதாகப் பெரியோர் பணிப்பர். அகத்திலும் முகத்திலும் தோன்றும் இந்த மகிழ்ச்சியைச் சினம் சிதைத்து விடுகின்றது. சினம் கொள்பவர் சினத்தால் பிறரை அழித்து விடலாம் என்று கருதுகின்றனர். சினம் தம்மையும் அழிக்கின்றது என்பதை அவர்கள் அறியாதவர்களாய் உள்ளனர்.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் (305)

என்பது பொய்யாமொழி. சினம் யாரிடமிருந்து தோன்றுகிறதோ அவர்களைத்தான் அது முதலில் அழிக்கின்றது. அவர்களை மட்டும் அன்று; அவர்கள் இனங்களையும் அழிக்கின்றது. இதனை வள்ளுவர் பெருமான் ஓர் அழகிய உவமையினால் தெளிவாக்குவர்.

பாறை நிலத்தின்மேல் ஒருவனுக்குச் சினம் பிறந்து அதனைக் கையால் அறைந்தால், அழிவது அவன் கையேயன்றிப் பாறையன்று. சினத்தைப் பொருளென்று கொண்டவன் தானே அதைப்போல் கேடுறுகின்றான். கொண்டவன் கேடு உறுதி; கொள்ளப் பெற்றவன் கேடு அவ்வளவு உறுதி இல்லை என்பதும் இங்கே நினைவு கூர்தற்குரியது. அதிலும், சினம் கொண்டவனைவிட கொள்ளப்பட்டவன் தக்கவனாய்ப், பாறை போலத் திண்ணிய உள்ளம் உள்ளவனாய், மெய்ம்மையில் உறுதி மிக்கவனாய், நிலைகுலையாதவனாய், அஞ்சாதவனாய், பொய்ம்மைகளுக்கு அசைந்து கொடுக்காதவனாய், எதிர்க்கும் துணிவில் சிறந்தவனாய் இருந்துவிட்டால் யார் சினமும் அவனை எதுவும் செய்தல் இயலாது. இந்த அழகை, பாலை நிலத்து அறைந்தவனது கை பிழையாதது ஒக்கும் என்பதில் மேலும் காண்கிறோம்.

இனத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று (307)

என்ற வள்ளுவத்தில் இந்த உவமை ஒளி விட்டுத் திகழ்வதைக் காணலாம்.

'இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்,
புணரின் வெகுளாமை நன்று' (208)

என்னும் குறள் எதிரியின் சினத்தைப் பொறுத்து அதனை வெல்லும் திறத்தை அறிவுறுத்துவதைக் காணலாம். வெகுளி கொண்டவனுக்கு அறிவுரை கூறுவது போல, வெகுளப்பட்டவனுக்கும் கூறும் அறவுரை இதுவாதலை ஈண்டுக் காணலாம். எதிர்க்கும் முறையையும் இது அறிவுறுத்துகின்றது. பிறர் சினம் கொள்ளும்போது தானும் சினம் கொள்ளல் ஆகாது; அது மேன்மேலும் சினத்தை எழுப்பும். சினத்தை எதிர்க்க வேண்டுமானால், எதிர்ப்பில் வெற்றி வேண்டுமானால், பலசுடர் சேர்ந்து எரியும் நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்த போதிலும், அப்போதும், கூடுமானால், சினம் கொள்ளாமையே நன்று.

கோபித்துக் காரியத்தை முடித்துக் கொள்ளலாம் என்று சிலர் எண்ணலாம். உள்ளம் கவர்ந்து சினம் ஓங்கியவுடனே உள்ளுதலின் ஆற்றல் கெட்டு உள்ளியதையும் நடவாதபடி செய்து விடுகின்றதை, நம் அநுபவத்தில் காணலாம். மன இயற்கை இவ்வாறு இருப்பதனால் உள்ளத்தில் சினத்திற்கு இடம் கொடுக்காமலிருந்தால் எண்ணியவற்றை இனிது எய்தலாம்; விரைவாகவும் அடையலாம்; முழுமையும் பெறலாம்.

உள்ளிய தெல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின் (309)

என்ற வள்ளுவம் இக்கருத்தினை எடுத்துக் காட்டுகின்றது. இக்குறளில் வெகுளியை 'உள்ளத்தான் உள்ளான்'

என வந்ததனால், போலியாக மனத்தில் சினம் கொண்டு அதனை மறைந்து விடுதலும் ஓரளவு காரியங்கள் நிறை வேறுதலுக்கு நல்லது என்பதும் தெளிவாகும். சினத்தில் அளவு கடந்து சென்றவர் செத்தவர்க்கு நிகராவர்; சினத்தைத் துறந்தவர் துறவிகட்கு நிகராவர் என்பது பொய்யாமொழி (310).

8. **இன்னாசெய்யாமை:** இல்லறத்தில் ஒழுகுவார் போற்ற வேண்டிய இக்கருத்தைத் தாயுமான அடிகள்,

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே[157]

என்ற பகிர்கின்றார். இக்கருத்தைச் செயற்படுத்துவதில் எவ்வித இடையூறும் தமக்கு நேரிடாதிருக்கவேண்டும் என்று,

எவ்வுயிரும் என்னுயிர்போல்
எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை
செய்யாய் பராபரமே![158]

என்று பாடலின்மூலம் தெய்வ அருட்கருணையைச் சித்திக்க வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றார்.

பிறருக்கும் பிற உயிர்கட்கும் இனிய அல்லாதன செய்தல் அழுக்கு நிலை; செய்யாத நிலை அழுக்கற்ற நிலை. சிறப்பைத் தருகின்ற செல்வம் பெறுவதாக இருந்தாலும் பிறர்க்கு இன்னா செய்யாமல் வாழ்வதே மாசற்றவர்களின் கொள்கையாகும் (311). ' பிறர் செற்றம் கொண்டு தமக்குத் தீமை செய்தபோதிலும் அவர்களுக்கு அதற்கு ஈடாகவும் இன்னா செய்யாதிருப்பது மாசற்றவர்களின்

157. பராபரக் - 221
158. ௸ - 65

கொள்கையாகும் (312). தாம் ஒன்றும் செய்யாதிருக்க, தமக்கு வேண்டுமென்றே துன்பம் செய்தவர்களை அடக்குவதற்காகத் திருப்பி இன்னா செய்யலாம் என்ற எண்ணம் மனத்தில் எழுதல் கூடும். ஆனால் அவ்வாறு இன்னா செய்தபின், அதுவும் செய்தவர்களுக்கு நீங்காத துன்பத்தை விளைவிக்கும். ஆகையால் அதுவும் கூடாது என்கிறார் வள்ளுவர் பெருமான் (313). துன்பம் செய்தவர்களை ஒதுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றலாம். அறிவுடையவர்கள் அவர்களைத் திருத்துவதற்காகக்கூடக் கண்டிப்பதில்லை. மக்கள் ஒருவரையொருவர் தண்டிப்பதற்கு உரிமையற்றவர்கள். துன்பம் செய்தவர்கள் தமது செய்கையை உணரக் கூடியவர்களாகவும், உணர்ந்து வருந்தக் கூடியவர்களாகவும் நாணயமுடையவர்களாகவும் இருந்தால் அப்படிப்பட்டவர்கள் மனம் திருந்துவதற்கு வேறு ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமேயன்றி, ஒறுப்பது கூடாது. அந்த ஒன்று அவர்கள் நாணும்படியாக அவர்கட்கு இனிய நன்மை செய்வதுதான். மேலும் அவர்கள் செய்த தீமையையும் தாம் செய்த நன்மையையும் மறந்து விடல் வேண்டும் என்பது வள்ளுவர் பெருமானின் அறவுரை; அறிவுரை.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (314)

என்பது அவர்தம் திருவாக்கு.

காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாதலின் நாணிய வருமே[159]

என்ற ஓரம்போகியாரின் வாக்கும் இதையொட்டியதே. தலைவிக்குத் தலைவன் செய்த கொடுமை அவனது பரத்தமை. தலைவன் இவ்வாறு கொடுமை செய்த காலத்தும் அதனைப் பொருட்படுத்தாமல் எதிரேற்றுக் கொள்ளும்

159: குறுந். 10.

தலைவியின் செயல் தலைவனுக்கு நாணத்தை உண்டாக்கும்.

பிறரைத் தண்டிப்பதில் சிலர் இன்பம் கொள்ளுவதும் உண்டு; பிறர் துயரத்தில் கொள்ளும் அதுவும் ஓர் இன்பமாகுமா? அந்த வெற்றின்பமும் நிலைக்காது. 'ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்', (156). இந்தச் சிறிது நேரச் சிற்றின்பத்திற்காக எந்நாளும் பேரின்பம் பயந்து கொண்டிருக்கும் தமது பெருந்தன்மையை இழந்துவிட அறிஞர் ஒருப்படார். தனக்கு வலிமைகூடி வந்த காலத்தும், திரும்பத் திரும்ப ஒருவன் பகைமை பாராட்டி வந்தபோதும், சிறிதளவு கூட மனத்தாலும் இன்னாதன செய்யாதவர்களே தலை சிறந்தவர்கள் ஆவர்!

எனைத்தானும் எஞ்ஞான்றும்
யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை (317)

என்பது வள்ளுவம். மனத்தாலும் தீமை விளைக்காமலிருப்பதே அறங்களில் தலையாயது. இதுவே துறந்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத நோன்றாகும்.

இன்னா செய்யாமல் இருப்பதற்கு வழி ஒன்று காட்டுவார் வள்ளுவர். மற்ற உயிர்களின் துன்பத்தைத் தம் துன்பம்போல் உணர்வதே அது. இந்த உணர்வு இல்லாவிடில் அறிவால் ஆகும் பயன் ஒன்றும் இல்லை (316). ஆகையால்தான் துன்பம் என்று உணர்ந்தவற்றை மற்றவனுக்குச் செய்யாமல் விடவேண்டும் (316). பிறர் இன்னா செய்யும்போது தன் உயிர்க்குந் துன்பம் விளைவதை அறிந்தவன் மற்ற உயிர்க்கு இன்னா செய்வது ஏனோ? (218). முற்பகலில் பிறர்க்கு இன்னா செய்தால் பிற்பகலில் தமக்குத் துன்பங்கள் தாமாகவே வரும். இஃது அறத்தின் ஆணை. (இதனைச் சித்தாந்த முறையிலும் விளக்கலாம்

விரிவஞ்சி அங்குப் போகவில்லை). துன்பம் எல்லாம் செய்தவர்களையே சாருமாதலால், துன்பம் இல்லாமல் வாழ விரும்புவோர் ஒருவர்க்கும் துன்பம் செய்யார்.

மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யும்போது அந்த உயிர் துன்பப்படுவதாகத் தோன்றும். செய்த துன்பம் அந்த உயிரின் உடலளவில் சிறிது நேரம் தாக்கி நீங்கும். ஆனால் உண்மையாகத் துன்பம் உறுவது செய்தவர்களின் மனமே. செய்தவர்களின் உடலில் துன்பம் தாக்கா விட்டாலும், அவர்களுடைய மனம் அந்தத் துன்பத்தைப் பட்டு வருந்தும். மனச் சான்று பண்பட பண்பட, இந்த உண்மை தெளிவாக விளங்கும். இதனை வள்ளுவர்பெருமான்,

நோய்எல்லாம் நோய்செய்தார்
மேலவாம்; நோய் செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர் (320)

என்று கூறுவர். 'துன்பம் எல்லாம் செய்யப்பட்டவர்களுக்கு அல்ல; செய்தவர்கட்கே உரிமையாய்ச் சேரும்'- நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் - என்று அறத்தின் ஆணையாக விளக்குவர் அப்பெருமான்.

9. **கொல்லாமை:** கொல்லாமையைப் பற்றித் தாயுமான அடிகளின் வாக்குகளாகக் காணப்பெறும்.

கொல்லா விரதம் குவலயமெல் லாம்ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே[160]

கொல்லா விரதம்ஒன்று கொண்டவரே நல்லோர்மற்(று)
அல்லாதார் யாரோ? அறியேன், பராபரமே[161]

என்ற இரண்டு பராபரக் கண்ணிகளில் கொல்லாமை என்ற நோன்பு தெளிவாக உணர்த்தப்பெறுகின்றது.

160. தா. பா:பராபரக். 54
161. ஷை. ஷை 192.

திருக்குறள் துறவறத்து நோன்புப் பகுதியில் இஃது இறுதி அதிகாரம்; முதல் நோன்பு புலால் மறுத்தல்; இந்த இரண்டின் இடையில் தவம், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை என ஆறு நோன்புகள் சொல்லப்பெற்றதை நினைவு கூர்கின்றோம். திருவள்ளுவர் கூறும் 'நோன்புகள்' செலவில்லாதவை; ஆனால் பெரும் பயன் விளைவிப்பவை; இயல்பாக உயிராற்றல், அருளாற்றல் பெருகுவதற்கு ஏற்றவை; அடிப்படைக் குண நலன்கள் இங்கு மணப்பதைக் கண்டு மகிழலாம். இந்த எட்டு நோன்புகள் மிகவும் தூயனவாய் அமைந்து இல்வாழ்வானின் உள்ளத் துறவு மேம்பட்டுச் சிறந்தோங்கி நிலைபெறத் துணை புரிகின்றன.

வள்ளுவர் பெருமான் முதலில் புலையும் இறுதியில் கொலையும் நிறுத்தி ஏனைய ஆறு நோன்புகளையும் அவற்றின் இடையில் இணைக்கி வைத்திருப்பதை நோக்கினால், 'புலையும் கொலையும் தவிர்', 'நோன்பு என்பது கொன்று தின்னாமை'[162] என்ற பொன்மொழிகளின் சிறப்புப் புலனாகும். திருவள்ளுவர் பெருமானே இந்த அதிகாரத்தில் 'கொலை வினையராகிய மாக்கள் புலை வினைஞர்' (329) என்று இரண்டு குணங்களையும் இணைத்துக் காட்டுவர். அருட்பெருஞ் செல்வர் வடலூர் வள்ளலார்,

> உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும்
> உடையவர்கள் எல்லாம்
> உறவினத்தார் அல்லர்அவர்
> புறஇனத்தார்[163]

என்று உலக மக்களை இரண்டே சாதியராகப் பிரித் "புலை கொலையுடையவர்கள் புறவினத்தார், புலால்

162. கொன்றை வேந்தன் - 58
163. திருவருட்பா - ஆறா, திருமுறை - அருள் விளக்க மாலை - 71:

மறுத்தலும் கொல்லாமையுமாகிய நோன்புகளையுடைய வரே அகவினத்தார்' என்று தெரிவிப்பார். இதனால் இரு பேரறங்களும் ஒன்றுக்கொன்று இனமாய் இணைதலைத் தெளிவாக அறியலாம்.

உலகில் அன்றாட வாழ்வில் நிகழும் கொலைகள் எண்ணற்றவை; காய், கனி, கிழங்கு, கூலம் முதலியவற்றைப் போதிய அளவு பெற முடியாத குறைவாலோ, போதிய அளவு விளைவிக்க முடியாத காரணத்தாலோ பிற உயிர்களை உணவுக்காகக் கொல்லும் கொலையும் நிகழ்கின்றது. இவற்றுள் வறுமையால் நிகழும் வேறு கொலைகளும் உள்ளன. கற்புக் கொலை, அறிவுக்கொலை, மானக்கொலை, ஒழுக்கக்கொலை, அன்புக்கொலை, இங்ஙனம், அம்மம்ம! எண்ணற்ற கொலை வகைகள் தொடர்ந்து நடைபெற்றவண்ணம் உள்ளன. இவற்றை யெல்லாம் கருத்தில்கொண்டு வள்ளுவர் பெருமான் இவை யாவும் படைப்பின் அரிய நோக்கத்தைப் புறக்கணிப்பதால் விளைவனவாகும் என்று உணர்கின்றார். இங்ஙனம் உணர்ந்தவர் பல உயிர்களையும் காக்கவேண்டிய அறத்தை வலியுறுத்துகின்றார். அறநூல்கள் தொகுத்துக் கூறிய அறங்கள் பலவற்றிலும் தலையாய அறம், உள்ள வற்றைப் பகுத்து உண்டுபல்லுயிர்களையும் காக்கும் அறமே என்று தெளிவுபடுத்துகின்றார் (332). நியாயவிலைக் கடைகள் இதற்காக ஏற்படுத்தப்பெற்றவை. ஆயின், அங்கும் மனிதனுடன் பிறந்த சாத்தான் தன் கைவரிசையைக் காட்டுகின்றான். ஓர் உயிரையும் கொல்லாமல் இருப்பதுவே அறமான செய்கையாகும். கொல்லுவது பாவச் செயல் அனைத்தையும் தருவதாகும் (321).

இல்வாழ்க்கைக்குரியனவாய் எடுத்துக் காட்டப் பெற்ற ஒப்புரவும் ஈகையும் துறவறத்து நோன்புகளில் முடிபோன்ற கொல்லாமை அதிகாரத்தில் முக்கியக் குறிப்

களாய் வந்தமையால் இல்வாழ்க்கைக்கே துறவறச் சிறப்பும் உரியதென்பது தெற்றெனத் தெளிவாகும். நல்லாறு எனப்படுவது கொல்லாமை; பிற உயிர்களைக் கொலை செய்து அவற்றின் ஆயுளை இடையிலே குறைப்பவர்கட்கு, இடைக்காலத்திலேயே ஆயுள் குன்றி இறப்பு நேரிடுகின்றது (324). மக்கள் வறுமையில் நெளிவதற்குமுன் கொலை செய்த தீவினை காரணமாய் விடுகின்றது.

சில சமயம் எதிர்பாராமல் பல்வேறு கொலைகள் நடை பெறுகின்றன. 'தம்மைக் கொல்ல வருவது பசுவே யானாலும், அதனைக் கொன்று தீர்ப்பதே கடமை' என்பதே சிலரது கொள்கையாக உள்ளது! எத்தனையோ பேர் சொத்துக்காகவும் அரசு பதவிக்காகவும் உடனிருப்பவர்களையே கொன்று தீர்க்கின்றனர். பண்டங்கள் பறிப்புக்காக எத்தனைக் குழந்தைகள், எத்தனைப் பெண்டிர், எத்தனை வழிப்போக்கர் நாட்டில் கொலையுண்டு போகின்றனர். தேர்தல் காலத்தில் உயிரிழப்பவர்கள் எத்தனை பேர்! வாழ்க்கை சில சமயங்களில் போராட்டமானதாக வடிவெடுக்கும்; மற்றோர் உயிரைப் போக்கினாலன்றி தன் உயிர் வாழ்க்கைக்கு இடம் இல்லாததுபோல் தோன்றும். இந்த நிலையிலும், தன் உயிர் நீங்குவதனாலும் தான் வேறொன்றன் 'இனிய உயிரை' நீக்கும் கொலையைச் செய்யலாகாது.

தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை (327)

என்பது வள்ளுவம். 'பிறிது இன்னுயிர் நீக்கும் வினை' என்பதில் உயிர் 'இன்னுயிர்' என்று வந்திருப்பதை நோக்கினால் வள்ளுவர் பெருமான் உயிரை இப்படி விதந்து அதன் அருமை புலப்பட வைத்துள்ளமையைக் கண்டு வியப்பெய்துகின்றோம். கொலையால் ஏற்படும் நல்ல பயனாகிய ஆக்கம் பெரிது என்றாலும், சான்றோர் அந்த ஆக்கத்

மைதப் பொருட்படுத்தார்; தீநெறிகள் மிகவும் கடைப்பட்டதாகவே கருதுவர் (328).

(ஆ) ஞானப்பகுதி

அடுத்து, துறவறவியலிலுள்ள ஞானப்பகுதியைச் சிந்திப்போம். இப்பகுதியில் நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்ற நான்கு அதிகாரங்கள் உள்ளன. ஆழ்ந்து சிந்தித்தால் இந்த நான்கும் பாயிரப் பகுதியிலுள்ள நான்கு அதிகாரங்களுடன் பொருள் பொருத்தம் கொண்டு அமைந்திருப்பதைத் தெளிவாக அறியமுடியும். ஞான இயல்பும் இறைவன் இயல்பும் ஒன்று போன்றவை. கடவுள், மழை (இறையருள் - அம்மை), நீத்தார், அறம் என்ற நான்கும் முறையே ஆண்டவன், அவர் ஆற்றல், அந்த ஆற்றலோடு இணங்கிய துறவோர், அவர்கள் கடைப்பிடிக்கும் அறம் ஆகியவற்றைக் குறிப்பதைக் காணமுடிகின்றது.

ஆண்டவன் நிலைத்தவர்; உலகம் நிலையாதது. ஆதலால் ஞானப்பகுதியில் முதல் அதிகாரம் நிலையாமையாய் அமைந்தது; இறைவனது அருளாற்றல் மழை உருவாய் பாயிரத்தில் இரண்டாம் அதிகாரமாக நிறைந்தது; இந்த ஆற்றலோடு நெருங்குதல் என்னும் துறவு ஞானப் பகுதியில் இரண்டாம் அதிகாரமாய் நின்றது! வான் சிறப்பு (மழையின் சிறப்பு) அம்மை எனும் ஆற்றலில் ஒன்றி அப்படித் துறந்தோர் பெருமை அந்த ஆற்றலுக்கு மூலமாகிய இறைவன் என்னும் மெய்யை - செம்பொருளைஉணர்தல் ஆதலின் பாயிரத்தில் நீத்தார் பெருமை அமைந்ததுபோல ஞானப்பகுதியில் மெய்யுணர்தல் அமைந்துள்ளது. மெய் உணர்ந்தவரே நீத்தார்; நீத்தாரின் அவா அற்ற கடமைகள் அறம் எனப் பாயிரத்தில் வந்துள்ளது போல, இங்கே ஞானப்பகுதியில் அவா அறுத்தல் இறுதியாக நின்றுப் பொலிவு பெறுகின்றது.

சாத்திர நூல்களில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்பன ஞானத்தின் கூறுகள் என்று தெளியப் பட்ட உண்மைகள். குருமுகமாய்க் கேட்டலால் நிலையாமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்த விளக்கத்திற்குப் பிறகு நிலையாக உதவி வரும் அருளைச் சிந்தித்து அதனுடன் நெருங்கி வரும் துறவை எய்த முடிகின்றது. சிந்தித்ததன் பயனாகக் கூடிவரும் தெளிவால் தெய்வம் மெய்யுணர்வு ஏற்படுகின்றது. நிட்டையினால் அவா என்னும் மலவாதனை நீங்குகின்றது. ஆகவே, இப்பகுதியில் நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்னும் நான்கு நிலைகளும் உண்டாகின்றன; இவை இப்பகுதியில் இடம் பெறுகின்றன. இவற்றை ஒவ்வொன்றாகச் சிந்திப்போம்.

1. **நிலையாமை:** வழிநடையை மேற்கொள்பவன் வழியின் தன்மைகளை அறிந்து கொண்டு பயணம் செய்யும் போது கலக்கமும் தயக்கமும் கொள்ளாமல் அஞ்சாமல் நடக்க முடியும். வழி நல்வழியாகவும் கல்வழியாகவும் முள்வழியாகவும் இருக்கலாம் என்று முன்னமே அறிந்திருந்தால் அவற்றைக் கடக்கும் கவலை ஏற்படாது. வாழும் வாழ்க்கையும் அப்படிப் பட்டது. உடல், உயிர், செல்வம் இவற்றின் நிலையற்ற தன்மைகளை அறிந்து கொண்டால் பிரிவோ மாறுதலோ இயல்பாக நேரிடும் போது மனம் கலங்கி வருந்திச் சோர்வடைய நேரிடாது. நிலையாமை உணர்வு வாழ்க்கையின் தன்மையை உள்ளவாறு அறிந்து அஞ்சாமல் நின்று கவலையற்று வாழ்க்கையை நடத்திச் செல்ல உதவுகின்றது. மெய்ப்பொருளை உணர்வதற்கும் இவ்வுணர்வு துணை நிற்கும். இங்கு செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை சிந்திக்கப் படுகின்றன.

செல்வ நிலையாமையை விளக்கும் போது கூத்தாடும் இடத்தை நினைக்கச் செய்கின்றார் வள்ளுவர் பெருமான்.

கூத்தாடும் இடத்தில் மக்கள் முதலில் சிறுகச் சிறுக வந்து சேர்ந்து இறுதியில் எல்லாரும் தொகுப்பாய் எழுந்து கலைந்து போகின்றனர். அங்ஙனமே செல்வம் சேரும்போது சிறுகச் சிறுகச் சேர்ந்து குலையுங்காலத்தில் ஒன்றாய் அழிந்து விடுகின்றது.

கூத்தாட் டவைகுழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று (332)

என்பது வள்ளுவம். இத்தகையச் செல்வத்தை சேரும் போதே பயன் படுத்தல் வேண்டும். நிலையான அறச் செயல்களை அப்பொழுதே செய்தல் வேண்டும் (333).

யாக்கை நிலையாமையை மிகச் சுவையாக விளக்கு வார் அப்பெருமான். நாள் என்பது ஒரு கால வரையறை போல் தோன்றுகின்றது. அதனால் ஒவ்வொரு நாளும் கழிவதைக் கண்டு பலரும் மகிழ்கின்றனர். ஆனால் உண்மையில் ஒவ்வொரு நாள் கழியும்போதும் உயிர் வாழும் வாழ்நாள் ஒவ்வொன்றாகக் குறைகின்றது. இதை உணர்ந்தால் உண்மை விளங்கும். நாள் என்பது ஒரு கால வரையறைபோல் காட்டினாலும் அஃது உயிரை உடம்பிலிருந்து ஈர்ந்து செல்கின்ற வாளாகும் என்பது விளங்கும்.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வாகப் பெறின் (334)

என்பது வள்ளுவம். உடம்பிலிருந்து உயிர் பிரியும்போது பேச முடியாதபடி நாக்கை அடக்கி விக்குள் மேலெழுந்து வரும். அந்த நிலைவந்து சொல்லும் செயலும் செய்யத் தக்க நல்வினையெல்லாம் விரைந்து செயல் வேண்டும் (335). உடம்பிலிருந்து உயிர் பிரியும் நிலையை,

மேல்எழுந்துஓர் வாயுக் கிளர்ந்து
மேல்மிடற்றினை உள்எழ வாங்கிக்

காலும்கையும் விதிர்விதிர்த்து ஏறிக்
கண்உறக்கம்அது ஆவதன் முன்னம்[164]

என்றும்,

மடிவழி வந்துநீர் புலன்சோர
வாயில்கட்டிய கஞ்சியும் மீண்டே
கடைவழி வாரக் கண்டம் அடைப்பக்
கண்உறக்கம்அது ஆவதன் முன்னம்[165]

என்றும் மிக அருமையாக விளக்குவார் பெரியாழ்வார்.

இறுதிநாள் என்று வரும் என்று அளவுபடுத்திச் சொல்வதற்கில்லை. நேற்று நன்றாக இருந்த ஒருவன் இன்று இல்லாமல் இறந்தான் என்று சொல்லும் பெருமையுடையது இவ்வுலகம்.

நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு (336)

என்பது வள்ளுவர் பெருமானின் திருவாக்கு. இதனை இளங்கோஅடிகள்,

இதுஎன வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை[166]

என்று தெளிவாக, நயமாக, நேராக விளக்குவதையும் கண்டு மகிழலாம்.

முட்டையிலிருந்து குஞ்சு வெளிவருகின்றது. பிறகு அஃது அதனுள் புகுவதில்லை. அந்த உறவுதான் உடம்பிற்கும் உயிர்க்கும் இடையே உண்டு. ஆகையால் இந்த உயிரும் காலம் வந்தபோது உடம்பைத் தனியே விட்டுப் பிரிந்து போய்விடும்.

---

164. பெரியாழ். திரு. 4.5:4
165. ஷை 4.5;5
166. சிலப். நடுகல் காதை - அடி 181-82

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு (337)

என்பது வள்ளுவம். மணக்குடவர் குடம்பையைக் கூடு என்று கொள்வர். வ. உ. சிதம்பரனாரும் இவ்வாறே கொள்வர். ஆனால் பரிமேலழகர், 'அது (கூடு) புள்ளுடன் தோன்றாமையானும், அதன்கண் அது மீண்டும் புகுதல் உடைமையானும், உடம்பிற்கு அது (கூடு) உவமை ஆகாமை அறிக' என்று மறுப்பர். இறப்பு உறங்குவது போன்றது; பிறப்பு உறங்கி விழிப்பது போன்றது(339); இதற்கென நிலையான இடம் ஒன்றும் அமையவில்லை (340). ஆகவே விழிப்பு உள்ளபோதே கடமைகளைச் செய்து முடிப்பதுபோல் வாழ்வு உள்ளபோதே அறத்தைப் போற்றி உய்ய வேண்டும்.

2. அகத் துறவு: செல்வமும் உடம்பும் நிலையாமை கண்டபின், அருளுணர்வு மிகுந்து தன்னலம் அழிந்து விடும்; வாழ்க்கையில் பற்று முழுவதும் அற்றுப் போகும். திருவருள் ஒன்றே நிலையெனத் துணிந்து அதனில் நெருக்கம் கொள்ளுதலே 'துறவு' ஆகும். இந்த நிலையிலும் இல்லறத்திலிருந்து பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்து கடமை செய்வோரும் உளர். இவர்களுடைய நிலை '**அகத்துறவு**' ஆகும். சிலர் இந்நிலையில் 'சட்டி சுட்டடதடா கைவிட்டடதடா' என்று இல்லறத்தை விட்டுத் தன்வீடு, தன்பொருள் என்பவை இல்லாமல் வாழ்வர். இது '**புறத்துறவு**' என்று கூறப்பெறும்.

ஒருவன் எதனிடம் பற்றுக்கொண்டு வாழ்கின்றானோ அதனால் துன்பம் அவனுக்கு நேரும். எதனினின்று பற்றற்று வாழ்கின்றானோ அதனால் அவனுக்குத் துன்பம் நேரிடுவதில்லை. இந்த அறவுரையுடன் 'துறவு' அதிகாரம் தொடங்குகின்றது.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் (341)

என்பது வள்ளுவம். இங்கு 'நீங்கியான்' என்பதற்குப் 'பற்று நீங்கியான்' என்பது கருத்து. 'பொருளையே நீங்கியான்' என்பது கருத்தாகாது. 'பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை' (345) என்பதிலும் உடம்பின் மேல் வைக்கும் பற்றே மிகை; அப்படியிருக்கும்போது மற்றப் பொருள்களின்மேல் பற்று எதற்கு என்பது கருத்து. உலகில் பிறந்து விட்டதனால் அப்பிறப்புக் கேற்ற ஒழுக்கத்திற்குத் தேவை சிறிதாவது வேண்டப் படும். ஆயினும் தேவைகளை மிகக் குறைந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளுதல் நல்லது; அன்றியும், அந்தக் குறைந்த தேவையிலும் பற்றுக் கூடாது என்பது கருத்து.

உலகத்தில் பிறந்த மக்கள் உலகத்தின் நிலையாமையைக் கருதினாலும் அந்த உலகத்தில்தானே உலவிக் கொண்டிருக்க வேண்டும்? உடம்பு நிலையாமை கருதி 'யான்' என்னும் அகப் பற்றை நீங்கியிருக்கலாமேயன்றி, உடம்பை நீங்கியிருத்தல் இயலாதல்லவா? அங்ஙனமே வீடு, வாசல், செல்வம் முதலியவற்றின்மேல் 'எனது' என்னும் புறப் பற்றைத் துறக்க வேண்டுமானால், அந்த வீடு, வாசல் முதலியவற்றைத் துறக்க வேண்டும் என்னும் கருத்து பொருந்துமா? இவற்றை நன்கு அறிந்த மடாதிபதிகள் மடத்தையும் அதன் செல்வத்தையும் துறக்க வேண்டும் என்பது அசம்பாவிதம். பொருள்களை நீக்கி விடுதல் இயற்கையாகாது. அப்படியே மனைவி மக்கள் சுற்றம் நட்பு முதலிய எல்லோர்மீதும் பற்றுக் கூடாது.

> தந்தைதாய் தன்னுடன் தோன்றினார்
> புத்திரர் தாரம் என்னும்
> பந்தம்நீங் காதவர்க்கு[167]

167. சம்பந்தர் தேவாரம் 2. 79: 9

என்னும் தேவாரத்திருமொழியில் 'பந்தம் நீங்குதலே' கருத்தாய்க் கூறப்பெற்றிருத்தலை ஈண்டு நினைவு கூர்தல் வேண்டும். இங்ஙனமே,

> தந்தைதாய் மக்களே சுற்றம்என்று
> உற்றவர் பற்றி நின்ற
> பந்தம்ஆர் வாழ்க்கையை நொந்துநீ[168]

என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்திலும் 'பந்தம் நீங்கலே' கருத்தாய் அமைந்திருத்தலைக் காணலாம். முற்றத் துறந்தவர்களாய் இருக்க வேண்டுமானால் அனைவரையும் (தன்னுடன் இயற்கைக் கூட்டுரிமையுடைய மனைவியை யும்) தனித்தொழிய விட்டு ஒருவன் வெளியேறிவிட வேண்டும் என்பது கருத்தன்று.

பற்றற்ற வாழ்க்கை வேண்டுமானால் ஐந்து புலன் களையும் தன் வசப்படுத்தி வெல்ல வேண்டும்; புலன்கள் விரும்பும் எல்லா இன்பங்களையும் ஒருங்கே விடவேண்டும் (343). உடம்பு தான் அன்று; அதைத் தான் என்று உணர்வது ஒரு மயக்கம்; இதையே 'தேகாத்ம வாதம்' என்பர். பொருளுக்கும் தனக்கும் இடையே தோன்றும் தொடர்பும் உண்மையானது அன்று; அந்தப் பொருளைத் தனது என்று உணர்வது மற்றொரு மயக்கம். 'யான்', 'எனது' என்று தவறானவற்றை உணரும் இந்த மயக் கங்களைத் தீர்ப்பவன் வானோர்க்கும் அரியதான உயர்ந்த உலக வாழ்க்கையை அடைவான்.

> யான்எனது என்னும்
> செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும் (346)

என்பது வள்ளுவர் பெருமானின் திருவாக்கு. அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுகளையும் பற்றிக் கொண்டு விடாமல் மயங்குவோரைத் துன்பங்களும்

168. பெரி. திரு. 9. 7 : 1

பற்றிக் கொண்டு விடுவதில்லை (347). ஆகையால் பற்றுகளை முற்றத் துறந்தவர்களே தலையானவர்கள்; மற்றவர்கள் அந்தப் பற்றுகளால் மயங்கி துன்ப வலையில் அகப்பட்டவர்களாவர் (348).

ஏதாவது ஒன்றைப் பற்றி நிற்பதே உயிரின் இயல்பு. ஒரு திங்கள்கூட நிறைவு பெறாத குழந்தை கைக்கெட்டும் பொருள்களையெல்லாம் பற்றிக் கொள்வதைக் காணலாம். ஆகையால் எல்லாப் பற்றுகளையும் விட்டு வாழ வேண்டுமானால் இவை எல்லாவற்றையும் விடச் சிறந்த ஒரு பொருளைப் பற்றினால்தான் முடியும். அத்தகைய பற்று பற்றற்ற இறைவனுடைய பற்றேயாகும்; மற்றப் பற்றுகளை நீக்குவதற்கு இறைவனுடைய பற்றைப் பற்றிக்கொள்ளவேண்டும்.

> பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு (350)

என்பது வள்ளுவம்.

> 'பற்றது பற்றில்
> பரமனைப்பற்று மின்'[169]

என்பது திருமூலரின் திருவாக்கு.

> மற்றுப்பற்று, எனக்குஇன்றி நின்திருப்பாதமே
> மனம் பாவித்தேன்[170]

என்பது நம்பியாரூரரின் திருமொழி. பொருள்களோடு தொடர்பு பற்றோடும் நிகழலாம்; பற்றின்றியும் நிகழலாம். பற்றோடு நிகழும்போது துய்க்கும் நிலை அமையும்; பல பெரும் பயன்கள் தப்பும்.

169. திருமந். (298)
170. சுந்தரர் தேவாரம். 7.48:1 (திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகம்)

துய்ப்போம் எனினே
தப்புன பலவே[171]

என்பது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரின் நல்வாக்கு. பொருள்கள் எந்தப் பயனுக்காக இருக்கின்றனவோ அந்தப் பயனை அடைய முடியாது.

3. மெய்யுணர்தல்: வாழ்க்கையில் அறியாமையும் போலியறிவும் உள்ளவரையிலும் இல்லாத துன்பமெல்லாம் இருப்பதாகக் கொண்டு கவலையும் அச்சமும் மிகுந்து வருந்த நேர்கின்றது; உள்ள துன்பத்தைப் போக்கிக் கொள்ளவும் வழியறியாமல் திகைக்கவும் நேர்கின்றது. ஆகையால் நல்வாழ்க்கைக்கு மெய்யுணர்வு வேண்டும்; மயக்க உணர்வும் நீங்குதல் வேண்டும்.

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று உணர்வதே மயக்க உணர்வு; இந்த மயக்க உணர்வால் தான் துன்பமான வாழ்க்கை ஏற்படுகின்றது (351). மயக்க உணர்வு நீங்கி மாசற்ற மெய்யறிவு பெற்றவர்க்கு அந்த மெய்யறிவு துன்ப இருளை நீக்கி இன்ப ஒளியைத் தரும் (352). உயிர்களை 'மருள்' என ஒன்றும், 'இருள்' என ஒன்றும் 'மாசு' என ஒன்றும் பற்றிக்கொண்டு நாளும் துன்பம் கொடுத்து வருகின்றன. இந்த மூன்றும் நீங்கினால் உயிரினிடத்தில் ஞானம் என்னும் தெளிவு பிறந்து பேரின்பம் உண்டாகும். மக்களுக்கு ஏற்படும் சிக்கல்கட்குக் குறைவே இல்லை; மெய்யுணர்ந்தாருக்கு ஒரு சிக்கலும் இல்லை.

புற உடம்பு என்றாலும் புலன் உடம்பு என்றாலும் ஒன்றே. புலன்கள் ஐந்து; ஐம்புல உணர்வு மட்டும் உள்ளவரை 'ஐயுணர்வு உடையார்' என்று கூறி விடலாம். அறிவியல் சிறப்புகள் உள்பட உலகியல் நுகர்வுகள் அத்

171. புறம்-189

தனையும் இந்த ஐயுணர்வில் அடங்கிவிடும். புலன்கள் ஐந்துக்கும் தலைமை ஏற்று நடத்தும் வகையில் மனம் அவற்றைத் தன்மயமாக்கி அடக்கமாய் இயங்கும்படிச் செய்ய முடியும். அங்ஙனமின்றி அப்புலன் வழியில் மனம் தாழுமானால், மனத்தினால் அடையக் கூடிய மாட்சி களும் கல்விகளும் கலைகளும் பிறவும் மக்களால் அடைய இயலாது. இனி, புலனடக்கத்துடன் மனம் மாட்சிமைப் பட்டாலும் போதாது; மனமும் உயரறிவுடன் ஒன்றி அருளுணர்வு, அதாவது மெய்யுணர்வு, தன்னிடம் தலைப் படும்படி இணங்க வேண்டும். வெறும் புலனடக்கத்தால் மட்டிலும் பயன் இல்லை.

> ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
> மெய்யுணர்வு இல்லாத வர்க்கு (354)

என்ற மெய்யுரையைக் கூறுகின்றார் வள்ளுவர். எப் பொருள் எத்தன்மை யுடையதாகத் தோன்றினாலும் அந்தத் தோற்றத்தை உண்மை என மயங்காமல் அதன் மெய்த்தன்மையைக் காண்பதே மெய்யுணர்வாகும் (355). கற்பனவற்றைக் கசடறக் கற்று இவ்வுலகில் மெய்ப் பொருளைக் கண்டவர்கள் இத்துன்ப வாழ்க்கையில் மீண்டும் புகாத நன்னெறியை அடைவார்கள்; வீடு பேற்றையும் அடைவார்கள்.

> கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி (356)

என்பது வள்ளுவம்.

பிறவி எடுத்ததன் நோக்கம் மெய்ப்பொருளை உணர் தல். மீண்டும் பிறவி எடுக்காத நிலையை அடைவதே சிறப்பு. 'மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே'[172] ஈண்டு வாரா வழி அருளி'[173] 'பிறந்த பிறப்பறுக்

172. திருவா. சிவபுரா - அடி - 87
173. ஷை திருவெண்பா - அடி - 1

கும் எங்கள் பெருமான்'[174] என்பன இக்கருத்திற்கு அரணாக அமைகின்றன. எடுத்த பிறவியிலேயே இச்சிறப்பை மக்கள் பெற வேண்டும். பிறவியோ எத்தனையோ இடர்ப்பாடுகள் நிறைந்தது. ஒவ்வொரு பிறவியிலும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் உண்டாகும் இன்னல்கள் ஏராளம். ஆனால் எல்லாவற்றினுள்ளும் கலந்து எல்லாமாய் நிற்கின்ற ஒரு பொருளை உள்ளம் ஆராய்ந்து தெளிந்து உறுதியாக உணருமானால் மீண்டும் துன்பப் பிறவி ஏற்படாது என்பது உறுதி.

> ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
> பேர்த்துள்ள வேண்டா பிறப்பு (357)

என்பது வள்ளுவர் வாய்மொழி. துன்பப் பிறவிக்குக் காரணமான அறியாமை நீங்க வேண்டி, வீட்டுநெறிக்குக் காரணமான செம்பொருளைக் கண்டுணர்வதே மெய்யுணர்வாகும்.

> பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்பது அறிவு (358)

என்பது பொய்யாமொழி. விருப்பு, வெறுப்பு, மயக்கம் இந்த மூன்றுமே எல்லாத் துன்பங்கட்கும் காரணம்; இந்த மூன்றன் பெயரும் கெட வாழ்ந்தால் துன்பம் தொலையும் (360).

> யாம்மேல் உரைத்த பொருள்கட் கெல்லாம்
> காமம் வெகுளி மயக்கம் காரணம்[175]

என்ற சாத்தனார் வாக்கும் வள்ளுவர் வாக்குடன் ஒத்துள்ளமை கண்டு மகிழத்தக்கது. இந்த அதிகாரம் இல்வாழ்வார் உள்ளத்துறவுடன் நுண்மைகளிலும் மெய்யிலும்

174. ஷை ஷை-அடி - 48
175. மணிமேகலை. 30 : 252-3

வாழ்வாங்கு வாழும் சிறந்த செம்மையை எவ்வளவோ நுட்ப திட்பங்களுடன் விளக்கிக்கொண்டு திகழ்கின்றது.

4. **அவாவறுத்தல்:** அவாவறுத்தல் என்பதற்கு "புலன்களின்மேல் செல்லும் அவா' எனப் பொருள் கொண்டால் அது துறவற நெறியுடையாரைச் சாரும். பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்து மெய்யுணர்வு பெற்றவர் கட்கு அவாஅற்ற நிலைமை இயல்பாகிவிடும். ஒரு பொரு ளையும் விரும்பாமல் வாழும் அந்த நிலைமையே சிறந்த பொருளாகும். அதைப்போன்ற செல்வம் இவ்உலகில் இல்லை; அதற்கு நிகரானது வேறு எங்கும் இல்லை.

> வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
> யாண்டும் அஃதொப்பது இல் (363)

என்பது வள்ளுவம். தூய நிலையாகிய வீடு என்பது அவா இல்லாத வாழ்வாகும்; அது மெய்ப்பொருள் ஒன் றையே நாடி விரும்புவதால் வந்து அமையும்.

> தூஉய்மை என்பது அவாஇன்மை; மற்றது
> வாஅய்மை வேண்ட வரும் (364)

என்பது வள்ளுவர் வாக்கு.

அவாஅற்றலைப்பற்றி மேலும் வள்ளுவர் கூறுவது: பற்றற்றவர் எனப்படுவர் அவா அற்றவரே; மனைவி மக்கள் வீடு செல்வம் முதலியவற்றை மட்டும் துறந்தவர் கள் அவ்வளவு தூய்மையாகப் பற்று அற்றவர்கள் அல் லர் (365). ஒருவனை வஞ்சித்துத் துன்ப வாழ்க்கையில் செலுத்துவது அவா என்பதே; ஆகையால் அதற்கு அஞ்சித் தன்னைக் காத்துக் கொள்வதே உண்மையான துறவற மாகும். ''ஒருவர் இந்த அவாவைப் பராக்கால் காவா ராயின் அஃது இடமாக அவரறியாமற் புகுந்து பழைய இயற்கையாய் நின்று பிறப்பினை உண்டாக்குதலால் வஞ்சிப்பது' என்றார்' என்பர் பரிமேலழகர் (366). அவா

இல்லாதவர்கட்குத் துன்பம் இல்லை; அவா இருந்தால் எப்படியும் துன்பம் விடாமல் மேன்மேலும் வந்து கொண்டிருக்கும்(368). துன்பத்தில் துன்பம் என்பது அவாவே; அவாக் கெட்டால் இந்த உலக வாழ்க்கையிலும் இன்பம் இடையறாமல் நிற்கும்(369). அவா என்பது எல்லையற்றது; என்றும் நிரம்பாத தன்மையுடையது; விரும்பியது கிடைக்கக் கிடைக்க மேன்மேலும் வேறொன்றை நாடி அலையும் தன்மையுடையது; எவ்வளவு கிடைத்தாலும் அமைதி நல்காதது. டால்ஸ்டாயின் '**ஆறடி நிலம்**' என்ற சிறுகதை இந்த அவாவின் தன்மையை நன்கு தெளிவுறுத்த வல்லது. இத்தகைய அவா இருப்பின் வாழ்க்கையில் என்றும் அமைதி கிடைக்காது; ஓயாமல் தேடித்தேடி ஒன்றுவிட்டு ஒன்று பற்றி அலைய நேரிடும்; அதுவே நரக வாழ்க்கை. அமைதியான இன்பம் நல்கும் வீட்டு வாழ்க்கைக்கு இத்தகைய அவா இடையூறானது. ஆகையால் என்றும் நிரம்பாத தன்மையுடைய அவாவை நீக்கினால், அப்போதே என்றும் மாறாத அமைதியான வாழ்க்கை வாய்க்கும். அவாவற்ற அந்த நிலையே முக்தி என்பது. 'அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்' (திருவாய்-10.10:11) என்ற தொடரை உன்னுக.

3. போரில் அறம்

அக்காலத்தில் சான்றோர்கள் உரைத்த அறவுரையின் கனத்தால் போரிலும் அறக்கொள்கை கடைப்பிடிக்கப் பெற்றது. அறக்கொள்கை கடைப்பிடிக்கப் பெறாத போர்களும் நடைபெற்றிருக்கலாம். ஆனால் அவை பற்றிய இலக்கியச் சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. பண்டைத் தமிழ் வேந்தர்கள் போர் செய்யும் திறம் நமக்கு வியப்பூட்டுவதாகும். போர் செய்கின்றபோதும் போர் தொடங்குகின்றபோதும் இவ்வேந்தர்கள்பால் அறமே தலைசிறந்து நிற்பதைக் காணமுடிகின்றது. போர்குறித்து இருபாலும் மண்டி நிற்கும் வேந்தரை,

'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்' (புறம்-62)

என்று **கழாத்தலையார்** என்னும் சான்றோர் சிறப்பித்துக் கூறுவதைப் புறப்பாட்டில் காணலாம். சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழ வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் மண்ணாசையின் விளைவாகப் போருடற்றினர். கழாத்தலையார் என்ற சான்றோர் சேரமான் போர்க்களத்திருப்பதையறிந்து அவனைக் காணச்சென்றார். அவர் சென்று காணும்போது இரு பெரு வேந்தரும் பொருது விழுப்புண்பட்டு வீழ்ந்து கிடந்தனர். சேரமான் உயிர் நீங்குந் தறுவாயிலிருந்தான். புலவர் அவன் புகழ்பாடி வியந்தார். அரசன் தன் கழுத்தி லிருந்த ஆரத்தை வழங்கி இறவாப் புகழ்பெற்றான். சிறிது நேரத்தில் அவன் உயிரும் நீங்கியது. இருவரும் வீழ்ந்து கிடத்தலைக் காணுந்தோறும் புலவர் பெருமான் ஆராத் துயரம் எய்தி பாடிய பாட்டே புறம் 62. இதில் "செரு முனிந்து, அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர் தாமும் மாய்ந்தனர்; அவரை நிழல் செய்த குடைகளும் துளங் கின; அவர்தம் வெற்றியும் குடையும் நுவலும் முரச மும் ஒழிந்தன; போர் மறவர் தாமும் எஞ்சாது வீழ்ந் தமையின் அமரும் உடன் வீழ்ந்தது. இவர்தம் பெண் டிரும் பாசடகு மிசைதல், பனிநீர் மூழ்கல் முதலிய கைம்மைச் செயல்களை விரும்பாது, இவர்தம் மார்பகம் பொருந்தி உயிர் துறந்தனர்; இமையா நாட்டத்தவரும் நிறைய விருந்து பெற்றனர்; இவர்தம் புகழ் மேம்படுவ தாகுக" எனப் பாடிச் சிறப்பித்தார்.

தம்மொடு எதிர் நின்று பொரும் வேந்தன் அஞ்சிய போது அவனோடு பொருவது வீரம் அன்று; போர் அற மும் அன்று. பகை வேந்தர் போந்து தம் அரணை முற் றுகையிட்டுக் **காவல் மரத்தைத்**[176] தடியக்கண்டும் போர்

176. **காவல் மரம்** - ஒவ்வொரு வேந்தன் ஒவ்வொரு மரத்தைத் தன் வெற்றியைச் சிறப்பிக்கும்

செய்வதற்கு அஞ்சித் தம் அரணிடத்தே வேந்தர் மடிந்திருப்பரேல், அவரோடு பொருவது மானம் மிக்க தமிழ் வேந்தர்க்கு நாணுடைச் செயலாகக் கருதப்பெற்றது. இதனை ஆலத்தூர் கிழாரின் புறப்பாட்டால் அறியலாம். சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரை முற்றுகையிட்டு நகர்ப்புறத்திருந்த காவல் மரங்களைத் தன் படை வீரர்களைக் கொண்டு வெட்டுகின்றான். ஊருக்குள் அடைபட்டுக்கிடந்த கருவூர் மன்னன் மரங்கள் வெட்டப்பெறும் ஓசை தன் செவிப்பட்டும் போருக்கு வராது அஞ்சி மடிந்து கிடக்கின்றான். இதனைக் கண்ட புலவர் பெருமான் சோழனை நோக்கி,

> ''தண்ஆன் பொருநை வெண்மணல் சிதையக்
> கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
> நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
> வீகமழ் நெஞ்சினை புலம்பக் காவுதொறும்
> கடிமரந் தடியும் ஓசை தன்னூர்
> நெடுமதில் வரைப்பிற் கடிமனை இயம்ப
> ஆங்கினி திருந்த வேந்தனொடு ஈங்குநின்

மரமாக மேற்கொண்டு சிறப்பாக ஓம்பி வருதல் பண்டைத் தமிழ் வேந்தர் மரபு. அம் மரம் இரவு பகலாகப் போர் மறவரால் காக்கப்படுவது குறித்து அதனைக் 'கடிமரம்' என வழங்குவர். அது பகைவற்பாற் சிக்குண்டு வெட்டுப்படாதவாறு பாதுகாப்பது மானமுடைய வேந்தர்க்கு மறப்பண்பாகும். வேங்கை, புன்னை, வேம்பு முதலியன காவல் மரமாகப் பேணி வளர்க்கப்படும் திறம் தொகை நூல்களால் தெளியலாம். இத்தகைய மரத்தைப் போரில் வெற்றிமிகும் வேந்தன் தன் பகை வேந்தன் ஓம்பும் காவல் மரத்தைத் தன் வெற்றிக்குறியாக வெட்டி வீழ்த்துவது போர் மரபு. பரிசிலரும் வேற்றுப் புலத்துப் பெற்ற யானைகளை இக்காவல் மரத்தில் பிணித்து வைப்பது வழக்கம்.

சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தக வுடைத்தே''
—புறம். 36

[தண்- குளிர்ச்சி பொருந்திய; ஆன் பொருநை - தாமிர பரணியாறு; கருங்கை - வலிய கை; நவியம்-கோடாலி; பாய்தலின் - வெட்டுதலால்; வீகமழ் - பூ நாறுகின்ற; சினை - கொம்புகள்; காவு - காடு; கடிமனை - அரண் மனை; இயம்ப - ஒலிப்ப; சிலைத்தார் - இந்திர வில்லைப்போன்ற மாலையை யுடைய; கறங்க-ஒலிப்ப; மலைத்தனை - பொருதனை]

என்று பாடித் தெருட்டுவதைக் காணலாம்.

பகையும் போரும் இவ்வுலகில் எக்காலத்தும் இருந்து வரும். ஆயினும் பண்டைக்காலப் போர் முறையில் அறம் கடைப்பிடிக்கப்பட்டது. அக்காலத்தில் ஓர் அரசன் மாற்றரசனுக்குரிய நாட்டின்மீது படை எடுக்குங்கால் அந்நாட்டில் வாழும் உயிர்களை எல்லாம் நாசமாக்குவ தில்லை; பசுக்களையும், பார்ப்பார்களையும், பெண்டிரை யும், பிணியாளரையும், இவர் போன்ற பிறரையும் போர் நிகழும் நிலத்தை விட்டுப் புறத்தே போய்விடும்படி எச் சரித்து அவர்களை அகற்றுவான். இத்தகைய அறப் போர் பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதியிடம் அமைந்திருந்ததாக **நெட்டிமையார்** என்ற புலவர் பாராட்டுகின்றார்.

'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்(கு) அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர் பெறாஅ தீரும்
'எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்' என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிறு மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி' —புறம், 9.

[பிணியுடையீர் - நோயாளிகள்; இறுக்கும் - செய்யும்; விடுதும் - செலுத்துவோம்; அறத்தாறு - அறநெறி; நுவலும் - சொல்லும்; பூட்கை - மேற்கோள்; களிறு - யானை; விசும்பு நிழற்றும் - ஆகாயத்தை நிழல் செய்யும்]

என்று அறப்போர் புரிந்த பாண்டியனைப் புலவர் புகழ்ந்து வாழ்த்துவதைக் காணலாம்.

இல்லக்கிழத்தியுடன் இயைந்து இன்பமுடன் வாழ்வதற்கு அன்பு இன்றியமையாதது என்பதை அறிவோம். சிலர்மீது பகைகொண்டு ஒருவன் செய்யும் வீரச் செயல் கட்கும் அன்பே காரணமாக அமைந்து விடுகின்றது. வண்ணச்சீறடி மண்மகள் அறியாதவாறு மெல்லியலாய் வாழ்ந்த மங்கை நல்லாளாகிய கற்புக் கடம் பூண்ட கண்ணகி தன் கணவன் கோவலனுடைய புகழைக் காப்பதற்காகச் சீறி எழுகின்றாள். இதனைக் கவிஞர்,

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடுஞ் சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன்கேள்வனை
எங்கணா, என்னா இனைந்தேங்கி
மாழ்குவாள்,[177]

[எங்கணா - எவ்விடத்தாய்]

என்று கூறுவார். இங்ஙனம் சீறி எழுந்தவள்,

பாய்திரை வேலிப் படுபொருள் அறிதி
காய்கதிர்ச் செல்வனே: கள்வனோ என் கணவன்?[178]

[பாய்திரை - பரந்த அலை;வேலி - வேலியாகவுடைய]

என்று கதிரவனை நோக்கிக் கேட்கின்றாள். அவனும்

177. சிலப். துன்பமாலை - அடி 30 - 33.
178. ஷை ஷை - அடி 50 - 51.

'நின்கணவன் கள்வன் அல்லன்; இவ்வூரினை ஒள்ளெரி உண்ணும்' என்று மறுமொழி தருகின்றான் கதிரவன். 'ஏழை அழுதகண்ணீர் கூரிய வாளொக்கும்' என்பார்கள். செல்வச்செழிப்பில் பிறந்து வளர்ந்து கணவனது 'போற்றா வொழுக்கங்' காரணமாக மதுரை வந்து காற்சிலம்பு விற்கச் சென்ற கணவனை இழந்து கைம்பெண் கோலத்துடன் அழும் கண்ணகி ஆற்றிய ஓலம் கல்நெஞ்சத்தையும் கரைக்கும்; உருக்கும்.

ஆறிய கற்புடைக் கண்ணகி சீறிய கற்பினளாகிப் பாண்டியன் சபையில் வழக்குரைத்த திறன் கல்நெஞ்சத்தையும் கரையச் செய்துவிடும். நெஞ்சை நெகிழ்வித்து உருக்கும் அன்பே நெஞ்சை வன்மையுறச் செய்து பகைக்கவும் எதிர்க்கவும் அழிக்கவும் ஆற்றல் அளிக்கின்றது. இந்த உண்மை வள்ளுவரின்,

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை (76)

என்ற வாய்மொழிக்கு விளக்கம் தருவதுபோல் அமைகின்றது. ''அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாக நிற்கும் என்று சொல்லுவது அறியாமை; மறத்திற்கும் (துணிவான வீரச் செயலுக்கும்) அதுவே துணையாகும்.'' அரண்மனையை விட்டு வெளிவரும் கண்ணகி,

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்[179]
[பட்டாங்கு - உண்மை]

என்று சீறுகின்றாள். ஆவேசத்தின் கொடுமுடியில் நின்ற காலத்தும் அறவுணர்வு பிறழாது செயற்படுகின்றாள். தீக்கடவுளை நோக்கி,

179 - சிலப் : வஞ்சினமாலை. அடி-35 - 37.

''பார்ப்பார் அறவோர் பசுபத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க!''[180]

என்று வேண்டுகின்றாள் வீரபத்தினி. நெட்டிமையாரின் புறநானூற்றுப் பாடலின் சாயல் இதில் எதிரொலிக்கின்றதைக் காண்கின்றோம். மேலும், கண்ணகியின் கருணையையும் இங்குக் காண்கின்றோம். கண்மூடி வெறி கொள்ளாது கொடியாரையே தேடிக்கொண்டு செல்லுகின்றது பழந்தமிழ் அரசியல் பண்பாட்டில் ஊறி உரம் பெற்ற அவளது திருவுள்ளம்.

இன்னும் ஓர் அரிய பெருங்கொள்கை பண்டையோரிடம் காணப்பெறுகின்றது. போர்க்களத்தில் வீரர் அல்லாதார் மேலும், புறங்காட்டி ஓடுவார் மேலும், முதியோர் இளையோர் மேலும் படைக்கலம் செலுத்தலாகாது என்பது பழந்தமிழர் கொள்கை. இத்தகையோர் மீது படைக்கலம் செலுத்தும் போர் வீரரைப் 'படைமடம் பட்டோர்' என்று அறிஞர் பழித்துரைப்பர். வையாவிக் கோப்பெரும் பேகனின் கொடை நலத்தைப்பற்றிச் சான்றோரிடையே ஓர் உரையாடல் நிகழ்ந்தது. அவர்களுள் சிலர் அவன் மஞ்ஞைக்குப் படாம் ஈந்ததும் தன்பால் வரும் இரவலருள் முன் வந்தோர், பின் வந்தோர் என அறியாதும், வல்லார் மாட்டார் எனப் பாகுபாடு செய்யாதும் வரையாது வழங்குவதுபற்றி அவற்கு மடம்பட மொழிந்தனர். அதுகேட்ட பரணர்,

''வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே'

—புறம். 142

180. சிலப் : வஞ்சினமாலை - அடி 53-55

[மாரி - மழை; கடாம் - மதம்; கழல் - வீரக்கழல்; மடம் - அறியாமை; பிறர்படை மயக்குறின் - பிறர் படை வந்து கலந்து போரிட்டால்; படை மடம் படான் - அப்படையிடத்துத் தான் அறியாமைப் படான்]

என்று பாராட்டியிருப்பதைக் காணலாம். இல்லாதவர்க்கும் உள்ளவர்க்கும், கேளாதவர்க்கும் கேட்பவர்க்கும் வரையாது கொடுத்தலே 'கொடை மடம்' எனப்படும். இத்தகையக் கொடைமடம் பேகன்பால் அமைந்திருந்ததே யன்றிப் படைமடம் என்பது அவனிடம் இல்லை என்பது பரணரின் கருத்து.

போர் நடைபெறும் பொழுது இன்னாரோடு இன்னார் பொருதல், இன்னார்க்குப் பின் இன்னார் பொருதல் வேண்டும் என்ற முறையும் இருந்தது. வேந்தன் ஏவி னாலன்றித் தாமே சென்று வீரர் பொரலாகாது என்ற முறையும் இருந்து வந்ததைக் காண முடிகின்றது. பெரும் போர் நிகழுமிடத்து வேந்தர் தாமே முன் சென்று பொரும் முறையும் போர்த்துறைக்கண் காணப் பெறுகின்றன; பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவில் தன்னை எதிர்த்த முடிவேந்தர் இருவரும் குறு நில மன்னர் ஐவருமாகிய எழுவரும் தோற்றோடுமாறு தான் ஒருவனே வென்ற சிறப்பை நக்கீரர், ஆலம்பேரி சாத்தனார், கல்லாடனார் முதலிய சான்றோர் பலர் புகழ்ந்த பாடல்களில் காணலாம். இவர்களுள் இடைக் குன்றூர்க்கிழார் என்னும் சான்றோர் செழியன் காலத்து இருந்தவர். அவர் இச்செழியன் ஒருவனாய் நின்று பொருது வென்றதை ஒரு பாடலில் (புறம்-76) குறிப்பிடுகின்றார். ''ஒருவரை ஒருவர் அடுதலும், ஒருவருக்கொருவர் தொலைதலும் இவ்வுலகத்தே தொன்று தொட்டு வருவன; அவ்வாறு அடுதலும் தொடுதலும் நிகழுமிடத்து வெற்றி பெற்றோர் பலரும் பலருடைய துணை பெற்று அதனைப் பெற்றது

கேள்வியுற்றுள்ளோமே அல்லது, ஒருவனே துணிந்து நின்று பலராய்க் கூடி எதிர்ப்போரை வென்றது கேட்டிலம். பாண்டியன் ஒருவனாய் நின்று தன் பீடும் செம்மலும் அறியாமல் எதிர்ந்த எழுவர் நல்வலம் அடங்க வென்றது, இன்றுகாறும் யாம் கேட்டதன்று'' என்று வியந்து கூறியதை இப்பாட்டின் கண் சிறப்பித்துக் கூறியுள்ளதைக் காணலாம்.

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றுஇவ் உலகத் தியற்கை;
இன்றின் ஊங்கோ கேளலம் திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி
ஒலியன் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் தெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூட் செழியன்
பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதா னாகிப் பொருதுகளத்(து) அடலே[181]

[அடுதல் - கொல்லுதல்; தொலைதல் - தோற்றல்; இன்றின் ஊங்கு - இன்றையின் முன்; அரை - தாள்; மா சினை - கொம்பு; மிடைந்து - விரவி; தேம்பாய்- தேன்மிக்க; கறங்க - ஒலிப்ப; காண் - காட்சி; திரு - செல்வம்; செழியன் - பாண்டியன்; பீடு - தலைமை; செம்மல் - உயர்ந்த தலைமை; கழல் - வீரக்கழல்; நல் வலம் - நல்லவென்றி; ஒருதானாகி - ஒருவனாய்நின்று, அடல் - கொல்லுதல்]

என்ற பாடலில் இதனைக் கண்டு மகிழலாம்.

181. புறம்- 76

இராமகதையிலும் அறப்போர் ஒன்றைக் காண்கின்றோம். முதல்நாள் போரில் இராமனும் இராவணனும் போர்க்களத்தில் சந்திக்கின்றனர். இருவரிடையேயும் போர் மிக மும்முரமாக நடைபெறுகின்றது. இதுகாறும் போரில் தோல்வியையே காணாத இராவணனுக்குத் தோல்வி ஏற்படுகின்றது. மணிமுடியை இழந்த இராவணன் சந்திரனையும் சூரியனையும் இழந்த இரவையும் பகலையும் ஒத்துக் காணப்படுகின்றான். எல்லா உலகத்திலும் உயர்ந்தவன் என்றாலும்,

ஆற்றல் நன்னெடுங் கவிஞன்ஓர்
அங்கதம் உரைப்பப்
போற்ற ரும்புகழ், இழந்தபேர்
ஒருவனும் போன்றான்[182]

[ஆற்றல் நன்னெடுங் கவிஞன் - வல்லமைபெற்ற நல்ல சிறந்த கவிஞன்; அங்கதம் - வசைப் பாட்டு; பேர் ஒருவன்-பெருமைபெற்ற ஒருவன்]

மிக்க வல்லமைபெற்ற சிறந்த கவிஞன் ஒருவன் வசைப் பாட்டு பாட, அதனால் சீரும் சிறப்பும் வாய்ந்த ஒருவன் அனைத்தையும் இழந்து நிற்பது போல, இராவணன் காட்சி அளிக்கின்றான். அவன் இராமன் முன்பு நிற்கும் காட்சியைக் கம்பன்,

'அறங்க டந்தவர் செயல்இது' என்று
உலகெலாம் ஆர்ப்ப
நிறங்க ரிந்திட நிலம்விரல்
கிளைத்திட நின்றான்;
இறங்கு கண்ணினன் எல்அழி
முகத்தினன்; தலையன்;

182. யுத்த, முதற்போர் - 249

வெறுங்கை நாற்றினன்; விழுதுடை
யாலன்ன மெய்யன்[183]

[அறம் - தருமம்; ஆர்ப்ப - ஆர்ப்பரிக்க; நிலம் விரல் கிளைத்திட - கால் விரல் நிலத்தைக் கீறிக் கொண்டிருக்க; இறங்கு கண்ணினன் - கீழே பார்க்கும் கண்ணையுடையவனாய்; எல்-ஒளி; வெறுங்கை - ஆயுதங்களை இழந்த கை; நாற்றினன் - தொங்க விட்டிருப்பவன்; விழுதுடை ஆல் - விழுதையுடைய ஆலமரம்]

என்று காட்டுவான், இராவணன் நின்ற நிலையில் அவன் செருக்கெல்லாம் அழிந்து நிற்கின்றது. நேராகப் பார்க்கக் கூட கூசுகின்றான்; அவனது பார்வை கீழ் நோக்கியுள்ளது. முகத்தில் ஒளி இல்லை; தலையிலும் மணிமுடி இல்லாததால் பிரகாசம் இல்லை. பெரிய ஆலமரம் ஒன்று தொங்கும் விழுதுகளுடன் காட்சி அளித்தாற் போல், தனது இருபது கைகளைத் தொங்க விட்டுக் கொண்டு தன் உடலை இராமன்முன் காட்டிக் கொண்டு நிற்கின்றான். மானம் இழந்த நிலையில் இயற்கையிலேயே கருமை நிறம் வாய்ந்த அவன் உடல் இன்னும் கறுத்து விடுகின்றது; மீறி நிற்கும் நாணத்தால் கால் விரல்களால் நிலத்தைக் கீறிக்கொண்டு நிற்கின்றான். 'அறநெறிப்படி நில்லாது மனம் போனபடியெல்லாம் போகும் மனிதர்களின் செயல் இப்படித்தான் முடியும்!' என்று உலகத்தவர்கள் முழக்கம் செய்து நிற்கின்றனர்.

இந்நிலையில் அவனை வெல்லுதலும் எளிது; கொல்லுதலும் எளிது. இராமன் அவனது தனிமையைக்கண்டு இரக்கம் கொள்ளுகின்றான். விரைந்து இலங்கை மாநகரிலுள்ள சுற்றத்தாருடன் போய்ச்சேருமாறு பணிக்கின்றான். மற்றும்,

---

183. யுத்த. முதற்போர்-250

'அறத்தி னாலன்றி அமரர்க்கும்
அருஞ்சமம் கடத்தல்
மறத்தி னாலரி(து) என்பது
மனத்திடை வலித்தி[184]

[அறம் - தருமம்; அமரர் - தேவர்; அருஞ்சமம்-அரிய போர்; கடத்தல் - வெல்லுதல்; மறம் - அதருமம்; வலித்தி - உறுதியாகக் கொள்வாய்]

என்று அவனுக்கு அறவுரையும் கூறுகின்றான். 'தேவர்களாக இருந்தாலும் அக்கிரமத்தால் ஒன்றையும் வெல்ல முடியாது என்பதை மனத்தில் உறுதியாகக் கொள்வா வாயாக!' என்றல்லவோ அறம் வளர்த்த நம்பி இராவணனுக்கு உபதேசம் செய்கின்றான்.

இத்துடன் நிறுத்தி விடவில்லை. பின்னுங் கூறுவான் கோசலை நாட்டுடை வள்ளல்: ''இன்னும் போர் செய்ய விரும்பினால் உன்னுடன் இருக்கும் சுற்றத்தாரையும் சேனையையும் சேர்த்துக்கொண்டு நீ சேமித்து வைத்துள்ள படைபலத்துடன் போருக்கு வருவாயாக; இல்லையேல், எங்காவது போய் ஒளிந்து கொள்க. சிறை வைத்த செல்வியை என்முன் கொண்டு வந்துவிட்டு, உன் தம்பியாகிய வீடணனைத் தேவனாக மதித்து அவனிடம் அரசையும் ஒப்படைத்து விட்டு, நீ அவனுக்கு ஏவல் செய்து கொண்டிரு. இதற்கு நீ ஒருப்படாவிடில் 'எதிர்த்து நில் ஐயனே!' என்று சொல்லி என் எதிர் நின்று ஆவி துறப்பாய். 'பிழைத்துக் கொள்ளலாம்' என்று மட்டிலும் எண்ணம் கொள்ள வேண்டாம்'' என்று.[185] இன்னும்,

'ஆளை யாவுனக்(கு) அமைந்தன
மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை;

184. யுத்த. முதற்போர் - 252
185. யுத்த. முதற்போர் - 253-255.

இன்றுபோய்ப் போர்க்கு
நாளைவா'[186]

என்று காலத்தையும் கொடுத்து வேறொரு வாய்ப்பையும் தருகின்றான். இவன் அல்லவா அறம் வளர்த்த நாயகன்? இவ்வாறு எதிரிக்குத் துன்பம் வந்தபோதும் அதனைத் தனது வாழ்வுக்குத் துணையாகக் கொள்ளாது எதிரிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தைத் தருவதல்லவா பேராண்மை? இதனால்தான் கம்பநாடன்,

மறைகளே தேறத் தக்க
வேதியர் வணங்கற் பாலான்
இறையவன் இராமன்[187]

[மறைகள் - வேதங்கள்; தேறத்தக்க - ஆராய்ந்து அறியத் தக்க; இறையவன் - தலைவன்]

என்று போற்றுகின்றான் இராமனை.

வாலி உயிர்விடுந் தருணத்தில் சுக்ரீவனை அணைத்துக் கொண்டு சில கூறும்போது, பரம்பொருளே அறநெறி நிறுத்துவதற்காகவே இராமனாக அவதரித்துள்ளது என்று கூறுவான்.

மறைகளும் முனிவர் யாரும்
மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும்
துணிபொருள் துணிவில் தூக்கி
அறைகழல் இராம னாகி
அறநெறி நிறுத்த வந்தது
இறையொரு சங்கை இன்றி
எண்ணுதி எண்ண மிக்கோய்[188]

186. ஷை ஷை - 256
187. யுத்த. இந்திரசித்து வதை-51
188. கிட்கிந்தை - வாலிவதை - 132

[மறைகள் - வேதங்கள்; அயன் - பிரமன்; துறைகள்- சாத்திரங்கள்; முடிவு - சித்தாந்தம்; துணிபொருள் - தேர்ந்த பொருள்; துணி வில் - துண்டிக்கும் வில்; இறை - சிறிது; சங்கை - ஐயம்; எண்ணுதி - மனத்திற் கொள்; எண்ணம் - ஆலோசனை]

என்ற பாடலில் இதனைக் காணலாம். உயிர் விடுங் காலத்தில் கர்ணனுக்குப் பரஞானம் தட்டுப்பட்டது போலவே, வாலிக்கும் உயிர் போகுங் காலத்தில் அது தட்டுப்படுகின்றது.

எய்ப்புஎன்னை வந்து நலியும்போது அங்கு
ஏதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்[189]

[எய்ப்பு - இளைப்பு; கலிதல் - துன்புறுத்தல்]

என்று பெரியாழ்வார் கூறும் நிலை இந்த இருவருக்கும் ஏற்படாதது அவன் அருள்.

சான்றோர்: வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படக் கூடியவர்கள் சான்றோர். இவர்கள் துறவு நிலையில் கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்: நலம் தீங்குகளை ஒப்பாகக் கருதி இரண்டினிடத்தும் உவப்பு வெறுப்பின்றி ஒழுகும் நெறியினர். கணியன் பூங்குன்றனார் ஒரு சான்றோர். அவர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள (இப்போது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்) மகிபாலன் பட்டி என இப்போது வழங்கும் ஊரைச் சார்ந்தவர், பண்டித மணி மு. கதிரேசன் செட்டியார் பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊர் இது. கணியன் பூங்குன்றனார் எத்தகைய வேந்தர்களையும் பாடிற்றிலர். இதனைக் கண்ட அக்காலச் சான்றோர் பலர் வியப்பெய்தி இவரிடம் வந்து 'பாடு பெறு சான்றோராகிய நீவிர் எவரையும் பாடாதது ஏனோ?' என்று வினவ, அதற்கு அவர் கூறிய விடை:

---

189. பெரியாழ். திரு. 4. 10 : 1

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாதென்றலும் இலமே; மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்; ஆகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.[190]

[கேளிர் - உறவினர்; அன்ன - ஒப்ப; முனிவு-வெறுப்பு; தண் - குளிர்ந்த; ஆனாது - அமையாது; புணை - மிதவை; முறைவழி - ஊழின் வழி; திறவோர் - நன்மைக் கூறுபாடு அறிவோர்; மாட்சி - நன்மை]

என்றஇந்தப் பாடலால் அமைந்தது. "எல்லா ஊரும் எம் ஊர்; எல்லோரும் எம் உறவினர். கேடும் ஆக்கமும் தாமே வரின் அல்லது பிறர் தர வாரா. முன் நியதிப்படி வருகின்றன. நோயும் தானாக வருகின்றது; தானாகவே தீர்கின்றது. இறப்பு ஒரு புதிய நிகழ்ச்சி யன்று. அது கருவில் தோன்றிய காலம் முதல் இருப்பது. ஆதலால் வாழ்க்கையை இனிதென்று உவந்திலம்; வெறுப்பினால் இன்னாதென்று உரைத்ததும் இலம். மழை எப்படிப் பெய்கின்றது? ஏன் பெய்கின்றது? என்ற விவரங்களை யாரும் முன்னரே அறிந்து சொல்ல இயலாது. எப்படியோ மழை பெய்கின்றது; ஆற்றில் வெள்ளம் வருகின்றது. அது போலவே உலகில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. ஏன் உள்ளன? என்பதை நம்மால் அறுதியிட்டு உரைத்தல்

190. புறம் - 192

இயலாது. உயிர்கள் அவற்றைத் துய்த்தல் ஊழின்செயல்-'முறை வழிப்படுதல்'. உயிர்கள் யாவும் 'ஆற்று நீரில் இயக்கப்படும் மிதவை போலத்தான்.' இந்தக் கருத்துகளை சான்றோர் நூல்களில் தெளிந்தனம். இதனால் நன்மையான் மிக்கவரை வியந்து பாராட்டுதலும் செய்யோம்; சிறியோரைப் பழித்தலும் அவமதித்தலும் இலம்'' என்பது இப்பாடலின் பொருள். இத்தகைய இல்வாழ்வு வாழ்ந்து உள்ளம் துறந்த சான்றோர்கள் அக்காலத்தில் பலர் இருந்தனர். இவர்கள் மண்ணாளும் மன்னர்க்கும் மண்ணில் வாழும் மக்கட்கும் அறிவு ஒளியூட்டி வாழ்ந்து அவர்களை நன்னெறியில் உய்த்தனர்.

இறுவாய் : பாரதக் கதையிலுள்ள ஒரு நிகழ்ச்சியைக் கூறி இந்தப் பொழிவைத் தலைக்கட்ட நினைக்கின்றேன். நச்சுப் பொய்ச் சருக்கத்தின் நிகழ்ச்சியை நாம் அறிவோம். தம்பியர் நால்வரும் ஒருவர்பின் ஒருவராக வந்து பொய்கை நீர் அருந்திப் பொன்றினர். சந்தன மரத்தின் நிழலில் தாகவிடாயுடன் மூர்ச்சையாய்க் கிடந்த தருமன் தென்றல் வீசியதால் மயக்கம் தெளிந்து எழுந்தான். தாகம் அடிக்கடித் தோன்ற, தம்பியரைத் தேடிக் கொண்டே நச்சுப் பொய்கைக் கரையை அடைந்தான். வீமன் மணலில் எழுதி வைத்த வாசகம் அவன் கண்ணில் பட்டது. தடாக நீர் நஞ்சுடையது எனத் தெரிந்தான். ''போர் செய்ய வருவார்கள் பாண்டவர்கள்'' என்று நினைந்து துரியோதனன் செய்த சூழ்ச்சியே இது என்பதையும் ஊகித்து அறிந்தான். இந்த நச்சு நீரையே தானும் பருகி உயிர் நீத்தல் தக்கது என்று நினைந்துக் கயத்தருகில் வந்தான்.

அறக்கடவுளே நச்சுப் பொய்கையாய் இருந்ததை வில்லி,

> தூநீர் நச்சுச் சுனையால்
> அச்சுனைசூழ் வரஓர் தொல்மரமாய்

'யான்நீ அவன்' என்று எண்ணாமல்
எல்லாம் ஆனோன் இருந்தானே.[191]

என்று கூறுவார். தருமன் கயத்தருகில் வந்து நீர் பருக முயல்கையில் அசரீரி பேசியது. ''கயத்து நீர் நஞ்சுடையது. என் சொல் கேளாமல் நால்வரும் நீர் பருகி மாண்டனர். நான் கூறும் உரை கேட்டு பின்னர் நீ நீர் பருகலாம்'' என்றது. தருமனும் ''நீ சொல்லுவதைச் சொல்லுக'' என்றான்.

அசரீரி: சொல்லும் நூல்களில் பெரியது எது?
தருமன்: அரிய மெய்மறைகள்.
அ: இல்லறத்திற்கு உரியது எது?
த: ஆலோசனை கூறும் இல்லாள்.
அ: மல்லல் மாலையில் மணம் உள்ளது எது?
த: வண் சாதி.
அ: நல்ல மாதவம் எது?
த: தம் குலம்புரி நடையே.
(இதையே கீதையில் பார்த்தனுக்குப் பரந்தாமன் 'சுய தர்மம்' என்று விளக்குவான்)
அ: முனிக்குழாம் தொழும் கடவுள் யார்?
த: மொய்துழாய் முகுந்தன்.
அ: மகளிர்க்கு இயற்கை யாது?
த: உயர்ந்த நாணம்.
அ: செல்வர்க்கு அழகு எது?
த: தகைபெறு தானம்.
அ: இரு செவிக்கு இனியது எது?
த: இளங் குதலையர் இன்சொல்
அ: நிலைத்து நிற்பது எது?
த: நீடு புகழ்.
அ: கற்பது எது?
த: கசடறக் கற்கும் கல்வி.

191. வி. பா. நச்சுப் பொய்கை - 21

அ: அனைத்திலும் அற்பமாவது எது?
த : அயல் கரத்து ஏற்றல்.

இந்த நுட்பமான விடைகளைக் கேட்ட அசரீரி அறக் கடவுளாக அவன்முன் தோன்றி காளமா முனிவர் செய்த வேள்வியின் வரலாறு கூறி, தன் மகன் தருமனை ஆரத் தழுவினான். பின்னர் 'நின் தம்பியர் பிழைப்பதற்கு வழி உண்டு' என்று கூறி 'நச்சு நீர் பருகி உயிர் துறந்த நால்வரில் ஒருவனை நான் சொல்லும் இந்த மந்திரம் நவிற்றி அழை' என்று இயம்பினான். தருமனும் அந்த மந்திரத்தை நவிற்றிச் சகாதேவனை எழுப்பினான்.

அறக்கடவுள் : வீமனையோ பார்த்தனையோ எழுப்பிக் கொண்டால் நினக்கு உதவியாக இருப்பார்களே. அப்படிச் செய்யாமல் சகாதேவனை எழுப்பியதற்குக் காரணம் யாது?

தருமன் : என் அன்னை குந்திக்கு நான் ஒரு மகன். என் சிற்றன்னை மாதிரிக்கு ஒருமகன் வேண்டாவோ? அதனால் சகாதேவனை எழுப்பினேன்.

அதன் பின்னர் அறக்கடவுளும் தன் மைந்தனாகிய தருமனுக்குப் போரில் வெல்ல வல்ல உபாயங்களை விளக்கி வில், அம்பு, வேல் முதலிய ஆயுதங்களையும் நல்கித் தம்பி மார்களையும் உயிர் பெறச் செய்தனன். பின்னர் முன்னர் நடை பெற்ற நிகழ்ச்சிகளைக் கூறி மறைந்தனன்.

அன்பர்களே, இன்றைய சொற்பொழிவில் இதுகாறும் கூறியவற்றால் அறவுணர்வு வாழ்க்கையில் செயல்படுதல் எவ்வளவு முக்கியம் என்பதை அறிந்து கொண்டோம். நம் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் எல்லா நிலை களிலும் அறவுணர்வு குன்றி வருவதையும் காணாமல் இல்லை. நல்லுணர்வுள்ள நாம் எல்லோரும் அறவுணர்வு குன்றாதிருக்கவும், எல்லா மட்டங்களிலும் அதை நிலை

நிறுத்தவும் நாம் எல்லோரும், குறிப்பாக இளைஞர்கள் யாவரும், முன் வர வேண்டும். வள்ளுவர் வகுத்த நெறியிலும் பண்டைய சான்றோர்கள் சுட்டிய வழிகளிலும் வாழ முயல வேண்டும். இவற்றைக் கடைப் பிடிக்க இயலாதவர்க்கும் நரிவெரூஉத்தலையார் எல்லாரும் கடைப்பிடிக்க எளிய வழி ஒன்றைக் காட்டியுள்ளார். அந்த வழி அவர் காலத்தில் உறைந்த சான்றோர்கட்கும் கூறும் முறையில் அமைந்துள்ளது.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே

—புறம் 195.

[அல்லது - தீவினை; ஓம்புமின் - பரிகரியுமின்;
ஆறு - நெறி]

இந்த வழியையாவது கடைப்பிடித்தல் நமக்கும் நல்லது; நாட்டிற்கும் உகந்தது. இத்துடன் இப்பொழிவு நிறைவு பெறுகின்றது.

நீதி

தமிழ் இலக்கியங்களில்

நீதி

யாதுமனம் நினையும்அந்த நினைவுக்கு
நினைவாகி யாதின் பாலும்
வேதமற நின்றுயிருக் குயிராகி
அன்பருக்கே பேரா னந்தக்
கோதில்அமு தூற்றரும்பிக் குணங்குறியொன்
றறத்தன்னைக் கொடுத்துக் காட்டும்
தீதில்பரா பரமான சித்தாந்தப்
பேரொளியைச் சிந்தை செய்வாம்[1]

பொருளாகக் கண்டபொருள் எவைக்கும்முதற்
பொருளாகி போத மாகித்
தெருளாகிக் கருதும்அன்பர் மிடிதீரப்
பருகவந்த செழுந்தே னாகி
அருளானோர்க் ககம்புறம்என் றுன்னாத
பூரணஆ னந்த மாகி,
இருள்தீர விளங்குபொருள் யாதந்தப்
பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்[2]

பெரியோர்களே, செந்தமிழ்ச்செல்வர்களே,

---

1. தா. பா. பொருள் விளக்கம் - 2
2. ,, ,, -7

வணக்கம். நேற்றைய பொழிவில் **தமிழ் 'இலக்கியங்களில் அறம்'** என்ற பொருள் பற்றிச் சிந்தித்தோம். தமிழர்களின் அறம்பற்றிய சிந்தனை யோட்டம் எவ்வெவ்வாறெல்லாம் பரிணாமப் பட்டுள்ளது என்பதை ஓரளவு தெளிந்தோம். இன்று **'தமிழ் இலக்கியங்களில் - நீதி'** என்ற பொருள்பற்றிச் சிந்திக்கப் போகின்றோம். அறம், நீதி என்ற சொற்கள் ஒரு பொருள் பயப்பனபோல் தோன்றுகின்றன; அவை வேறு வேறு பொருள்களைத் தெரிவிப்பனபோலவும் தோன்றுகின்றன. நுணுகி ஆராய்ந்தால் அறம் என்பது தரும சாத்திரங்களில் கூறப்பெறும் உண்மை என்பதும்,நீதி என்பது நீதி சாத்திரங் களில் நுவலப் பெறும் உண்மை என்பதும் தெளிவாகும். தரும சாத்திரங்களில் கூறப்பெறும் உண்மைகள் என்றும் மாறாதவை; நீதி சாத்திரங்களில் நுவலப்பெறும் உண்மை கள் காலத்திற்குக் காலம் மாறக் கூடியவை. தரும சாத்திரங் களை இந்திய அரசியல் அமைப்புக் (Constitution of India)-கும், நீதி சாத்திரங்களை அவ்வப்போது தேவைக்கும் நடை முறைக்கும் ஏற்ப, சட்ட மன்றங்களில் இயற்றப்பெறும் சட்டங்களுக்கும் ஒப்புமை காட்டலாம். தரும சாத் திரத்தின் உண்மைகள் மாறாதவை என்றேன்; ஆனால் இந்திய அரசியல் அமைப்பிலும் பல திருத்தங்கள் வந்து விட்டன. இந்தத் திருத்தங்களுக்கும் ஏற்பப் பல சட்டங்கள் இயற்றப்பெற்றும் வருகின்றன. மேலும், இந்தச் சட்டங்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாது ஆளுங்கட்சிகளின் நோக்கங்களுக்கு ஏற்ப இயற்றப்பெற்று வருவதுதான் அறவழிப் பாதையில் போடப் பெறும் பெரிய தடைக் கற்களாகும். பல நல்ல சட்டங்களும் இயற்றப்பெற்றும் வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். நிற்க.

அரசனின் இன்றியமையாமையைப் பண்டையோர் கண்ட முறையை ஒருவாறு ஊகம் செய்து காண்டல் பயன் தரும். பண்டைத் தமிழ்நாட்டில் அருந்தமிழ் மக்கள் ஐந்திணை மருவி வாழ்ந்து வந்தனர். பெரும்பான்மை

யோருக்குப் பயிர்த் தொழிலே வாழ்க்கையை நடத்துவதற்கேற்ற வழித்தொழிலாக அமைந்திருந்தது; உயிராய தொழிலாகவும் இருந்து வந்தது. உடல் உண்டி முதற்றாகும் என்று ஓர்ந்திருந்தனர். நிலத்தை வளம்படுத்தி நிறைந்த பயிர் வளர்ச்சியைத் தருவது நீர் என்று தெளிந்திருந்தனர். 'நீரின்றி அமையாது உலகம்' (குறள் - 20) என்ற வள்ளுவர் கருத்தும் இந்த உண்மையையே வற்புறுத்துகின்றது. இன்றியமையாத நீர் வளத்தால் இன்றியமையாத நெல் முதலிய உணவுப் பொருள்களை சீருற வளர்த்துக் கொண்டு செம்மையாக வாழ்ந்தனர். ஆயினும் இவ்வாறு அமைதியாக வாழ்ந்து வந்தாலும் அவர்கள் வேறு இடையூறுகளையும் சந்திக்க நேர்ந்தது. பகைவரும் வலிமிக்க விலங்குணர்ச்சியாளரும், களவுத்துறை பயின்றோரும் சேமித்து வைக்கப்பெற்ற பொருள்களைத் திருடியும், சூறையாடியும் தொல்லைகளை விளைவித்தனர். கொடிய விலங்குக் கூட்டமும் உணவுக்காக உண்டாக்கப் பெறும் பயிர் வகைகளைக் கெடுத்தும் அழித்தும் இடையூறுகளை விளைவித்தன. இத்தகைய துன்பங்களையும் தொல்லைகளையும் இடையூறுகளையும் நீக்கிக் கொள்ள வேண்டிய நிலைமை அவர்கட்கு ஏற்பட்டது; இதற்குரிய கழுவாயைக் காண நீள நினைந்தனர்; ஆழ்ந்து சிந்தித்தனர். இந்த இடையூறுகட்கெல்லாம் இடையூறு செய்து தடையாய் நிற்க வல்ல தனித் தலைவனின் இன்றியமையாமையை உணர்ந்தனர். அத்தகைய தலைவன் ஒருவனைத் தேர்ந்தெடுக்க விழைந்தனர். உடலாற்றல், அறிவாற்றல், காத்தற் பண்பு முதலியவற்றால் மேம்பட்டு நிற்கும் வீர வினைஞனை வேண்டினர். இத்தகுதிகள் அமைந்தவன்தான் தமக்குத் தக்க **காவலன்** ஆவான் என்று துணிந்தனர். 'காவலன்' என்ற சொல் ஒன்றே அவர்தம் கருத்தினை அறிவுறுத்தி நிற்கும். இங்ஙனம் அரசனின் இன்றியமையாமையை உணர்ந்தனர் நம் பண்டைய மூதாதையர். இதனை மோசிக்கீரனார் என்ற சங்கச் சான்றோரின்,

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே[3]

[உயிர்த்து - உயிரை உடையது; மலர்தலை - பரந்த இடத்தையுடைய; கடன் - முறைமை]

என்ற முழுமுதல் பாட்டால் அறியலாம். இப்படித் தான் உலகில் எல்லாப் பகுதிகளிலுமுள்ள அரச பரம்பரை தோன்றியிருக்க வேண்டும். உயிரும் உடம்பும் கூடி நின்ற வழியும் உயிருக்குயிராய் நின்றியக்கும் திருவருள் போல அரசு முறை இன்றியமையாதலால், அதனைச் செலுத்தும் தானே உலகிற்கு உயிராதலை அறிகின்றான் அரசன். உயிர் தான் நிற்கும் உடம்புக்கு உளதாகும் நோயை நுகர்ந்தும் அதனைப் பேணுகின்றது. அதுபோலவே, அரசனும் உலகு புரத்தற்கண் உள்ள துன்பம் அனைத்தையும் தான் ஏற்று அதனைக் காக்கின்றான். இதனை அரசன் தன் கடமையாகவே கொள்கின்றான்.

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர் (940)

என்று வள்ளுவர் கூறுதலால் உயிரது செயல் நலம் தெளியப்படும். துன்பம் படப்பட உடலோடு வாழும் வாழ்க்கையில் உயிருக்கு ஆசை வளர்கின்றது என்ற உண்மையை இக்குறளின் உவமைத் தெளிவாக்குகின்றது. பெருநோயாளர்களுக்கும் உயிர் வெல்லமாக இருப்பதால் பிச்சை எடுத்தும் உயிரைக் காப்பதை அறிகின்றோம். பாரதிதாசனின் 'சைவப்பற்று' என்ற கவிதையில் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்று துறவு நிலையைப் பேசும் மடாதிபதி,

---

3, புறம் - 186

'மாப்பிள்ளை என்றனுக்கே இத்ததி
மரணம் ஏதுக்'கென்றார்.

என்று கூறுவதை எடுத்துக்காட்டிக் கவிஞர் நம்மைச் சிரிக்க வைக்கின்றார்.

செங்கோலாட்சி செய்யும் மன்னனை வள்ளுவர் பெருமான் இறைவனோடு ஒக்க வைத்துப் பேசுகின்றார்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (388)

என்ற வள்ளுவம் காண்க. **முறை** என்பது ஈண்டு அற நூலும் நீதிநூலும் நுவலும் நெறி என்பது பரிமேலழகரின் விளக்கம். அரசனைப் பற்றிய சிந்தாமணி ஆசிரியரின் கருத்து புறநானூற்றுப் புலவரின் கருத்தை ஒட்டியதாகும்.

நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம்
நீர்உயிர் இரண்டும் செப்பில்
புல்லுயிர் புகைந்து பொங்கு
முழங்கழல் இலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை
வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலம் தன்னுள்
நாமவேல் நம்பி என்றான்[4]

என்ற பாட்டில் இதனைக் கண்டு மகிழலாம். மாநிலம் காக்கும் மன்னன் உண்மையான காவலனாக இருப்பின் அவன் அறம் காக்கும் அரசனாகின்றான் என்பது திருத்தக்க தேவரின் கருத்து.

மாநிலம் காவலாவான்
மன்னுயிர் காக்கும் காலைத்

4. சிந்தா. 2908 (முத்திஇலம்பகம்)

தானத னுக்கிடையூறு
தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைதிறத்தால்
கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்(து)
அறங்காப்பான் அல்லனோ?[5]

என்பது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு. பெரிய புராணத்தில் இது மனுநீதிச் சோழன் வாக்காக வந்துள்ளது. மனுநீதிச் சோழனைச் சிலப்பதிகாரம்,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்[6]

என்று நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. இளவரசன் தேரின்மீது உலாப் போகுங்கால் இளைய ஆன்கன்று ஒன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்து படுகின்றது. அதற்கு அரசன் தன் மகனுக்கு விதித்த தண்டனை இது;

ஒருமைந்தன் தன்குலத்துக்(கு)
உள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிசெல்கை
கடனென்று கடன்மைந்தன்
மருமம்தன் தேராழி
உறஊர்த்தான் மனுவேந்தன்[7]

என்று சேக்கிழார் காட்டுவர். இதனைப் பழமொழி ஆசிரியரும்,

---

5. பெரிய புரா. திருநகரச்சிறப்பு - 36
6. சிலப். வழக்குரை. 53-55
7. பெரிய புரா. திருநகரச்சிறப்பு-44.

சால மறைந்தோம்பிச்
சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன்
பின்றையும் - மேலைக்
கறவைக்கன்(று) ஊர்ந்தானைத்
தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு மூப்புஇளமை
இல்.[8]

[சான்றவர்-அறிவு நிரம்பிய அமைச்சர்கள்; முறைமை-செங்கோன்மை]

என்று கூறுவர். சிலசமயம் அமைச்சர்கள் பழைய நிகழ்ச்சிகளை எடுத்துகூறி அடிப்பட்டு வந்தமையால் இது பெருங் குற்றமல்ல என்று கூறுவர். அந்தணர்கள் அல்லது அரச புரோகிதர்கள் பொன்னால் ஆன்கன்று செய்து அவர்க்கே அளித்தால் கறவைக்கன்று ஊர்தலால் ஏற்பட்ட பாவம் தொலையும் என்று கூறி அத்தீவினையினின்றும் அவரைப் பாதுகாக்க முயல்வர். இவற்றையெல்லாம் கருதாது முறை செய்ய வேண்டும் என்பது கருத்து.

பராங்குச நாயகி (நம்மாழ்வார்) செல்வம் மிக்க அரசர்களைக் கண்டால் திருமாலைக் கண்டதாகவே சொல்லுவாளாம். ‘திருவுடை மன்னரைக் கண்டால் திருமாலைக் கண்டேனே என்றும்’ (திருவாய் 4 : 4 : 8) என்ற பாசுர அடியை நோக்குக.விஷ்ணுவின் அம்ச மில்லாமல் அரசனாக முடியாது என்பது வைணவ சாத்திர சம்பிரதாயம்:

கோஆகி மாநிலம்காத்து நங்கண் முகப்பே
மாஏகிச் செல்கின்ற மன்னவரும் - பூமேவும்
செங்கமல நாபியான் சேவடிக்கே ஏழ்பிறப்பும்
தண்கமலம் ஏய்ந்தார் தமர்.[9]

---

8. பழமொழி-242
9. இரண் - திருவந். 69

[கண்முகப்பு - கண்எதிரே; மா - குதிரை; செங்கமல நாபியான் - திருமால்; ஏய்ந்தார் - சமர்ப்பித்தவர்; தமர் - பக்தர்கள்]

என்ற பூதத்தாழ்வாரின் பாசுரம் இக்கருத்தினை அரண் செய்கின்றது.

புறநானூற்றுக் காலத்தில் மன்னனை உயிராகவும் மக்களை உடம்பாகவும் காட்டப் பெற்றது. காரணம், இக்கருத்து அக்காலத்தில் நிலவி வந்ததால். கம்பன் காலத்தில் இக்கருத்து மெல்ல மெல்ல மாறி வந்து மக்கள் உயிராகவும் மன்னன் உடம்பாகவும் மாற்றப்பெற்றிருப் பதால் மக்களாட்சிக்கு வித்திட்டது போன்ற ஒரு புதுக் கருத்தைக் காண முடிகின்றது, தசரதச் சக்கரவர்த்தி நாட்டைப் பாதுகாத்தல் சிறப்பைப்பற்றிக் கூற வந்த கம்ப நாடன்,

> வயிரவான் பூண்அணி மடங்கல் மொய்ம்பினான்
> உயிரெல்லாம் தன்உயிர் ஒம்ப ஒப்பலால்
> செயிர்இலா உலகினில் சென்று நின்றுவாழ்
> உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்[10]

[அணி - ஆபரணம்; மடங்கல் - சிங்கம்; மொய்ம்பு - வலிமை; செயிர் - குற்றம்; சென்றுவாழ் உயிர் - இயங்கும் பிராணிகள்; நின்றுவாழ் உயிர் - இயங்கும் தன்மையில்லாத புல், பூண்டு, மரம் முதலியன]

என்று கூறுவான். பிறிதோர் இடத்தில் வசிட்டன் இராமனுக்கு உறுதிப்பொருளைக் கூறும்போது,

> வையம் மன்னுயி ராகஅம் மன்னுயிர்
> உய்யத் தாங்கும் உடலன்ன மன்னன்[11]

10. பாலகா. அரசியல்-10

11. அயோ. மந்தரை சூழ்ச்சி-11

என்று பேசுவான். இந்த இரண்டு இடங்களிலும் கவிஞன் மாநிலத்தில் வாழும் மக்களை உயிராக்கி விட்டான். மன்னனை அவ்வுயிரைத் தாங்கும் உடலாக்கி விட்டான். மக்களுக்காக மக்களால் '**மக்களாட்சி**' என்று அமெரிக்க நாட்டு ஆப்ரஹாம் லிங்கன் உரிமைக்குரல் எழுப்புவதற்கு முன்னரே கம்பநாடன் மக்களே நாட்டின் உயிர்நாடி என்ற குரலை எழுப்பி விட்டான். கம்பன் காட்டும் கோசலத்தில் அரசர்களாக இருந்தவர்களும் மக்கள் குர லுக்கு மதிப்புக் கொடுக்கும் மன்னர்களாகவே வாழ்ந்து வந்தனர். உயிர் இல்லாதவழி உடல் இல்லாததுபோல குடிமக்கள் இல்லாதவழி அரசனும் இல்லையாதலின் உலகை அரசனுக்கு உயிரெனக் கூறியுள்ள மதிநுட்பம் மக்களாட்சியின்கீழ் வாழும் நமக்கு ஓரளவு நன்கு புல னாகின்றது.

முடி, செங்கோல், முரசு, குடை - இவை அரசர்க்குச் சிறந்த அடையாளங்களாகும். ஒருபாற் கோடாது செவ்விய கோல் போலிருத்தலின் அரசனால் செய்யப் படும் தன்மை '**செங்கோன்மை**' எனப்பட்டது. இன்று கூட உயர்நீதி மன்றங்களில் நீதிபதிகள் தம் அறையிலிருந்து (Chambers) நீதி வழங்கும் இடத்திற்குச் (Court)செல்லும் போதும், அறைக்குத் திரும்பும்போதும் வெள்ளியாலான தடித்த கோலொன்றைத் தாங்கிய வண்ணம் ஓர் ஆள் அவர் முன்னே செல்வதைக் காணலாம், இது நீதி வழங் குவதற்கு அடையாளம். இன்று நீதிபதிகள்முன் தாங்கிச் செல்வதுபோல் ஒரு கோல் பண்டைக் காலத்தில் அர சர்கள்முன் தாங்கிச் செல்லும் வழக்கம் இருந்திருத்தல் வேண்டும்.

அறம் துஞ்சும் செங்கோல் (புறம் - 20)

அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டம் (புறம் - 35)
மெலிவில் செங்கோல் நீ புறங் காப்ப (புறம் - 42)
கோதில் செம்மையில் சான்றோர் பல்கி (புறம் - 117

நமரெனக் கோல்கோ டாது (புறம் 55)
அறவோர் புகழ்ந்த ஆகோலன் (புறம் 221)
விலங்குபகை கமந்த கலங்காச் செங்கோல் (புறம் 230)

என்று கோல்பற்றிய குறிப்புகளைப் பண்டைய இலக்கியங்களில் காணலாம். இவற்றால் 'செங்கோல்' அரசனின் செந்நெறித்தாய பண்பினை விளக்கிக் கொண்டிருக்கும் ஒரு சிறந்த அடையாளம் என்பதை அறிகின்றோம். இக்கோல் அழகிய செம்மணிகளாலும் இடையிடையே பதிக்கப் பெற்ற நன்மணிகளாலும் அழகு தரும் ஓர் அணி அன்று. செங்கோலின் அறம் அசைந்து கிடப்பதாகக் கூறப்படுகின்றது. அறக்கடவுளே மேவி ஆராய்ந்தாற் போன்ற ஆராய்ச்சியையுடையது செங்கோல் என்று அறிவிக்கப் படுகின்றது. மெலிதலும் நலிதலும் இன்றிக் குடி மக்களைக் காப்பது என்று கூறப்படுகின்றது. செம்மை சான்ற செங்கோல் உள்ள இடத்து வேந்தன் அல்லவை செய்து காப்பான் என்னும் கருத்தினால் சான்றோர் பல்குகுவர் என்று சாற்றப்படுகின்றது. நமர் எனச் சார்பு பற்றி ஒருபாலமையின் கோல் கோடும் என்று வலியுறுத்தப் பெறுகின்றது. அறநெறிய மக்கள் அறத்தின் திண்மை கண்டு புகழ்ந்துரைப்பர் என்று போற்றப்படுகின்றது. அரசின் செல்நெறியைக் குலைக்கும் கொடிய பகையைக் கடிவதும் குடிமக்களின் கலக்கத்தினைத் தவிர்ப்பதும் ஆகிய பிற செங்கோலின் பண்புகள் என்று பகரப்பெறுகின்றது. இக்கருத்துகளை மேற்காட்டிய சங்க இலக்கியச் சான்றோர்களின் கூற்றுகளினால் தெளியலாம்;

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆட்சியை,

தண்புனல் பூசல் அல்லது நொந்து
'களைக வாழி வளவ!' என்றுநின்
முனைதரு பூசல் கனவினும் அறியாது

புலிபுறங் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங்காப்ப
பெருவிறல் யாணர்த் தாகி[12]

[பூசல் - ஒலி, அரவம்; குருளை - குட்டி]

என்று வியந்து பாராட்டுவர் இடைக்காடனார் என்ற நல்லிசைப்புலவர். ''நின் நாட்டில் குளிர்ந்த நீர் ஓடையில் செல்லும்போது உண்டாகும் ஒலியல்லது போர்க் காரணமாக நினது படை யுண்டாக்கும் ஒலி கனவிலும் காண முடியாது. புலி தன் குட்டியைப் பாதுகாப்பதுபோல, குறைவில்லாத நின் செங்கோலால் நீ நாட்டைப் பாது காக்கப் பெரிய விசேடத்தையுடைய புது வருவாயை யுடையது என்பது இப்பாடற் பகுதியின் கருத்தாகும்.

நாட்டின்பொருள் வளம்: நீதி வழுவா நெறிமுறையில் அரசன் நாட்டு வளத்தைப் பெருக்குதல் அவனது தலையாய கடமையாகும். தமிழகத்தின் சிறந்த முக்கிய தொழில் வேளாண்மை என்னும் பயிர்த் தொழில் ஆகும். இல்லறம், துறவறம் என்னும் இருவகை அறமும் நாட்டில் நிலை பெறுவதற்கும், அரசன் வெற்றி பெற்று விளங்கு வதற்கும் வேளாண்மை இன்றியமையாதது என்று தமிழர்கள் கண்டனர். இதனால் அக்காலத்தில் தமிழ கத்தை ஆண்ட அரசர்கள் வேளாண்மைக்கு முன்னுரிமை தந்தனர். இதனால் நாடு நீர்வளம் நிலவளம் சிறந்து சான் றோரும் உறையும் வண்ணம் உயர்ந்து நின்றது. ஒரு பெண்யானை படுத்துறங்கும் சிறிய இடத்தில் விளைந்த விளை பொருள்கள் ஏழு களிறுகட்குத் தேவைப்படும் உணவாயிற்று.

ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே[13]

[பிடி - பெண்யானை; களிறு - ஆண்யானை]

---

12. புறம் - 42
13. புறம் - 40

இது சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மீது ஆவூர் மூலங்கிழார் பாடிய பாடற் பகுதியாகும்; இதனால் அக்கால நாட்டின் நலம் நன்கு விளங்குகின்றது. விளை பொருள்கள் மலிந்து 'நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளியன' வாக நிறைந்து செழித்தமையால் வருகின்ற விருந்தினர்க்கு வேண்டும் உணவைத் தந்து அவர்கள் உண்டு மகிழ மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

.... அரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையும், உழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையும், மறைநர்
கரும்பிற் கொண்ட தேனும், பெருந்துறை
நீர்தரு மகளிர்க் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்
மென்புல வைப்பின் நந்நாட்டுப் பொருந!
மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்நோக் கினரே.[14]

[அரிநர் - நெல்லறுப்பார்; வாளை - மீன்; யாமை - ஆமை; அறைநர் - கரும்புஅறுப்பார்; வன்புலம் - புன்செய்; மென்புலம் - நன்செய்.]

இது சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாராட்டி இடைக்காடனார் பாடிய பாட்டாகும்.

ஒரு நாடு நன்னாடாய் விளங்க வேண்டும் எனின் நாட்டில் வாழும் குடிமக்கள் உணவுக் குறைவின்றி வாழ்தல் வேண்டும். உணவே மக்களுக்கு உயிர். இதை நன்கு அறிந்த இன்றைய அரசுகூட பல நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி எல்லோருக்கும் எளிய முறையில்

14. புறம் - 68

உணவுப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது; இன்றியமையாத பொருள்களும் தடையின்றி எளிதாகக் கிடைக்கவும் வகை செய்துள்ளது. உணவுப் பொருள்களை ஆக்கும் வன்மையது நீர். 'நீர் இன்றி அமையாது உலகம்' (20) என்பது வள்ளுவர் வாய்மொழி. இப் பெருமானே,

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு
துப்பாய தூஉ மழை (12)

(துப்பார் - உண்பார்; துப்பு - உணவு]

என்றும் கூறியுள்ளார். குழிந்த நிலத்தில் நீரை ஒன்று கூட்டினாலன்றி நெல் முதலியவற்றை வித்தி உணவுப் பொருள்களை ஆக்கிக் கொள்ள இயலாது. ஆதலின் நீர் வளம் பெருகச் செய்தாரோ கடமையுணர்ந்த அரசர்களாவர். இதனைச் செவ்வனே உணர்ந்த அரசர்கள் நீர்வளம் பெருக்கினர்.

புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி மரங்கொல் மலிநீர்
மன்பதை புரக்கும் நன்னாட்டுப் பொருநன்[15]

[புனிறு - ஈன்றணிமை; இலிற்றும் - சுரக்கும்; மரம்-கரைமரம்; மன்பதை - உயிர்த்தொகுதி; புரக்கும் - பாதுகாக்கும்]

என்று கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளியைக் குறித்த பாட்டில் கூறுவர். வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைச் சிறப்பிக்குங் கால் ''அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட' (புறம்-35) என்கின்றனர். 'அழகிய குளிர்ந்த காவிரி வந்து பல கால் வாய்களாய் ஓடி ஊட்ட என்பது' இதன் பொருள். ஈன்ற அணிமையோடு கூடிய குழவிக்கு உயிரை நல்கும்

15. புறம் - 18

உணவாய் அதன் உடல் நிலைக்குத் தக ஊட்டப்படும் தாய்ப்பால்போலக் குடிமக்களின் உணவாம் விளை பொருள்கள் விளைதற்குத்தக நீரைச் சுரக்கின்றது காவிரி. அது பல கால்வாய்களாய் ஓடி நிலத்துப் பாய்ந்து பயிருக்கு உயிர் கொடுக்கின்றது. இவ்வண்ணம் நீர்வளம் பெருக்கி நீதியோடு ஆண்டவர்கள் தமிழ் மன்னர்கள். திருச்சிக்கருகில் கரிகால் பெருவளத்தான் அமைத்த கல்லணையும் அதன் பல கால்வாய்களும் இன்றளவும் இதற்குச் சான்று பகர்வனவாய் நின்று நிலவுகின்றன. அதனைக் கட்டியமைத்த பொறியியல் கலையை அறிவியலடிப்படையில் பொறியியல் கற்ற அறிஞர்களும் வியந்து பாராட்டுகின்றனர்.

நீர்வளம் பெருக்கும் இன்றியமையாத செயலை மேற்கொள்ளுமாறு தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடிய பாட்டாலும் அறிகின்றோம். குடபுலவியனார் பாண்டி நாட்டின் மேற்பகுதியில் வாழ்ந்தவர்; அப்பகுதி நீர் நிலையின்றி விளை நிலம் குன்றி வாடுதலைக் கண்டவர். இதனால் அப்பகுதியில் நீர்நிலை அமைக்க வேண்டும் எனப் பாண்டியனுக்கு உணர்த்துகின்றார்.

செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினும் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன்
தகுதி கேள்இனி மிகுதி யாள
நீரின்று அமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரி யோர்ஈண்(டு)
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;

வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற் றாயினும் நண்ணி யாளும்
இறைவன் தாட்குஉத வாதே; அதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே;
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே.[16]

[செல்லும் உலகம் - மறுமை உலகம்; ஞாலம் - உலகம்; முருக்கி - கெடுத்து; ஒரு நீ ஆகல்-நீ ஒருவனே தலைவனாக ஆதல்; இசை - புகழ்; தகுதி - தக்க செய்கை; உண்டி - உணவு; முதற்று - முதலாக உடையது; உணவின் பிண்டம் உடம்பு; புணரியோர் - ஒருவழிக் கூட்டியோர்; படைத்திசினோர்-படைத்தவர்கள்; புன்புலம்-புன்செய்; கண்ணகன்-இடம்அகன்ற; வைப்பு - நிலம்; நண்ணி - பொருந்தி; இறைவன்-அரசன்; தாட்கு-முயற்சிக்கு; வல்லே-விரைந்து; நிலன்நெளிமருங்கு-நிலம்குழிந்த நிலம்; தட்டோர்-தளைத்தோர்; தள்ளாதோர் - தளையாதவர்]

என்ற பாடற்பகுதியில் இதனைக் காணலாம். "வேந்தே, நீ மறுமைப்பேறாகிய துறக்க இன்பம் வேண்டினும், இம்மைக்கண் ஒரு பேரரசனாய்ப் புகழ் எய்த வேண்டினும், நாட்டில் நிலை பெருக அமைக்க வேண்டும்; வித்திவான் நோக்கும் புன்புலம், வேந்தன் முயற்சிக்கு வேண்டுவன உதவா. ஆகவே நீர் நிலை பெருக அமைப்பாயாக" என்ற அறிவுரையைக் கொண்டதே இப்பகுதி.

மூவேந்தரின் ஆட்சிமுறை: சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சிமுறைபற்றிச் சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் கிடைக்கின்றன. சோழ நாட்டு ஆட்சி முறையைப்பற்றி வீரபத்தினியாம் கண்ணகி வாய்மொழியாக இளங்கோ அடிகள் பேசுகின்றார். கணவன் அநியாயமாய்க் கொலை

16. புறம் - 18

யுண்டதைக் கேட்டக் கண்ணகி தலைவிரிக் கோலமாய் அழுத கண்ணீரொடும் ஏந்திய சிலம்போடும் பாண்டியன் முன்சென்று நிற்கின்றாள். அவள் நிலையைக் கண்ட மன்னன்,

நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்[17]

என்று வினவுகின்றான். ஊனும் உயிரும் துடிக்கத் தான் வந்த காரணத்தை இன்னும் உய்த்துணராமல் வேந்தன் விளம்பிய வெற்றுபசார மொழிகளைச் செவிமடுத்த வீரக் கண்ணகி,

தேரா மன்னா, செப்புவ துடையேன்'

என்று பளிச்சென்று மறுமொழி தந்து பேசுகின்றாள். இந்தப் பேச்சில் சோழநாட்டு அறத்தின் வழிநின்ற ஆட்சி முறைக்கு இரண்டு எடுத்துக் காட்டுகளைத் தருகின்றாள் முதலாவது: சிபி என்பவன் சூரிய வமிசத்துச் சக்கரவர்த்தி.

புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
பெருந்தகைதன் புகழில்பூத்த
அறனென்று திருமனத்தான்[18]

என்ற கம்பன் கவிதையால் உறுதியாகின்றது. இவன் ஒரு சமயம் வனத்தில் தவம் புரிகையில் தேவர்கள் இவனுடைய தவத்தைச் சோதிக்க நினைத்தனர். இந்திரன் வேடனாகவும் அக்கினி தேவன் புறவாகவும் உருவம் கொண்டு பூவுலகிற்கு வருகின்றனர். அரசன் காண வேடன் புறாவைத் துரத்தி வருகின்றான். புறா அரசனிடம் அபயம் புகுகின்றது. வேடன் 'என் இரையைக் கொடுத்து விடு' என்று சிபியைக் கேட்க, அவன் 'அன்பனே, அடைக்கலம் புகுந்த பொருளை ஆதரியாது கைவிடுதல் அதிபாதகமாதலால், இதையன்றி

17. சிலப். வழக்குரை - அடி. 48-49.
18. பால, திருவவதாரப்-64.

எதைக் கேட்டாலும் கொடுப்பேன்' என்கின்றான். வேடன் 'இப்புறாவின் நிறையுள்ள உன் உடம்பின் இறைச்சியைத் தருக என வேண்ட, அரசனும் அதற்கு மகிழ்ச்சியுடன் உடன்படுகின்றான், துலாக்கோல் ஒன்றன் தட்டில் புறாவை நிறுத்தித் தன் உடம்பிலுள்ள உறுப்புகளையெல்லாம் ஒவ்வொன்றாக அறுத்து வைத்தும் எடை குறைந்தமையால் முடிவில் தானே தராசுத் தட்டில் ஏறி எடையை நிறுத்து ஈடு கட்டுகின்றான். உடனே இருதேவர்களும் உண்மை வடிவுடன் வெளிப்பட்டுச் சிபிச் சக்கரவர்த்தியைக் கொண்டாடி அவன் உடலில் தசை வளரச் செய்து வேண்டின வரங்களையும் அளித்தனர் என்பது புராண வரலாறு. இந்தச் சிபியைச் சோழ அரசனாகக் கொள்வர் இளங்கோ அடிகள். இந்த வரலாற்றைக் கண்ணகி,

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்ப
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்[19]

[எள்ளறு - இகழ்தலற்ற; புன்கண் - துன்பம்]

என்று இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றாள்.

இந்த வரலாறு சில புராணங்களில் வேறுவிதமாகவும் காணப்படுகின்றது. யமனும் அக்கினியும் முறையே வல்லூறாகவும் புறாவாகவும் வந்தனர் என்பதும் ஒரு வரலாறு இந்த வரலாற்றின் அடிப்படையில்.

கொடுஞ்சிறைக்

கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக.[20]

---

19. சிலப். வழக்குரை-அடி 51-52
20. புறம்-43.

[கொடுஞ்சிறை - வளைந்த சிறகு; கூர்உகிர் - கூரிய மூக்கு; ஏறுகுறித்து - எறிதலைக் கருதி; ஒரீஇ-தப்பி; அகம் - இடம்; புக்க - அடைந்த; தபுதி - அழிவு சீரை - துலைத்தட்டு; உரவோன்-வலிமையுடையவன்]

என்ற புறப்பாடல் எழுந்தது. இது சோழன் நலங்கிள்ளி யின் தம்பி மாவளத்தான்மீது தாமல் பல்கண்ணனார் பாடியது.

இரண்டாவது எடுத்துக்காட்டில் மனுநீதிச்சோழனின் வரலாறு வருகின்றது.[21] திருவாரூரைத் தலை நகராகக் ஆண்டு வந்தவன் மநுநீதிச் சோழன். ஒரு சமயம் பசு வொன்று ஆராய்ச்சி மணியைப் பற்றி அடிக்கின்றது. அதன் கன்று அரசகுமரனின் தேர்க்காலில் சிக்கி உயிர் இழந்ததை அறிகின்றான் அரசன். தன் எதிரே மகனைத் தேர்க்காலில் இட்டு தன் நீதி வழுவா நெறியினை உல கிற்கு உணர்த்துகின்றான். இந்த வரலாற்றை,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்தான் தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்[22]

[நடுங்க - அசைய; ஆவின் கடைமணி - பசுவின் கண் மணியின் கடை; உகுநீர்-ஒழுகும்நீர்]

என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறுகின்றாள் கண்ணகி. இத்தகைய சோழர் மரபு ஆண்டது சோழநாடு என்று சோழநாட்டின் **நீதிமுறையைத்** தெரிவிக்கின்றாள். அற நெறி பிறழ்ந்த மன்னனுக்குத் தன் நாட்டின் அறமணம் கமழும் புகழை எடுத்துக் கூறுகின்றாள்.

பாண்டி நாட்டின் ஆட்சி முறையை மதுராபுரித் தெய் வத்தின் வாய்மொழியாக எடுத்துக் காட்டுகின்றார்

21. இதைப் பெரிய புராணத்திலும், வள்ளலாரின் திருவருட்பா உரைநடைப் பகுதியிலும் விரி வாகக் காணலாம்.
22. சிலப். வழக்குரை காதை-அடி (53-55]

இளங்கோ அடிகள். கொற்கைத் தலைவனாய், குமரித் துறைவனாய், பொற்கோட்டு இமயவரம்பனாய், பொதிகை மலைக்கிழவனாய் விளங்கிய பாண்டியன் குலத்தை பண்டு முதல் காக்கும் தெய்வம் மதுராபதி. இவளே ஆலவாயின் ஆதி தெய்வம். மறைந்த மாறனின் குலதெய்வமும் இந்த மதுராபதியே. இந்தத் தெய்வமே தன் நாட்டு வேந்தர் மரபின் விழுப்புகழை எடுத்தோதுகின்றது. ''பெருந்தகைப் பெண்ணரசியே, மதுரை மாநகரில் யான் அந்தணரின் மறை நாவோசையைக் கேட்டறிவேனேயன்றி ஆராய்ச்சி மணி நாவோசையை என்றும் கேட்டறியேன். பாண்டியனின் பகை மன்னரேயன்றி அவன் குடிமக்கள் எந்நாளும் பழி தூற்றியதைக் கேட்டறியேன். அத்தகைய செங்கோலோச்சியவன் அவன். இன்னுங்கேள்: மடந்தையரின் மடங்கெழு நோக்கால் நெஞ்சாகிய களிறுகட்கு மீறி காமவெறி கொண்டு கைக்கடங்காது போதல் கூடும். இந்த நிலையிலும் பாண்டியர்கள் ஒழுக்கந்தவறி இழுக்குடைய செயல்களில் இறங்கியதில்லை. அத்தகைய சிறந்த **'குடிப்பிறப்பு'** அவர்தம் பாரம்பரியப் பண்பாக இலங்குகின்றது[23]

'இன்னும் கேட்டி' என்று மதுராபுரித் தெய்வம் **கிரந்தை** என்ற ஓர் ஏழை அந்தணனின் வாழ்வில் நேரிட்ட நிகழ்ச்சியொன்றினைக் கூறுவாள். ''இந்த அந்தணன் ஒரு சமயம் காசித் திருத்தலப் பயணத்தை மேற் கொண்டான். அஃதறிந்த அவனுடைய இல்லக் கிழத்தி கண்கலங்கினாள். 'என் ஆருயிர்த் துணையே, அச்சம் வேண்டா. பாண்டியன் நல்லாட்சி நின்னைக் காக்கும். அதனினும் சிறந்த காவல் வேலி இல்லை' என்று ஆறுதல் கூறிச் செல்லுகின்றான். மறையோன் தன் மனையாளுக்கு மொழிந்த ஆறுதல் மொழியை நகர் சோதனைக்காக நள்ளிரவில் வேற்றுருவுடன் வந்திருந்த மன்னன் எவ்வாறோ கேட்டிருந்தான். அன்று முதல் அரசன் அப்பார்ப்பனன் இல்லத்திற்கு ஏதம் எதுவும் நேரா வகையில் கண்

23. சிலப் கட்டுரைக் காதை - அடி 31 - 34; 40 - 41

காணித்து வந்தான். நாட்கள் பல உருடோடின. ஓரிரவு நகர் சோதனைக்கு வந்த வேந்தன். கீரந்தை இல்லத்தில் பேச்சரவம் எழுந்ததைக் கவனித்தான்; சற்றே ஆராயாது கதவைத் தட்டினான். திருத்தலப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருந்த கீரந்தை 'கள்வனோ' என ஐயுற்றான். 'அன்று பாண்டியன் ஆட்சி நம்மைப் பாதுகாக்கும் என்றீர்களே! இன்று அது காவாதோ?' என்றாள் அந்தணன் மனைவி. இப்படி விபரீதம் நேரும் என்பதை உணர்ந்த மன்னன் அக்கம் பக்கத்திலுள்ள பல வீடுகளின் கதவுகளையும் தட்டி விட்டு அரண்மனையை அடைந்தான்.

''மறுநாள் கதவு தட்டப்பெற்ற இல்லங்கட்குரியவர்கள் யாவரும் மாறன்முன் சென்று தம் இல்லத்துக் கதவினைக் கள்வன் தட்டினதாக முறையிட்டனர். மக்களின் முறையீட்டினைக் கேட்ட மன்னன், 'கதவைத் தட்டின கள்வனைத் தண்டிப்பேன்' என்று கூறி உள்ளே சென்றான்; துண்டித்த கையனாய் வெளியில் வந்து, 'இதோ கதவைத் தட்டின கைக்குத் தண்டனை!' என்று கூறினான். இதனைக் கண்டு கீரந்தையும் ஏனையோரும் பதைபதைத்தனர். 'எங்கள் வேந்தன் கையோ வெட்டுண்டது! வச்சிராயுதம் ஏந்திய இந்திரன் உச்சியில் வளையுடைத்த எங்கள் மன்னன் கையோ துண்டாவது!' என்று உயிர் துடித்தனர். 'கையிழவாக் காவலனோ கை இழப்பது!' என்று கலங்கிக் கதறினர். மக்கள் யாவரும் ஒன்று கூடி பாண்டியனுக்குப் பொற்கைப் பூட்டினார்கள். **'பொற்கைப் பாண்டியன்'** என்று பெயர் பெற்றுத் திகழ்ந்தான் பாண்டியன். இத்தகைய மேலோர் மரபு பாண்டியர் மரபு'' என்று கூறினாள் மதுராபுரித் தெய்வம்.[24]

இந்த வரலாறு **'பழமொழி'** என்ற நூலிலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

---

24. சிலப். கட்டுரைக் காதை - அடி (42-53)

எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானாய்த் - தவற்றை
நினைத்துதன் கைகுறைத்தான் தென்னவனும் காணார்
எனச்செய்யார் மாணா வினை[25]

[தகவு - தகுதி; கரி - சான்று; தவறு-கதவைத் தட்டின குற்றம்; தென்னவன்-பாண்டியன்; மாணா-மாட்சிமைப்படாத]

என்ற பாடலில் இந்த வரலாற்றைக் காணலாம். சான்றோர் இயல்பைப் போற்றி இலக்கியம் படைப்பதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தனர் இலக்கிய உள்ளம் படைத்த தமிழ்க் கவிஞர்கள்.

நாடுவளங் கொண்டு புகழ்நடுதல் வேண்டித்தன்
ஆடுமழைத் தடக்கை அறுத்துமுறை செய்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர் பாண்டியன்[26]

என்ற சான்றோர் ஒருவரின் செய்யுட் பகுதியிலும் இந்த வரலாறு காணப்பெறுகின்றது.

மேலும், 'இன்னும் கேட்டி நன்வாயாகுதல்' என்று கூறி மதுராபுரித் தெய்வம் இன்னொரு வரலாற்று நிகழ்ச்சியையும் எடுத்தோதுகின்றது. 'புறவுநிறை புக்கோன் கறவைமுறை செய்தோன்' ஆண்ட பொன்னி வளநாட்டைச் சேர்ந்த **பராசரன்** என்ற ஓர் அந்தணன் குலவுவேற் சேரன் கொடைத் திறங்கேட்டு காடும் நாடும் ஊருங் கடந்து சேர நாட்டை அடைகின்றான். சேரன் அவையிலுள்ள பல சாத்திர வல்லுநர்களுடன் சொற்போர் புரிந்து **'பார்ப்பன வாகை'** சூடித் தன் வெற்றிக்குப் பொருத்தமாகச் சேர மன்னன்பால் நல்ல பல அணி

25. பழமொழி-76,
26. தொல். களவியல். நூற். பா-1 இல் காட்டப் பெறும் மேற்கோள் செய்யுள் (இளம்)

கலன்களைப் பெற்றுக்கொண்டு தன் ஊர் நோக்கி மீண்டு வருபவன் திருத்தங்கால் (தண்கால்)[27] என்ற ஊரில் அரச மரத்தையுடைய ஒரு மன்றத்தின்கண் தங்கி இளைப் பாறுகின்றான். தன் ஊன்றுகோல், குண்டிகை, வெள்ளைக் குடை, சமித்துகள் இவற்றையும், பரிசிலாகப் பெற்று வந்த பண்டங்களையுமுடைய ஒரு சிறிய மூட்டையையும் நடையனையும் (பாதக் காப்பு) தன் அருகில் நிலத்தின் கண் வைத்து இளைப்பாறுகின்றான்.

இளைப்பாறுகின்றவன் வாளா இருக்க வில்லை. பரி சில் நல்கிய சேரவேந்தனைப் பலவாறு வாழ்த்துகின்றான். அந்த வாழ்த்தொலியைக் கேட்டு அம்மன்றத்தின்கண் விளையாடிக் கொண்டிருந்த அந்தணச் சிறுவர்கள் அப்பரா சரனைச் சூழ்ந்து கொள்ளுகின்றனர். அந்தணன் அச்சிறு வர்களை நோக்கி, 'பிள்ளைகாள், நும்மில் எவரேனும் என் னோடு சேர்ந்து மறையினை ஓதவல்லீராயின் இச்சிறிய மூட்டையைப் பரிசிலாகப் பெறுவீர்' என்று அறிவிக் கின்றான். உடனே வார்த்திகன் என்ற அந்தணனின் செல்வ மகன் **தட்சிணாமூர்த்தி** என்னும் சிறுவன் மறையின் ஒலி சிறிதும் வழுவாத வண்ணம் மிக்க மகிழ்சியுடன் அப்பரா சரனுடன் நன்கு பொருந்த ஓதுகின்றான். அச்சிறுவனின் திறமைக்கு மெச்சி முத்துக் கோவையாகிய பூணூலும்

27. **திருத்தங்கால்:** இது திருத்தண்காலூர் என்றும் வழங்கப் பெறும். இது சிரீவில்லிபுத்தூர் - விருது நகர் நெடுஞ்சாலையில் உள்ள ஒரு சிற்றூர். வைணவ திவ்விய தேசங்கள் 108 இல் இதுவும் ஒன்று. 1969-ஜூனில் என் குடும்பத்துடன் சேவித்தலம். **பாண்டி நாட்டுத் திருப்பதிகள்**-'திருத் தண்காலூர் அப்பன்' என்ற 8-வது கட்டுரை யில் இந்தத் திவ்விய தேச விளக்கம் தரப் பெற்றுள்ளது.)

அதற்கேற்ப அணிகலன்கள் பிறவும் கைக்குக் கடகமும் காதிற்குத் தோடும் ஆகிய இவற்றுடன் தான் கொணர்ந்த பண்டச் சிறுபொதியையும் அச்சிறுவனுக்கு வழங்குகின்றான் 'பார்ப்பன வாகை' பெற்ற அப்பராசரன்.

தட்சிணா மூர்த்தியின் குடும்பம் செழிப்புடன் இருக்கும் நிலை கண்ட அவ்வூரில் பணியாற்றும் அரசு அலுவலர்கள் பொறாமை கொள்ளுகின்றனர். அரசியல் முறைக்கு மாறாகப் புதையற் பொருளைக் கவர்ந்து கொண்டவன் என்று வார்த்திகனைப் பிடித்துக் காவலில் வைக்கின்றனர். பின்னர் அவனைச் சிறைக் கோட்டத்தின்கண் இடுகின்றனர். அந்த வார்த்திகன் மனைவி **கார்த்திகை** என்பாள் அச்செயல் கண்டு பெரிதும் வருந்தி நிலத்தில் வீழ்ந்து புரண்டு, சினத்தினால் பொங்கிப் பாண்டியன் செங்கோலையும் வெறுத்துப் பேசுகின்றாள். கார்த்திகை என்னும் பத்தினிப் பெண்ணுக்குஉற்ற நிலைமை கண்டு மதுரையிலுள்ள கொற்றவை (ஐயை) என்னும் கோயிலின் சிறப்பக்கதவு திறக்கப்படாத நிலையை அடைகின்றது. இதைக் கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் தன் ஏவலரை வருவித்து இந்நிலையை ஆராயுமாறும் தனது ஆட்சியில் செங்கோன்மைக்கு மாறான செயல் நிகழ்ந்ததுண்டோ என்பதைக் கண்டறியுமாறும் பணிக்கின்றான். அப்பணியாளர் ஒற்றர்கள் மூலம் அனைத்தையும் அறிந்து வார்த்திகனைச் சிறைவீடு செய்து அவனை அரசன் முன் கொணர்ந்து நிறுத்தி உண்மையைக் கூறுகின்றனர். அரசன் தன் பணியாளரால் நேர்ந்த தவற்றினுக்கு மிகவும் வருந்தி அவனுக்குப் புகழுரை பல சொல்லித் தம் அரசியல் முறை பிழைத்தமைக்குப் பொறுக்குமாறு அவ்வந்தணனை வேண்டுகின்றான். மேலும் நீர்வளம் நிலவளம் மிக்க அவ்வந்தணன் பிறந்த ஊராகிய திருத்தங்காலையும் குறையாத விளையுடைய வயலூர் என்றும் ஊரினையும் அப்பார்ப்பனனுக்கு முற்றூட்டாக வழங்குகின்றான். பின்னர் அவ்வந்தணனையும்

கற்புடைத் தெய்வமாகிய கார்த்திகையையும் தன் மார்பு நிலத்தில் பட வீழ்ந்து வணங்கி தன் அரசு செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றான். கொற்றவன் கழுவாயாக மேற்கொண்ட செயலால் கொற்றவை மனம் குளிர்ந்தாள். அடைத்த கதவும் திறந்ததை நகர மக்கள் அறிந்தனர். பாண்டியன் இம்மட்டோடு அமையவில்லை. மதுரை மாநகரில் நீண்ட தெருக்களில் உள்ள மலையினையொத்த உயர்ந்த மாளிகைகள் எங்கணும் கேட்கும் வண்ணம், 'சிறைகளைத் தூய்மையாக்குங்கள்; ஏதாயினும் குற்றம் செய்தோர் அக்குற்றம் நீங்கி மாசறச் செய்யுங்கள்; (Amnesty). பிறர் ஈந்த பொருள், கண்டெடுத்த பொருள், உழைப்பால் ஈட்டிய பொருள் ஆகிய இவை இவற்றைப் பெற்றோர்க்கு உரிமையாம்' என்று யானை மீதேறி முரசறைவித்தான் கோன்முறை வழுவாக் கொற்ற வேந்தன்.''[28] இவ்வாறு இளங்கோ அடிகள் நீதிபற்றிய இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் இலக்கிய நயம் பெறச் செய்து நிலைபெறச் செய்து விட்டார்.

ஆராயாது செய்த குற்றத்திற்கு வருந்திப் பாண்டியன் உயிர்துறக்கின்றான். உத்தம நங்கையாகிய பாண்டிமாதேவியும் 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்று கூறி மன்னன் இணையடி தொழுது வீழ்கின்றாள்; அவள் உயிரும் போய் விடுகின்றது.

> மன்னவன் செல்வுழிச் செல்க யான்எனத்
> தன்உயிர் கொண்டுஅவன் உயிர்தே டினள்போல்
> பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனன்.
> ....
> வல்வினை வளைத்த கோலை மன்னவன்
> சொல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது[29]

28. சிலப். கட்டுரை காதை - அடி 55 - 131.
29. சிலப். காட்சி காதை - அடி 84 - 86 ; 98 - 99

என்று இளங்கோ அடிகளும் ஊழின்மீது பாரம்போட்டு அமைதி காட்டி விடுகின்றார்.

இனி, சேரவேந்தர்களின் நீதி உணர்வு பற்றியும் குறிப்பு உள்ளது. அதனையும் காண்போம். இரு சாராரும் உடன்று எழுந்த பாரத அறப்போரில் - இக்காலத்தில் நடு நிலையுடன் செயற்படும் செஞ்சிலுவைச் சங்கம்போல்- நடுநிலைமை தவறாது நீதியைப் போற்றும் முறையில் இருதரப்பினருக்கும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை வரையாது வழங்கியவன் சேரன் **உதியஞ்சேரல்** என்ற பெருமகன். இவன் உதியஞ்சேரல் வழியினர், அந்துவஞ் சேரல் இரும்பொறை வழியினர் என்ற இரு வழி யினரில் முதல் வழியினரின் முதல் பெருமகன். இருதிறச் சேனைக்கும் வரையாது உணவு வழங்கியதால் இவன் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்ற சிறப்புடன் இலக்கியத்தில் போற்றப்படுகின்றான். நடுவு நிலைமையுடன் செயற்பட்டவன் இப்பெருமகன். 'பகை, நொதுமல், நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமையே நடுவு நிலைமை' என்று விளக்குவர் பரிமேலழகர்.[30] பாரதப் பெரும் போரில் நம்மவர் பிறர் என்ற பாகுபாடு கருதா மல் அறம் எல்லோர்க்கும் பொதுவானது என்ற உணர் வுடன் செயற்பட்டதால், அவன் வாழ்ந்த காலத்தில் விளங்கிய புகழாலும் அவன் காலத்திற்குப் பின் இன்ற ளவும் அவனுடைய எஞ்சி நிற்கும் புகழாலும் அவன் போற்றப்படுகின்றான்.

> ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
> போரில் பெருஞ்சோறு போற்றாது தான்அளித்த
> சேரன் பொறையன் மலையன்[31]

---

30. நடுவு நிலைமை - அதிகார விளக்கம்.
31. சிலப். வாழ்த்துக் காதை - ஊசல்வரி. 24

என்று வாழ்த்துரைக் காதையில் குறிப்பிடப் பெறுகின்றான். இவன் மரபில் வந்தவன் இமயவரம்பன் தம்பியாகிய பல்யானைச் செல்கெழு செங்குட்டுவன்; இவன் வீரத்திருவினன்; அறநெஞ்சினன்; ஈகைப் பண்பு நிறைந்தவன். இவன் பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தில் தன்னைப் பாடிய பாலைக் கௌதமனார்க்குக் குட்டுவன் துறக்கம் அளித்த வரலாறு கூறப்பெற்றுள்ளது.

பெருஞ்சோறு பயந்த திருந்துவேல் தடக்கை
திருநிலை பெற்ற பெருநாள் இருக்கை,

....

குலவுவேற் சேரன் கொடைத்திறன் கேட்டு
வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்திறல் நெடுவேல் சேரலாதன் காண்குனன[32]

[திருநிலை - செல்வநிலை; பெருநாள் இருக்கை - பெருமை மிக்க காலை ஓலக்கம்; மறையோன் - பாலைக் கௌதமனார்; சேரலன் - இமய வரம்பன் தம்பியாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவன்]

ஈண்டுப் 'பெருஞ்சோறு பயந்த' என அக்குலத்து முன்னோன் செய்கை அவன்மேல் ஏற்றிக் கூறப் பெற்றது. இந்தக் குட்டுவனிடம்தான் பராசரன் என்ற சோழ நாட்டுப் பார்ப்பனன் பரிசில் பெற்றது. பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்,

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது
கொடுத்தோய்[33]

32. சிலப். கட்டுரைக் காதை - அடி 55-56; 62-64
33. புறம் - 1

எனப் புறப்பாட்டிலும் இவன் போற்றப்பெறுவதைக் காண லாம். மேலும் சிலம்பிலேயே இவன்,

நான்மறை யாளன் செய்யுட் கொண்டு
மேல்நிலை உலகம் விடுத்தோன் ஆயினும்[34]

[நான் மறையாளன் - பாலைக் கௌதமனார்:செய்யுள் பதிற்றுப் பத்தில் மூன்றாம் பத்து; மேல் நிலை உலகம் -துறக்கம்]

என்று சிறப்பிக்கப் பெறுகின்றான். இவனைப் பாடிப் பெற்ற பரிசில்: ''நீர் வேண்டியது கொண்மின் என, யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும் என, பார்ப் பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெரு வேள்வி வேட் பிக்க, பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் பார்ப் பனியையும் காணாராயினர்.''[35] என்பதனால் அறியலாம். இவன், இந்நூலில் பின்னுமோர் இடத்தில் உவமையாகவும் சுட்டப்பெறுகின்றான்.

முடிபுறம் உறிஞ்சும் கழற்கால் குட்டுவன்
குடிபுறந் தருங்கால் திருமுகம் போல
உலகுதொழத் தோன்றிய மலர்கதிர் மதியம்
பலர்புகழ் மூதூர்க்குக் காட்டி நீங்க[36]

[முடிபுறம் - மன்னரது முடியின் புறம்; உறிஞ்சும் - தேய்க்கின்ற; குடிபுறம் தருதல் - குடிகளைக் காத்தல்; திருமுகம்-அழகிய முகம்; மலர்கதிர் - விரிந்தகதிர்]

குடிகளைக் காக்கும் காலத்து விளங்கும் அரசனது திருமுகத்தை யொப்ப விரிந்த கதிர்களை யுடைய மதியம் இருந்தது என்பதாகக் கூறுவர் கவிஞர். மற்றைய அரசர் இவன் அடிக்கண் தம் முடி பொருந்தத்

34. சிலப் : நடுகற் கதை - அடி 137 - 8.
35. பதிற் : மூன்றாம் பத்து - பதிகம் காண்க.
36. சிலப் : நடுகல். அடி 37 - 40.

தலைவணங்கலான் அம்முடியினைக் கழல் தேய்ப்பதாயிற்று. உவமப் பொருள் உவமிக்கப்படும் பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது இலக்கணவிதி.

உயர்ந்தன் மேற்றே உள்ளும் காலை[37]

என்பது தொல்காப்பிய விதி. எனவே, வேந்தனின் முக மலர்ச்சி மலர கதிர்மதியத்தை விடப் பொலிவுற்று விளங்கியதாகக் கூறப்பெற்றுள்ளது.

சேரன் செங்குட்டுவனின் **நீதி உணர்வுபற்றியும்** சிலப்பதிகாரத்தால் அறியமுடிகின்றது. இயற்கை வளம் செறிந்த மலை நாட்டில் மலை வளம் காணப் புறப்படுகின்றான் சேரன் செங்குட்டுவன் தன் துணைவி இளங்கோ வேண்மாளுடனும் அரசச் சுற்றத்துடனும். அப்பொழுது தண்டமிழ்ச் சாத்தனாரும் அருகில் இருக்கின்றார். மலைவாழ் குறவர்பெருமக்கள் கணக்கற்ற பொருள்களுடன் காவலனைச் சந்திக்கின்றனர். வேங்கை மரத்தடியில் காரிகை ஒருத்தி 'வானவர் போற்ற வானகம் பெற்ற' செய்தியைத் தாம் கண்டதாகக் கூறுகின்றனர். அப்பொழுது அருகிருந்த புலவர் பெருமான் சாத்தனார் கண்ணகியின் வரலாறு முழுவதையும் எடுத்துரைக்கின்றார். கண்ணகி வரலாற்றுடன் நெடுஞ்செழியன் வரலாறும் குறிப்பிடநேர்கின்றது. அப்போது அவன் வருந்தி உரைத்த அமுத மொழிகள் தமிழினம் பெருமையோடு உலகிற்கு எடுத்துக்காட்டக் கூடிய பொன்மொழிகளாகும். சேரர் கோன் பேசியது:

எம்மோ ரன்ன வேந்தர்க் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
உயிர்பதிப் பெயர்ந்தமை உறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது!

37. தொல் : உவமயியல் - 3.

மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
குடிபுர உண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதக இல்[38]

இந்த அமுத ஊற்றில் சேரவேந்தனின் ஆட்சியில் குடிமக்கள்பால் அவன் கொண்டிருந்த அற உணர்வு - நீதி உணர்வுவெளிப்படுகின்றதைக் காண்கின்றோம்.

நீதி வழங்கல் : திருவள்ளுவர் காலத்திலும் அவர் காலத்திற்கு முன்பும் பின்பும் முடியாட்சியே நடைமுறையிலிருந்தது. இந்தக் காலங்களில் நீதி வழங்குவதைச் சில சமயம் அரசனே மேற்கொண்டிருந்தான். ஆனால், நீதி வழங்குவதற்கு அறங்கூறு அவையங்களும் இருந்தன என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. பத்துப்பாட்டில் ஒன்றாகிய மதுரைக் காஞ்சியில் 'அறங்கூறு அவையம்' என்று ஒன்று இருந்ததாகக் குறிப்பு உள்ளது.[39] புறநானூற்றிலும் 'அறன்நிலை திரியா அன்பின் அவையம்' (புறம்-71) 'மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து, அறம் நின்று நிலையிற் றாகலின்' (புறம்-39), 'மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறங்கெட அறியாதாங்கு' (நற்-400), 'அறங்கெழு நல்லவை' (அகம்-93), 'முறையுடை அரசன் செங்கோல் அவையத்து' (குறுந். 276), 'அறங்கூறு அவையம்' (சிலப் 5 : 135) என்ற குறிப்புகளால் இத்தகைய அவையங்கள் இருந்தமை பெறப்படுகின்றன. அரசன் நீதி வழங்கினும் **அற நூல்களின் அடிப்படையைக் கொண்டே** வழங்கியதாக அறியக் கிடக்கின்றது.

அரசனே நேர் நின்று நீதி வழங்கினான் என்பதைப் பழமொழியிலுள்ள ஒரு பாடலால் அறிய முடிகின்றது. பாடல் கரிகாற் பெருவளத்தான் என்ற சோழ வேந்தனைப் பற்றியது. ஒரு சமயம் முதியோர் இருவர் தம்முள் மாறு

38. சிலப். காட்சிக் காதை. அடி 95-104
39. மதுரைக். அடி 492.

பட்டு வழக்கைத் தீர்ப்பிக்கும் பொருட்டு இவனிடம் வந்தனர். இளம் பிராயத்தானான இவனைக் கண்டு 'இவன் இளையன்; வழக்கின் முடிவை ஆராயும் அறிவு நிரம்பப் பெறாதவன்' என்று கருதினர் முதியோர். இதனைக் குறிப்பால்உணர்ந்த கரிகாலன் அவர்களை மறுநாள் வருமாறு பணித்தான். தானும் மறு நாள் முதியவன்போல் வேடம் பூண்டு நரைமுடியுடன் அவைக்கு எழுந்தருளி **நீதி வழங்கினான்**. இதனை,

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.[40]
[சோழன் - கரிகாலன்]

என்ற பழமொழிப் பாடலால் அறியலாம். இருதிறத்தாரும் உரைத்தலின் உரை 'வழக்கு' எனப்பட்டது. குற்றமுடையாராய்த் தண்டிக்கப் பட்டோரும், அரசன், வழக்கினை ஆராய்ந்து நீதி கூறி அறிவு கொளுத்தும் முறையைக் கண்டு இருசாராரும் மனம் மகிழ்ந்தார்கள் என்பதை ''நரைமுது மக்கள் (இருவரும்) உவப்ப முறை செய்தான்'' என்றார். சான்றாளர்கள் முதலிய பிற காரணங்கள்கொண்டு ஒரு வழக்கினை முடிவு செய்தலினும் வழக்கு தொடுத்தவர்களின் சொற்களைக் கொண்டே தீர்ப்புக் கூறுதல் நுண்ணுணர்வின்பால் பட்டது. **முறை செய்தல்** - ஒருபாற் கோடாது கோலோச்சுதல்; அறநூலும், நீதிநூலும் சொல்லும் நெறியின் அடிப்படையில் நீதிகூறுதல். வழக்கு தொடுத்தோர் (1) உரை முடிவு காணான் (2) இளையோன் என்ற இரண்டு குறைகளை அரசன்பால் கண்டனர். இந்த இரண்டு குறைகளையும் (1) முதியவன்போல் கோலம் கொண்டு சொல்திறமையினாலும் (2) நரைமுடித்தலாலும், இளமையை மறைத்தலாலும் நிறைவு செய்தான் சோழவேந்தன்.

40. பழமொழி 6 (கழகப் பதிப்பு)

அரசனால் செய்யப்படும் முறையினது தன்மையைச் **செங்கோன்மை** என்பார் பரிமேலழகர். அம்முறை ஒருபாற் கோடாது செவ்விய கோல்போல் இருத்தலின் செங் கோல் எனப்பட்டது. வடநூலாரும் இதனைத் **தண்டம்** என்று குறிப்பர். ஓர் அரசன் தன்கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக்குற்றத்தை நன்கு ஆராய்ந்து எந்த ஒரு பக்கமும் சாயாது நடுவு நிலைமையுடன் அக்குற்றத்திற்குச் சொல்லப்பட்ட தண்டனையை நூலோரோடு அவ்வளவிற் றாகச் செய்வதே முறை.

ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை (541)

[ஓர்ந்து - ஆராய்ந்து; கண்ஓடுதல் - ஒரு பக்கம் சாய்தல்]

என்பது வள்ளுவம். பண்டைத் தமிழரசர்கள் நீதியை என்றும் நெஞ்சில் நிறுத்தி ஆட்சி புரிந்த சான்றோர்கள். எடுத்துக்காட்டாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்க்கையில் இதனைக் காணலாம். அவன் மிகவும் இளையனாயிருந்தபோது இருபெரு வேந்தரும் (சேரன், சோழன்) வேளிர் ஐவரும் ஒருங்கு சேர்ந்து, 'யாமே விழுமியம், பெரியம்; நம்மொடு பொரும் இவனும் இளையன்; கொள்ளத்தக்க கொள்ளை யும் பெரிது' (புறம். 78) என்ற இகழ்ச்சிக் குறிப்புடன் இவனோடு பொருதனர். இங்ஙனம் சிறுசொல் பகன்ற சினங்கெழு வேந்தரை எதிர்த்துச் சென்று பொருவதற்கு முன் நெடுமொழி கூறுகின்றான் நெடுஞ்செழியன்.

'சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்குஅகப் படேஅ னாயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
'கொடியன்எம் இறை'எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈய இன்மையான் உறவே[41]

[சிறுசொல் - புல்லிய வார்த்தை; சினம் - கோபம்; சமம் - போர்; சிதைய - சிதறும்படி; செல்நிழல்-சென்றடையும் நிழல்; கோலேன் - கொடுங்கோலன்; நிலைஇய - நிலை பெற; வரை - எல்லை; புன்கண் கூர - துயரம் மிக]

என்ற பாடற் பகுதியில் இந்த வஞ்சினத்தைக் காணலாம். இவ்வாறு வஞ்சினம் கூறும் நெறியில் **மூன்று** கருத்துகளைக் காணலாம். (1) தன்குடை நிழலில் வாழும் குடிமக்கள் தம் அரசன் கொடுங்கோலன்; தங்கட்குத் தக்க காவல் இல்லை என்று அழுது அரற்றிக் கண்ணீர் பரப்பிப் பழிதூற்றும் கொடுங்கோலை உடையனாதல் (2) உலகத்தோடு எஞ்ஞான்றும் நிலையுறும் புகழையும் தலைமையும் உடைய புலவர்கள் தன் நில எல்லையைப் பாடாது நீங்குதல் (3) 'இல்லை' என்று வந்தோர்க்குக் கொடாத வறுமையைத் தான் அடைதல். இவற்றுள் முதற்கருத்தில் அரசன் நீதி வழங்குவதில் எவ்வளவு ஊற்றம் உடையவனாக இருக்கின்றான் என்பதைக் காணலாம்.

இவ்வாறு **நீதி வழங்கும்** உணர்வு மலை நாட்டுக் காவலன் சேரன் செங்குட்டுவனிடமும் இருந்ததைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். செங்குட்டுவன் தன் வீரப் படைத் தலைவனை நோக்கிக் கூறினான் வஞ்சினம். இமயத்தினின்றும் தமிழகம் நோக்கித் தீர்த்த யாத்திரையாக வந்த முனிவர் ஒருவர் கனகன், விசயன் என்னும் இரு ஆரிய மன்னர் நம் தமிழரசர்களை இழிவாக இயம்பியதாகச் சாற்றினர். ''நிலைபேறில்லாத வாழ்க்கையை உடைய அம்மன்

41. புறம் - 72

னர்கள் கூறிய இகழுரை நம்மை ஒத்த தமிழ் வேந்தர் அனை வருக்கும் இகழ்ச்சியைத் தருவதாகும். எனவே காவாத நாவினையுடைய அவ்வட நாட்டு அரசர்களின் தலைமீது கண்ணகித் தெய்வத்திற்குரிய கல்லையேற்றித் தமிழகம் மீளுவேன். அவ்வாறன்றி என் கூர்வாள் வறிதே திரும்பு மாயின், என் நாட்டின்மீது படையெடுத்து வரும் கொடிய மாற்றரசனை நடுங்கச் செய்யாது, என் ஆளுகைக்குரிய குடி மக்களை நடுங்கச் செய்யும் கொடுங்கோலன் எனப் பெயர் கொள்வேனாக'' என்று வஞ்சினம் கூறினான். இளங்கோ வாக்கில் இவை:

இமயத் தாபதர் எமக்கிங் குணர்த்திய
அமையா வாழ்க்கை அரசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்கஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்;
வடதிசை மருங்கின் மன்னன் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளும்என் வாய்வாள் ஆகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பில்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆக[42]

என்பவையாகும். குடிமக்கள் நலத்தின் பொருட்டு செய்யவேண்டிய நல்லாட்சியைப் பற்றிய நினைப்பு இவன் நெஞ்சில் நிலைத்திருந்ததைப் பற்றி இதனால் அறிய முடிகின்றது.

புழுப்போன்ற சாதாரண பிராணிகட்கும் மூளை (Brain) உண்டு. சாதாரணமாக ஒரு மனித மூளையின் எடை மூன்று இராத்தல்கள்; யானை மூளையின் எடை பத்து இராத்தல்கள்; திமிங்கல மூளையின் எடை பதினான்கு இராத்தல்கள். மனிதன் சிறந்த அறிவுடையவ னாக இருப்பதற்கு மூளையின் அளவிலிருந்து ஊகிப்ப

42. சிலப். கால்கோட் காதை. அடி 9-18

பதைவிட மூளையின் எடைக்கும் உடலின் எடைக்குமுள்ள விகித அளவு சரியான கருத்தேற்றத்தைத் தருகின்றது. இந்த அளவு முறையே மனிதனுக்கு 1/50உம், யானைக்கு 1/500உம், திமிங்கலத்திற்கு 1/10,000மும் உள்ளது. மூளை பல செயல்களுடன் கொள்வாய்களையும் Receptors) உடற்பாகங்களையும் ஒருமைப்பாட்டுடன் செயற்படச் செய்கின்றது. மனிதனுடைய மூளை எண்ணச் செல்வமுடையது. நல்லவற்றையும் தீயவற்றையும் சிந்திக்கும் செழிப்புடையது. தீயவற்றில் விரைந்து பாய்ந்து அதில் மூழ்கி நிற்கும் இயல்புடையது. நல்லது செய்தாலும் அல்லது செய்தாலும் தான் செய்யும் ஒவ்வொரு செயலையும் நியாயப்படுத்திக்கொள்ளும் பாங்கு மனிதனுடையது. படித்தவனாக இருந்தால் தான் செய்யும் தீய செயலையும் நியாயப்படுத்திக் காட்ட அறநூல்களிலுள்ள சில வாக்கியங்களைத் தேடி அவற்றைத் திரித்துப் பொருள் கூறி தன் செயலை நியாயப்படுத்திக் காட்டும் பாங்கு அவனுடையதாக இருப்பதைக் காணலாம். இதனைக் கடியும் முறையில் பாரதியார்,

> தரித்திரம் போகுது; செல்வம் வருகுது;
> படிப்பு வளருது; பாவம் தொலையுது;
> படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
> போவான், போவான், 'ஐயோ!' என்றுபோவான்[43]

என்று குடுகுடுப்பைக்காரன் வாயில் வைத்துக் காட்டுவார். இவ்விடத்தில்,

> நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும் (373)

என்ற வள்ளுவர் வாய்மொழியும் நினைவிற்கு வருகின்றது. பாரதத்திலுள்ள பாத்திரங்களின் (கதை மாந்தர்களின்) குணங்களைப் பொதுமக்கள் கூட நன்கு தெரிந்திருந்தார்கள். அறவழி நிற்கும் பாத்திரத்திற்குத் தரும

43. பா. க. பல்வகைப்பாடல்கள்-புதியகோணங்கி-2

னும் மறவழி (தீயநெறியில்) நிற்கும் பாத்திரத்திற்குத் துரியோதனனும், சூதும் வாதும் வஞ்சகமும் நிறைந்த நெறியில் நிற்கும் பாத்திரத்திற்குச் சகுனியும் எடுத்துக் காட்டாக நிற்கின்றனர் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். வில்லியின் படைப்பைவிட, பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் அவர்களின் படைப்பில் தனிப்பட்ட ஓர் உயிர்த் தத்துவம் சோபிப்பதைக் காணலாம். துரியோதனன் தீய குணங்களை உடையவனாக இருந்த போதிலும் அவனை ஒரு வெறும் அயோக்கியனாகக் கவிஞன் படைக்கவில்லை. இந்தக் காவியத்தில் துரியோதனன் தனது மறத் தொழிலுக்கும் பொறாமைக்கும் **ஓர் அரசியல் தத்துவத்தையே** அடிப்படையாக வைத்துக் கொள்ள முயல்வதைக் காணலாம். திருதராட்டிரன் அவனுக்குப் பலவிதமான புத்திமதிகள் சொல்லுகின்றான். அவற்றிற்கு மறுமொழியாக அவன்,

''மன்னர்க்கு நீதி ஒருவகை;—பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை''[44]
....
குழைதல் என்பது மன்னவர்க் கில்லை;
கூடக்கூடப்பின் கூட்டுதல் வேண்டும்;
பிழைஒன் றேஅர சர்க்குண்டு, கண்டாய்;
பிறரைத் தாழ்த்து வதிற்சலிப் பெய்தல்[45]

வெல்வதெங் குலத்தொழி லாம்;—எந்த
விதத்தினில் இசையினும் தவறிலைகாண்!
நல்வழி தீயவழி — என
நாமதிற் சோதனை செயத் தகுமோ?
செல்வழி யாயினுமே — பகை
தீர்த்திடல் சாலுமென் றனர்பெரி யோர்[46]

44. பா. ச. 1. 11 : 87
45. பா. ச. 1.18:100
46. ஷை. 1.13:101

என்று தன் 'அரசியல் கொள்கைத் துளிகளை'ச் சிதற விடுகின்றான். இக்காலத்தில் மெக்கியவல்லி, ஹிட்லர், முஸ்ஸோலினி போன்ற அரசியல்வாதிகளை அறிந்த நமக்கு 'இவர்களும் துரியோதனனுக்கு முன் எம்மாத்திரம்?' என்று எண்ணும்படி தோன்றுகின்றது. மன்னராட்சியில்தான் இத்தகைய தந்திரங்கள் கடைப்பிடிக்கப் பெற்றதென்றால் மக்களாட்சி நடைபெறும் இக்காலத்திலும் சில அரசியல்வாதிகள் (அமைச்சர்கள், சபா நாயகர்கள்) கடைப்பிடிக்கும் கொள்கைகளும் நடைமுறையில் கையாளும் நெறிமுறைகளும் அறிஞர்களின் நெஞ்சினைக் கதிகலங்கச் செய்து விடுகின்றன. அண்மையில் (28—1—1988) தமிழகச் சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற அடாத அநாகரிகமற்ற செயல்கள் உலக நாடுகளின்முன் நாணித் தலைகுனியச் செய்து விட்டன. இச்செயல்களை விட இன்னும் கொடியவை. துரியோதனன் அவையில் நடைபெற்றவை — இதிகாசக்கதையில் வருபவை — கற்பனையானவை—என்று தள்ளிவிடத்தக்கவை அன்று. உண்மையில் நடைபெறக் கூடியவை; அவற்றைத் தவிர்த்தலே அறம்—நீதி—என்பதற்காகவே கவிஞன் நமக்குக் காட்டுகின்றான். இவை முடியாட்சிக்காலத்தில் நடைபெற்றவை. அவையை அலங்கரிப்பவர்கள்—வீடுமன், விதுரன் போன்றவர்கள்—வாயிழந்து கண்திறந்த மௌனிகளாய் "வீற்றிருந்தனர்." வீடுமாச்சாரியன்,

> 'செல்லு நெறியறியார் செய்கையிங்குப் பார்த்திடிலோ
> கல்லும் நடுங்கும், விலங்குகளும் கண்புதைக்கும்
> செய்கை அநீதியென்று தேர்ந்தாலும் சாத்திரந்தான்
> வைக்கும் நெறியும் வழக்கமுமே கேட்பதனால்
> ஆங்கவையும் நின்சார்பில் ஆகா வகையுரைத்தேன்
> தீங்கு தடுக்கும் திறமிலேன்[47]

47 : பா. ச. 5. 271 : 67-72

என்று கூறி 'அந்த மேலோன் தலை கவிழ்ந்தான்.' இந்த அவையில் உள்ளவர்கள் அனைவரும் துரியோதனன் தாட்சண்யத்தால் மன்ற உறுப்பினர்களானவர்கள். ஆனால் தமிழகச் சட்டமன்றப் பேரவையின் அமைச்சர்கள், சபா நாயகர், உறுப்பினர்கள் நம்மால் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள். தேர்தல் வரும்போது இவற்றைக் கருத்தில் கொண்டு வாக்கு அளிப்போமா? மாட்டோம். இறைவன் தான் அனைவர்க்கும் வழிகாட்ட வேண்டும்! மக்களால் தேர்ந்தெடுக்கப்பெறும் அரசியலிலும் துரியோதனன் போன்ற ஒருவரே முதலமைச்சராக வர நேரிடுகின்றது. துரியோதனன் தனது அடாத கொள்கைகளைத் தெளிவாக வெளியிட்டான். ஆனால் இக்கால அரசியல் தலைவர்கள் 'ஏழைகட்கு உதவும் கொள்கைகள், திட்டங்கள்' என்ற போர்வையில் பல அடாத செயல்களை மேற்கொள்வதைக் காண்கின்றோம்.

வள்ளுவர் கருத்து: நீதி வழங்கும் முறைபற்றிய தெளிவான கருத்தைத் திருக்குறளில் காணலாம். நேர்மையாக ஆட்சி புரிதல் என்பது நாம் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதல்ல. குடிகளைக் காப்பாற்ற முறை செய்யும்போது, அவர்களில் சிலரிடத்தில் குற்றம் காணும்போது தண்டிக்க வேண்டும். குற்றவாளிகட்குத் தண்டனை விதிக்காமல் பல மக்களைக் காப்பாற்ற முடியாது. பலரது நன்மைக்காக ஆட்சியில் சிலருக்குத் துன்பம் இழைக்கவும் நேரிடும். புத்தர் கொள்கை நடைமுறை ஆட்சிக்கு ஒத்து வராது. அறத்துப் பாலில் 'அன்புடைமை' பற்றித் தனக்குத் துன்பம் இழைத்தவர்கட்கும் தீமை செய்யாதிருப்பதே தலையாய அறிவு என்றும், 'தீவினையச்சத்தில்' 'மறந்தும் பிறன் கேடுசூழற்க' என்றும் கூறியவை ஆட்சி முறைக்குத் துணைபுரிவதில்லை. இன்னும் பிறர்க்கு இன்னா செய்யாமல் வாழ்வதே தூயவர் துணிவு என்றும், இன்னா செய்தவர்களைத் தண்டிக்கும் முறை அவர்கள் தாமே நாணும்படியாகப் பதிலுக்கு

நன்மை செய்வதே என்றும் கூறியவையும் நடை முறையில் நீதி வழங்குவதில் துணைபுரிவதில்லை.

தண்டனை வழங்கும் முறைகளில் கொலைத் தண்டனையும் ஒன்று. மிகப் பொல்லாத குற்றவாளிகளாக உள்ள ஒரு சிலரைக் கொலைத் தண்டனை வழங்கி ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கருதும்போது கொல்லாமைப் பற்றிக் கூறும் கருத்துகள் நடைமுறையில் நீதி வழங்குவோருக்குப் பயன்படுவதில்லை. இவையெல்லாம் தனிவாழ்க்கை என்னும் முறைக்கு ஓதியவை என்று கொள்ளின் குழப்பம் நேரிடாது. தனிப்பட்டவன் தன் வாழ்க்கை கெடுவதானாலும் பிறருக்குத் தீமை விளைத்தலின்றி வாழவேண்டும் என்பதே வள்ளுவர் காட்டும் அறம். ஆனால் அவனே பொதுவாழ்க்கையில் பலரைக் காக்கும் கடமையில் உள்ளபோது, பொது வாழ்க்கை கெடுவதனாலும் பிறருக்குத் துன்பம் இழைத்தல் ஆகாது என்று கருதுவது அறியாமை; இது கடமை செய்வதில் தவறிய குற்றமும் ஆகும். ஆகவே, பொது வாழ்க்கை கெடாமல் சீர்பட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக்கொண்டு குற்றவாளிகட்குத் தண்டனை வழங்குதல் வேண்டும். அவ்வாறு தண்டிப்பது பழியும் அன்று; பாவமும் அன்று. அது தலைவனது தலையாய கடமையும் ஆகும். கொலைத் தண்டனை விதிப்பதும் அவ்வாறே அவன் கடமையாகும்; அது பயிரைக் காப்பாற்றக் களையைப் பிடுங்கி எறியும் உழவனுடைய தொழில் போன்றது.

குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று; வேந்தன் தொழில் (549)

கொலையில் கொடியாரை வேந்தொறுத்தல்பைங்கூழ்
களைகட் டதனோடு நேர் (550)

என்பவை தண்டனை வழங்குவதில் அவர் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கட்கும் நீதி வழங்கும் பொறுப்பிலுள்ளவர்கட்கும் காட்டும் ஒளி விளக்குகள் ஆகும்.

இப்போது கொலைத் தண்டனையைப் பல நாடுகள் ஒழித்து வருகின்றன. கொலைத் தண்டனையால் ஒருவன் வாழ்வை ஒழிக்கலாமே யன்றி அவனைத் திருத்த முடிவதில்லையாதலால் அவனுக்குப் பல ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் திருத்த முயல்வதே அரசின் கடமை என்று உச்ச நீதிமன்ற நடுவர்களும் கருதுகின்றார்கள். மேலும் கொலைத் தண்டனை நாகரிகம் இல்லாத பழங்காலத்தில் ஏற்பட்டது என்றும், இது இன்றைய மக்களின் நாகரிக உணர்ச்சிக்கே மாறுபட்டது என்றும் காரணங்கள் கூறுவர். ஆனால், இதற்கு நேர் மாறாகக் கருதும் அறிஞர்கள் நம் நாட்டிலும் உண்டு. மேல் நாட்டிலும் உண்டு. அவர்களுள் உலகப் பெரும்புகழ் பெற்ற எச். ஜி. வெல்ஸ் என்பவரைக் கூறலாம். குற்றவாளிகளில் திருந்தக் கூடியவர்கள் சிலர் என்றும், திருத்த முடியாதவர்கள் பலர் என்றும், திருத்த முடியாதவர்களை எத்தனை ஆண்டுகள் சிறையில் வைத்துக் காத்தாலும் 'கொடிறும் பேதையும் கொண்டது விடா' என்பதாதலால் சிறிதும் பயன்படாது என்றும் மொழிகின்றனர். இவர்களை வறுமையாலும் வேறு சூழ்நிலையாலும் திருடின இளங்குற்றவாளிகட்குரிய பள்ளிகளில் சேர்த்து அவர்களைத் திருத்துவது போல இந்தக் குற்றவாளிகளையும் திருத்தலாம் என்று கருதுகின்றனர் போலும். இந்த ஒப்புமை சிறிதும் பொருந்தாது. சில ஆண்டுகட்கு முன்னர் தில்லி மாநகரில் ஓர் இளம்பெண்ணைக் கற்பழித்துக் கொன்ற பில்லாவும் அவன் நண்பன் ரங்காவும் போன்றவர்களையும், அதுபோலவே அண்மையில் விருகம் பாக்கத்தில் (சென்னை) ஒரே குடும்பத்திலுள்ள பலரை அதே குடும்பத்திலுள்ள ஒருவர் கொன்றாரே அவரைப் போன்றவரையும் திருந்துவார்கள் என நினைப்பது சிறிதும் பொருந்தாது. இத்தகைய சமூக விரோதிகளை-கொலைப்பாதகர்களை-விட்டு வைப்பதால் சமூகத்திற்கு மேலும் தீங்குகள் விளையுமேயன்றி நன்மை ஏற்படாது.

தண்டனை குறையக் குறையக் குற்றங்கள் அதிகப்படுவ தையும் நாம் காண்கின்றோம். வயலில் களை எடுத்துப் பைங்கூழைக் காப்பது போல கொலையிற் கொடியாரை யும் சமூகத்திலிருந்து நிரந்தரமாகவே அகற்றிவிட வேண் டும் என்ற வள்ளுவர் பெருமானின் கருத்தே நடை முறைக்கு உகந்ததாகும் என்று கொள்வதே பொருத்த முடையதாகும்.

ஒருவரை நீண்டகாலம் சிறையில் வைத்திருந்தால் அவரிடம் எஞ்சியுள்ள மக்கட்பண்பும் கெட்டு விடுகின்றது என்றும் இவ்வாறு தண்டிக்கப் பட்டவர்கள் கெடுவதுடன், அவர்களைக் காவல் காக்கும் அலுவலர்களும் பண்பு இழந்து கெட நேர்கின்றது என்றும் ஒரு சிறந்த கருத்தும் நிலவுகின்றது. இக்கருத்துப்படிச் சிறையில் வைத்து அவர் களுடைய மனத்தை முற்றிலும் பாழ்படுத்தி அவர்களின் உயிரைக் காப்பதை விட அவர்களின் உயிரைப் போக்கி விடுவதே சிறந்தது என்றும் மற்றொரு கருத்து முதற் கருத்துக்குத் துணை செய்கின்றது. வள்ளுவர் கருத்து இதற்கு அரண் செய்வது போல் அமைகின்றது.

இறை பெறும் நெறி: திருவள்ளுவர் பொருள் செயல் வகையை ஓதும்போது அறத்தை நன்கு வற்புறுத்து கின்றார். செய்யும் திறம் அறிந்து தீமை இல்லாத வழியில் சேர்ந்த பொருளாக இருத்தல் வேண்டும்; அந்தப் பொருள் அறம் பயக்கக் கூடியதாகவும் இன்பம் பயக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் (754). அந்தப் பொருள் அருளோடும் அன்போடும் வந்த பொருளாக இருக்க வேண்டும்; அருள் இல்லாமல் அன்பு இல்லாமல் பொருள் சேர்ப்பது கூடாது; அவ்வாறு சேரும் பொருளை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளிவிட வேண்டும் என்று வற்புறுத்துவார் (755) கூடிவரும் வள்ளுவர் பெருமான். அருளொடும் அன் புடனும் கூடிவரும் பொருள் என்பதனை ஆறிலொன்றாய்

வருதல் வேண்டும் என்பதைத் 'தென்புலத்தார் தெய்வம்' (43) என்ற குறளுரையில் விளக்குவார் பரிமேலழகர். மேலும், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அமைச்சர் அவ்வாறு செய்யாத பொருளீட்டம் பசுமட்கலத்து நீரைப் பெய்து அதனைக் காப்பதோடொக்கும் என்று கூறுவார்.

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்,
கலத்துநீர் பெய்திரீஇ யற்று(360)

[சலம் - தீயவினை; ஏமமார்த்தல் - ஏமத்தை (காப்பு) அடையப் பண்ணுதல்]

என்ற வள்ளுவத்தைக் காண்க. இவ்வாறு செய்தால் அரசனும் பொருளும் ஒரு சேரப் போய் விடுவர் என்பது கருத்து. தனிப்பட்ட முறையிலும் சரி, அரசுமுறையிலும் சரி பொருளீட்டும் துறையில் தூய்மை வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகவே 'பொருள் செயல்வகை' என்ற அதிகாரத்தில் மட்டும் அல்லாமல் 'வினைத்தூய்மை' என்ற அதிகாரத்திலும் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். பெற்ற தாய் பசித்துன்பத்தால் வாடுவதாக இருந்தாலும் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்யக் கூடாதென்றும் (656), பழியை மேற்கொண்டு ஆக்கம் பெறுவதைவிட வறுமையே உயர்ந்தது என்றும் (657), பிறர் வருந்தும்படியாக ஈட்டிய பொருள் எல்லாம் ஈட்டியவரே வருந்தும்படியாகப் போய்விடும் என்றும் (659) விளக்கியுள்ளதை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

அரசனின் கடமை (குடியரசு ஆட்சியில் அமைச்சனின் கடமை) குடிமக்களைப் புரத்தல். இவர்களின் நலம் கருதிக் காவல் படை, போர் சார்ந்த படை போன்ற அமைப்புகளை வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதற்கு ஆகும் செலவைக் குடிமக்கள் ஏற்க வேண்டியவராகின்றனர். இத்தகைய செலவிற்காகவே வரி (Tax) விதிக்கப்பெறுகின்றது. இந்த வரி குடிமக்களைப்

புரத்தல் காரணமாக எழுந்தமையால் அது புரவு[49] எனப் பட்டது. அஃது அரசன் குறித்த காலத்தில் மக்களிடம் இறுக்கப்பட வேண்டியதானமையால் 'இறை'[50] என்றும் பெயர் பெற்றது. அரசன் தன் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு முழுத்துணை புரிந்தமையின் 'கடமை' என்றும் இயம்பப் பெற்றது. பாண்டியன் அறிவுடைநம்பி தன் குடிகளிடத்து இறை வாங்கும் நெறியில் பெருந்தவறு செய்தான். இவன்பால் சூழ்ந்த அரசியல் சுற்றத்தார் இவனை இடித்துரைத்து நெறிப்படுத்தும் நேர்மையற்ற வராயினர். புனல் செல்லும் வழி புல் சாய்ந்து கொடுப்ப பதைப்போல் இவன் விழைந்த வழியெல்லாம் நுழைந்து கொடுத்து அரசியலில் வாழும் மக்கட்குத் துன்பமுண் டாக்கினர். மக்கள்பால் மன்னனுக்கு அன்பு சுருங்குவ தாயிற்று. குடிகளை மிக வருத்தி இறை வாங்குவதில் விருப்புடையவனானான். இதனைக் காணப் பொறாத சான்றோர் பிசிராந்தையாரை அரசன்பால் விடுத்து நல் லறிவு கொளுத்துமாறு வேண்டினர். அவரும் அவர்களின் வேண்டுகோட்கிணங்கி பாண்டியனைச் சென்று கண்டு அவனை நெறிப்படுத்தினார். இந்நிகழ்ச்சியை ஆந்தை தையாரே பாடிய பாடல்:

காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வல்லதும் பன்னாட் காகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்;
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப கெடுக்கும் பிண்ட நச்சின்

49. புறம் - 75 ('குடி புரவு இரக்கும்...சிறியோன்)
50. பாலகா. திருவவ தாரம்-112(இறை தவிர்ந்திடுக)

யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே[51]

[மா - நில அளவு; செறு - நில அளவு; யாத்து-ஈட்டி; நந்தும் - தழைக்கும்; வைகலும்-நாடோறும்; வரிசை-தரம்; கல்என - ஆரவாரத்தையுடைய; பரிவு - அன்பு; தப - கெடுக்க; பிண்டம் - பொருள் தொகுதி; நச்சின்-விரும்பினால்; புலம் - வயல்]

என்பது. ''களிற்றியானைக்கு உணவாகும் நெல் அது விளையும் நிலத்திலிருந்து கொணரப்பட்டுக் கவளம் கவளமாகக் கொள்ளப்படுமாயின் விளைச்சல் ஒருமா அளவினும் குறைந்ததாயினும் பல நாட்கள் அக்களிற்றியானைக்கு உணவு தர வல்லதாகும். யானைக்கென்று நூறுமா நிலத்தை விட்டு நெல் விதைத்து, அது விளைந்து சாய்ந்து கிடக்கையில் அதனைத் தனியே மேயவிடின் யானையின் வாய் புகுவதனைக் காட்டிலும் கால்களால் கெடுவது மிகுதியாகும். இவ்வாறே வேந்தனும் தான் பெறுதற்குரிய அரசிறையை நெறியறிந்து முறையே கொள்வானாயின், நாடு பெருவளம் படைத்துச் செல்வத்தால் புகழ் பெறும்; அவ்வேந்தன் நாடோறும் வரிசையறியும் திறம் இல்லாத சுற்றம் சூழத் தானும் மெல்லியனாய்க் குடிகள்பால் அன்பின்றி மிக்க இறையை வாங்கலுறுவானாயின், யானை புக்க விளை நிலம் போல, அவற்கும் பொருள் சேராது; நாடும் கெட்டழியும்'' என்று செவியறிவுறுத்துள்ளதைப் பாடலில் காணலாம். இப்பாடலில் நில அளவுபற்றிய குறிப்பு உள்ளது. மா, குழி, வேலி என்பன நில அளவை வகை. இருபது மா கொண்டது ஒரு குழி; நூறு குழி கொண்டது ஒரு வேலி. செய் என்பது ஒரு தளை. கோடி என்பது மிக்கதோர் அளவினைக் குறிப்பது.

51. புறம்-184

இறை பெறும் நெறிபற்றி நலங் கிள்ளி என்ற அரசனே கூறுவதை இன்னொரு பாடலால் அறிய முடிகின்றது. சோழன் நலங்கிள்ளி காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளியிடமிருந்து உறையூரைத் தான் பெற்றுத் தான் அங்கிருந்து அரசு புரிந்து வருகையில், ஒரு சமயம் சான்றோர்கள் பலர் அவன் திருமாளிகையில் கூடியிருக்கும் வாய்ப்பு ஒன்று ஏற்பட்டது. அப்பொழுது அரசு முறையான இயல்பு பற்றிய பேச்சு எழுந்தது. 'மன்னர் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பது அக்கால நியதியாகையால் அதற்கு ஊறு நேரா வண்ணம் காத்தலின் இடுக்கண் பல நேரிடும் என்று கூறுவார் பலராயினர். "தந்தைக்குப் பின் அரசு முறை அவன் வழிவரும் மூத்த மகனுக்கு வருவது முறையினையுடையது. அதனை எய்தினோன் இவ்வுலகில் பெருஞ்சிறப்பு எய்தி விட்டதாகக் கருதி அளவிறந்த இறையினை விதித்துக் குடிமக்களை இரந்து பொருளீட்டக் கருதினானாயின் அவனுக்கு அரசு முறை பொறுத்தற்கரிய பெருஞ்சுமையாய்விடும். உரிய கடமையைக் குடிமக்கள் தாமே நல்குவராயின், கையிகந்த கடமை வாங்கும் வேந்தன் செயலைக் 'குடிபுரவு இரக்கும் சிறியோன்' என்கின்றான். குடிபுரவு—குடிமக்களைப்புரத்தற் பொருட்டுப் பெறும் கடமை. மிக்க ஆண்மையே வேந்தற்கு வேண்டப்படுதலின், அஃதில்லாதானைக் 'கூரில் ஆண்மைச் சிறியோன்' என்றான். பொரும் போரைப் பொறுக்கும் மனவெழுச்சியையுடைய சீரியோன் பெறுவனவாயின், தாழ்ந்த நீரையுடைய வற்றிய கயத்திடத்துச் சிறிய தண்டாகிய் வெளிய கிடேச்சினது (நெட்டியினது) கோடைக்கண் உலர்ந்த கள்ளியைப் போலப் பெரிதும் நொய்ந்து ஆகிவிடும்" என்று நலங்கிள்ளிகூறுவானாயினன். புறம் 75 இக்கருத்தினைச் சித்திரித்துக் காட்டுகின்றது. இறுக்கும் இறையின்றி மிக்க இறை விதித்து வாங்கும் கொடுமையை வெறுத்து வஞ்சினங் கூறுவானாய் பாண்டியன் நெடுஞ்செழியன்,

என்றிழல் வாழ்நர் செந்நிழல் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக[52]

என்று கூறுவதைக் காணலாம்.

இத்தகைய கருத்தினையே சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவரும்,

வாய்படும் கேடும் இன்றாம்
வரிசையின் அரிந்து நாளும்
காய்த்தநெல் கவளம் தீற்றில் ;
களிறுதான் கழனி மேயின்
வாய்படல் இன்றிப் பொன்றும்;
வல்லனாய் மன்னன் கொள்ளின்
நீத்தநீர் ஞாலம் எல்லாம்
நிதிநின்று சுரக்கு மன்றே.[53]

[வாய்படும் - உணவாகும்; கழனி - வயல்; பொன்றும் அழிந்து விடும்]

என்று கூறுவர்.

அரசன் குடிகளிடம் இறை வாங்குதல் குறித்து 'பழமொழி' என்ற நூலில் இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன.

பொருத்தம் அழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்தம் அடிநிழ லாரை - வருத்தாது
கொண்டாரும் போபோதே கோடல் அதுவன்றோ
வண்டூதா(து) உண்கு விடல்,[54]

52. புறம் - 72.
53. சீவக. 2907
54. பழமொழி - 244

[பொருத்தம் - இலக்கணம்; அருத்தம்-பொருள்; அது-காலமறிந்து கொள்ளுதல்.]

வண்டுகள் பூமொட்டுகளை அவற்றில் தேன் இல்லாதது கண்டு ஊதிச் சிதையாது. அவை தேன் நிறைந்து மலர்ந்த காலத்தில்தான் தேனை எளிதாக உண்ணும். அதுபோல அரசர்கள் குடிகளிடத்திலிருந்து வாங்கும் இறைப் பொருள்களைக் காலமறிந்து வருத்தாது வாங்க வேண்டும் என்பது பாடலின் கருத்து.

இன்னொரு பாடலும் வரி தண்டலைப் பற்றியதே.

பாற்பட்டு வாழ்ப எனினும் குடிகள்மேல்
மேற்பட்ட கூட்டு மிகநிற்றல் வேண்டாவாம்
கோல்தலையே யாயினும் கொண்டீக காணுங்கால்
பால்தலைப் பாலூறல் இல்.[55]

[பாற்பட்டு - கட்டுப்பட்டு; மேற்பட்டகூட்டு - தமக்குச் சேரவேண்டிய மிக்க இறைப் பொருளை; மிகநிற்றல்-நீண்ட நாட்கள் நிற்றல்; கோல்தலை - அரிந்த தாளின் தலையிலுள்ள(நெல்); காணுங்கால் - ஆராயுமிடத்து; பால்தலை-பால்உள்ள இடம் (ஆவின்மடி); ஊறல் - சுரத்தல்]

ஆவின் பாலைக் கறவாது சில நாட்கள் விட்டு வைத்தால் பால் வற்றிப் போகும். இறைப் பொருள்களை குடிமக்களிடத்து நிறுத்தி வைத்து நீண்ட நாட்கள் சென்ற பின்னர் அவற்றைப் பெற நினைப்பின் அது முடியாது போகும்; அவர்கள் அவற்றைச் செலவு செய்து விடுவர். பாலைக் காலமறிந்து கறவாதது ஆவின் குற்றமன்றிக் கறவாதவன் குற்றமாதல் போல இதுவும் அரசனது குற்றமாகும். ஆகவே அரசன் இறைப் பொருளைச் சுணங்காமல் சிறிது சிறிதாகக் காலமறிந்து கொள்ள வேண்டும் என்பது பாடலின் கருத்து. சென்னை குடிநீர்-கழிவுநீர் வாரியத்தில் எவ்வளவோ வரிகள் கொடுபடாது நிற்கின்றன. நடையாய்

55. பழமொழி - 245

நடந்து ஓயாது எழுதி கழிவுநீர் வரியை (3½ ஆண்டுகட்கு) விதிக்கச் செய்து கட்டினேன். குடிநீர் வாரியத்தில் என் முயற்சி இன்னும் பலிக்க வில்லை.

பொருள் செயல் வகையை ஓதும்போது வள்ளுவர் பெருமான் அறத்தை நன்கு வற்புறுத்துகின்றார். செய்யும் திறன் அறிந்து தீமையில்லாத வழியில் சேர்த்த பொருளாக இருக்க வேண்டும்; அந்தப் பொருள் அறம் பயக்கக் கூடிய தாகவும் இருக்க வேண்டும் (754); அருளொடும் அன் பொடும் வந்த பொருளாக இருக்க வேண்டும். அருள் இல்லாமல் அன்பு இல்லாமல் பொருள் சேர்ப்பது கூடாது; அவ்வாறு சேரும் பொருளை ஏற்றுக் கொள்ளாமல் தள்ளி விட வேண்டும் (755) என்று வற்புறுத்துவார் அப்பெருந் தகை. பொருள் ஈட்டும் துறையில் தூய்மை வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகவே இப்பெருமகனார் 'பொருள் செயல் வகை' என்ற அதிகாரத்திலல்லாமல் 'வினைத் தூய்மை' என்ற அதிகாரத்திலும் இந்தக் கருத்தை வலி யுறுத்துவார். பெற்ற தாய் பசித்துன்பத்தால் வாடுவதாக இருந்தாலும் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்யக் கூடாது என்றும் (656), பழியை மேற் கொண்டு ஆக்கம் பெறுவதை விட வறுமையே உயர்ந்தது என்றும் (657), பிறர் வருந்தும் படியாக ஈட்டிய பொருள் எல்லாம் ஈட்டியவரே வருந்தும் படியாகப் போய் விடும் என்றும் (659), தீவினையால் பொருள் செய்து காத்தல் பச்சை மண்கலத்துள் நீர் பெய்து அழிய வைப்பது போன்றதே என்றும் (660) விளக்கியுள்ளதை ஈண்டு நாம் உளங் கொள்ள வேண்டும்.

நாடாளும் அரசனுக்கு உரியபொருள் இன்னது என் பதையும் அறுதியிடுகின்றார் வள்ளுவர் பெருமான்.

> உறு பொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருள (756)
> [உல்கு - சுரங்கம்]

உடையார் இன்மையின் தானே வந்துற்ற பொருளும், சுங்க வரியாக வரும் பொருளும், பகைவர் திறையாகத் தரும் பொருளும் வேந்தன் பொருளாகின்றது. இன்றைய அரசியலில் முதல்வகைக்கு வழி இல்லை. உடையார் இல்லை யெனினும் தாயத்தார் வழக்கு போட்டு அதை அடைந்து விடுகின்றனர். சுங்கப் பொருள் அறவழியில் வந்தடைந்தால் மிக நன்று. இங்கு அரசு ஊழியர்கள் முறை கேடான வழியைக் கையாண்டு கையூட்டு பெறுவதை விழிப்புடன் தடுத்து நிறுத்துதல் அரசின் கடமை. ஒன்னார் தெறு பொருளுக்கு மக்களாட்சி முறையில் இடமே இல்லை. நட்பு கொண்டுள்ள வல்லரசுகளிடம் மானியமாகவும் குறைந்த வட்டிக்கு நீண்ட நாள் கடனாகவும் பெறுவதற்கு வழி உண்டு; பெற்று வருவதும் நடை முறையில் உள்ளது.

அறங்கூறு அவை மூலம்: அரசனே நேரில் வழங்கும் நீதியேயன்றி அறங்கூறு அவைகளின் மூலமும் நீதி வழங்கப் பெறும் மரபும் இருந்து வந்தது. இக்காலத்தில் நீதிபதி களை அரசு ஆய்ந்து தக்கவர்களை நியமிப்பது போலவே அக்காலத்தில் அரசனே இந்த அவையத்தினரை நியமித்து வந்தான். இந்த அவையத்திலிருந்தோர் ஞெமன் கோலன்ன நடுவு நிலை பெற்றுச் சிறந்திருந்தனர். இத்தகையோர் கூடிய அவை ‘அறமறக் கண்ட நெறிமான் அவையம்’ என்று பேசப்படுகின்றது. இந்த அவையை அமைப்பதில் அரசன் மிக்க பொறுப்புடன் செயற்பட்டான். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்,

> அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
> திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
> மெலிகோல் செய்தேன் ஆகுக (புறம் - 71)

என்று கூறும் வஞ்சினத்தால் ‘திறமையில்லாத ஒருவனை நியமித்து முறை கலங்கிக் கொடுங்கோல் செய்த பழியுடை யேனாகுக’ என்று கூறுவதால் அறநெறியில் அவன் கொண்டிருந்த ஊற்றமும் அதை நிலை நிறுத்தும்

அவையின் அமைப்பை நிறுவுவதில் அவன் கொண்டிருந்த பொறுப்பும் தெளிவாகின்றன. வீரத்தாலும் போர்ச் செயலாலும் ஓர் அரசன் வெற்றியோடு வாழ்வதாகத் தோன்றினாலும் உண்மையில் நேர்மையான ஆட்சி முறையால் தான் அவன் சிறப்போடு வாழமுடிகின்றது.

இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் (குறள்-547)

[முறை - செங்கோல்]

என்பது வள்ளுவம். மன்னன் முட்டாமல் செலுத்தியதனை 'மகனை முறை செய்தான் கண்ணும் (மனுநீதிச் சோழன்) தன் கைக் குறைத்தான் கண்ணும் (பொற்கை பாண்டியன்) காண்க' என்று உரை காண்பர் பரிமேலழகர்.

அகப்பொருள் நூல்களிலும் அறங்கூறு அவையம் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. 'உலகியல் வழக்காக' வரும் ஒரு சில பாடல்களில் இக்குறிப்புகளைக் காணலாம். உலக மக்களுட் சில பேதையர் தாம் களவு நெறியில் கூடிய பெண்டிரைத் தமது பேதமையின் காரணமாக தாம் அறிந்திலேம் எனக் கூறிப் பிரிந்திட முயல்வதும் மிகச் சிற்றளவில் உண்டு. இங்ஙனம் யாரோ ஒருவர் இருவர்பால் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னரே பவர் அறிய வரைந்து கொள்ளும் கரணங்கள் வலியுறுத்தப்பெற்றன.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.[56]

என்பது தொல்காப்பியம். "பொய்யாவது செய்ததனை மறைத்தல். வழுவாவது, செய்ததன்கண் முடிய நில்லாது தப்பி ஒழுகுதல். கரணத்தொடு முடிந்த காலையின் இவ்விரண்டும் நிகழாவாமாதலால் கரணம் வேண்டுவதா

56. தொல். கற்பியல்-4 (இளம்)

யிற்று'' என்று விளக்குவர் இளம் பூரணர். இங்ஙனம் வழுவினான் ஒருவன் செயல் அகநானூற்றுத் தலைவன் ஒருவனிடம் காணப்பெறுகின்றது. இது சார்த்துவகைகளால் வந்த புறச் செய்தியில் குறிக்கப் பெறும் ஒருவன் இழி செயலாகலின், அகத்தில் சுட்டி ஒருவர் பெயர் கூறாமையில் காணும் தலைவர் பெருமைகட்கு இழுக்கு தருவ தொன்றன்று என்பது ஈண்டு அறியத் தக்கது. கள்ளூர் என்னும் ஊரில் ஒருவன் ஒரு பெண் மகளைக் களவில் கூடி இப்பால் 'அறியேன்' என்கின்றான். இச்செய்தி அறங் கூறு அவையத்தின் முன்னர் கொணரப்பெறுகின்றது. அவர்கள் முன்னரும், அப்பேதை 'அறியேன்' என்று கூறி பொய்ச் சூளும் உரைக்கின்றான். அதன்மேல் அவையத் தார், இச்செய்திக்கு 'அறிகரி' (நெஞ்சறிந்தகரி) கேட் கின்றனர்.

> தோள்புதி துண்ட ஞான்றைச்
> சூளும் பொய்யோ கடலறி கரியே[57]

என்றாற் போல இவன் அப்பெண்ணைக் கண்டு மகிழ்ந்த இடம் ஒரு மரம் எனக் கேட்டுணர்ந்து, அங்குச் சென்ற அவையத்தார், அவனை அம்மரக்கிளையினைப் பற்றிக் கொண்டு ''நான் அறியேன்'' எனச் சூளுறச் செய்கின்றனர். பாலைக்கலியில் பொய்க்கரி கூறினான், தன் அடிக்கண் இருக்கப் பெற்ற மரமும் கவின்வாடி நெருப்புப் பற்றி எரியும் என்னும் கருத்தில்,

> கரிபொய்த்தான் கீழிருந்த
> மரம்போலக் கவின்வாடி
> எரிபொத்தி[58]

என்று கூறியிருப்பது போல, இங்ஙனம் பொய்ச்சூழ் செய் கின்றான். இவன் தீண்டிய கிளையும் தீப்பட்டு சாம்ப

57. அகம்-320.
58. கலி-34-அடி.10

றாகின்றது. அதுகண்டு அவையத்தார் ஆரவாரம்செய்து, உண்மையை நிலை நாட்டி, அக்காதலர் இருவரையும் கூட்டி வைக்கின்றனர். இக்குறிப்பு பிறிதொரு அகப் பாடலிலும் காணப்பெறுகின்றது.

கரும்பமல் படப்பைப் பெரும்பெயர் கள்ளூர்த்
திருநுதல் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே

[முறிஆர்-தளிர்கள்பொருந்திய] (அகம்-256)

என்ற பாடற் பகுதியில் இதனைக் காணலாம், இன்னும் மூன்று கவராய கிளைகளின் நடுவே வைத்து பிணித்தலும் நீறுதலைப் பெயலும் அஞ்ஞான்று குற்றத்திற்கு விதிக்கும் தண்டனைகளாம் என்னும் செய்திகளையும் அறிகின்றோம்.

'அறிகரி பொய்க்கும்' செய்தி நற்றிணையில் மிக இனிமை பயக்குமாறு நுவலப் பெற்றுள்ளது. அறத்தொடு நின்று வெளிப்பட்ட பின்னும் தலைமகன் வரைந்து கொள்ளாது பொருள்வயிற் பிரிந்து நெடுந் தொலைவு சென்று உறைகின்றான். அவன் பிரிவை ஆற்றாத தலைமகள் திங்களை நோக்கிப் பேசுகின்றாள். ''மேகத்தின் பிடர்மேல் தோன்றி எல்லாக் கலைகளும் நிறைவுற்ற திங்களே, நீ நிறையும் நேர்மையும் உடையை. நினக்குத் தெரியாமல் மறைந்து உறையும் உலகம் ஒன்று இல்லை. எனக்குத் தெரியாமல் மறைந்தொழுகும் என் காதலர் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டுவாயாக'' என்று இரந்து வேண்டுகின்றாள். திங்கள் விடை கூறவில்லை. ஆகவே அதன்மீது வெறுப்புற்று மீட்டும் அதனை நோக்கித் ''திங்களே, நீ அறிந்த அளவு சான்று கூறாது

பொய்யை மேற்கொண்டிருத்தல் காரணமாக நல்ல அழகிழந்த என் தோள் போல வாட்டமுற்று நாடோறும் சிறுகச் சிறுகக் குறைந்து நின் விழிப்புலம் மறைதலாலே நீ காட்டுவதுதான் இயலுமோ? இயலாதல்லவா?'' என்கின்றாள். உண்மை உரையாது பொய்த்தலின் அதற்கு தேய்தலும் வளர்தலுமான தண்டனை வழங்கப் பெற்றுள்ளது என்பன தலைவியின் குறிப்பு (நற். 196). நீதி மன்றத்தில் பொய்க்கரி கூறுவோரின் மொழிகள் உவமையாகவும் எடுத்தாளப் பெற்றுள்ளன.

> கைக்கரி யன்னவன் பகழி கண்டகர்
> மொய்க்குலம் வேரொடும் துணித்து வீழ்த்தின
> மைக்கரு மனத்தொரு வஞ்சன் மாண்பிலன்
> பொய்கரி கூறிய கொடுஞ்சொல் போன்றவே [59]

[கை - துதிக்கை; பகழி - அம்பு; கண்டகர் - கொடிய அரக்கர்கள்; மை - கரிய]

இது கரன்வதைப் படலத்திலுள்ள ஒரு பாடல். பொய்ச் சாட்சி மொழிகள் சொன்னவர்களது குலத்தை வேரொடு அறுத்தல் போல, இராமனது அம்புகள் அரக்கர் குலத்தை வேருடன் அறுத்துத் தள்ளின என்று விளக்குவான் கம்ப நாடன்.

மனிதர்களால் ஏற்படுத்தப்பெறும் நீதி வழங்கும் அமைப்புகள் சரியாக இயங்கா என்று கருதி இளங்கோ அடிகள் தம் கற்பனையில் புதியதோர் அமைப்பைத் தம் காவியத்தில் படைத்துக் காட்டுகின்றார். புகார் நகரத்தில் **'பூத சதுக்கம்'** என்ற ஓர் அமைப்பு உண்டு; இதில் பூதம் ஒன்று அறவழியிலிருந்து விலகி நிற்போருக்குத் தண்டனை வழங்கி விடும்.

> தவமறைந் தொழுகும் தன்மை யிலாளர்
> அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்

59. கரன்வதை-125

அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்கரி யாளர் புறங்கூ றாளர்என்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்கும் கடுங்குரல் எழுப்பிப்
பூதம் புடைத்துண்ணும் பூத சதுக்கமும்[60]

[கரி - சான்று; நயப்போர்-விரும்புவேர்; பாசத்துக்கை-பாசத்திடத்து]

என்று காட்டுவர். இங்குப் பூதம் கூடாவொழுக்கத்தில் ஒழுகும் போலித் துறவியர், தீநெறியில் ஒழுகும் பெண்டிர், அறை போகும் அமைச்சர், பிறர் மனை நயப்போர், பொய்ச் சான்று பகர்வோர், புறங்கூறுவோர் ஆகிய இவர்களைப் பாசத்தாற் கட்டி நான்கு காதம் சுற்றளவு வரைக் கேட்குமாறு கடுங்குரல் எழுப்பி நிலத்தில் புடைத்து உண்டு விடும். ஒருசமயம் ஒரு கற்புடை மகள்மீது வறியோன் ஒருவன் அவள் கணவனுக்கு அறியாக் கரி புகன்று பொய்த்தான். இவன் பூதத்தின் பாசத்தில் அகப் பட்டதை அறிந்து அவனுடைய தாய் பாசத்தினுள் சென்று தன் உயிர் கொண்டு தன் மகனுயிரைத் தந்திடுமாறு வேண்டுகின்றாள். பூதம் அதற்கு இணங்காமல்,

நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பீங் கில்லை[61]
[பரகதி - மேலானகதி]

என்று கூறி அவளுக்கெதிரே மகன் உயிரைப் புடைத்து உண்டது. ஆட்சியாளர்களும், நீதிமன்றத்தினரும் வழுவும் முறை யொன்றினையே கடைப் பிடித்து வரும் மக்களாட்சி நிலவும் இக்காலத்தில் இத்தகைய **'பூதசதுக்கம்'** போன்ற அமைப்பு ஒன்று இருப்பின் மக்கள் அறவழி நீதி பெறுவர் என்று நாம் கருதலாமல்லவா?

---

60. சிலப். இந்திரவிழவூர்-128-134.
61. சிலப் : அடைக்கலக்.(84 - 85)

கோல் கோடி நீதி வழங்கியவரின் நிலைபற்றி விவேக சிந்தாமணியில் ஒரு பாடல் காணப்பெறுகின்றது,

ஆரம் பூண்ட மணிமார்பா!
அயோத்திக் கரசே அண்ணாகேள்:
ஈரம் இருக்க மரமிருக்க
இலைகள் உதிர்ந்த வாறேது
வாரங் கொண்டு வழக்குரைத்து
மண்மேல் நின்று வலிபேசி
ஓரஞ் சொன்னக் குடியதுபோல்
உதிர்ந்து கிடக்கும் தம்பியரே[62]

என்பது அப்பாடல். தனது வல்லமையினால் வழக்குத் தீர்த்து ஓர வஞ்சனை செய்பவர் குடிபோல உதிர்ந்து கிடக்கின்றன இலைகள் என்று இராமன் தம்பிக்கு எடுத்துரைக்கின்றான். ஓரம் சொன்னக்குடி அனைத்தையும் இழந்து தெருவில் நிற்கும் என்பது குறிப்பு. இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வது: மக்களால் நேரிட்ட அறமற்ற செயலுக்குத் தெய்வத்தை நாடுவது வழிவழியாக இருந்து வரும் நம்பிக்கையாகும். 'அரசன் அன்று கொன்றால் தெய்வம் நின்று கொல்லும்' என்பது பழமொழியன்றோ?

உடல் ஊனமுற்றோர்: மணிமேகலையில் வரும் ஆபுத்திரன் கதையை நாம் அறிவோம். இப்புண்ணியப்பெருமகன் தான் தமிழகத்தில் முதன் முதலாக உடல் ஊனமுற்றோரின் வாழ்வைக் கண்டறிந்து அவர்கட்கு உதவியவன். அந்தக் காலத்தில் வைதிக அந்தணர்களை எதிர்க்க எதிரம்பு கோத்தவன் இப்பெருமகன்தான். இக்காலத்தில் நம்மிடையே வாழ்ந்து அண்மைக் காலத்தில் மறைந்த தந்தை பெரியாரைப் போன்றவன் அக்காலத்தில் வாழ்ந்த ஆபுத்திரன். தந்தையாலும் பார்ப்பன

62. விவேக சிந். 94

சமூகத்தாலும் கைவிடப்பெற்ற ஆபுத்திரன் பிச்சையேற்று உண்ணத் தொடங்கினான். அந்தணர் பதியிலுள்ளார் யாவரும் அவனை ஆகவர் கள்வன் என்று இகழ்ந்து அவனது கடிஞையில் கல்லிடலாயினர். அதனால் அவன் வேறு புகலின்றித் தென்மதுரையை அடைந்து சிந்தா தேவியின் கோயிலின் முன்புள்ள அம்பலத்தில் தங்கிக் கொண்டு கையிற் கடிஞை யேந்தி மனைதோறும் ஐயம் ஏற்று வந்த உணவை,

> காணார் கேளார் கால்முடப் பட்டோர்
> பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்
> யாவரும் வருகஎன்(று) இசைத்துடன் ஊட்டி[63]

அவர்கள் உண்டு எஞ்சியதனையே தான் உண்டு பிச்சை யோட்டைத் தன் தலையணையாக வைத்துக் கொண்டு அவ்வம்பலத்திலே நாள்தோறும் இரவில் கண்படை புரிந்து காலங்கழிப்பானாயினான். பௌத்தர்கள் பள்ளிகள் நிறுவி கல்வி கற்பித்தும், மருத்துவ மனைகள் அமைத்து நோய் தீர்த்தும் தம் சமயத்தைப் பரப்பி வந்தனர். கிறித்தவர் களும் ஓரளவு இம்முறையைக் கையாண்டு சமயத்தைப் பரப்புகின்றனர். அண்மைக் காலமாக இராமகிருஷ்ண மடம் ஓரளவு இப்பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதைக் காண்கின்றோம்.

அடுத்து உடல் ஊனமுற்றோரை ஆதரித்து வந்த செய்தி **ஆமாத்தூர்** (திருவாமாத்தூர்).[64] கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்றால் அறியக் கிடக்கின்றது. இத்திருக் கோயிலில் 16 குருடர்கள் நியமிக்கப்பெற்று நாடோறும்

63. மணிமேகலை-ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை - அடி 111 - 113.
64. **ஆமாத்தூர்:** விழுப்புரத்திலிருந்து 4கல் தொலை விலுள்ள ஒரு சிவத் தலம். தேவாரம் பாடிய மூவர் பாடல்களையும் பெற்ற தலம்.

திருப்பதிகம் விண்ணப்பிக்க (தேவாரம் ஓதவும்) ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. இவர்கட்குக் கண்காட்டுவார் (= விழிப்பார்வையுடைய வேறு இருவர்) வழித்துணையாக அவர்களைக் கையிற் பிடித்து நடத்திச் செல்லவும் திட்டம் செய்யப் பட்டிருந்தது. இதைக் கல்வெட்டு விரிவாகக் கூறுகின்றது. சுமார் 800 ஆண்டுகட்கு முன்னரே திருக் கோயில்களில் குருடர்களை இவ்வாறு தமிழ் மன்னர்கள் ஆதரித்த செய்தி இக்கால அரசுக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது.

இன்று உடல் ஊனமுற்றோர் நிலைமை ஒரு சமூகப் பிரச்சினையாக எழுந்து அதனைத் தீர்ப்பதற்கு அரசே முன் வந்துள்ளது. வெள்ளையர் ஆட்சியிலேயே நம் நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில செவிட்டு-ஊமையர் - குருடர் பள்ளிகள் இருந்து வந்தன. நாடு விடுதலை பெற்ற பிறகு இவர்கட்காக மருத்துவ நிலையங்கள், பள்ளிகள் பெரிய அளவுகளில் நிறுவப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவர்கட்கென வேலை வாய்ப்புத் திட்டங்களும் ஏற்படுத்தப் பெற்று நன்னிலையில் இயங்கி வருகின்றன. காமராசர் ஆட்சியில் உயர் நிலைப் பள்ளிக் கல்வி இலவசக் கல்வியாயிற்று. சீருடைத் திட்டமும், மதிய உணவுத் திட்டமும் நடைமுறைப்படுத் தப்பட்டு அக்காலத்தில் ஒரே கல்வித்துறை இயக்குநராகப் பணியாற்றியவரும் பின்னர் ஆறாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகச் சீருடனும் சிறப் புடனும் பணியாற்றிய தாமரைச் செல்வருமான டாக்டர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் பொறுப்பில் இத்திட்டங்கள் அற்புதமாகச் செயற்பட்டு வந்தது நாடாளுமன்றத்திலும் பாராட்டுதல் பெற்றது. காரணம் இத்திட்டத்தை முதன் முதலாகக் கண்டதும் தமிழகத்துக் காமராசர் அரசு; திட்டம் நன்கு செயற்படக் காரண மாக இருந்தவரும் தமிழகத்தைச் சார்ந்த திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள். இத்திட்டமே பொன்மனச்

செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் காலத்தில் 'சத்துணவுத் திட்டம்' என்ற புதிய திருநாமத்துடன் மிகவும் விரிவுபடுத்தப்பெற்று நன்முறையில் செயற்பட்டு வருகின்றது. உலக அறிஞர்களும் இதனைப் பாராட்டி வருகின்றனர். இத்தகைய **சமூக நீதியை** முதன்முதல் வழங்கியது தமிழக அரசு என்று எண்ணும்போது உண்மையிலேயே நாம் பெருமைப் படுகின்றோம்.

இன்று உடல் ஊனமுற்றோர் கல்வித்துறை, அஞ்சல் துறை, தொலைத் தொடர்புத்துறை, இருப்பூர்தித் துறை, அரசுப் பொறுப்பிலுள்ள தொழில் துறைகள் முதலியவற்றில் முன்னுரிமை அளிக்கப்பெற்று வேலை வாய்ப்புகள் பெறுகின்றனர். பெரும்பான்மையோர் கையால் இயக்கப் பெறும் மூன்று சக்கர வண்டிகள் போன்ற வசதிகளையும் பெற்றுள்ளனர். ஒரு குடும்பத்தில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் குருடர்கள். இவர்கள் இருவரும் ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்று அரசுக் கல்லூரிகளில் பேராசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றதை நான் அறிவேன். இருவரும் நல்ல பார்வையுடன் விளங்கி வங்கித்துறையில் பணியாற்றுபவர்களை முறையே வாழ்க்கைத்துணைவியாகவும் வாழ்க்கைத் துணைவனாகவும் அடைந்து நன்கு வாழ்வதை நான் அறிவேன். இவர்கள் இருவருமே ஆங்கிலத்தில் டாக்டர் பட்டத்திற்குப்(பிஎச்.டி) பதிவு செய்து கொண்டு ஆய்ந்து வருகின்றனர். இவர்கட்குச் சமூக நீதி கிடைக்காவிடில் இவர்கள் வாழ்க்கை நிலை என்னவாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தே வருந்துவோம். இந்தச் சமூக நீதியால் எண்ணற்றவர்கட்கு நல்வாழ்க்கை அமைந்திருப்பதைக் கண்டு, கேட்டு மகிழ்கின்றோம்.

மநுதர்மமும் வள்ளுவர் அறமும்: ஒரு 'சாதிக்கொரு நீதி' வழங்கும் மநுதர்ம சாத்திரமும் வடமொழியில் திகழ்

கின்றது. அதில் சில பகுதிகள் இந்து சட்டத்தில் (Hindu Law) இடம்பெற்றிருப்பதாகச் சொல்லுகின்றனர். ஆனால் ஒரு சாதிக்கொரு நீதி ஏட்டளவில்தான் உள்ளது; நடைமுறைப்படுத்தப்பெறவில்லை. ஆனால்,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்(972)

என்ற வள்ளுவர் மொழி சாதி வேற்றுமையை ஒழிக்கவல்ல திருவாழியாக அமைந்திருந்தும் அது சரியாக பயன் படுத்தப் பெறவில்லை. வள்ளுவரின் அறவுணர்வு அடிப்படையில் அமைந்திருக்கும் நீதியை நன்குணர்ந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும் தமது மனோன் மணீயத்தில்,

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி.[64]

என்று முத்தாய்ப்பாகக் குறித்து நம்மிடையே ஒருவித விழிப்புணர்வை ஊட்டினார். இன்று திருக்குறள் பற்றி அதிகமாகப் பேசப் பெற்றும் எழுதப் பெற்றும் வருகின்றது. ஆனால், சிறிது கூட நடைமுறையில் இல்லாதது மிகவும் வருத்தத்தைத் தருகின்றது. பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியில் கலப்பு மணம், சீர்திருத்தத் திருமணம் சட்டப்பூர்வமாக அங்கீகாரம் பெற்றது சாதியொழிப்புக்கு ஒலிக்கப்பெற்ற சாவு மணியாகும். பொன்மனச் செம்மல் ஆட்சியில் தெருப்பெயர்களில்தான் சாதி ஒழிந்தது! வாழ்கின்றவர்களின் பெயர்களில் கை வைத்தால் என்ன நிலை உருவாகும்? எத்தகைய மின் அதிர்ச்சியைத் தரும்? என்று அஞ்சியே அதில் அவர் கை வைக்கவில்லை.

---

64. மனோன்மணீயம் : தமிழ்த்தெய்வ வணக்கம்-தாழிசை 11.

சாதி ஒழிப்பு நீக்கப் பெற்று, சாதி அடிப்படையில் வேலை வாய்ப்புகள் வழங்குவது போன்ற விதிகள் அகற்றப்பெறும் காலத்தில்தான் சமூக நீதி சரியான முறையில் வழங்கப்பெற்றதாகும். ஆனால் வேலை வாய்ப்புக் காலத்திலும் தேர்தல்கள் நடைபெறும் காலத்திலும்தான் **'சாதிப்பற்று'** கோரத் தாண்டவமாடுவதைக் காண்கின்றோம். தொகுதிகளில் பேராளர்களைச் சாதி அடிப்படையில் நிறுத்தி மறைந்து போக வேண்டிய ஒரு நியதியை நினைவூட்டி நாட்டுக்கும் சமூகத்திற்கும் என்றும் நீங்காத அநீதியை எல்லாக்கட்சிகளுமே இழைத்து வருவது அறிஞர் உலகத்திற்கு மிக்க வருத்தத்தைத் தருகின்றது. வருந்தத்தக்க இன்னொரு செய்தி பிற்போக்குச் சாதியாரின் பட்டியல் அநுமார்வால் போல நீண்டுகொண்டே வருவதாகும்! இத்தகைய அநீதிமுறைகள் நீங்கினால்தான்,

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓ ரினம்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

என்ற பாரதியாரின் கனவு நனவாகும்; அப்பொழுதுதான் நாட்டு விடுதலைபெற்ற நாம் சாதி ஒழிப்புத் திட்டத்தில் சாதி விடுதலையும் பெற்றுச் சமூக நீதியும் பெற்றவர்களாவோம் என்று கூறி இப்பொழிவைத் தலைக்கட்டுகின்றேன்.

முறைமை

தமிழ் இலக்கியங்களில்

முறைமை

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர்மா
முனிவர்சித்த ராதி வானோர்
தெரிவரிய பூரணமாய்க், காரணம்கற்
பனைகடந்த செல்வ மாகிக்
கருதரிய மலரின்மணம் எள்ளில்எண்ணெய்
உடல்உயிர்போல் கலந்து எந்நாளும்
துரியநடு ஊடிருந்த பெரியபொருள்
யாது?அதனைத் தொழுதல் செய்வாம்

பெருவெளியாய் ஐம்பூதப் பிறப்பிடமாய்ப்,
பேசாத பெரிய மோனம்
வரும்இடமாய், மனமாதிக் கெட்டாத
பேரின்ப மயமாய், ஞானக்
குருவருளால் காட்டிடவும் அன்பரைக்கோத்து
அறவிழுங்கிக் கொண்டப் பாலும்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருள்அந்தப்
பொருளினையாம் சிந்தை செய்வாம்.[2]

---

1. த. பா. பொருள். வணக்கம்-8
2. ௸. ௸-3.

பெரியோர்களே, செந்தமிழ்ச் செல்வர்களே,

வணக்கம். இன்று நடைபெறுவது மூன்றாவது பொழிவு. நேற்றைய பொழிவில் 'தமிழ் இலக்கியங்களில்-நீதி' என்ற பொருள்பற்றிச் சிந்தித்து மகிழ்ந்தோம். இன்றைய பொழிவில் **'தமிழ் இலக்கியங்களில் முறைமை'** என்ற பொருள்பற்றிச் சிந்திக்கப் போகின்றோம். தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் 'இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்' என்ற நூற்பாவில் (80) **'முறைமை'** என்ற சொல் உறவு முறை என்ற பொருளில் வந்துள்ளது. 'ஆண்மை அடுத்த' என்ற நூற்பாவிலும் (162) முறைமை - முறை, உறவு முறை என்ற பொருளில்தான் காணப்பெறுகின்றது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் 'மேலோர்முறைமை' என்று தொடங்கும் நூற்பாவில் (31) முறைமை-தன்மை என்ற பொருளிலும், 'அன்னை என்னை' என்று தொடங்கும் நூற்பாவில் (242) முறைமை-வழக்கு, நெறி முறை என்ற பொருள்களிலும் வந்துள்ளதைக் காணலாம். மேலும், அதே பொருளதிகாரத்தில் 'கற்பும் காமமும்' (150) என்று தொடங்கும் நூற்பாவில்,

> முகம்புகல் **முறைமையில்**
> கிழவோர்க் குரைத்தல் (5)

என்ற அடியில் முறைமை - தன்மை என்ற பொருளிலும் வந்துள்ளதைக் காணலாம். பரிபாடலில் (11),

> முனித்துறை முதல்வியர்
> **முறைமை** காட்ட (82)

என்ற அடியில் முறைமை - நோற்கும் முறைமை, நோன்பு செய்யும் முறை என்ற பொருள்களில் அமைந்துள்ளது. புறநானூற்றில் (39),

> **முறைமை**நின் புகழும்
> அன்றே மறம்மிக்கு(10)

என்ற அடியில் முறைமை-முறைமை செய்தல், நீதி வழங்குதல் என்ற பொருள்களில் வந்துள்ளது.

சிலம்பில் 'முறைமை' என்ற சொல் அடியிற் கண்டவாறு பொருள்களில் அமைந்திருத்தலைக் காணலாம்.

காதை-3 முன்னதன் வகைய
(அரங்) **முறைமையில்** திரிந்தாங்கு (86)
[முறைமை - ஒழுங்கு, கட்டளை, கிரமம்]
இயல்பினின் வழாஅ
இருக்கை **முறைமையின்** (129)
[முறைமை - தகுதிக்கேற்ற இருக்கை, ஒழுங்கு]

காதை-6 சொல்லிய **முறைமையில்**
(கடலாடு) தொழுதன் காட்டி (33)
[முறைமை - ஒழுங்கு முறை]

காதை-11 முல்லையும் குறிஞ்சியும்
(காடுகாண்) **முறைமையில்** திரிந்து (64)
[முறைமை - தன்மை]

காதை-13 முன்னாள் **முறைமையின்**
(புறஞ்சேரி) இருந்தவ முதல்வியொடு (135)
[முறைமை - பாங்கு, தன்மை]

காதை-14 முட்டா வைகல்
(ஊர்காண்) **முறைமையின்** வழாஅ (159)
[முறைமை - அடைவு (order)]

காதை-16 இலக்கண **முறைமையின்**
(கொலைக்) இருந்தோன் ஈங்கியன் (162)
[முறைமை - நிலைமை]

காதை-22 முத்தீ வாழ்க்கை
(அழற்படு) **முறைமையின்** வழாஅ (34)
[முறைமை - இயல்பு]

காதை-25 *கூத்துள் படுவோன்*
(கால்கோள்) *காட்டிய* **முறைமையின்** *(125)*
[முறைமை - ஒழுங்கு]

காதை-28 *மாடல மறையோன்*
(நடுகல்) *சொல்லிய* **முறைமையின்** *(193)*
[முறைமை - ஒழுங்கு]

அடுத்து **மணிமேகலையில்** இச்சொல் வரும் இடங்களைக் காண்போம்.

காதை-19 *நிறைவழி தோற்றமொடு*
(சிறைக்) *தொடர* **முறைமையின்**
நகர நம்பியர்
வளையோர் தம்முடன் (23-24)
[முறைமை - ஒழுங்கு]

காதை-21 **முறைமையிற்** *படைத்த*
(காந்ற்) *முதல்வன்என் போர்களும் (95)*
[முறைமை - ஒழுங்கு]

காதை-22 *மைத்துனன்* **முறைமையால்**
(சிறைசெய்) *யாழோர் மணவினை (86)*
[முறைமை - உறவு முறை]

காதை-26 **முறைமையின்** *இந்த*
(வஞ்சிமா) *மூதூர் அகத்தே (63)*
[முறைமை - ஒழுங்கு, அடைவு]

காதை-28 *முன்னோர்* **முறைமையின்**
(கச்சிமா) *படைத்ததை யன்றி (127)*
[முறைமை - நல்வழி]

காதை-29 *ஆன* **முறைமையின்**
(தவத்திறம்) *அனுமான மாம்பிற (56)*
[முறைமை - கிரமம்]

எல்லா நூல்களிலும் தேடுவதற்குக் காலம் இடந்தரவில்லை. கம்பராமாயணத்தில் ஓரிரு இடங்களைக் காட்ட முயல்வேன்.

பால-மிதிலை. 123. அவ்வயின் இழிந்து வேந்தன்
அருங்கடன் **முறையின்** ஆற்ற (123)

[ஈண்டு முறைமை, முறை என்று வந்துள்ளது. முறை - கிரமம்]

135. மைத்துன னோடு முன்னோன்
வழங்கிய **முறைமை** கேளா (125)
[முறைமை செய்கை]

அயோத்- மந்திரப்

14. முறைமையின் எய்தினர்
[முறைமையின் - நெறிப்படி]

16. **முறை** திறம்பலின்றி
[முறை - நீதி]

48. முதன்மணிப் புதல்வனை **முறையால்**
அரசனாக்கி.
முறையால் - கிரமமாக]

79. மூவெழு **முறைமை**
[முறைமை - தலைமுறை]

அயோ-மந்தரை

64. வெயில் முறை [முறை - இயல்பு]
முறைதிறம்பாதோர் [முறை - நீதி]

நகர் நீங்கு 44 முனியும் **முறையன்** றென்றே
[முறை-கிரமம்]

112. என்னே நிருபன் இயற்கை இருந்தவா
தன்னேர் இலாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து **முறைதிறம்பத்** தம்பிக்குப்

பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்யென்பார்.
[முறைதிறம்ப - நீதிதவற]

'ஒருவனுக்குக் கொடுத்த பொருளை வேறொருவனுக்குக்கொடுத்தல் முறையாகாது' என்பது அறநூல்விதி. இப்படியிருக்க, மன்னவன் இராமனுக்குக் கொடுத்த அரசுச் சுமையை கைகேயிக்கு எவ்வாறு கொடுக்கலாம்? இந்தக் கொடையில் மூத்தவனுக்கு உரியதை இளையவனுக்குக் கொடுத்தலும், முன்னதாக ஒருவனுக்குக் கொடுத்ததை மீட்டும் மற்றொருவனுக்குக் கொடுத்தலும் ஆகிய இரண்டு முறைகேடுகள் இச்செயலில் அடங்கியுள்ளன. ஒருகால் மன்னர்க்கு ஒருவகை அறம், மற்றவர்க்கு மற்றொரு வகை அறம் உண்டு போலும் - என்கின்றனர். மக்கள் இப்படிக் கூறுவதில் சட்ட நிபுணர்களான ஜெத்மாலனியையும் பாக்கியவாலாவையும் கூட விஞ்சி நிற்கின்றனர். மேலும், 'மூத்தவனிடம் குறை - குற்றம் - ஏதேனும் இருந்தால் இளையவன் உலகையாளலாம்' என்பது அறநூல் வழக்கு (Succession right). மூத்தமகனோ, 'தன்னேரில்லாத தலைமகன்'. அத்துடன்,

புனையு மாமுடி புனைந்திந்த
நல்லறம் புரக்க
நினையல் வேண்டும்நான் நின்வயிற்
பெறுவது ஈதென்றான்[3]

என்றதனை நோக்கி முன்னே கொடுத்த பொருள் என்கின்றனர். நினைத்தலும் சொல்லலும் செய்தலோடொக்குமாதலால், கொடுக்க நினைத்ததனையும் சொன்னதனையும் **'கொடுத்து'** என்கின்றனர். 'இராமனுக்கு அரசுப்பொறுப்பு கொடுத்தால் வாய்மை பிழைக்கும்' என்ற கைகேயிக்கு மாறாக, 'பரதனுக்குக் கொடுத்தால் வாய்மை பிழையாதோ?' என்கின்றனர். 'வேண்டும் போது இரண்டு

3. மந்திர : 71

வரங்கள் தருவேன்' என்று தசரதன் முன்பு சொல்லியிருந்தாலும் அரசுப் பொறுப்பை இராமனுக்குக் கொடுப்பதாகச் சொல்லிவிட்ட பிறகு அதைக் கைகேயி கேட்டால் 'அரசுப் பொறுப்பு ஏற்கெனவே கொடுக்கப்பட்டதாயிற்றே!?' என்றல்லவோ மன்னன் மறுமொழி தந்திருக்கவேண்டும்? என்பது நகரத்தவரின் உட்கோள். இப்படி முடியாட்சி காலத்திலேயே மக்களிடையே குடியாட்சி முறை அரும்பத் தொடங்கி விடுகின்றது என்பதை இக் காவியத்தில் காணலாம்.

நகர்நீங்கு-196.

> நிறைமக வுடையவர் நெறிசெல் ஐம்பொறி
> குறைமக குதையினும் கொடுப்ப ராம்உயிர்
> **முறைமகன்** வனம்புக மொழியைக் காக்கின்ற
> இறைமகன் திருமனம் இரும்பென் றார்சிலர்
>
> [முறைமகன் - முறைமைக்குரிய மூத்தமகன்]

வனம்புகு-28

> புக்குறை விடநல்கிப் பூசனை முறைபேணித்
> தக்கன கனிகாயுந் தந்துரை தருமன்பால்
> தொக்கநன் முறைகூறித் தூயவன் உயிர்போலும்
> மக்களின் அருளுற்றான் மைந்தரும் மகிழ்வுற்றார்.
>
> [பூசனை முறைபேணி-அதிதிக்குச்செய்யவேண்டிய பூசையை முறைப்படி புரிந்து; முறை - சிறந்த முகமன்]

இங்குப் பரத்துவாச முனிவன், இராம லக்குமணர்களை உபசரித்ததைக் காட்டும் பாடலில் இச்சொற்கள் அமைந்துள்ளன.

பள்ளிபடை-143.

> தந்தை தன்வயின் தருமம் யாவையும்
> முந்து நூலுளோர் **முறைமை**யின் முற்றினான்.

ஈமக்கடன் முடிந்த பின்னர் பரதன் தன் திருமாளிகையை அடைந்து பத்து நாட்கள் வரை செய்ய வேண்டிய சடங்குகளை (தசாஹம்) முடித்த விவரம் கூறுவது இப்பாடல். இங்கு, முறைமையின் -(சாத்திர நூலில்) கூறியுள்ள முறைப்படி என்ற பொருளில் இச்சொல் அமைந்திருப்பதைக் காணலாம்.

திருவடிசூட்டு-100;

கானகத்தில் அரசர் முதலியோர் சூழ்ந்திருக்க, பரதன் கொண்டிருந்த விரத வேடத்தைக் குறித்து பரதனை இராமன் வினாவும்போது பரதன் தன் கருத்தை ஆறு பாடல்களில் தெரிவிக்கின்றான். அவற்றுள் ஒரு பாடல் இது.

> நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்,
> பொறையின் நீங்கிய தவமும், பொங்கருள்
> துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர்
> **முறையின்** நீங்கிய அரசின் முந்துமோ?

[முறை - முறைமை]

கற்பு நெறியினின்றும் விலகிய மகளிரின் குணம், பொறுமையினின்று நீங்கிய தவ ஒழுக்கம், கருணை வழியினின்று விலகிய தருமம் – இவை யாவற்றினும் 'தொல்லையோர் **முறையின்** 'நீங்கிய அரசு மிகக் கொடியது' என்கின்றான் பரதன். 'மூத்தவர்க் குரித்து அரசு எனும் முறைமையின்' தவறிய அரசியல் தான் கொள்ளத்தக்கதன்று என்று உணர்த்துகின்றான். இந்தக் காரணத்திற்காக இளங்கோ அரச பதவியை வெறுத்து, துறவறம் பூண்டு 'இளங்கோ அடிகள்' ஆயினர். இங்குப் பரதன் 'தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கி' (குகப்-35) ஆயிரம் இராமர்களைவிட உயர்ந்தவனாகின்றான்.

பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த இராமன் பரதனது கொள்கையைத் தவறு என்று ஏழு பாடல்களால் காட்டுவான். அவற்றுள் ஒன்று,

திருவடிசூட்டு-105

முறையும் வாய்மையும் முயலும் நீதியும்
மறையும் மேன்மையோடு அறனும் ஆதியாம்
துறையுள் யாவையும் சுருதி நூல்விடா
இறைவன் ஏவலால் இயைவ காணவா.

[முறை - நல்லொழுக்கம்; வாய்மை - சத்தியம்; நீதி - நியாயம்; அறன் - தருமம்; சுருதிநூல்-வேத சாத்திரம்; இறைவன் - அரசன்]

இப்பாடலில் அறம், நீதி, முறைமை என்ற மூன்று கருத்து களும் அமைந்து உள்ளமை கண்டு மகிழத்தக்கது. முறை(மை)-நல்லொழுக்கம் என்ற பொருளிலும், நீதி-நியாயம் என்ற பொருளிலும், அறன், தருமம் என்ற பொருளிலும் அமைந்துள்ளன. முறை(மை), நீதி, அறம், ஆகியவை நிலை நிற்பதன்பொருட்டு இறைவன் இருத்தல் இன்றி யமையாதது என்று காட்டுவான் இராமன். திருக்குறள் 'இறைமாட்சி' யில் ''உலக பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் 'இறை' என்றார். 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்' என்று பெரியாரும் பணித்தார்' என்று பரிமேலழகர் உரைத்ததையும் 'இறை' என்பதற்குக் கொள்ளல் பொருத்த முடையது.

இராமன்- பரதன் பேச்சிடையே வசிட்டன் குறுக்கிட்டு முந்தையோர் முறையை ஆறு பாடல்களால் எடுத்துக்காட்டித் தன் ஆணையால் அரசுப் பொறுப்பை அங்கீகரிக்குமாறு வேண்டுகின்றான். இதற்கு இராமன் மூன்று கவிகளால் மறுமொழி தருகின்றான். வசிட்டன் வாயடைத்துப்

போக, பரதன் தன் முடிவைக் கூறுகின்றான். அவற்றுள் ஒரு பாடல்:

திருமுடிசூட்டு - 129.

முனிவனும் உரைப்பதோர் **முறைமை** கண்டிலம்
இனியென இருந்தனன்; இளைய மைந்தனும்
'அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடுநான்
பனிபடர் காடுடன் படர்தல் மெய்யென்றான்

[முனிவன்; வசிட்ட முனிவன்; முறைமை - நீதி;
இளையமைந்தன்-பரதன்; பனிபடர் - பனிமிக்க;
மெய்-உண்மை]

இந்தப் பாடலில் **முறைமை** - நீதி என்ற பொருளில் வந்துள்ளது. இராமன் கூறின நியாயத்தைக் கேட்ட வசிட்டன், 'இனி இதற்கு மாறாகச் சொல்வதொரு நீதியைக் காணோம்' என்று வாளா இருந்தான் என்கின்றான் கவிஞன்.

மேலும், கம்பராமாயணத்தில் ஒரு காட்சி.

ஆழிசூழ் உலகம் எல்லாம்
பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
புண்ணிய நதிகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வாஎன்று
ஏவினன் அரசன்.........[4]

[பூழி - புழுதி]

என்ற ஆணையைக் கைகேயினிடம் அவளது அந்தப்புரத்திலிருந்து பெற்றுக் கொள்கின்றான் இராமன்.

---

4. அயோத்தி : கைகேயி சூழ்வினை - 107

மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோஎன்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ?
என்னிதின் உறுதி அப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்ஒளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்[5]

[பின்னவன் - தம்பி; இதின்-இதனினும் மேலான; என்: யாது; உறுதி - நன்மை]

என்று கூறி கைகேயியையும் தசரதனையும் வணங்கி விட்டு அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கோசலையின் திருமாளிகைக்கு வருகின்றான். 'கோசலை கோயில் புக்கான்' என்கின்றார் கவிஞர். நீராடாமல் தலையில் கிரீடம் சூட்டிக் கொள்ளாமல் வந்த இராமனை நோக்கிக் கோசலை '(சக்கரவர்த்தி) நினைத்தது என்? இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு?'[6] என்று வினவ, அதற்கு இராமன் கூறிய மறுமொழி:

செங்கை கூப்பிநின் காதல் திருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றான்.[7]

என்பது. இதனை மகிழ்ச்சி பொங்கக் கூறுகின்றான்! இதன் பிறகு அன்னை கோசலை கூறும் மொழியில்தான் 'முறைமை' என்ற சொல் வருகின்றது.

முறைமை யன்றுஎன்பது ஒன்றுண்டு அல்லது
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனால்
குறைவி லன்எனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்.[8]

5. ஷை. ஷை - 110
6. அயோத்தி - நகர்நீங்கு, 3
7. ஷை ஷை : 4
8. ஷை ஷை : 5

இங்கு '**முறைமை**' என்பது 'அரசநீதி', 'மரபுமுறை' என்ற பொருள்களில் வந்துள்ளது. 'மூத்தவன் இருக்க இளையவன் அரசுஆளுதல் இராச நீதி அன்று என்கின்ற ஒரு குறை மாத்திரம் உண்டு என்பதல்லாமல் எல்லா விதத்திலும் பரதன் ஆளத் தகுதி பெற்றவன். நின்னினும் நல்லன்" என்று கூறுகின்றாள். இந்த அரசநீதிதான் (Principle of Succession) வழிவழியாக நம் நாட்டில் வழங்கி வருவது. 'மூத்தவன் குணக் கேடனாக இருந்தாலன்றி மற்றைப் போது மூத்தவனுக்கே முடிசூட்டுதல்அரச முறை ஆயிற்றே" என்று சுட்டிக் காட்டுகின்றாள் கௌசல்யா தேவி. இன்னும் இந்தச் சொல்,

> **முறைமையின்** எய்தினர்[9]

என்ற இடத்தில் 'அரச மண்டபத்திற்குச் செல்ல வேண்டிய முறைப்படி' என்ற பொருளில் வந்துள்ளது; அதாவது 'நடைமுறை' என்ற பொருளில் வந்துள்ளதாகக் கருதலாம்.

> முறைதெரிந் தொருவகை
> முடிய நோக்குறின்.[10]

என்ற இடத்தில் (பரதனை உலகாளுமாறு வசிட்டன் சொல்லும் இடம்) 'முறை' என்பதற்கு 'வழி முறை' என்றும், 'அரசநீதி' என்றும் பொருள் காணமுடிகின்றது. 'முறை' 'முறைமை' என்ற சொற்கள் பரியாயமாகவே வழங்குவதையும் இலக்கியங்களில் காண்கின்றோம்.

> **முறைமையால்** எற்பயந்
> தெடுத்த மூவர்க்கும்
> குறைவிலா என்நெடு
> வணக்கம் கூறி[11]

9. அயோத் : மந்திரப் : 14
10. ஷை ஆறுசெல்.9
11. ஷை தைலமாட்டு : 38

என்ற இடத்தில் (இராமனைப் பின்பற்றிச் சென்றவர்களைத் திரும்பிச் செல்லுமாறும் தந்தை முதலியோரிடத்துச் சொல்லுமாறும் இராமன் கூறிய இடத்தில்) 'முறைமையால்' என்பதற்கு 'மரியாதை முறை' என்ற பொருள் காணமுடிகின்றது. இந்த 'முறைமை' என்ற சொல்லின் பொருளையறிய 'இலக்கியச் சுற்றுலா'வை மேற்கொண்டாலும் பயன் அளிப்பதாகத் தெரியவில்லை.

இதற்குச் சற்று நேர்மாறாக ஒரு கருத்து புறநானூற்றில் காணப்பெறுகின்றது. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாட்டில் (புறம் 183) 'அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' (அடி 7) என்ற அடியில் மூத்தோன் அரசு கட்டில் ஏறுதல் என்ற 'முறைமையை' நீக்கி அறிவுடையவனுக்குத்தான் அத்தகுதி உண்டு என்று குறிப்பிடப்பெற்றிருப்பதைக் காணலாம். பாடல் முழுவதையும் ஈண்டுத் தருகின்றேன்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே(183).

[உறுபொருள் - மிக்க பொருள்; பிற்றை நிலை - வழிபாட்டு நிலைமை; முனியாது - வெறாது; சிறப்பின்பால் கல்வி விசேடம்; ஆறு - நெறி; கீழ்ப்பால் - கீழ்க்குலம்; மேற்பால் - மேற்குலம்]

இந்தப் பாடல் கல்வியின் பெருமையையும் இன்றியமையாமையையும் விளக்குவது. பெற்ற தாய்க்குத் தன்

வயிற்றிற் பிறந்த பிள்ளை எத்துணைப் பொலிவற்றிருப் பினும் மனவெறுப்பு உண்டாகாது; திருவள்ளுவர் "ஈன் றாள் முகத்தேயும் இன்னாதால் (களி)"[12] என்று யாது செய்யினும் உவக்கும் தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னது என்றார். அத்தகைய தாயும் தன் மகன் கல்வியில்லாமையால் கடையனாயினான் என்பது காண அருவருப்புக் கொள்வாள் என்பதை "தாயும் மனம் திரியும்" என்றார் கவிஞர்,

> தம்மில்தம் மக்கள் அறிவுடைமை **மாநிலத்து**
> **மன்னுயிர்க் கெல்லாம் இனிது** (68).

என்பது, பெற்றோர்க்கும் கற்றோர்க்கும் நோக்கமாதலின் மாநிலத்திற்கு இன்ப வாழ்வு வழங்கும் அரசு முறை அறிவுடையோனையே நோக்கி இயங்கும் என்பதை "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்ற சொற் றொடரால் குறிப்பிட்டுள்ளார். அறிவுடையோன், "படை வேண்டுவழி வாள் உதவலும், வினை வேண்டுவழி அறிவுத வலும்" (புறம்-179) கடன் என்பதை வடநெடுந்தத் தனார் நாலை கிழவன் நாகன்மீது பாடிய பாட்டால் அறியலாம், நாலை கிழவன் நாகன் என்பவன் பாண் டிய மறவன். இந்தப் பாடலில் 'மூத்தோனே அரசாளும் உரிமை பெற்றவன்' என்ற கருத்துக்கு மாறான கருத்து அமைந்துள்ளது.

இன்னொரு புறப்பாட்டில் (புறம்-75) தோசையைத் திருப்பிப் போட்டாற்போல பண்டைய கருத்தே நிலை நாட்டப்பெறுகின்றது. சோழன் நலங்கிள்ளி உறையூரை ஆண்டு வருகையில் சான்றோர் பலர் அவன் அரசவையில் கூடியிருக்கும் நேர்வு ஏற்பட்டது. அப்போது அரசுமுறை யின் இயல்புபற்றிய பேச்சு எழுந்தது. அப்பொழுது அரசனே,

---

12. குறள்- 923

'மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தென்ப
பால்தர வந்த பழவிறல் தாயம்''

[கூற்றம் - எமன்; உய்த்தென - கொண்டு போயினா னாக; பால்தரவந்த - விதியால் பெற்ற; பழவிறல் தாயம் - பழைய வெற்றியால் உண்டான அரசுரிமை]

என்று பேச்சைத் தொடங்குகின்றான். இந்தப் பேச்சில் மூத்தவனே அரசு முறை பெறுகின்றான் என்ற நியதி முறைமை குறிப்பிடப்பெற்றிருப்பதைக் காணலாம்.

இந்த நியதியை - முறைமையை - சிலப்பதிகாரத்திலும் காண்கின்றோம். வரந்தருகாதையில் இக்கருத்தை இளங்கோ அடிகள் மிக அற்புதமாகத் தேவந்தியின் வாக்கில் வைத்து வழங்குகின்றார். வழங்கும் சந்தர்ப்பத்தைத் தெளிவாக அறிந்து கொண்டால் இக்கருத்தின் அருமைப் பாட்டை உணர்ந்து அநுபவிக்க முடியும். செங்குட்டுவன் தான் அமைத்த பத்தினிக்கோட்டத்திற்கு மானியம் அளித்து நித்திய கைங்கரியம் நடைபெற ஏற்பாடு செய்கின்றான். பின்னர், கோட்டத்தை வலம் வந்து சந்நிதியில் செங்குட்டுவன் நிற்கின்றான். அப்பொழுது ஆங்குக் குழுமியிருந்த ஆரிய மன்னர்கள், குடகக் கொங்கர், மாளுவ வேந்தர், இலங்கைக் கயவாகு வேந்தன் ஆகியோர் பத்தினிக் கடவுளை நோக்கி 'யாங்கள் எங்கள் நாட்டில் செய்யும் வேள்வியிலும் வந்து அருள் செய்க' என்று வேண்டுகின்றனர். அப்போது 'நீங்கள் விரும்பியவாறே வரந் தந்தேன்' என ஒரு குரல் எழுந்தது. அதன் பின்னர் செங்குட்டுவன் மாடலனோடு வேள்விச் சாலை செல்லுகின்றான், அருகில் நின்ற இளங்கோ அடிகள் கண்ணகிக் கோட்டத்திற்கு ஏகுகின்றார். அவர்முன் பத்தினிக் கடவுள் தேவந்தியின் மேல் ஆவேசித்து அவருடைய துறவின் வரலாற்றைக் கூறுகின்றாள்.

வஞ்சிமூதூர் திருமாமணி மண்டபத்தில் செங்குட்டுவனும் இளங்கோவும் தந்தையுடன் இருக்கும்போது

நிமித்திகன் ஒருவன் வருகின்றான். சோதிடன் ஒருவன் நம்மைக் காணும்போது சும்மா இருப்பதில்லை; கோள்கள் இயக்கத்தைப்பற்றி ஏதாவது பேசிக் கொட்டி உளறுவான். அங்ஙனமே பழங்காலத் தமிழ்ப் புலவர் ஒருவரும் நம்மிடையே வரும்பொழுது ஏதாவது 'இலக்கணக் குறிப்புகளை' உதிர்ப்பார்; இவர்கள் தம்முடைய 'சரக்குகளை' தேவையில்லாத இடங்களில் எல்லாம் இறக்கி விலை கூறத் தொடங்குவார்கள். தலைச்சுமை தாங்கி தெருத் தெருவாகச் சுற்றி விற்றுக் கொண்டு வரும் சிறுவணிகர்கள் போலவும், 'வெறும் வாயை மெல்லுபவர்கட்கு அவல் கிடைத்தால் அதை மெல்லுவதைப்' போலவும், இக்காலத்தில் பள்ளிச் சிறார்கள் மெல்லும் பிசினை (Chewing gum) மென்று தொலைப்பது போலவும்' நிமித்திகன் பேசத் தொடங்குகின்றான். இளங்கோவை நோக்கி அரசு வீற்றிருக்கும் திருப்பொறி நின்பால் உளது' என்று கூறுகின்றான். தமையனாகிய செங்குட்டுவன் இருக்க, இவ்வாறு முறைமை கெடச் சொன்னதற்கு அடிகள் அந் நிமித்திகனை வெகுண்டு நோக்க, தமையனுக்குத் துன்பமும் மனத்தாங்கலும் நேரிடாதபடி குணவாயிற் கோட் கோட்டத்தில் துறவு பூண்டு வெற்றரசைத் துறந்து வீட்டரசைப் பெறுவதற்கு உரியவராகி விட்டனர். இதனைத் தேவந்தி வாக்காக,

> ''வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
> நுந்தை தாள்நிழல் இருந்தோய்! நின்னை
> 'அரைசுவீற் றிருக்கும் திருப்பொறி உண்டெ'ன்று
> உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கி
> கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
> செங்குட் டுவன்தன் செல்லல் நீங்க
> பகல்செல் வாயில் படியோர் தம்முன்
> அகலிடப் பாரம் அகல நீக்கி
> சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து
> அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து''[13]

13. சிலப்: வரந்தரு காதை - அடி (173 - 182)

மணிண்டபம் - அத்தாணி மண்டபம்; தந்ததாள் நிழல் - தந்தையிடம்; திருப்பொறி - வடிவுஇலக்கணம்; உருத்து நோக்கி - வெகுண்டுநோக்கி; கொங்கு-மணம்; தார் - மாலை; அல்லல் - துன்பம்; நீங்க - ஒழியுமாறு; பகல் செல்வாயில் - குணவாயிற் கோட்டம்; படியோர் - முனிவர்கள்; அகல் இடப்பாரம் - நிலம் தாங்கும் சுமை; அந்தமில் இன்பத்து அரசு - முடிவில்லாத இன்பத்தையுடைய வீட்டுலக அரசு]

என்று கவிஞர் பெருமானே கூறுவதைக் காணலாம். மூத்தவன் இருக்க இளையவன் அரசோச்சுவது அடாதசெயல் என்பதைத் தெரிவிக்க 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா' என்று துறவுக்கோலம் கொண்ட அருமைத் தம்பியைக் காண்கின்றோம். பாராளும் வாய்ப்புப் பெற்றும் அதனைத் 'தீவினை என்ன நீந்துச். சிந்தனை முகத்தில் தேக்கும்' பரதனை ஒத்தவராய் விடுகின்றார் இளங்கோ அடிகள். 'அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து' என்ற நிலையையும் பெற்று விடுகின்றார். அந்தமில் இன்பத்து அரசினைத்தான் பரிமேலழகர் தம் திருக்குறள் உரைப் பாயிரத்தில் 'வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின்' என்று குறிப்பிட்டார்.

சில சமயம் **நீதி** என்ற சொல் முறைமை என்ற பொருளிலும் ஆளப்படுவதை இலக்கியங்களில் காண முடிகின்றது. கம்பராமாயணத்தில் இதுபற்றிய ஓரிடத்தைக் காட்டுவேன். கைகளும் கால்களும் வெட்டுண்ட நிலையிலும் கும்பகருணன் பெரும் போர் புரிகின்றான். தன்னுடைய பிளவுபட்ட வாயினால் - பகுவாயால் - காததூரம் நீண்டிருந்த மலைகளைக் கடித்து ஒடித்து எடுத்து மேன்மேலும் தன்னுள்ளிருந்து வெளிக்கிளம்புகின்ற காற்றினால் விரைவுடன் திக்குகளில் செல்லுமாறு ஊதுந்தோறும் அம்மலைகளினால் வானரப்படை இடியினால் உயிரொழியும் பிராணிகள்போல் உயிரொழிகின்றன.

மேலும் மூங்கிலினால் நெருங்கிய மலையொன்றை வாயினால் கவ்வி நாவினால் வானத்தைப் பொருந்த வளைந்தேந்தி வாயின் வலிமையினால் வெகுதூரம் செல்ல வீசி எறிகின்றான். இதனால் கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவனான இராமபிரானும் அச்சத்தினால் கை நடுங்கப்பெறும் நிலையை அடைகின்றான்.[14] இந்நிலையில் அவன் தளர்வுறுகின்றான்; இனி வரம்பின்றி வாழ வேண்டியவனான தன் தமையன் இராவணனுக்கு உய்யும் வகை இல்லை என்பதை அறிந்து ஒப்பற்ற துயரை அடைகின்றான். அவனிடம் புதியதொரு நல்லுணர்வு எழுகின்றது. இராமனை நோக்கிச் சில கூறத் தொடங்குகின்றான். ''தன்னைச் சரணமாக அடைந்த ஒரு புறாவின் பொருட்டு தராசுத் தட்டில் ஏறின சிபியின் மரபில் வந்தவரே, அச்சக்கரவர்த்திபோல அன்பின் செயல்களையுடையவரான நீங்கள் அடியேனது பிரார்த்தனையினால் எங்களுடைய உறவினாலான தீவினையை ஒழித்து உன் பக்கத்தைச் சேர்ந்தவனாகிய என் அருமைத் தம்பி வீடணனுடைய உயிரைப் பாதுகாக்கக் கடவீர்''[15] என்று வேண்டுகின்றான். தொடர்ந்து,

> நீதியால் வந்ததொரு
> நெடுந்தரும நெறியல்லால்
> சாதியால் வந்தசிறு
> நெறியறியா என்தம்பி
> ஆதியாய்! உனையடைந்தான்;
> அரசர்உருக் கொண்டமைந்த
> வேதியா! இன்னம்உனக்(கு)
> அடைக்கலம்யான் வேண்டினேன்.[16]

14. யுத்த. கும்பகருணன் வதை - 352, 353
15. ஷை 356
16. ஷை 357

என்று கூறிச் சரண் அடைகின்றான். இங்கு **நீதி** என்பதற்கு 'முறைமை' என்று பொருள் அமைந்திருப்பதைக் காணலாம். ''முதற் கடவுளே! அரசர் உருக்கொண்டு உலகத்துத் தோன்றிய அருமறையால் போற்றப்படுகின்ற கடவுளே! முறைப்படியே அமைந்ததான ஒப்பற்ற சிறந்த அறநெறியினலல்லாமல், அரக்கர் சாதியில் பிறந்ததால் உண்டாகும் அறநெறியல்லாத நெறியை அறியாதவன் என் தம்பி. அவன் உம்மை அடைக்கலமாக அடைந்துள்ளான். மீண்டும் அவனை அடைக்கலப் பொருளாகக் காத்தருள்க'' என்று வேண்டுகின்றான். மேலும்''நற்குணம் இல்லாத என் தமையன் 'தம்பியாயிற்றே' என்று கருதி இரக்கம்கொண்டு விட்டிடான்; இவனைக் கண்டால் கொன்றிடுவான்; சிறிதும் அருள் செய்யான்.'' ஆதலால்,

> உம்பியைத்தான் உன்னைத்தான்
> அநுமனைத்தான் ஒருபொழுதும்
> எம்பிபிரி யானாக
> அருளுதி;யான் வேண்டினேன்''[17]

என்கின்றான். முன்னர் முறைமை என்பது நீதி என்ற பொருளில் வந்துள்ளதைக் காட்டினேன் (திருமுடிசூட்டு 129) 'முறைமையும்' 'நீதியும்' ஒரே பொருளில் வருவதைப் பல இடங்களில் காண முடிகின்றது.

'பழமொழி' யில் ஒரு பாடல். இது அரசியல்பு பற்றியது.

> சாலை மறைத்தோம்பிச்
> சான்றவர் கைகரப்பக்
> காலை கழிந்தனன்
> பின்றையும்—மேலைக்
> கறவைக்கன்(று) ஊர்ந்தானைத்
> தந்தையும் ஊர்ந்தான்

17. கும்பகருணன் வதை - 359

முறைமைக்கு மூப்புஇளமை
இல்.[18]

[முறைமை - செங்கோன்மை]

இப்பாடலை நேற்றைய பொழிவிலும் காட்டினேன். முறைமை - செங்கோன்மையை உணர்த்துகின்றது. மூப்பு, இளமை கருதி நீதி கூறலாகாது என்கின்றார் ஆசிரியர்.

ஆட்சிமுறை: நாடாளும் தலைவனுக்கு இன்றியமையாது இருக்க வேண்டிய இயல்புகள் பல. அவன் அறநெறியிலிருந்து வழுவாது ஒழுகும் முறைமையுடையவனாக இருத்தல் வேண்டும்: அறமல்லாத தீ நெறியை நீக்கும் முறைமையுடையவனாகவும் இருத்தல் வேண்டும்; வீரம் வழுவாத மானம் உடையவனாகவும் இருத்தல் வேண்டும்.

அறன்இழுக்காது அல்லவை
நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு (384).

என்பது வள்ளுவம். நாடாளும் மன்னன் - மக்களாட்சியில் பொறுப்புள்ள முதலமைச்சர், சபாநாயகர் போன்றவர்கள் குடி மக்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டியவர்கள். அவன் தீ நெறியில் ஒழுகினால் மற்றவர்கட்கு அதுவே தூண்டு கோலாகவும் அமைந்து விடும். அவன் தலைவனாக இருப்பதால் அவனுடைய ஒழுக்கத்திற்கு நாடெங்கும் பரவும் ஆற்றல் உண்டு. அதுவும் செய்தித் தாள்கள், தொலைத் தொடர்புகள் (Telecommunications) மலிந்த இக்காலத்தில் அது பரவும் வேகத்தைச் சொல்லி முடியாது. ஆகவே தான் வள்ளுவர் உணர்த்தும் அறநெறி ஆட்சி புரிவோருக்கு கட்டாயம் வேண்டும். மானம்வேண்டும் என்று கூறும் போது தலைவனின் தனி வாழ்க்கை பற்றிய

18. பழமொழி - 242.

மான உணர்ச்சியைக் குறிப்பிட்டதாகக் கொள்வதற்கில்லை. அதனால்தான் 'மறன் இழுக்கா மானம்' என்று வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறித்ததாகக் கொள்ள வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் நாட்டின் மானமே தம் மானமாகக் கொண்டு ஆட்சி நடத்துதல் வேண்டும். நாட்டிற்கு உண்டாகும் பெருமையும் சிறுமையும் தம்முடையவை என்று கொள்ள வேண்டும். தம் தனி மானத்தை நாட்டு வாழ்க்கையில் புகுத்தி நாட்டு மக்களுக்குப் போர் முதலிய தொல்லைகளை விளைவித்தல் கூடாது. தம்மைக் குறை கூறினால் பொறுத்தலும் நாட்டைக் குறை கூறினால் புறக்கணிக்காமலும் உள்ள மானம் வேண்டும். தனி வாழ்க்கையில் தம் பகைவனாக உள்ளவனைப் பொருட்படுத்தாமல், நாட்டின் பகைவனாக உள்ளவனை அடக்கவும் திருத்தவும் முயற்சி எடுத்தல் வேண்டும். எதிர்க்கட்சிப் பொறுப்பிலுள்ளவர்கட்கும் இந்த உணர்வு வேண்டும். ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களைத் தனிப் பட்ட முறையில் குறை கூறாமல் நாட்டின் நன்மைக்கு உகவாத செயல்களில் இறங்கும் போது அவற்றினை எடுத்துக் காட்ட வேண்டும். பேரவையை இறைவன் திருமுன் என்று கருதி செயற்படுவது இருசாராருக்கும் நன்மை பயக்கும்; நாட்டிற்கும் நலம் பயக்கும்.

இவ்விடத்தில் திருவாய்மொழி ஈட்டாசிரியர் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சியொன்றினை நினைவு கூர்கின்றேன். பராசர பட்டர் காஞ்சியைச் சேர்ந்தவர். உடையவர் காலத்தில் திருவரங்கம் பெரிய கோயிலில் தலைமை பட்டாச்சாரியராகப் பணியாற்றினார். உடையவரும் காஞ்சியைச் சேர்ந்தவரே. இந்த இருவர்தம் புகழைக் கண்டு திருவரங்கத்தைச் சேர்ந்த சில வைணவர்கள் அழுக்காறு கொள்கின்றனர். ஒருநாள் பட்டர் திரையிடப்

பெற்ற கருவறையினுள் ஏதோ கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் உள்ளே இருந்ததை அறியாமல் அர்த்த மண்டபத்தில் இருந்த இரண்டு வைணவர்கள் பட்டர்மீது இல்லாததும் பொல்லாததுமான பல குறைகளைச் சுமத்தி வசை மாரி பொழிந்த வண்ணம் இருந்தனர். இதனைச் செவி மடுத்துக் கொண்டிருந்த பட்டர் அமைதியாகத் திரையை விலக்கிக் கொண்டு வெளி வந்ததைக் கண்ட வசை மாறி பொழிந்த இருவரும் திடுக்கிட்டனர். அதிகமாக வசை வழங்கிய அன்பருக்கு இறைவன் உடுத்துக் களைந்த பீதக ஆடையைப் போர்த்தினார்; சற்றுக் குறைவாக வைதவருக்கு தமது மோதிரத்தைக் கழற்றி அவர் கையில் பொருத்தினார். அமைதியாக, ''தேவாளுக்குப் பயந்து இவற்றை வழங்கியதாகக் கருதுதல் வேண்டா. இறைவன் திருமுன் எனது குறைகளை எடுத்துக் காட்டியதால் அவற்றைத் திருத்திக் கொள்ளவும் தவிர்த்துக் கொள்ளவும் அடியேனுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்தப் பேருபகாரம் புரிந்தமைக்கு மிகவும் நன்றி'' என்று கூறினாராம். சட்ட மன்றப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக் காட்டும் குறைகளை ஆட்சியிலுள்ளார் ஏற்றுக் கொள்ளுதலும், ஏற்கப் பெற்றதைத் திருத்திக் கொள்ளுதலும் நன்று குறைகளை எடுத்துக் காட்டிமைக்கு அவர்மீது சினமோ குரோதமோ கொள்ளல் ஆகாது. இதனால் குற்றம் சாற்றுவோரும் கண்மூடித்தனமாக எடுத்ததற்கெல்லாம் குறை கூறுதலும் ஆகாது. இருதிறத்தினரும் பொது மக்களின் பிரதிநிதிகள். பொது மக்கள் செலவில் சட்ட மன்றப் பேரவை நடை பெறுகின்றது. சட்ட மன்றத்தினுள் பார்வையாளர்கள் நடவடிக்கைகளைக் கவனிக்கின்றனர். அடுத்த நாள் இந்த நடவடிக்கைகள் செய்தித் தாள்களில், வெளிவரும் போது இலட்சக்கணக்கான மக்கள் அவற்றைப் படிக்கின்றனர். ஆகவே, இருசாராரும் தம் கடமைகளைப் பொறுப்புடன் ஆற்றுவது நாட்டு நலனுக்கு உகந்தது. அங்ஙனமே தலைமைச் செயலகத்திலும் பிற அலுவலகங்

துன்பத்தைத் தரும். அவ்வாறே காவல் என்னும் கடமையைப் பெற்ற அரசன் மாட்சிமை பொருந்தி இருத்தல் வேண்டும்; ஆட்சி முறையைத் திறம்பட அறிந்தானாதல் வேண்டும். அங்ஙனமாயின் அன்னவன் ஆட்சி எத்தகைய ஊறுபாடும் இன்றி விளங்கும். அதனால் நாடு நலம் பெறும்; அவனும் சீர் பெறுவான். அரசு புரியும் தகுதி அவன்தனக்கு இல்லேயேல், அவன் உட்பகை, புறப் பகைகளாகிய சேற்றில் அழுந்திப் பெருந்துன்பத்தைத் அடைந்து நீங்காத் தொல்லைக்கே இடமாவான்.'' இந்த அறவுரை - அறிவுரை - அரசு புரிகின்ற மன்னன் மாண்பினையும் அம்மாட்சியால் விளையும் பயனையும் எடுத்துக் காட்டுகின்றது. இந்த அறிவுரையை வழங்கியவனும் ஒரு மன்னன் எனின், அரசர்தம் மாண்பினை எங்ஙனம் இயம்புவது?

இதே கருத்தைப் பிறிதொருவிதமாக உறையூர் மருத்துவன் தாமோதரனார் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனைப் பாடிய பாடலில் கூறுகின்றார். கடற்கரையினிடத்து உப்பங்கழியின் நீரால் உப்பு விளைகின்றது. வன்மை அமைந்த பகடுகள் பூட்டப்பெற்ற சகடை அவ்வுப்பினை முகந்து செல்கின்றது. அச்சகடை மலைநாட்டை நோக்கிச் செலுத்தப்பெறுகின்றது. செல்லுங்கால் சகடையின் ஆரைகள் மண்ணுள் குழி பாய்ந்து பகடுகளின் செலவுக்குத் தொல்லையை விளைவிக்கின்றன. மேலும் ஈர்த்துச் செல்லகிலேம் எனப் பகடுகள் எண்ணி வாளா நில்லாது தம் உடல் வன்மை முழுவதினையும் பயன்படுத்தி முன்னேறிச் செல்கின்றன. பகடுகளை ஒத்தனர் அரசர். அவர் அரசியலாகிய சகடை அதன் இயல் நெறியில் தம்மை அழுத்தி நசுக்கினும் அஞ்சாது அவலம் மேற்கோள்ளாது ஆக்கத்துடன் முன்னேறுகின்றனர். இக்கருத்து ''கானற், கழியும் முகந்து கல் நாடு மடுக்கும், ஆரைச் சாகாட்டாழ்ச்சி போக்கும், உர

னுடை நோன்பகட் டன்ன எங்கோன்'' (புறம் - 60) என்ற பாடற் பகுதியினாலும் சிறப்பிக்கப் பெறுகின்றது.

மேற்குறிப்பிட்ட தொண்டைமான் இளந்திரையன் கருத்தைத் திருத்தக்கதேவர்,

ஆர்வலஞ் சூழ்ந்த ஆழி
அலைமணித் தேரை வல்லான்
நேர்நிலத் தூரு மாயின்
நீடுபல் காலம் செல்லும்
ஊர்நிலம் அறிதல் தேற்றாது
ஊருமேல் முறிந்து வீழும்
தார்நில மார்ப! வேந்தர்
தன்மையும் அன்னதாமே[20]

[ஆர் - ஆரக்கால்; ஆழி - சக்கரம்]

என்று கூறுதலும் நன்கு அறியப்படும்.

ஊழ் செயற்படுதல்: இந்த உலகில் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாக ஆட்சி முறைகள் நடைபெற்று வருகின்றன, முடியாட்சி முறை குறைந்து எல்லாம் குடியாட்சி முறையாக மாறி வருகின்றன. இதிலும் பல முறைகள். அமெரிக்காவிலும் குடியரசு முறை; உருஷியாவிலும் குடியாட்சி முறைதான். நமது இந்தியாவிலும் இதே முறைதான். அமெரிக்காவில் குடியரசுத் தலைவருக்குத்தான் எல்லா அதிகாரமும். இந்தியாவில் பிரதமருக்குத்தான் அதிகாரம் அனைத்தும். உருஷியாவின் ஆட்சி முறையே தனி; பல்வேறு ஆட்சி முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் மானிட இயல் கலைக் களஞ்சியத்தை ஒரு புரட்டு புரட்டினால் Forms of Government பற்றிய விவரங்களைத் தெளிவாக அறியலாம். அரசியல் துறைக்குப் பாடநூலாகவுள்ள நூலின்

20 சிந்தா (2909) முத்தி இலம்பகம்

மூலமாகவும் பல்வேது அரசு முறைகளை அறிந்து கொள்ளலாம். இவையெல்லாம் மக்கள் நலனுக்காக மக்களால் தயாரிக்கப்பெற்ற அரசு முறைகள்.

இத்தனைக்கும் மேலாக, இறைவன் படைப்பில் ஒரு முறையான ஆட்சி நடைபெற்று வருகின்றது. விண்ணிலும் மண்ணிலும் நிகழும் மாறுதல்கள் ஒருவித ஒழுங்கு முறைக்கு—முறைமைக்கு—உட்பட்டு நடந்து வருகின்றன. ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் கோள்களும் ஒழுங்காகத்தான் இயங்கி வருகின்றன. காற்றும் மழையும் தட்பமும் வெட்பமும் மற்றவைகளும் ஒழுங்குபெறவே அமைந்து வருகின்றன. ஓரறிவு உயிர் முதல் மக்கள் வரையில் பலவகை உயிர்களும் உடம்பெடுத்துப் பிறப்பது முதல் இறப்பது வரையில் எல்லாம் ஒருவகை ஒழுங்கு முறைக்கு உட்பட்டே நடந்து வருகின்றன. மக்கள் மனம் கொண்டு வாழும் வாழ்க்கையில் நிகழும் எழுச்சி-வீழ்ச்சி, உயர்வு - தாழ்வு, ஆக்கம் - கேடு, நன்மை - தீமை, உடைமை - வறுமை, இன்பம், துன்பம் முதலிய பலவும் இவ்வாறே ஓர் ஒழுங்கு முறையில் அமைந்து வருகின்றன. இந்த ஒழுங்கு முறையை ஆய்ந்து அறிவது அருமை; ஆனால் இவை யாவும் உண்டு என்று உணர்வது எளிது இத்தகைய ஆட்சி முறையை - இறைவனது அருளாட்சி முறையை - ஊழ் என்று வழங்கினர் நம் பண்டைச் சான்றோர்.

இந்த அண்டங்களின் ஒழுங்குமுறை அமைப்பை முறைமையைக்கவிஞர்கள் நன்கு அநுபவித்துத் தம் அனுபவத்தைக் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். பாரதியார்,

> விண்டு ரைக்க அரிய அரிதாய்
> விரிந்த வான வெளியென - நின்றனை;
> அண்ட கோடிகள் வானில் அமைத்தனை
> அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை

மண்ட லத்தை அணுஅணு வாக்கினால்
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை;
கோல மேநினைக் காளியென் றேத்துவேன்[21]

என்ற பாடலில் அற்புதமாக விளக்குவர். இங்குக் காளி இறைவியாகச் செயற்படுகின்றாள். இந்த விளக்கத்தில் அண்டங்களுக்கு இடையேயுள்ள தொலைவுகளையும் கற்பனைமூலம் கணக்கிட்டுக் காட்டுவர். புறமுக ஆற்றல் (Centrifugal force) என்ற இறைவனது ஆணையால் இக் கோள்கள், அண்டங்கள் வழிவிலகாமல் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோள்கட்கும் இடையிலும் பல்லாயிரக் கணக்கான மைல் இடைவெளிகள் உள்ளன. இந்த இடைவெளியில்தான் சில சமயம் வால்மீன்களையும் (Comets) வீழ் கொள்ளி அல்லது எரிமீன்களையும் (Meteors) காண்கின்றோம்.

இங்ஙனம் அண்டங்கள் விண்வெளியில் வெவ்வேறு வேகத்தில் சுழன்று கொண்டும், ஒன்றையொன்று சுற்றிக் கொண்டும் உள்ள உண்மையை ஆண்டவனின் ‘அலகிலா விளையாட்டாகக்’ கொள்வர் திரிகூடராசப்பக் கவிராயர்; சாட்டைத்துணையின்றியே இத்தனை அண்டங்களையும் ஆண்டவன் பம்பரம்போல் ஆட்டி வைக்கின்றான் என்று காட்டுவார்.

சாட்டி நிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டு விக்கும் குற்றாலத்து
அண்ணலார்[22]

என்று அழகாகக் குறிப்பிடுவதைக் கண்டு மகிழலாம்.

21. பா. க : தோ.பா:மகாசக்தி வாழ்த்து.
22. குற்றாலக் குறவஞ்சி-107.

அண்டங்களின் அமைப்பையும் அவை விண்வெளியில் சுழலும் அற்புதத்தையும் இன்னொரு கோணத்தில் காண்கின்றார் திவ்விய கவி பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்.

ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி
நடாத்தும் அந்தக்
காலத்திகிரி முதலான யாவும்
கடல்க டைந்த
நீலத்திகிரி அனையார், அரங்கர்
நிறைந்த செய்கைக்
கோலத்திகிரி தலைநா ளினில்
கொண்ட கோலங்களே.[23]

இப்பாசுரத்திலுள்ள திகிரிகளை முதலில் இன்னவை என அறிந்து கொண்டால்தான் பாட்டின் சுவை தெரியும். கற்கண்டு உமிழ்நீரில் கரைந்தால்தானே இனிப்புச் சுவையை அறிய முடியும்?இப்பாடலில் அரங்கர் இறைவனாகின்றார்.

ஞாலத்திகிரி : பூமியின் சுற்றளவு 25000 மைல். இவ்வளவு பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு மனோ வேகத்தில் சுற்றிக் கொண்டுள்ளது பூமி. சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள தூரம் 9 கோடி மைல். தான் சுற்றுவதுமல்லாமல் சூரியனையும் சுற்றுவழியில் சுற்றி வருகின்றது. பூமிஇந்தச் சுற்று வழியின் சுற்றளவு 54கோடி மைல். ஒரு முறை சுற்ற ஓராண்டு ஆகின்றது. பூமியைப் போலவே பல அண்டங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனும் அதன் பரிவாரமான செவ்வாய், புதன் முதலான கோள்களும் எட்டாத வெட்ட வெளியில் சுற்றிக் கொண்டுள்ளன. இதைப் போலவே எத்தனையோ சூரியர்கள் உடுக்கள் போல் காட்டிக் கொண்டு வான வெளியில் சுற்றுவழியில் சுற்றிக் கொண்டேயுள்ளன; ஒரு கணக்குப்படி சுற்றுகின்றன. இவ்வாறு சலியாது சுற்றும் அண்டங்களும் பிரம்மாண்டங்களும் கவிஞர்

23. திருவரங்கத்து மாலை-89.

மனக்கண்ணுக்கு உருளைகள் அல்லது சக்கரங்கள்போல் தோன்றுகின்றன. இந்தப் பேரண்டச் சக்கரம்தான் 'ஞாலத்திகிரி'. பூமி சுற்றும்போது அத்துடன் சூழ்ந்துள்ள காற்று மண்டலமும் சேர்ந்தே சுற்றுகின்றது என்பது அறியத்தக்கது.

முதுநீர்த்தி கிரி : ஒவ்வோர் அண்டத்துடன் அவ்வண்டத்திலுள்ள பொருள்களும் உருமாறிச் சுற்றுகின்றன. எடுத்துக்காட்டாக கடல்நீர்--நீராவி — மேகம்—மழை — ஆறு என்று மாறிக் கடலுடன் கலக்கின்றது. மீண்டும் ஆவி —மேகம்—மழை—ஆறு—கடல் என்று சக்கரம் சுழல்கின்றது. இவ்வாறு கடல்நீர் சுற்றுவதை 'முதுநீர்த்திகிரி' என்கின்றார் அய்யங்கார் (முதுநீர்-கடல்நீர்). இந்தச் சக்கரத்தைப் போலவே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று பருவச்சக்கரங்களும் பிறப்பு-இறப்பு என்ற சக்கரமும் சுழன்று வருகின்றன.

காலத்திகிரி : இது கண்ணுக்குத் தெரியாத சக்கரம்[24]. இதுவே ஞாலத் திகிரி, முதுநீர்த் திகிரி முதலியவற்றை இயக்கும் ஓர் அற்புதத் திகிரி; இதுவே மூலத்திகிரி. ஒரு கடிகாரத்திலுள்ள பல சக்கரங்களையும் இணைத்துக் கொண்டும் வில்லோடு (Main spring) இணைத்துக் கொண்டும் சுற்றிக் கொண்டிருக்கும் மூலச்சக்கரம் போன்றது இது. கண்ணுக்குப் புலப்படாத இந்தக் காலத்திகிரிதான் இந்த உலகத்தில் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்துகின்றது. மிகப்பெரிய ஆலமரம் அடையாற்றிலுள்ளது போன்றது - ஒன்றைக் காண்கின்றோம். அதன் வயது 250 ஆண்டுகள் இருக்கலாம். 250 ஆண்டுகட்கு முன்பு அது ஒரு சிறு ஆல விதையில் ஒளிந்து கொண்டிருந்தது. காலச்சக்கரம் சுழன்று சுழன்று விதையில்

24. இதுவே வைணவ தத்துவத்தின் அசித்தின் ஒரு பகுதியான காலத் தத்துவம்; இது 'சத்துவ சூனியம்' என்றும் வழங்கப்பெறும்.

ஒளிந்து கொண்டிருந்த ஆலமரத்தை மெல்ல மெல்ல இழுத்து வெளிக் கொணர்ந்து விட்டது. இந்த அகிலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவும் காலச் சக்கரத்தின் சுழற்சியால் வெளிவந்தவையே. ஆகவே, நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் சூத்திரதாரராக இருப்பது காலம் என்ற திகிரி எனலாம். இதனையே சுமார் 800 ஆண்டுகட்கு முன்னிருந்த பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்,

> **ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி**
> **நடாத்தும் அந்தக்**
> **காலத்திகிரி** முதலான யாவும்...

என்று பாடினார்.

நீலத் திகிரி: இவர் திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாள். பாற்கடலைக் கடைந்தபோது ஒரு நீலமலையை மத்தாக வைத்துக் கடைந்தார் அவர். அந்த மத்தைப்போல நீலமேனியையுடையவர் நம் அரங்கர். அறிதுயில் கொண்டிருக்கும் அரங்கர் ஒரு நியதிக் கோலத்தைப் போட வேண்டும், அதற்கு அடங்கிப் பேரண்ட உருளைகள் உருள வேண்டும் என்று தீர்மானித்தார். அவ்வளவுதான்.

கோலத்திகிரி : இஃது அரங்கர் கையிலிருக்கும் **சுதர்சனம்** என்னும் அழகிய சக்கரம்; திருவாழி ஆழ்வான் என்றும் இதனைச் சொல்வர். இஃது அவர் கையை விட்டுப் பாய்ந்து மரம் நடுபவர் முதலில் போடும் கோலப் புள்ளிகள்போல உலகப் படைப்புக் காலத்தில் புள்ளிகள் போட்டது. அந்தக் கோலத்தில் காலத்திகிரி பய பக்தியோடு உருண்டு சென்றது. காலத்திகிரியினின்றும் பிறந்து, கடிகாரச் சக்கரங்கள்போல் அதோடு இணைந்து நிற்கும் ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி முதலிய திகிரிகளெல்லாம் நியதி தவறாமல் தொடர்ந்து சுழன்றன. இத்திகிரித் தொடர்களைக் கற்பனையில் கண்டு உள்ளம்

பூரிக்கின்றார் திவ்விய கவி. அந்தப் பூரிப்பில் தோன்றியதுதான் மேற்குறிப்பிட்ட கவிதை. கூர்தல் அறக் கொள்கை (Theory of Evolution) அய்யங்கார் சிந்தையில் - சிந்தனையில் - ஓர் அற்புதக் கவிதையாக மலர்ந்து விட்டதைக் கண்டு வியப்பெய்துகின்றோம்; அதைப் படித்துச் சுவைக்கின்றோம்; மனத்தில் நினைந்து அசை போடுகின்றோம். இதுவே உலகப் படைப்பின் முறைமையைக் காட்டும் அற்புதக் கவிதையாகத் திகழ்கின்றது.

திருக்குறளின் இறுதியில் உள்ள 'ஊழ்' என்பது ஒரு தனி இயல்! ஆம், ஒப்பற்ற தனி இயலே. இந்த அற நூலில் உள்ள எல்லாப் பகுதிகளின் எல்லா அதிகாரங்களுக்கும் உரியவர்களை அது, இறைவன் சார்பில் இயக்கி வரும் தனி நிலைமைக்குரியது. தனி நிலைமைக்குரிய ஓர் ஒப்பற்ற 'முறைமை' என்று கூட வழங்கலாம். அருளாட்சி நடத்தும் 'இறைவனின் முறைமை' என்று சுட்டி உரைக்கலாம். இறைவனாகிய பரம்பொருள் எப்படித் தனியனோ அப்படியே ஊழும் ஒரு தனி நிலையையுடைய ஒருவகை ஆற்றல். இறைவன் எங்ஙனம் மறை பொருளாய் நின்று 'உலகம் யாவையும் தாம் உளாக்கலும், நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டைப்' புரிகின்றானோ, அங்ஙனமே ஊழும் (Fate) மறை பொருளாய் நின்று உலகிலுள்ள இயக்கங்கள் எல்லாவற்றிற்கும் காரணமாய். நின்று நிலவுகின்றது. இறைவன் முறைமை தவறாதவன் அறவோன்; ஊழும் அறத்திறன் மிக்கது. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற ஒரு முதுமொழி உண்டு. அங்ஙனமே 'ஊழ்' ஊடுருவாது ஓர் அணுவும் அசைவதில்லை என்றும் சொல்லி வைக்கலாம். இதன் இயல்பு,

> உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
> பெறற்பா லனையவும் அன்னவாம்.[25]

25. நாலடி - 104

[உறற்பால-நேரிடத்தக்க; நீக்கல்-விலக்குதல்; உறுவர்-ஆற்றல்மிக்க முனிவர்]

எனவும்,

> வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
> தீண்டா விடுதல் அரிது,[26]

[உறற்பால-இன்ப துன்பங்கள்; தீண்டா-அடையாமல்]

எனவும்,

> சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
> உறுகாலத்து ஊற்றாகா வாம்இடந்தே யாகும்
> சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்
> இறுகாலத்து என்னை பிரிவு[27]

[சிறுகாலை-உயிர் உடம்பையடையுங்காலத்தில்; பட்ட-அநுபவிக்க வேண்டுமென்று நியமிக்கப்பட்ட; பொறி-ஊழ்; உறுகாலம்-வருங்காலம்; ஊன்று-ஊன்றுகோல்; இறுகாலம் - கெடுதியடையுங்காலம்]

எனவும் நாலடியாரில் விளக்கப்படும். இறுதிப் பாடலில் குறிப்பிடப் பட்ட கருத்து,

> வருந்தி அழைத்தாலும் வாராத வாரா;
> பொருந்துவன் போமின்என்றால் போகா.[28]

என ஔவைப்பாட்டியாலும் விளக்கப்படும். இப்பாடல்கள் யாவும் பழவினைபற்றியவை. வினைப்பயன் தானே ஊழாக வருவது?

கம்பராமாயணத்திலும் இந்த ஊழ்வினை ஈரிடங்களில் காட்டப்படுகின்றது. கும்பகருணனைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டு வீடணன் அனுப்பப் பெறுகின்றான். சகோதரர்களிடையே பேச்சு

26. ஷை 109
27. ஷை 110
28. நல்வழி - 5

நடை பெறுகின்றது. கும்பகருணன் இராமன் பக்கம் வந்து சேர இசையவில்லை; அண்ணன் பொருட்டுச் செஞ்சோற்றுக் கடன் கழித்துப் போர்க்களத்தில் உயிர்விடத் துணிந்து விட்டான். தனக்காக வருந்த வேண்டா என்று கூறிய பகருணன்,

ஆகுவது ஆகுங் காலத்து
அழிவதும் அழிந்து சிந்திப்
போகுவ தயலே நின்று
போற்றினும் போதல் செய்யும்
சேகற உணர்ந்தோர் நின்னில்
யாருளர்? வருத்தம் செய்யாது
ஏகுதி எம்மை நோக்கி
இரங்கலை என்றும் உள்ளாய்[29]

[சிந்தி - சிதறி; அயல் - பக்கம்; சேகற - குற்றமற; என்றும் உள்ளாய் - சிரஞ்சீவியே]

என்று ஊழின் போக்கை உணர்த்தி ஆறுதல் கூறி அனுப்புகின்றான்.

பிறிதோர் இடம்: வேற்றுக் கொடியாள் விளைவித்த வினையைக் கேட்டதும் இலக்குவன் 'கால் தாக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும் ஆறாக் கனல் போல்' சினங் கொள்ளுகின்றான். அப்போது இராமன் நேர்ந்த காரியத்திற்கு விதிதான் காரணம் என்று எடுத்துக் காட்டுகின்றான். தான் காட்டுக்குச் செல்வது தந்தையின் குற்றமன்று; தாயாகிய கைகேயியின் பிழையினாலுமன்று; பரதனுடைய தவற்றால்தான் என்றும் சொல்ல இயலாது; அஃது ஊழின் பயனால்தான் இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டுகின்றான்.

---

29. கம்பரா - கும்பகருணன்வதை - 166

நதியின் பிழையன்று நறும்புனல்
 இன்மை ; அற்றே
பதியின் பிழையன்று; பயந்து
 நமைப்பு ரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை
 யன்று; மைந்த!
விதியின் பிழை[30]

என்பது இராமன் வாயிலாகக் கம்பன் காட்டும் ஊழ் பற்றிய குறிப்பாகும். காவியத்தின் தொடக்கம் முதல் இறுதி வரை நிகழும் பல நிகழ்ச்சிகளும் ஊழின் காரணமாக நடப்பதாகவே காட்டப்பெறுகின்றன.

இராமன் தண்டகாரண்யத்தில் பஞ்சவடியிலிருக்கும் போது 'அரக்கர் என்னும் கான் சுட முளைத்த கற்பின் கனலியை' இராவணன் தூக்கிச் செல்ல எண்ணுகின்றான். இதன்பொருட்டு அவன் மாரீசனை அணுகி அவன் உதவியைக் கேட்டபோது, அதற்கவன்,

பேதைமதி யாவிலதோர்
 பெண்ணுருவம் என்றாய்
சீதையுரு வோகிருதர்
 தீவினைய தன்றோ?[31]

என்று எச்சரிக்கின்றான்.

மன்னாநின் வாழ்வை
 முடித்தாய்; மதியற்றாய்;
உன்னலின்று ஈது ஊழ்வினை
 என்றே உணர்கின்றேன்.[32]

30. நகர்நீங்கு - 134
31. மாரீசன் வதை - 192
32. ௸ 177

என்று இராவணன் மதி கெட்டது ஊழ்வினை என்றே எண்ணி அதையும் அவனுக்கு உணர்த்துகின்றான். கெடு மதி கண்ணுக்குத் தோன்றாது. நிகழ்ச்சிகள் ஒன்றை யொன்று தொடர்ந்து செல்லல் ஊழ்வினையின் வலியால் தான் என்று உணர்த்தப்பெறுகின்றது.

வள்ளுவர் பெருமான் ஊழை இருவகைப்படுத்திக் காட்டுவர். ஒன்று ஆகூழ், ஆகலூழ், நல்வினை என்று கூறப்படுவது; மற்றொன்று போகூழ், இழலூழ், தீவினை என்று கூறப்பெறுவது. நல்லூழ் வருகின்ற காலத்தில் கைப்பொருள் மிகுவதற்குக் காரணமான சுறுசுறுப்பும் முயற்சியும் உண்டாகும்; தீயூழ் வருகின்ற காலத்தில் சோம்பலும் முயற்சியின்மையும் உண்டாகும்.

> ஆகூழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்
> போகூழால் தோன்று மடி (371)

என்பது வள்ளுவர் வாய்மொழி. பொருள் இழப்பதற்குக் காரணமான ஊழ் அறிவைக் கெடுத்துப் பேதையாக்கும்; பொருள் சேர்தற்குக் காரணமான ஊழ் அறிவை விரி வாக்கும். இழலூழ் அறியாமையையும் ஆகலூழ் அறிவின் விரிவையும் உண்டாக்கும் என்பர் இப்பெருமான் (372). காலத்துக்கேற்றபடி நல்லவை கெட்டவையாகவும் கெட் டவை நல்லவையாகவும் தோன்றுவதும் உண்டு. இதனை மாரீசன் வாயில் வைத்துக் கம்பன் பேசுகின்றான். இராவணன் வேண்டுகோளை மாரீசன் மறுத்தபோது அவன், ''நீ பிடிவாதமாக என் ஏவலை மறுக்கின்றாய். நான் நினைத்தால் உன்னை இப்பொழுதே என் கூரிய வாளால் வெட்டி வீழ்த்தி என் மனக்குறையை முடித்துக் கொள்ள முடியும். நீ உயிரோடு இருக்க விரும்பினால் என் ஏவலை மறுக்காது என் குறிப்பின் வழி நடப்பாய்'' என்றான். இந்நிலையில் மாரீசன்,

உன்வயின் உறுதி நோக்கி
உண்மையின் உணர்த்தி னேன்; மற்று
என்வயின் இறுதி நோக்கி
அச்சத்தால் இசைத்தேன் அல்லேன்;
நன்மையும் தீமை யன்றோ
நாசம்வந்து உற்ற போது[33]

[உறுதி - நன்மை; இறுதி - தீமை; இசைத்தேன்-கூறினேன்]

என்று பேசும்போது இந்த உண்மையை உணர்த்துகின்றான். நல்லூழ் உண்டான காலத்தில் பண்டங்களை வெளியே விட்டு விட்டாலும் திருட்டுப் போவதில்லை; அல்லாத காலத்தில் பண்டங்களை எவ்வளவு காத்தாலும் நிற்கமாட்டா.

மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் விளையுலந்தக் கால்[34]

என்ற சமண முனிவரின் வாக்கும் ஈண்டு சிந்தித்தல் தகும்.

திருக்குறளின் தொடக்கம் தனி முதற் பொருளாகிய இறைவனைப் பற்றியது; அறத்துப்பாலின் முடிவு தனி நிலைத் திறனாகிய ஊழைப் பற்றியது. இந்த ஊழை வள்ளுவர் பெருமான் 'தெய்வம்' என்றே போற்றுவர். இதனையே தொல்காப்பியரும் 'பால்வரைத் தெய்வம்'[35] என்று குறிப்பிடுவர்.

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (619)

என்ற குறட் பாவில் 'தெய்வத்தான்' என்பது 'ஊழினால்' என்ற பொருளில் வந்துள்ளதைக் காண்க.

33. கம்பரா. மாரீசன் வதை-202.
34. நாலடி-93.
35. தொல் : களவியல் - 90.

மக்கள் ஆற்றும் செயல் பற்றற்றதாய் அமைந்தால் அஃது இறை செயலாகக் கொள்ளப்படும். அதுவே பற்றுடன் நிகழ்வதானால் அஃது 'ஊழ்' என்று வழங்கப்படும். ஏனென்றால் இறைவன் பற்றற்றவன்; அதனால் பற்றற்ற செயல்கள் எவரிடத்தில் நிகழ்ந்தாலும் அதனை அவரிடத்தில் நிகழ்விப்பவன் இறைவனேயாகும். பற்றற்றவர், தாம் அருளில் ஒடுங்கித் தம் உணர்வு அற்றவராய் இருப்பர்; ஆதலால் அவரிடத்தில் இறை செயலே நிகழ்வதாக அமைகின்றது. ஆயின் ஊழ் அப்படி அன்று. பற்றுள்ளவர் நன்மையோ தீமையோ செய்யும்போது அவர் செயலில் இறைவன் அவ்வளவாகக் கலப்பதில்லை. அதனால் அவரவர் செயலே பின்னும் பின்னும் பயன் தர வேண்டியுள்ளது. இறை செயலாக இருப்பின் அதற்குப் பயன் பிறவாப் பெ நிலை கூடிய பெரு வாழ்வாக அமைந்து விடும். பற்றுள்ள செயல்கள் யாவும் அந்தப் பற்றுக்கேற்ற பயன்களையே தந்து வரும். இப்பயன் தம் தம் செயல்தன்மைக்கேற்ப நல்லதாகவோ கெட்டதாகவோ அமையும். பகவத்கீதையில் பற்றுடன் ஆற்றும் செயல் கர்மம் (வினை) என்றும், பற்றற்றநிலையில் ஆற்றும் செயல் 'கர்மயோகம்' என்றும், பயனையும் பற்றற்றானுக்கு சமர்ப்பித்துச் செய்வது 'கர்மசந்நியாசம்' என்றும் கருதப்பெறுவதை ஈண்டு நினைத்தல் தகும்.

இந்நிலையில் பற்றுள்ள செயல்கள் நடைபெறும் போது அவற்றிற்கேற்ப பயன் கூட்டும் முறையில் உருவாக்கி இயக்கி நடத்துவதற்காக இறைவனது ஆற்றலில் ஒரு கூறு அவற்றின்கண் பதிந்து நிற்கும். இந்தப் பதிவைப் பெற்ற அவரவர் செயல்களே இறை பதிவு காரணமாக ஊழ் உருத்து வரும்போது 'தெய்வம்' என்ற பெயரைப் பெறுகின்றது. செயல்கள் பின்னொரு காலத்தில் பயன் கூட்டுவதற்காக உருத்து வரும் நிலையில் செய்தவனைச் செய்த முறையே தாக்குதலால் அம் முறைமை கருதி அவை 'ஊழ்' எனப் பெயர் பெறுகின்றன. ஊழ்த்துதல்

முற்றுதல்; ஊழ் முறைமை. 'ஊழ்' என்னும் சொல்லுக்கு இந்த இரு பொருளும் உண்டு. கோவலன் வாழ்வில் 'சூழ்வினை சிலம்பு காரணமாக ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்போது' திட்டப்படி ஊழ் நடந்து வந்ததைக் காணமுடிகின்றது. 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்' 'முற்பகல் செய்யும் பிற்பகல் விளையும்' என்ற பழமொழிகள் எழுந்த காரணம் இது பற்றியேயாகும். வள்ளுவர் பெருமானும்,

> பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும் (319)

என்ற குறளில் இதனையே காட்டுவர்.

திட்டப்படி ஊழ் நடைபெறுவதால் 'விதி' என்றும் அது பெயர் பெறுகின்றது. மற்றொன்று சூழினும் தான் முந்துகின்ற எதிரற்ற வலிமை படைத்தலால் அந்த விதி 'தலைமையான விதி' என்ற பெயர் பெறுகின்றது. மக்கள் வாக்கில் இது 'தலைவிதி' என்று சுருங்கி வழங்கப்பெறுகின்றது. இந்த வினைப்பயனைச் சைவ சித்தாந்த முறையிலும் விளக்கலாம். விரிவஞ்சி அதற்குப் போகவில்லை.[36] இத்தகைய பெரு வலியைப் படைத்ததும், மறைவில் நிகழ்வதுமாகிய ஊழ் என்னும் கயிற்றில் பிணிப்புண்டு எல்லா உயிர்களும் பிறவியில் இயங்கி உழன்று வருகின்றன. ஊழிற்குத் தப்பும் உயிர் ஒன்று கூட இல்லை. இறை பதிவு பெற்ற ஊழாதலால் முடிவில் அது எல்லா உயிர்க்கும் செம்மை கூட்டுவதாகவே அமையும். 'எல்லாம் நன்மைக்கே' என்ற பழமொழி சிந்திக்கற்

---

36. விளக்கம் வேண்டுவோர், '**ஆன்மிகமும் அறிவியலும்**' என்ற என் நூலில் 'வினையும் வினைப் பயனும்' என்ற கட்டுரையில் காண்க (பாரி நிலையம், சென்னை-108)

பாலது. தீயூழால் தொடக்குற்று இடர்ப்படுபவர்கள் அது நன்மைக்கே என்னும் முடிவில் அமைதியாய் அதனை நுகர்ந்து கழித்தல் வேண்டும்

> நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
> அல்லற் படுவது எவன்? (379)

என்ற வள்ளுவர் வாக்கை உன்னுக. இவ்விடத்தில் ஒரு முக்கிய கருத்தை நினைவில் கொள்ள வேண்டும். இறையருள் அதன் இயல்பால் நிகழ்வது; ஊழ் உருத்தல் உயிர்களின் செயல் இறையருள்மூலம் திரும்பிச் செயலுறுவது; உயிர்களால் இயற்றப்படும் வினை அறிவுடையதன்றாதலால் இறைவனே அதனை உரிய காலத்தில் உரிய உடம்பில் கூட்டுவிக்கின்றான். 'முறைவழிப்படுதல்' என்பது இதுவேயாகும்.

> நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
> காட்சியில் தெளிந்தனம்'[37]

என்ற புறப்பாட்டில் இது விளக்கப்பட்டிருத்தல் காண்க.

நுண்ணிய நூல் பலகற்று அக்கற்றறிவைக் கொண்டு ஊழைமாற்றி விட நினைப்பது தவறு. இறை வலிமை சேர்ந்த செயலாதலால் மற்ற வல்லமைகளால் ஊழை எதிர்க்க இயலாது. இறைவலிமை கொண்டுதான் ஊழ் வலியை ஓரளவாவது குறைத்துக் கொள்ள இயலும். மக்கள் செய்யும் செயல்கள் எல்லாம் ஒரே காலத்தில் தம் பயனை உருத்துத்தருவதென்றால், உயிர்களால் அவற்றைத் தாங்கவே இயலாது. மற்றும் வினைகள் தாம் செய்யப்பட்ட முறையிலன்றி முன் பின்னாக, பின் முன்னாகவருவது அவ்வினையின் தன்மைக்கேற்ப நிகழும். இதற்குக் காரணம் அவற்றின் வன்மை, மென்மைகளாகும். மிகப் பெரிய பாவமும் மிகப் பெரிய புண்ணியமும் செய்த பிறவிலேயே

37. புறம்-192.

பிராரர்த்தமாய் வந்து பயன்தரும். இதனைச் சிவப்பிரகாச ஆசிரியர் எடுத்துக் காட்டொன்றால் விளங்குவர். உழவன் ஒருவன் பனை விதையை இடுகின்றான்; பின்னர் வாழையை நடுகின்றான்; அதன் பின்னர்க் கரும்பை நடுகின்றான்; அதன் பின்னர் கீரையை விதைக்கின்றான். இங்கு அவன் விதைத்த முறைப்படியே பயன் தரும் என்று கருதுதல் தவறு என்பது தெளிவு. தவிர, இறைவனும் ஆருயிர்கள்மீது தான் கொண்டுள்ள அளவற்ற கருணையால் ஆருயிர்கள் தாங்குவதற்கேற்ப ஊழ்களை வகுத்துக் கொடுப்பான்.

> அளந்தன போக மெல்லாம்
> அவரவர்க்கு அற்றை நானே
> அளந்தன வாழு நாளும்'[38]

என்பது திருத்தக்க தேவரின் திருவாக்கு. சமண முனிவரும் இக்கருத்தை 'அளந்தனைபோகம் அவரவர் ஆற்றான்'[39] என்று விளக்குவார். வள்ளுவப் பெருந்தகையும்,

> வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

என்று கூறுவார். இதனால் புலன்களால் இன்பம் நுகர்வதற்கு உரிய பொருள்களைத் தேடிய அளவிலேயே இன்பம் நுகர முடியும் என்று எண்ணலாகாது. ஊழின் அமைதிக்கு ஏற்றபடியே நுகர முடியும். நுகர்வுப் பொருள்களைக் கோடிக்கணக்காகத் தொகுத்து வைத்தவர்கட்கும் ஊழ்வகுத்தபடி அல்லாமல் நுகர முடியாது. உணவுப் பொருள்களையும் உடை முதலிய பிற பொருள்களையும் நிறையச் சேர்த்து வைத்துச் செல்வராக விளங்கியும் பசியின்மை முதலிய காரணங்களால் நுகர முடிவதில்லை. சில செல்வர்கட்கு ஏற்பட்டிருக்கும் நோயால் மருத்துவர்

38. சிந்தா. 213.
39. நாலடி - 103

சருக்கரை. உப்பு சேர்க்கக் கூடாது என்று சொல்வதைப் பார்த்திருக்கின்றோம். எவ்வளவு கொடுமை இது!

ஊழ் அல்லது விதியைப்பற்றி நீதி நூல்கள் உணர்த்துவதை விட, காவியங்கள் உணர்த்தும் முறை கற்போருக் இனிமை பயப்பது; நீதி நூல்கள் உண்மையை உணர்த்துவது மருந்து மாத்திரைகளை விழுங்குவது போன்றது. இதே உண்மை காவியத்தில் உணர்த்தப் படும்போது சத்துணவு உண்பது போன்றது. உண்மைகளை உணர்த்துவதுபற்றி வடமொழிவாணர்கள் கூறுவது சிந்திக்கத் தக்கது. தலைவன் ஏவலாளர்க்குக் கூறுதல் போன்றவை அற நூல்கள் என்றும், நண்பர் ஒருவருக்கொருவர் கூறும் முறையில் அமைந்தவை புராணங்கள் என்றும், கணவனுக்கு மனைவி உரைப்பவை போன்றவை காவியங்கள் என்றும் ஒருவித பாகுபாடுகள் செய்து விளக்கியுள்ளனர். இல்வாழ்க்கையில் சொற்களை விட உள்ளத்து உணர்ச்சிகளே ஆற்றல் மிக்கவை என்பதும், சொற்களால் உணர்த்துவதை விடக் குறிப்பால் உணர்த்துவதே மிகுதி என்பதும் நாம் அறிந்தவை. இக்காரணத்தால்தான் சில வரிகளாலான அகத்துறைச் சங்கப் பாடல்கள் உணர்ச்சியைக் கொட்டி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. இத்தகைய உணர்ச்சிதான் காவியங்களிலும் அமைந்து கிடக்கின்றது. ஒழுக்கம், அறம் முதலியவற்றை அதிகமாகச் சொற்களால் கூறி வற்புறுத்தாமல் கற்பனையநுபவத்தின் வாயிலாக அப்பாடல்கள் உள்ளத்தில் தாமே சென்று பதியும் முறையில் ஆரா அமுதமாக அமைந்து விடுகின்றன.

காவியங்களில் உண்மைகள் அமையும் முறை சிலவற்றை முன்னர் காட்டினேன். மேலும் சிலவற்றைக் ஈண்டுக் காண்போம். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில்,

அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்

என்ற மூன்று நீதிகள் வலியுறுத்தப் பெறுகின்றன. ஊழ் கருத்து சந்தர்ப்பத்தை நோக்கிக் காவியத்தில் பல இடங்களிலும் காட்டப்படுகின்றன. இக்கருத்து மணிமேகலையில் பல இடங்களிலும் தட்டுப்படுவதை அறிந்து மகிழலாம். காலச்சுருக்கம் கருதி அந்த இடங்களுக்குப் போகவில்லை. எனினும் பாரதியின் ''பாஞ்சாலி சபதத்தில்'' விதிபற்றிய கருத்துகள் அமைந்திருப்பதைச் சுட்டுவேன்.

மண்டபம் சமைப்பதற்கும் அதன் திறப்பு விழாவிற்கு பாண்டவர்களை அழைப்பதற்கும், வரும்போது அவர்களைச் சூதில் ஈடுபடுத்துவதற்கும் திருதராட்டினன் இசைவு தராவிடில் துரியோதனன் தன் சிரம் கொய்து ஆவி இறுத்திடுவதாக அச்சுறுத்தியதும் கண்ணிலானும் அவற்றிற்கு ஒருப்படுகின்றான் - மிக்க வருத்தத்துடன்.

''விதிசெய்யும் விளைவி னுக்கே—இங்கு
வேறு செய்வார் புவிமீ துளரோ?
மதிசெறி விதுரன் அன்றே—இது
வருந்திறன் அறிந்துமுன் எனக்குரைத்தான்
'அதிசயக் கொடுங் கோலம்—விளைந்
தரசர்தங் குலத்தினை அழிக்கும்' என்றான்
சதிசெயத் தொடங்கி விட்டாய் — 'நின்றன்
சதியினில் தான்அது விளையும்' என்றான்.

விதி!விதி! விதி!மகனே—இனி
வேறெது சொல்லுவன் அட மகனே!
கதியுறுங் கால னன்றோ—இந்தக்
கயமகன் எனநினைச் சார்ந்து விட்டான்
கொதியுறும் உளம் வேண்டா;—நின்றன்
கொள்கை யின்படி அவர்தமை அழைப்பேன்
வதியுறு மனை செல்வாய்;—என்று
வழியுங்கண் ணீரொடு விடைகொடுத்தான்[40]

40. பா. ச: 107, 108.

இதிலிருந்து நிகழ்ச்சிகளை விதி எவ்வளவு வேகமாகத் தள்ளிக் கொண்டு செல்கின்றது என்பதை நாம் அறிகின்றோம்.

திருதராட்டிரன் அழைப்பின்பேரில் 'தீங்கதனைக் கருதாத தருமக் கோமான்' தன் தம்பிமாரோடும் பாஞ்சாலர் விளக்கினோடும் திருநகர்விட்டு அகல்கின்றான் தீயோர் ஊர்க்கு. எப்படிச் செல்கின்றான் என்பதைப் பாரதி ''நெடுங்கரத்து விதிகாட்டும் நெறியில் நின்றே'' என்று கூறுவான். தொடர்ந்து,

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும்; சிற்றெறும்பால் யானை சாகும்;
வரிவகுத்த உடற்புலியைப் புழுவும் கொல்லும்;
வருங்காலம் உணர்வோரும் மயங்கி நிற்பார்;
கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்;
கீழ்மேலாம், மேல்கீழாம்; கிழக்கு மேற்காம்;
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவார், விதிவகுத்த போழ்தின் அன்றே.[41]

என்று தன் கூற்றாகவே கூறுவான். ஒருவர் வாழ்க்கையில், அல்லது ஒருநாட்டில் விதி புகுந்து விளையாடுகையில் ஏற்படும் விளைவுகளைப் பாரதி தம் கற்பனையில் கண்டு நமக்குக் காட்டுகின்றான். சுமார் 200 ஆண்டுகளாக நம் நாடு அந்நியர் ஆட்சியிலிருந்தது. அக்காலத்தில் நாம் நன்மைகளையும் அநுபவித்தோம்; கேடுகளும் நம்மை வந்தடைந்தன. நம்மை ஆண்ட நம் முன்னோர் செய்த வினையின் பயனே நம் நாடு நம் கையை விட்டுப்போயிற்று. அங்ஙனமே அந்நியர் செய்த வினையின் பயனே திரும்பவும் நம் நாடு நம் கைக்கு வந்தது. இப்பொழுது நம்மவர் மக்களாட்சி முறை என்ற போர்வையில் நடத்தும் ஆட்சி முறையில் நடைபெறும் முறைகேடுகளால் துன்பத்தை அநுபவிக்கின்றோம். நன்மைகளையும் நிறைய அநுபவிக்

41. பா.ச : 146.

கத்தான் செய்கின்றோம். ஆட்சி முறையில் இருப்பவர்கள் அடிக்கடி ஆன்மப் பரிசோதனைகள் செய்து குறைகளைத் தவிர்த்துக் கொண்டால் மக்களாகிய நாம் இன்னும் பல நன்மைகளை அடையலாம். ஆனால் 1987 டிசம்பர் 28ஆம் நாள் சட்டமன்றப்பேரவையில் நடைபெற்ற முறை கேடுகள், அட்டூழியங்கள் இவை திரும்பவும் நடைபெறாமல் இருக்க முயல வேண்டும். இவற்றிற்குரிய காரணங்களை விசாரணையால் கண்டறிய முடியாது. இவற்றில் பங்கு கொண்ட பொறுப்பிலுள்ளவர்களின் மனச்சான்று ஒன்று மட்டுமே உண்மையை அறியும். ஆனால் அன்று நடைபெற்ற நாடகத்தை நேரில் கண்டவர்கள், தொலை காட்சி மூலம் பார்த்தவர்கள் நாம் நம்மை ஆள்வதற்குப் பக்குவப்படவில்லை என்றுதான் நினைக்கின்றார்கள். அந்த வினைப் பயனே நாம் இன்று அநுபவிக்கும் அவமானம். நிற்க.

அன்று உலகம் கேட்டிராத முறையில் திருதராட்டிரன் அவையில் அக்கிரமங்கள் நடைபெற்றன. அறத்திற்கே நாயகனாக விளங்கிய தருமன் சூதில் இறங்கிய தவறே இவை நடைபெறுவதற்குக் காரணமாகின்றன. துரியோதனனையும் துச்சாதனனையும் குறை கூறிப் பயன் இல்லை. தருமன் செய்த தவற்றுக்கு சபையில் பாண்டவர்கள் சரியான பரிசு பெற்றனர்! 'பேயரசு செய்தால் பிணந் தின்னும் சாத்திரங்கள்!' என்று திரௌபதியின் வாயில் வைத்துச் சொன்னான் கவிஞன். அன்று கூட (28-12-87) சபாநாயகரின் கையில் திருக்குறள் இருக்கத் தான் செய்தது. மூன்று முறையிலும் சில குறள்களைப் படித்துக்கொண்டுதான் சட்டமன்ற இருக்கையில் அமர்ந்தார். பலன், சாத்தான் வேதம் ஓதுவது போலாயிற்று. இப்போது அவதிப் படுபவர்கள் மக்கள். வாக்களித்த பெரு மக்களல்லவா? வினையை விதைத்தவர்கள் வினையைத் தானே அநுபவிக்க வேண்டும். அநுபவிக்கின்றோம்; நன்றாக அநுபவிக்கின்றோம்.

திருதராட்டிரன் சபையில் நடைபெற்ற அக்கிரமங்களைப் பொறுக்க முடியாமல் எதிர்த்துப் பேசினவன் வீமன் ஒருவனே. ஏனைய 'கேள்வி பல உடையோர், கேடிலா நல்லிசையோர், வேள்வி தவங்கள் மிகப் புரிந்த வேதியர்கள்...' சபையினோர் வீற்றிருந்தார்! வீடுமன், துரோணன், கிருபன், விதுரன் முதலியோர் கண்மூடி மௌனிகளாய் வீற்றிருந்தார்கள்! வீமன் மட்டிலும்,

'இது பொறுப்ப தில்லை, - தம்பி!
எரிதழல் கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடு வோம்[42]

என்று குமுறி எழுகின்றான். இப்படி எழுந்த அண்ணனை அருச்சுனன் அடக்குகின்றான். அறம் உறைக்கின்றான் பின்னால் பரந்தாமனிடம் கீதோபதேசம் கேட்கப் போகும் பார்த்தன்.

''தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்'' எனும்இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்;
கருமத்தை மேன்மேலும் காண்போம்; இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம் காலம்மாறும்;
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்;
தநுஉண்டு காண்டீவம் அதன்பேர்'' என்றான்.''[43]

இங்கு அருச்சுனன் வாயிலாக விதியின் ஆற்றல் உணர்த்தப் பெறுகின்றது. எல்லாம் அறிந்த கண்ணன் இதனை அறியானா? வினையைக் கூட்டுவிப்பவன் அவன் தானே. இன்னும் எத்தனையோ பேர் எத்தனையோ முறைகளில்

42. பா.ச : 281.
43. ஷை : 283.

வினைகளை அநுபவிக்க வேண்டியவர்களாக உள்ளனர். நல்வினைகள் புரிவோருக்கு நல்வினைகளை ஆற்றவும், தீவினைகள் புரிவோருக்கு தீவினைகள் ஆற்றவும் வாய்ப்புகள் தரவேண்டும். துரியோதனனை நாட்டில் வைத்துத் தீவினைகள் புரியவும், பாண்டவர்களைக் காட்டில் வைத்து ஞானியர்களோடு கூட்டுறவு ஏற்படுத்தி ஞானத்தை வளர்க்கவும் வாய்ப்புகள் தருவதற்காக அவர்கள் விஷயத்தில் அதிகமாகத் தலையிடாமல் இருந்தான் கண்ணன் என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

குடியாட்சியாயினும் முடியாட்சியாயினும் பொது வாழ்வின் நன்மையைக் கருதி நெறி பிறழாத முறைமையைக் கடைப் பிடிக்க வேண்டும். குற்றவாளிகள் எவராக இருந்தாலும், எந்த உயர் பதவியில் இருந்தாலும், எவ்வளவு செல்வாக்கு உடையவராக இருந்தாலும் அவர்களைத் தண்டித்தல் அரசனின் கடமை; அரசின் கடமை; ஆனால் அரசனோ, குடியாட்சி முறையில் தலைவனோ (முதல் அமைச்சனோ) தன் கடமையையும் பொறுப்பையும் மறந்து, ஆற்றலையும் அதிகாரத்தையுமே நினைந்து, பலரையும் வருத்தத் தொடங்கிக் கொடுமை செய்தால், அவன் கொலையாளிகளை விடக் கொடியவன் எனக் கருதப் பெறுவான்.

கொலைமேற்கொண் டாரின்
கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து(155)

இட்லர், முஸ்ஸோலினியின் அடாத திருவிளையாடல்களை உலகம் அறிந்தது; அவர்கள் அழிந்ததும் இன்னும் நமது நினைவிலிருந்து மறையவில்லை.

இப்படிப்பட்ட கொடிய தலைவன் நெடுங்காலம் தான் நினைத்தபடி எல்லோரையும் துன்புறுத்திக் கொண்டிருக்க முடியாது. அவனால் அல்லல் படுகின்ற மக்கள்

பல நாளும் பொறுக்க முடியாமல் அழுது அழுது விடு கின்ற கண்ணீர் வீண் போகாது. இந்தக் கண்ணீருக்கு அளவற்ற ஆற்றல் உண்டு என்பதை நாம் அறிவோம். 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும்' என்பது பொது மக்களிடையே வழங்கி வரும் பழமொழி அன்றோ? இந்தக் கண்ணீர்தான் கொடுங்கோலனுடைய செல்வ வாழ்வை அழிக்கக்கூடிய பெரும்படையாகும் என்பர் வள்ளுவப் பெருந்தகை;

அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (555)

என்பது அப்பெருமானின் திருவாக்கு. இந்த ஏழை மக்கள் அவனை எதிர்த்துப் போர் செய்ய மாட்டார்கள் என்பது உண்மையே. ஆனால் போரால் உண்டாகும் அழிவை விடப் பொல்லாத அழிவை உண்டாக்கி விடும் அவர்தம் கண்ணீர். கண்ணீர் எப்படி அழிக்கின்றது என் பதை வெளிப் படையாகக் காணமுடியாதுதான். ஆனால் அதனால் என்ன என்ன விளைந்து எப்படி எப்படி அவனு டைய அதிகாரக் கொடுமை அழிகின்றது என்பதை ஆராய்ந்து அறியலாம். இந்த உண்மையை விளக்க வர லாறுகள் உள்ளன. சீதை அசோகவனத்தில் வடித்த கண்ணீரும், உலகம் கேட்டிராத முறையில் திரௌபதி அவையில் அவமானப்படுத்தப்பட்டபோது உகுத்த கண்ணீரும், தன் கணவன் கோவலன் அநியாயமாகக் கொலையுண்ட போதும் பாண்டியன்முன் அப்பத்தினித் தெய்வம் வந்தபோதும் அவள் 'காவிஉகு நீரும்' விளை வித்த செயல்களை காவியங்கள் நமக்குப் பறைசாற்றி உண்மையைத் தெளிவாக்குகின்றன.

ஆனால், இன்றைய மக்களாட்சியில் என்ன மாறுதல் களை விளைவிக்க முடியும்? கூறுவேன்; கொடியவனுக்குத் துணையாகஇருந்தவர்கள் எல்லோரும் அவனுக்குப்பகைவர் களாக மாறுதலும் கூடும்.அவனுக்கு அடங்கியிருந்தவர்களே

அவனை அடக்கக் கிளம்பிவிடுதலும் உண்டு. இவ்வாறு பலருடைய மனத்திலும் அவனை அழிக்கும் ஆற்றலை வளர்ப்பது எது? திக்கற்றவர்களின் கண்ணீர் தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அமுதவல்லி-உதாரன் வரலாற்றில் கண்ணீரின் ஆற்றலைப் பாவேந்தர் காட்டுவதைக் காண்போம். கதை நாம் அறிந்த கதைதான்.

படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து
பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்
அடிசோர்தல் கண்டார்கள் அங்கிருந்தோர்!
ஆவென்று கதறினாள்! 'அன்பு செய்தோர்
படிமீது வாழாரோ?' என்று சொல்லிப்
பதைபதைத்தாள்! இதுகேட்ட தேச மக்கள்
கொடிதென்றார்; கொடுவாளைப் பறித்தார்; அந்தக்
கொலையாளர் உயிர்தப்ப ஓட லானார்;
கவிஞனுக்கும், காதலிக்கும் மீட்சி தந்தார்;
காவலன்பால் தூதொன்று போகச் சொன்னார்;
'புவியாட்சி தனிஉனக்குத் தாரோம் என்று
போயுரைப்பாய்' என்றார்கள்; போகாமுன்னே,
செவியினிலே ஏறிற்றுப், போனான் வேந்தன்;
செல்வமெலாம் உரிமையெலாம் நாட்டாருக்கே
நவையின்றி எய்துதற்குச் சட்டம் செய்தார்
நலிவில்லை! நலமெல்லாம் வாய்ந்த தங்கே!

இந்தப்பாடல்களில் கவிஞர் கண்ணீரின் ஆற்றலை அற்புதமாகக் காட்டியிருப்பதைப் படிக்கும்போது நாமும் உணர்ச்சிவயத்தராகி விடுகின்றோம் அல்லவா?[44]

கண்ணீரின் ஆற்றலை நன்கறிந்த வள்ளுவர் பெருமான் மெலிந்து துன்புறுத்துகின்றவர்களின் கண்ணீரை ஒரு புறம் நிறுத்தி, கொடுங்கோலனுடைய அளவற்ற செல்வத்தையும் அதன் வாயிலாகப் பெற்ற அதிகார பலத்தையும்

44. புரட்சிக்கவி : இறுதிப்பாடல்கள் இரண்டு

மற்றொருபால் நிறுத்தி வலியன் ஆற்றலை மெலியவனின் கண்ணீர் வெல்லும் என்று கூறினார். அந்த வெற்றியைச் சிறப்பிக்கவே போர் செய்து வெல்லும் என்று கூறாமல் இருந்த இடத்திலிருந்தே அமைதியாக மெல்ல நிகழ்த்தும் ஒரு சிறுதொழில் போல் தேய்க்கும்-'செல்வத்தைத் தேய்க்கும் படை' என்று நுட்பமாக விளக்கிவைத்தார். இங்ஙனம் திக்கற்றவர்களின் கண்ணீர் காற்றில் உலர்ந்து போகும் எளிமையுடையது எனக் கருதுவது அறியாமை என்று புலப்படுத்த விரும்பி அதையே படையாக உணருமாறு எடுத்துரைத்தார். உண்மையாகப் படைவைத்துக்கொண்டு தற்காப்புச் செய்து கொள்ளும் கொடுங்கோலனுடைய ஆற்றலை அந்தப்படையில் தெளிவாக எடுத்துக் காட்டாமல் அதை வெறும் 'செல்வம்' என்று சொல்லி உதாசீனம் செய்தார். வலிமையும் இழந்து படையும் இல்லாமல் வாடும் மக்களுடைய கண்ணீரின் ஆற்றலை உணர்த்துவதற்காக அதையே 'படை' என்று சிறப்பித்தார்.

இரக்கத்திற்கும் ஓர் அளவு உண்டு; நெறிமுறையும் உண்டு. இத்தகைய இரக்கம் கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுவது தவறு; பெருந்தவறு. ஆணவம் கொண்டு எல்லோருக்கும் துன்பத்தை விளைவித்தலோ மிகப் பெருந்தவறு. ஆகவே, 'கண்ணாற் காண்பதுவும் பொய், காதாரக்கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய்' என்ற பொன்மொழிக் கிணங்க குற்றம் புரிந்தவர்களைப் பற்றி நன்றாகக் கேட்டறிந்து நடுநிலையில் நின்று ஆராய்ந்து தண்டிக்கவேண்டும்; அவ்வாறு தண்டிக்கும் முறையால் அந்தக் குற்றவாளிகள் மறுபடியும் அந்தக் குற்றம் செய்யாமல் திருந்தும்படியாகத் தண்டிக்கவேண்டும். குற்றத்திற்கேற்ற தண்டனையாகவே விதிக்கவேண்டும் என்பது மிகவும் கவனத்திற்குரிய அம்சமாகும். தண்டனை வழங்கும்போது அளவுகடந்து தண்டிக்கப்படுபவர்போல் தொடங்கி அளவுமீறாமல் நிற்கவேண்டும். அதுதான் நீண்டகாலம் ஆக்கத்துடன் இருப்பதற்குரிய நெறியுமாகும்.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு வெறுப்பது வேந்து (561)

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர் (562)

என்ற வள்ளுவங்கள் இவற்றை விளக்கி நிற்கின்றன.

பொதுவாழ்வில் உள்ளவன் அந்த வாழ்வில் உள்ள இந்தக் கடமையில் தான் மட்டிலும் எண்ணிப்பார்த்து ஒருவித முடிவிற்கு வருவதைவிட, தன்னைச் சார்ந்தவர்களோடு, தம்மைவிட ஆற்றலும் அநுபவமும் உள்ளவர்களோடு, கலந்து எண்ணிப்பார்ப்பது சிறந்தது; அவர்களோடு ஆய்ந்து எண்ணித் தண்டனை விதிக்காமல், தான் தனியாகச் சினம் கொண்டு சீறித் தண்டித்தல் ஆகாது. அவ்வாறு தனியே வெகுண்டு தண்டிப்பதால் செல்வாக்குப் படிப்படியாகச் சுருங்கிப் போகும்.

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு (568)

என்பது வள்ளுவம்.

பொது நன்மையைப் பற்றிய கருத்து இல்லாமல், சார்ந்தவர்களோடு கலந்து ஆராயாமல், பிறர்மேல் தன் சினத்தைக்காட்டி அல்லற்படுத்திச் செருக்கோடு செயலாற்றுகின்ற கொடியவனுடைய ஆட்சி முறையிலும் அவனுக்குத் துணையாக ஒரு கூட்டம் சேரும்; அந்தக் கூட்டம் கல்வியறிவு இல்லாத கசடர்களின் கூட்டமாக இருக்கும். சாதி வெறியைத் தூண்டியும், பணபலத்தைப் பல்வேறு விதங்களில் பிரயோகித்தும், பசப்புமொழிகளை பகர்ந்தும் பாமரர்களின் வாக்குகளைக் கொண்டு தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை அமைத்து விடலாம். விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகளில் அமைத்த அரசுகளில் இந்த முறையைக் காணலாம். கொடுங்கோலன்

மேற்குறிப்பிட்ட கீழ்மக்களின் கூட்டத்தைக் கவர்ச்சியாகத் தன் பக்கம் துணை சேர்ந்து வைத்துக் கொண்டிருக்க முடியும். இப்படித்தான் நடைமுறையில் இருந்து வந்ததையும் கண்டோம். இது பயனற்ற கூட்டம்; நிலத்திற்கு வீண் சுமையான கூட்டம். இவர்களால் நாடு எந்தவிதமான முன்னேற்றமும் அடைதல் முடியாது.

> கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுவல்லது
> இல்லை நிலக்குப் பொறை (570)

கல்வியறிவில்லாத மக்கள் எளிதில் ஒற்றுமைப்படமுடியும். இக்காலத்தில் மக்கள் தம் பக்கம் இருப்பதை மெய்ப்பிக்கச் நிரூபிக்கச்சாமான் வண்டிகளில் (Lorries) மக்களை ஏற்றிக் கொண்டு சென்று கூட்டங்களைப் பெருக்கிக் காட்டுவதை நாம் காணலாம். 'நாடகமே உலகம்' என்ற ஒரு வாசகம் உண்டு. 'உலகமே நாடகம்' என்றவாறு அந்த வாசகம் மாறியிருப்பதையும் இன்றைய ஆட்சி முறைகளில் காணலாம். கட்சி முறையில் அமைக்கப்பெறும் அரசுகளில் இத்தகைய பண்பு இன்றியமையாத முறையில் ஊடுருவி நிற்பதையும் காணலாம்.

இங்ஙனம் நாடாளும் அரசு அமைப்பில் அறநெறி எப்படி ஓங்க முடியும்? அந்த செந்நெறி எங்ஙனம் அவர்கள் உள்ளத்தைக் கவர முடியும்? அதனால் இந்தக் கீழோர்களின் கூட்டம் கொடுங்கோலனுடைய கொடிய செயல்களை அவர்கள் ஒருமுகமாகப் போற்றித் துணை நிற்பதையும் காணலாம். அதனால்தான் வள்ளுவர் பெருமானும், 'கல்லார்ப் பிணிக்கும்' என்று 'பிணித்தல்' என்ற சொல்லால் விளக்குகின்றார். உலகத்தில் குடியாட்சி முறை சீர்பெற அமையும் நாள் வரும் வரையிலும் அரசியலில் அறிஞர்கள் பெரும்பாலோராக அமைவது மிகவும் அருமையுடைத்தாகும். தப்பித் தவறி ஓரிருவர் இந்தக் கூட்டத்தில்வந்தாலும்அவர்களும் கல்வியறிவில்லாத மக்களின் மனம் உகக்குமாறு கவைக்குதவாத திட்டங்களை வகுத்

தும் அவற்றைச் செயற்படுத்தியும் உயர்ந்த நெறியை ஒரு பக்கமாக ஒதுக்கித் தள்ள நேர்கின்றது. அதிகம் கூறு வானேன்? மறக்கவும் நேரிடுகின்றது. இதனை மாற்று வதற்குஅறிஞர்களும் நடுநிலைவகிக்கும் செய்தித்தாள்களும் ஆற்றும் முயற்சியும் பயனளிக்காமல் போகின்றன. பெரும் பாலான மக்கள் கற்றுத் தெளிந்தவர்களாக வாழும் காலம் வந்தால்தான் இந்தக் குறை தீர்ந்து குடியாட்சி முறை சீராக அமையும்; அமைந்து வாழும். கல்வியாலும் பிறவற் றாலும் முன்னேற்றம் அடைந்த மேல் நாடுகளில் அமையும் குடியாட்சி முறையிலும் பல பொத்தல்களைக் காணலாம். அதுவரை அறிஞர்கள் இஃது 'ஒருவித யுகதர்மம்' போலும் என்று எண்ணி வாளா இருக்கவேண்டியதுதான்.

ஆயினும் பண்டைய முடியாட்சிக் காலத்திலும் மக்கள் மகிழ்ச்சியுடன்தான் வாழ்ந்தனர். சில பேரரசர்கள், பல வேளிர்கள் இளங்குழவியின் உடல்நிலை அறிந்து அதற்கேற்ப வளர்க்கும் தாயரைப் போன்று முறை வேண்டினார்க்கு எளிமையாக இருந்து முறை வழங்கினர். குறை நீக்க வேண்டும் என்று வந்தார்க்கு குறைகளை நீக்கினர். புலவர்களும் நீதி வழுவாத நெறிமுறையினை அடிக்கடி வற்புறுத்தி வந்தனர். சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை என்பானை நரிவெரூஉத் தலையார் பாடிய பாட்டின்,

......நின்னொன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரொ(டு) ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேஅது பெறலருங் குரைத்தே[45]
[நிரயம்-நரகம்; காவல்-காக்கப்படும் தேயம்;ஓம்புமதி-பாதுகாப்பாயாக; அளிது - அளிக்கத்தக்கது; பெறல் அருங்குரைத்து - பெறுதற்கரிது]

45. புறம் - 5

என்ற பகுதியில் இத்தகைய அறிவுரையைக் காணலாம்.

அரசர்கள் முறை தவறி நடக்கும் பொழுது செந்நாப் புலவர்கள் அவர்கள் வழியில் குறுக்கிட்டு நெறிப் படுத்தினர். இதனால் அரசர்கள் அருந்தமிழ்ப் புலவர்களிடம் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் தெற்றெனப் புலனாகும். சோழன் நலங்கிள்ளி காவிரி பாயும் நாட்டுக் குரியவன். இவன் காலத்தில் சோழ நாட்டின் உறையூர்ப் பகுதிக்கு வேந்தாய் ஆண்டவன் சோழன் நெடுங்கிள்ளி என்பான். இந்த இருவர்க்கும் எவ்வகையாலோ பகைமை உண்டாயிற்று. நெடுங்கிள்ளி ஆவூர் சென்றிருக்கையில் ஆவூர் தனக்குரியதாதலால், அதனைத் தான் பெறுகைக் காகச் சோழன் நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டான். இவன்அஞ்சிப் போருக்கு எழானாக கோவூர்க்கிழார் இவனிடம் குமறத்தீ எழுவித்துப் போர் செய்யத் தூண்டினார். ''தோன்றலே, யானைகள் வெய்துயிர்த்து உரும் என முழங்குகின்றன; குழவிகள் பாலின்றி அலறி அழுகின்றன; மகளிர் மலரின்றி வறுந்தலை முடிக்கின்றனர். மனையிடங்களில் எழும் அழுகுரல் நின் அரண்மனைக்கண் கேட்கின்றது; இவை நிகழவும் நீ அரண்மனைக்கண் அடங்கிக்கிடத்தல் இனிதன்று; முன்னே வந்து முற்றுகையிட்டிருக்கும் வேந்தனைப் பார்த்து, ஈயும் அறவுணர்வால், 'இது நினக்கு வேண்டின் பெற்றுக்கொள்' எனச் சொல்லி எயிற் கதவைத் திறத்தல் வேண்டும்; எதிரூன்றிக் காத்தலே மறம் என்பது நினது கருத்தாயின் போர் குறித்துத் திறந்து விடல் வேண்டும். அறவையும் மறவையும் அல்லையாய் மதிற்கதவைத் திறவாது ஒருபுறத்து ஒடுங்கிக் கிடப்பது நாணத்தகுவதொன்று'' என்று கூறுகின்றார் (புறம்-44).

சோழன் நெடுங்கிள்ளி ஆவூரினின்றும் எப்படியோ தப்பிப் போந்து தனக்குரிய உறையூரில் இருந்து வருகையில், அதனையறிந்த நலங்கிள்ளி உறையூரையும் முற்றுகை

யிட்டான். ஒருகுடிப் பிறந்த சோழ மன்னர்களாகிய இருவர் தம்முள் பகை கொண்டு மாறி மாறிப் போருடற்றித் திரிதல் முறைமையுடையதன்று, அது இருவர்க்கும் நன்றன்று என்று கூறி இருவரையும் சந்து செய்விக்கின்றார் கோவூர்க்கிழார்.

இரும்பனை வெண்டோடு மலைந்தோன் அல்லன்;
கடுஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;
நின்ன கண்ணியும் மார்மிடைந்ததன்றோ,
நின்னொடு
பொருவோன் கண்ணியும் மார்மிடைந்ததன்றே
ஒருவர் தோற்பினும் தோற்பதுநுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே,
அதனால்,
குடிபொருள் அன்றுநும் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யுமிவ் இகலே[46]

[மலைந்தோன் - சூடினோன்; தெரியல் - மாலை; ஆர்மிடைந்ததன்று - ஆத்தியால் செறியப்பட்டது; வேறல் - வெல்லுதல்; செய்தி - செய்கை; மெய்ம்மலி உவகை - உடம்பு பூரிக்கும் உவகை; இகல்-மாறுபாடு]

என்ற பாடலில் சந்து செய்விக்கும் செயலைக் காணலாம்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமானைப் போரில் தோற்கடித்து அவன் மக்களைக் கொணர்ந்து கொலை யானைக் காலின் கீழிட்டுக் கொல்ல முயல்கின்றான். கோவூர்க் கிழார் அதனைத் தவிர்க்கின்றார்.

---

46. புறம் - 45.

நீயே,
புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே,
புலன்உழு(து) உண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண்(டு) அழூஉம் அழாஅல் மறந்த
புன்றலைச் சிறார் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கண்நோ வுடையர்
கேட்டனை யாயின் நீ வேட்டது செய்மே[47]

[அல்லல் - துன்பம்; இடுக்கண் - துன்பம்; மருகனை - மரபில் உள்ளாய்; புலன் - அறிவு; புன்கண் - வறுமை; தமது - தமது பொருள்; தண்நிழல்-குளிர்ந்த நிழல்; அழாஅல் - அழுதல்; புன்தலை-புல்லிய தலை; சிறார்-சிறுவர்; மன்று - சபை; மருண்டு - வெருவி; விருந்திற் புன்கண் - முன்பு அறியாத புதிய வருத்தம்; வேட்டது-விரும்பியது]

என்ற பாடலில் இந்த நிகழ்ச்சியைக் காணலாம், இதன் கண், ''நீயோ புறாவின் பொருட்டுத் தன்னை வழங்கிய சோழன் மரபில் பிறந்துள்ளாய்; இவர்களோ புலவர்கட்குப் பெருங்கொடை நல்கி வாழும் பெரியோன் மரபினர்; மிக்க இளையர்; இம்மன்றினை அஞ்சி மருண்டு நோக்குகின்றனர்; யான் கூறுவது கேட்டபின் விரும்புவது செய்க'' என்று கூறுவதை அறியலாம். இப்பாடலும் இவரைக் கொல்லாமல் சந்துசெய்வித்தலின் பாற்படுகின்றது.

ஒரு சமயம் நெடுங்கிள்ளி சோழன் நலங்கிள்ளியிடமிருந்து போந்த இளந்தத்தன் என்ற புலவனை அவனது ஒற்றன் எனக் கருதிக் கொல்லப் புகுகின்றான். இதனைக் கண்ட செந்நாப்புலவர் கோவூர்க்கிழார், ''வேந்தே,

47. புறம் - 46,

வரிசை நோக்கி வாழும் புலவரது பரிசில் வாழ்க்கை பிறருக்குத் தீங்கு செய்வதன்று; வள்ளியோரை நாடிச் சென்று அவரைப் பாடி அவர் தரும் பொருள் கொண்டு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவது பரிசிலர் செயல்; மண்ணாளும் நும்போன்ற செல்வமுடைய வேந்தரை ஒப்பக் கல்வியால் மாறுபட்டோரைத் தம் புலமையால் வென்று தலைமை பெறுவது அவர்க்கியல்பு'' என்று கூறி அவனை உய்விக்கின்றார் (புறம் - 47).

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சிக் காலத்தில் இவனைக் காண்பதற்கு வந்த புலவர் பலரும் இவனால் உயிரினும் சிறந்தவர்களாகப் பாராட்டப்பெற்றனர். இவனைக் காண்பதற்கு வந்த மோசிகீரனார் என்னும் சான்றோர், வெற்றிமுரசு வைக்கும் கட்டிலின்மேல் தன்னை யறியாது கிடந்து உறங்கிவிட்டார். வெற்றித்திரு வீற்றிருக்கும் கட்டிலின் மேல் வேறுபிறர் இருந்து உறங்குவது குற்றமாகும். அது செய்வோர் கொலைத் தண்டத்துக் குரியராவர். இஃது அக்கால அரசுமுறை. இதை யறியாதவர் மோசிகீரனார். அவர் உறங்கியதை அறிந்த இவ்விரும்பொறை இவரைக் கொலை புரியாது, இனிதே உறங்குமாறு அவர்க்குக் கவரி கொண்டுவீசலுற்றான் (புறம் - 50).

இங்ஙனம் பல நிகழ்ச்சிகள் அரசர்கள் புலவர்கள்பால் பெருமதிப்புக் கொண்டிருந்தமையை அறிவிக்கின்றன. முறைமை தவறியபொழுது புலவர்கள் அவர்கட்குத் தக்க அறிவுரை கூறிய நிகழ்ச்சிகளையும் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காண்கின்றோம். அரசர்களும் புலவர்களொடு பொதிந்து அவர்தம் கட்டுரை வழியே வாழ்ந்த தகுதியால் அவர் முறைமை கெடாது அரசோச்சும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். புலவர்களின் அறிவுரை அரசர்கட்கு எப்பொழுதும் எய்ப்பினில் வைப்பாக இருந்ததனால்

மன்னர்கள் ஆட்சி முறைமை கெடாமல் நடைபெற்று வந்தது. மக்களும் மன்னவன் கோல் நோக்கி வாழும் குடிகளாய்த் திகழ்ந்தனர். அவர்களது தண்ணிய குடை நிழலில் இனிமையுடன் வாழும் வாய்ப்பும் பெற்றிருந்தனர்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (388)

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கானார்கள் பண்டைத் தமிழ் வேந்தர்கள். முறைமை கெடாது ஆண்டு ஆழ்வார் நிலைக்கு உயர்ந்த 'சொல்வி காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன்' (பெரு. திரு. 9 : 11) என்ற புகழ் மாலையுடன் திகழும் சேர வேந்தன்,

மீன்நோக்கும் நீள்வயல்சூழ்
வித்துவக்கோட் டம்மாஎன்
பால்நோக்கா யாகிலும்உன்
பற்றல்லால் பற்றில்லேன்
தான்நோக்கா(து) எத்துயரம்
செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும்
குடிபோன்(று) இருந்தேனே,[48]

[பற்று - சரணமாகப் பற்றுதல்; தார் - மாலை; நோக்காது - கவனித்துப் பாதுகாவாமல்; துயரம் - துன்பம்; கோல் - செங்கோல்]

என்று பேசுகின்றான். வித்துவக்கோட்டு எம்பெருமானை நோக்கி "எம்பெருமானே, நீ அருள் நோக்கம் செய்யா திருந்தாலும், நின்னைச் சரணமாகப் பற்றுதலைவிட்டு வேறொருவரைச் சரணமாகப் பற்றேன். குடிகளைக் காப்பதற்கென்று மாலையணிந்துள்ள மன்னன் அதற் கேற்றபடிக் குடிகளைக் கவனித்துப் பாதுகாவாமல் எப்படிப்பட்ட துன்பங்களைச் செய்தாலும் அவனுடைய

48. பெரு. திரு. 5:3.

செங்கோலையே எதிர்பார்த்து வாழ்கின்ற குடிமக்களை ஒத்துள்ளேன்'' என்கின்றார் குலசேகரப் பெருமாள். பண்டைக்காலத்தில் மக்களுக்கு மன்னன் செங்கோலின் மீது அளவற்ற நம்பிக்கை இருந்தது. முறைமையோடு அரசோச்சியவராதலால், ''மக்கள் அரசன் மீது கொண்டிருந்த பற்று போல் தன் பற்று இறைவன் மீது உள்ளது'' என்கின்றார். வேந்தனின் வெண்கொற்றக் குடை நிழலை இறைவனது திருவடி நிழலுடன் ஒப்பிட்டு ஓதுகின்றமை நம் உள்ளத்தை எல்லாம் கொள்ளை கொள்ளுகின்றது.

> அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல் (543)

> குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
> அடிதழீஇ நிற்கும் உலகு (544)

என்ற வள்ளுவங்கள் பண்டைய மன்னர்களின் முறைமையை முத்தாய்ப்பாக விளக்கி நிற்கின்றன என்று காட்டியும், முற்றும் துறந்த பட்டினத்தடிகளும் ஊழின் முறைமையை உணர்ந்து,

> என்செயல் ஆவது யாதுஒன்றும்
> இல்லை இனித்தெய்வமே
> உன்செய லேஎன்று உணரப்பெற்
> றேன்இந்த ஊன்எடுத்த
> பின்செய்த தீவினை யாதுஒன்றும்
> இல்லைப் பிறப்பதற்கு
> முன்செய்த தீவினை யோஇங்ங
> னேவந்து மூண்டதுவே.[49]

என்று பாடிய பாடலை நினைவு கூர்ந்தும் எனது இன்றைய பொழிவைத் தலைக்கட்டுகின்றேன்.

---

49. பட்டினத்துப்பிள்ளை பாடல்-பொது.22.

பின்னிணைப்பு - 1

பயன்பட்ட நூல்கள்

அதிவீரராமபாண்டியன்	:	நறுந்தொகை (மர்ரே ராஜம் பதிப்பு)
அழகர் அடிகள்	:	திருக்குறள் அறம் (கழக வெளியீடு)
ஆழ்வார்கள்	:	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு)
இரத்தினநாயகர் அன்சன்ஸ் (பதி)	:	விவேக சிந்தாமணி
இராமலிங்க அடிகள்	:	திருவருட்பா (இராமலிங்கர் பணிமன்றம், போயஸ் தோட்டம், சென்னை - ஊரன் அடிகள் பதிப்பு)
இளங்கோ அடிகள்	:	சிலப்பதிகாரம் (ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை - கழக வெளியீடு)
இளவழகனார்	:	கலித்தொகை - நச்சினார்க்கினியர் உரை (பாகனேரி வெளியீடு)
இறையனார்	:	களவியல் (நக்கீரர் உரை - கழக வெளியீடு)
ஔவையார்	:	கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி (மர்ரே ராஜம் பதிப்பு)
கம்பர்	:	கம்பராமாயணம் (வை.மு.கோ. பதிப்பு - உரையுடன்)

கொங்குவேளிர்	:	**பெருங்கதை** (கழக வெளியீடு)
சங்கப்புலவர்கள்	:	**அகநானூறு** (வேங்கடாசலம் பிள்ளை, வேங்கடசாமி நாட்டார் உரை-கழக வெளியீடு)
சங்கப்புலவர்கள்	:	**ஐங்குறுநூறு** (பொ.வே.சோமசுந்தரனார் உரை - கழக வெளியீடு)
சங்கப்புலவர்கள்	:	**குறுந்தொகை** (உ. வே. சா. உரை - பதிப்பு)
சங்கப்புலவர்கள்	:	**நற்றிணை** (பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் உரையுடன் - அவர் பதிப்பு)
சங்கப்புலவர்கள்	:	**பரிபாடல்** (உ.வே.சாமிநாதய்யர் உரை - வெளியீடு)
சங்கப்புலவர்கள்	:	**புறநானூறு பழைய உரையுடன்** (உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு)
சங்கப்புலவர்கள்	:	**புறநானூறு** (ஔவை துரைசாமிப்பிள்ளை உரை - கழக வெளியீடு)
சமணமுனிவர்கள்	:	**நாலடியார்** (வை. மு. கோ உரை)
சிவப்பிரகாசஅடிகள்	:	**நால்வர் நான்மணி மாலை**
சீத்தலைச் சாத்தனார்	:	**மணிமேகலை** நமு. வேங்கடசாமி நாட்டார் - ஔவை சு. துரைசாமி பிள்ளை (பாகனேரி பதிப்பு)
சுப்புரெட்டியார். ந,,	:	**தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை** (பழநியப்பா பிர

தர்ஸ், திருச்சி-2, மூன்றாம் பதிப்பு)

சேக்கிழார் : **பெரியபுராணம்** (குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்)

தாயுமான அடிகள் : **தாயுமானவர் பாடல்கள்** (தருமபுரப் பதிப்பு)

திருமூலர் : **திருமந்திரம்** (குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்)

திருவள்ளுவர் : **திருக்குறள்** - பரிமேலழகர் உரை (கழக வெளியீடு)

தொல்காப்பியர் : **தொல்-பொருளதிகாரம்** (இளம்பூரணர், நச்சினார்க்கினியர் பேராசிரியர் உரைகள்-கழக வெளியீடு)

நாற்கவிராச நம்பி : **அகப்பொருள் விளக்கம்** (கழக வெளியீடு)

பவணந்திமுனிவர் : **நன்னூல் காண்டிகை உரை** (ஆறுமுக நாவலர் பதிப்பு)

பாரதிதாசன் : **பாரதிதாசன் கவிதைகள்-முதல் தொகுதி** (இராமச்சந்திரபுரம் -புதுக்கோட்டை)

பாரதியார் : **பாரதியார் கவிதைகள்** (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை வெளியீடு)

பிள்ளை உலக ஆசிரியர் : **ஸ்ரீவசனபூஷணம்** (புருடோத்தம நாயுடு பதிப்பு)

மாணிக்கவாசகர் : **திருவாசகம்** (ச. தண்டபாணி தேசிகர் பதிப்பு - தருமபுர வெளியீடு)

மாணிக்கவாசகர்	:	**திருக்கோவையார் உரையுடன்** (ஆறுமுக நாவலர் பதிப்பு)
முனைப்பாடியார்	:	**அறநெறிச் சாரம்**-ஆ.பொன்னுசாமி பிள்ளை உரையுடன் (கழக வெளியீடு)
முன்றுறை அரையனார்	:	**பழமொழி நானூறு**, மா.இராசமாணிக்கம் பிள்ளை உரையுடன் (கழக வெளியீடு)
மூலர்	:	**தேவாரம் அடங்கன் முறை**(சைவசித்தாந்த சமாஜ பதிப்பு)
வரதராசன். மு.	:	**திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்** (பொதிகைப் பதிப்பகம்,கடலூர்(NT)
விளம்பி நாகனார்	:	**நான்மணிக் கடிகை** - உரையுடன் (கழக வெளியீடு)

பின்னிணைப்பு - 2
பொருட்குறிப்பு

அ

அகம் — 22, 29, 50, 266
அகத்திணை நெறி — 55
அகத்திணை மாந்தர்கள்— 25
அகப்பொருளில் — 22
அகப்பொருள் — 11
அகத்துறவு — 188
அசரீரி — 212
அடக்கமுடைமை—124
அட்சரலட்சம் — 138
அதிகமான் நெடுமாறன் அஞ்சி —90
அதிகமானின் புகழ் — 151
அதிவீரராமபாண்டியன் - 100
அநுமன் — 105, 106, 297
அநுமார்வால் — 275
அந்துவஞ்சேரல் — 241
அப்பர் தேவாரம்— 173
அப்பர் பெருமான் — 173
அமுதவல்லி உதாரன் —326
அமைச்சரின் கடமை — 257
அம்மூவனார் — 23
அய்யங்கார் — 307
அரங்கர் — 305
அரசநீதி — 290
அரசனின் கடமை
அருச்சுனன் ...382
அருளுடைமை ... 154
அருளொடு புணர்ந்த அகற்சி ... 152
அலகிலா விளையாட்டு—305
அவாவுறுத்தல் 195
அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் — 77
அழுக்காறாமை — 135
அரசனின் கடமை...257
அறங்கூறுதல் ... 142
அறங்கூறு அவை ... 264
அறங்கூறு அவையங்கள்...245
அறங்கூறு அவையம் ... 264
அறக்கடவுள் ... 213
'அறச்செயல் ... 63
அறத்தாறு...65
அறத்தின் செயல் வகைகள்... 63
அறத்தின் வகைகள் ...63
அறத்துப்பால் ... 19
அறத்தொடு நிற்றல் ... 23, 25, 28, 31, 42, 43,44, 49, 54
அறநூல்விதி ... 284
அறநூல்களின் அடிப்படை ... 245
அறநெறி ... 298
அறநெறிச்சாரம் ... 59, 163
அறநெறிச்சார ஆசிரியர்...160
அறம் ... 10, 61, 103, 287
'அறம்'—61
அறம்புரி செங்கோல் ... 15
அறம் - வகையும் தொகையும் ... 61
அறம் வளர்த்த நம்பி ... 207
அற வாழ்க்கை ... 18
அறிகரி பொய்க்கும் செய்தி ... 267
அறிவுடையோன்ஆறு ... 291
அறனில் கொள்கை... 15
அன்புடைமை ... 80

ஆ
ஆகலூழ் ... 313
ஆகூழி 313
ஆசை நீக்கிய பக்கம் 152
ஆட்சி முறை ... 298
ஆட்சி முறைமை ... 335
ஆண்டாள் ... 33
ஆண்டி ... 9
ஆதநுங்கன் ... 104
ஆத்திரையனார் ... 104
ஆந்தையார் ... 258
ஆபுத்திரன் ... 271, 272
ஆமாத்தூர் ... 271
ஆரா அமுதம் ...319
ஆரிய அரசன் பிரகத்தன்...44
ஆரிய அரசன் யாழ் பிரமதத்தன் — 173
ஆரிய மன்னர்கள் ... 293
ஆலத்தூர் ... 102
ஆலத்தூர் கிழார் ... 102,198
ஆலம் பேரி சாத்தனார்...203
ஆலூர் ... 331
ஆலூர் மூலங்கிழார்... 228
ஆழ்வார் நாயகி ... 35
'ஆறடி நிலம்' ... 196
ஆறாம் திருமுறை ... 83
'ஆறு' ... 65
ஆன்மப் பரிசோதனைகள் ... 322
'ஆஷாட பூதிகள்'... 168
இ
இடைக்காடனார் ... 227, 228
இட்லர் 324
இந்திரன் ... 236
இமயவரம்பன் ... 243
இரகுவம்சம் ... 75
இரத்தினச் சுருக்கம் ... 163
இரவச்சம் ... 116
இரவு ... 116
'இராகவ குலம்'... 75
இராமகாதை ... 105, 205
இராமதூதன் ... 76
இராமபிரான் ... 296
இராமன் ...72, 73,107,130, 205, 286, 287, 288 311, 312
இராமகுலம்' ... 75
இராவணன் ... 205; 206, 296, 313
இராஜபுத்திரன் ... 40
இரும்பொறை 242
'இருள்' 192
இலக்கியக்கூற்றுலா'—291
இலக்குவன்—100
இலங்கைக்கயவாகு—293
இல்லத் தலைவி—68
இல்லறம்'—9, 68
இல்லறவியல்—62, 64, 65
இல்வாழ்க்கை—68, 87
இல்வாழ்வான்—66
இழவூழ் — 313
இளங்கோ—293
இளங்கோவடிகள்—36, 66, 67. 233, 240, 267, 286, 293
இளம்பூரணர்—153, 266
இளைய பெருமாள்'—32, 105
இறை'—258, 287
இறைபெறும் நெறி—256
'இறைமாட்சி'—287
இறையனார் களவியல்—27, 40, 63, 64
இறையனார் களவியலாசிரியர்—26, 40
இறைவனது திருவடி நிழல்—336

இறைவனின் முறைமை—309
இறைவன் திருமுன்—299
இனியவை கூறல்—96
இன்னாசெய்யாமை—177
ஈ
ஈகை—112, 116
ஈட்டாசிரியர்—299
உ
உடல் ஊனமுற்றோர்—270, 273
உடையவர்—299
உதயகுமரன்—130
உதியஞ்சேரல்—241
உலகம் உண்டபெருவாயன்—49
உறையூர்—331
உறையூர் மருத்துவன் தாமோதரனார்—302
ஊ
ஊழ்—309
ஊழ்செயற்படுதல்—303
ஊழ்வலி—25
எ
எட்டெழுத்து மந்திரம்—81
எய்ப்பினில் வைப்பு—334
எரிமீன்—305
ஐ
ஐங்குறுநூறு—23, 45, 46, 51
ஐந்தெழுத்து மந்திரம்—81
ஐயை—239
ஒ
ஒப்புரவாளர்—111
ஒப்புரவு அறிதல்—110
ஒருவிதயுகதர்மம்—330
ஒழுக்கமுடைமை—125, 126
ஓ
ஓரம்போகியார்—278
ஔ
ஔவை துரைசாமிபிள்ளை—113
ஔவைப்பாட்டி—65, 91, 171
ஔவையார்—90, 95, 114, 128
ஔவையின் புகழ்—151
‘கஞ்சப்பிரபுக்கள்’—113
கடமை—258
கட்டில் நீத்தபால்—153
கட்டு—46
கட்டுவிச்சி—48
கட்சி மாறிகள்—109
கண்காட்டுவார்—272
கணியன்பூங்குன்றனார்—209
கண்ணகி—67, 95, 200, 201
‘கண்ணகி தெய்வம்’—248
கண்ணப்ப நாயனார்—87
கண்ணம்மாள் நடேசன்—4
கண்ணன்—109, 110, 132, 323, 324
கண்ணீரின் ஆற்றல்—326
கபிலர்—55
கம்ப நாடன்—36, 72, 106, 139, 225
கம்பன்—205, 224, 225, 232, 312, 313
கம்பராமாயணம்—283, 311
கரன்வதை—268
கரிபொய்த்தான்—266
கர்மசந்நியாசம்—315
கர்மம்—315
கர்மயோகம்—315
கலித்தொகை—124, 296
கல்லாடனார்—203
கல்வியின் பெருமை—291
கழங்கு—45, 46
கழற்சிக்காய்—45

கழாத்தலையார்—197
கழைதின் யானையார்—118
களவுநெறி—53, 56
கள்ளாமை—170
கள்ளூர்—266
கற்புநெறி—56
கனகன்—248
கன்னன்—109
கா
காஞ்சித்திணை—152
காமக்கண்ணியார்—50
காமம்நீத்தபால்—152
காமராசர்—16
காமராசர் அரசு—272
காமாராசர் ஆட்சி—272
'காமர்கடும்புனல்'—28
காயசண்டிகை—130
காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி 260
காரைக்கால் அம்மையார்—56
காரைக்குடி—113
கார்த்திகை—299
காலதத்துவம்—307
காலத்திகிரி—307, 308
காவல் மரம்—197
காவியங்கள்—319
கி
கிருட்டிணன்—132
கிருட்டிணாசஞ்சீவி—4
கிருபன்—322
கிள்ளிவளவன்—102
கீ
கீசகன்—130
கீதோபதேசம்—323
கீரந்தை—235, 236
கு
குடகக் கொங்கர்—293
குடபுலவியனார்—230
'குடித்தனம்'—126
குடிநீர்-கழிவுநீர்வாரியம்—262
குடிப்பிறப்பு—235, 262
குடிமக்கள்—257
குடிமை—126
குடுகுடுப்பைக்காரன் - 250
குட்டநாட்டுத் திருப்புலியூர்—34
குந்திதேவி—109
குமணனின் புகழ்—151
கும்பகருணன்—107, 295, 310, 311
கும்பகருணன்வதை-296, 197
குருகூர்ச்சடகோபன்— 196
'குலசேகரப்பெருமாள்'—32, 336
குலசேகரன்—335
குறள்—18, 292
'குறிஞ்சிப்பாட்டு'—44
குறுந்தொகை—23, 55, 84, 93, 94, 100, 173, 178
குற்றாலக் குறவஞ்சி—305
கூ
கூடாவொழுக்கம்—166
கூர்தல்அறக்கொள்கை—309
கே
கேள்வி—156
கை
கைக்கிளைக் கூறுகள்—25
கைகேயி—284, 288, 289, 311,
கைலைநாதன்—98
கொ
கொல்லாமை—180
கொள்வாய்கள்—250
கொற்றவை—239

கொன்றை வேந்தன்—65, 161, 181
கோ
கோசலை—289
கோலத்திகிரி—308
கோவலன்—67, 200, 316, 325
கோவூர்க்கிழார்—229, 331, 333,
கௌ
கௌசல்யாதேவி—290
ச
சகுனி—251
சங்க இலக்கியங்கள்—55
சங்கப் பாடல்கள்—56
சங்கப் புலவர்கள்—23
சஞ்சீவி. ந. 4
சட்டமன்றப் பேரவை 322
'சத்துணவுத்திட்டம்'—273
சமணமுனிவர்-71, 120, 318,
சபாநாயகர்—322
சமூகநீதி—273
சம்பந்தர் தேவாரம்—189
சன்மார்க்க சங்கம்—160
சா
சாதிப்பற்று—275
சாத்தனார்—194
சாத்தன்—182
சான்றோர்—289
சி
சிதம்பரனார் வா. உ—188
சிந்தாமணி—303, 318
சிந்தாமணி ஆசிரியர்—261
சிபிச்சக்கரவர்த்தி—233
சிபியின் மரபு—296
சிலப்பதிகாரம்—46, 60, 67, 95, 187, 232, 233, 234, 235, 236, 241, 242, 243, 245, 248, 249, 281, 293, 294, 318.
சிவபுராணம்—11
சிவப்பிரகாச அடிகள்—81
'சிவம்'—13
சீ
சீதாப்பிராட்டி—73
சீதை—325
சீதையின் மனம்—92
சீருடைத்திட்டம் 272
'சீவன் முக்தி'—62
சு
சுக்கிரன்—139
சுக்கிராச்சாரி—117
சுதர்சனம்—308
சுந்தரம்பிள்ளை, பேராசிரியர்—274
சுந்தரவடிவேலு, நெ. து—272
சுந்தரர் தேவாரம் 191
சுந்தரர் பாவையார் திருமணம்—56
செ
செங்குட்டுவன்—60, 293, 294
செங்கோல்—226
செங்கோன்மை—225, 247
செம்புலப் பெயல் நீர்—84
செய்ந்நன்றி யறிதல்—97
செல்வம்—327.
சே
சேக்கிழார்—222
சேக்கிழார் பெருமான்—56. 222,
சேரமான் கருவூரேறிய ஒள் வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை—84, 330,
சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதன்—197
சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்—241
சேரவேந்தர்கள்—241

சை
சைவப்பற்று—220
சோ
சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திரு மாவளவன்—302
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் —198, 226, 228
சோழவேல் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி—197
சோழன் நலங்கிள்ளி—229, 234, 260, 292, 331, 333
சோழன்நெடுங்கிள்ளி —321, 331,
ஞா
ஞாலத்திகிரி—306, 308,
ஞானசம்பந்தப் பெருமான் —81
ஞானத்தின் கூறுகள்—185
'ஞானப்பகுதி'—62, 154, 184
ட
டால்ஸ்டாய்—196
டி. கே. சி —92, 93
த
தசரதன்—285, 289
தசாஹம்—286
தட்சிணாமூர்த்தி —238
தண்கால்—238
தண்டகாரணியம்—312
தண்டம்—247
'தமிழ்ப்பெறுதல்'—52, 54
'தமிழ்மறை'—11
தம்பிரான் தோழர்—130
தருமக்கோமான்—321
தருமபுத்திரன்—136
தருமபுரவழி—168
தருமன்—132, 133, 135, 212, 213, 322,
தலைமையானவிதி—316
தலைவிதி—316
தவம்—163
தா
தாதன்—9
தாயுமான அடிகள்—5, 154, 156, 177, 180
தாயுமானவர் பாடல்—3
தாரை—105
தி
திகிரித்தொடர்கள்—308
திரிகூடராசப்பக் கவிராயர் 305
திருக்குறள்—11, 15, 62, 66, 287, 292, 309, 322
திருதராட்டினன்—320, 321, 323
திருத்தக்க தேவர்—56, 121, 303, 318
திருத்தங்கால்—238
திருப்புலியூர்—35
திருப்புலியூர் நாயனார்—31
திருமங்கையாழ்வார் — 30, 164, 190
திருமந்திரம் - 82
திருமால் --287
திருமுருகாற்றுப்படை—15
திருமூலர்—82, 191
'திருமொழி'—31
திருவரங்கத்து மாலை 306
'திருவருள் கழுகு'—38
திருவரங்கம்—305
திருவள்ளுவர்—18, 65, 87, 88, 91, 164, 181, 245
திருவாசகம்—11, 81, 97
திருவாவடுதுறை வழி — 168

திருவாய்மொழி—31, 57.77, 155, 299
திருவாழி ஆழ்வான்—308
திரு. வி. க.—7
திருவிருத்தம்—47, 48
திருவுடை மன்னர்—287
திரௌபதி—130, 133, 322, 325
திவ்விய கவி—306, 308
தீ
தீவினை—313
தீவினையச்சம்—145
து
துச்சாதனன்—133, 322
துரியோதனன் — 138, 251, 252, 253, 320. 322,324
துரோணன்—323
துலாக்கோல்—233
'துறவறம்'—9, 68
துறவறவியல்—62, 64, 152
துறைமங்கலம்—81
தெ
தெய்வமூலம்—51
தெய்வயானை—54
தென்புலத்தார்—257
தே
'தேகாத்மவாதம்'—190
தை
தைலதாரை—125
தொ
தொண்டைமான் இளந்திரையன்—301
தொலைத் தொடர்புகள் — 298
தொல்காப்பியம்—28, 119, 237, 265
தொல்காப்பியர்—7, 10, 23, 28, 45, 52,54, 314.
தொல்காப்பியனார்—6, 9
'தொன்றியல்மரபின் மன்றல்—55
நக்கீரர்—113. 203
நச்சுப்பொய்கைச் சருக்கம்—211
நடுநிலை வகிக்கும் செய்தித் தாள்கள்—330
நடுவுநிலைமை—121
நச்சினார்க்கினியர்— 15, 46, 70, 126
நடேச முதலியார், மு. 5
நம்பியாரூரர்—191
நம்மாழ்வார்—30, 47, 77, 155, 223
நரிவெரூவுத்தலையார் — 84, 85, 214. 330
நலங்கிள்ளி—260
நல்லந்துவனார்—53
'நல்லாறு'—65
நல்லூரம்—314
நல்வழி—114, 127, 310
நல்வினை—313
நறுந்தொகை—100
நற்றிணை—45, 50, 267
நன்னூல்—10
நா
'நாகரிக உலகு'—19
நாச்சியார் திருமொழி—31
நாட்டின் பொருள்வளம் — 227
நாயன்மார்கள்—62
நாராயண நாமம்—82
நாலடியார்—58, 59, 70,71, 99, 120, 127, 309, 310, 314, 318
நாலிலக்கிழவன் நாகன்—292
நால்வர் நான்மணிமாலை—81

நாற்கவிராச நம்பியார்—27
நான்மணிக்கடிகை-78
நி
நியாயவிலைக் கடிகைகள்—182
நில அளவு பற்றிய குறிப்பு—259
நிலையாமை—185
நீ
நீட்டல்—168
நீதி—287
நீதிநூல்கள்—319
நீதிமுறை—234
நீதிவழங்கல்—245, 246
நீலத்திகிரி—308
நெ
நெடுங்கிள்ளி—333
நெடுஞ்செழியன்— 230, 247
நெட்டிமையார்—199, 202
நெறிபிறழாத முறைமை—324
நோ
'நோன்புப்பகுதி' — 62, 154

பகவத் கீதை—315
பசும்பொன் முத்துராமலிங்க தேவர்—16
'படாமைவரைதல்'—52
படை—327
படைமடம் பட்டோர் — 202
பட்டினத்தடிகள்—119, 120
பட்டினத்துப்பிள்ளை—336
பட்டினப்பாலை—123
பட்டர்—299, 300
பதிற்றுப்பத்து—243
பயனில் சொல்லாமை — 144
பரதன் 286, 288
'பரகாலநாயகி'—30
பரதாழ்வான்—31
பரத்தை—93
பரத்துவாச முனிவன்—285
பரந்தாமன்—323
பரம்பொருள்—208, 309
'பராங்குச நாயகி'—30, 223
பராசரபட்டர்—299
பராசரன்—237
பரிபாடல்—52
பரிமேலழகர்—127,150, 188, 195, 221,257, 287,295
பல்யானை செல்கெழு செங் குட்டுவன்—242
பழமொழி— 124, 126, 170, 236, 237, 146, 261, 252, 297
பழமொழி ஆசிரியர்—126,
பா
பாக்கிய வாலா—284
பாஞ்சாலி சபதம்—137, 251
பாண்டியன் அறிவுடைநம்பி 258
பாண்டியன் ஆரியபாண்டியன் இலவஞ்சிகைப் பள்ளித் துயின்ற நன்மாறன்—16
பாண்டிநாட்டுத்திருப் பதிகள்— 238
பாண்டியன் நெடுஞ்செழியன் —247
பாரதி—136, 251, 321
பாரதியாரின் கனவு—275
பாரதியார்—21, 137, 174 250, 304
பாரிமகளிர்—55
பாரியின் புகழ்—151
பார்ப்பனவாகை—237
பாலதாணை -23, 25, 43
பாலுணர்வு—128
பாலுந்தல்—22
பாலைக்கலி—266

பாலைக் கௌதமனார்—242
பாலைநிலம்—175
பால்வரைத்தெய்வம்—314
பாற்கடலான்—98
பி
பிசிராந்தையார்—258
பிரகலாதன்—81
'பிரகஸ்பதிகள்'—128
பில்லா—255
பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்—164, 306, 308,
பிறப்பொழுக்கம்—126
பிற்போக்குச்சாதியாரின் பட்டியல்—275
பீ
பீதகஆடை...300
பு
புகழ்...148
புரவு...258
'புரைதீர் கிளவி'...23
புலவர்கள்...330.
புலால் மறுத்தல்...159
புறங்கூறாமை...142
புறத்துறவு...188
புறநானூறு...289
புறநானூற்றுப் புலவர்...221
புறப்பாட்டு...128, 317
புறப்பொருளில்...57
புறமுக ஆற்றல்...305
புறம்...12, 85, 91, 103, 104, 114, 118, 172, 192, 227, 231, 242, 248, 261 301, 317, 330, 333, 334,
பூ
பூதசதுக்கம்...268, 269
பூதத்தாழ்வார்...224
பெ
பெரிய பிராட்டியார்...33, 38
பெரிய புராணம்...62, 237
'பெரிய பெருமாள்'...32
பெருங்கதை—94
பெருங்கதைக்கூற்று—94
பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்—242
பெருந்தகையாளன்—112
பெருந்திணைக்கூறுகள்—25
பெருமாள்—32
பெருமாள்திருமொழி—31
பெருமுளை—12
பெரியாழ்வார்—137
பே
பேகன்—203
பேரவை—299, 300
பேரிசாத்தனார்—23
பொ
பொருட்பால்—19
பொய்க்கரி—266
பொய்யாமொழி-87, 123, 132, 136, 157, 175, 194
பொய்யாமொழிகள்-61
பொய்யாமொழியார்-57, 96 162
பொறையுடைமை-130
பொற்கைப் பாண்டியன்-236
போ
போகூழ்—313
போரில் அறம்—196
ம
மகிபாலன்பட்டி-209
மக்கட்பேறு-78
மக்களாட்சி-225
மடலேறுதல்-54
மணக்குடவர்-188
மணிவாசகப் பெருமான்-11, 49, 87, 97
மணிமேகலை-270, 271, 282 320

மதிய உணவுத்திட்டம்-272
மதுரைக் கணக்காயனார்-113
மதுரைக்காஞ்சி-245
மதுராபதி-235
மதுராபுரித்தெய்வம்-234, 237
மநுதர்மமும் வள்ளுவர் அறமும்—273
மநுநீதிச்சோழன்—234
மரபுநெறி—53
மரபுமுறை—290
மலையமான்—332
மருள்—192
மனச்சான்று—20, 60
மனோன்மணீயம்—247
மா
மாசு—192
மாடலமறையோன்—60
மாடலன்—293
மாதவன்—100
மாநிலத்து மன்னுயிர்—292
மாரீசன்—312, 313
மாருதி—106
மாவலி—100, 117, 139
'மாறுகோள் இல்லாமொழி'-26

மு
முதுநீர்த்திகிரி - 307, 308
முதுவாய்ப்பெண்டிர் - 51
முந்துராமலிங்கர் மாவட்டம் - 209
முந்தையோர் முறை - 287
மும்முதற் பொருள் - 8
முருகக் கடவுள் - 48
முருக பூசை - 44
முருகன் - 54
முறை - 283, 285, 286, 287 290
முறைசெய்தல் - 246
முறைமகன் - 285
முறைமை - 279, 280, 281, 282, 283, 285, 286, 288, 290, 309, 315, 332, 334, 335, 336
முறைவழிப்படுதல் - 317
முற்றூட்டு - 239
முஸ்ஸோலினி - 252 324,
மூ
மூலத்திகிரி -307
மூவேந்தரின் ஆட்சிமுறை - 231
மூன்றன் பகுதி - 8
மூன்று சக்கர வண்டிகள்-273
மூன்று நீதிகள் - 320
மெ
மெய்யுணர்தல் - 192
மோ
மோசிகீரனார் - 24, 334
மோதாசனார் - 219
யா
யானை புக்கபுலம்
ர
ரங்கா - 255
வ
வசிட்டன் - 287
வச்சிராயுதம் - 23?
வஞ்சிமுதூர் - 293
வடலூர் வள்ளலார் - 181
வடநெடுந்தத்தனார் - 292
வரதராசன், மு - 7
வரிதண்டல் - 262
வரைவு கடாதல் - 50
வல்லார் - 117
வல்லார்கிழான் பண்ணன் - 117
வள்ளல் அழகப்பர் - 113
வள்ளலார் - 236
வள்ளுவரின் அறஉணர்வு-274

வள்ளற்பெருமான் - 83,112, 146, 149, 159, 161, 178, 181, 182, 185, 187, 208
வள்ளுவர் - 60, 69, 72, 101, 125, 126, 138, 144, 156, 254, 298
வள்ளுவர் கருத்து-253
வள்ளுவங்கள் - 86
வள்ளுவர் மொழி - 131
வள்ளுவப் பெருந்தகை— 12. 13, 87, 92, 111, 116, 128, 149, 154,157,159, 162, 318, 325
வள்ளுவர் பெருமான் 14, 21, 67, 71, 80, 88,97,141, 143, 256, 258, 313, 316, 326. 329,
வள்ளுவர் கருத்து - 274
வள்ளுவர் வாக்கு—131
வள்ளுவர் வாய்மொழி - 113, 122, 143, 148, 161, 227, 250, 258, 313' 335
வள்ளுவர் வான்மறை- 144
'வழக்கு' - 246
வா
'வாக்குண்டாம்'-91
வாமனாவதாரம் - 100
வாய்மை - 171
வால்மீன் - 305
வாழைமரம் - 82
வாழ்க்கைத் துணைநலம் - 69
வி
விசயன் - 248
விச்சிக்கோ - 55
விதி - 316, 319, 320, 321
விதிகாட்டும் நெறி - 321
விதுரன் 252, 323
' விருந்து'—89
விருந்தோம்பல் - 87
வில்லி - 211
விவேகசிந்தாமணி - 91, 270
விளம்பரப் புகழ் - 151
வினை - 315
வினைப்பயன் - 322
வீ
வீடணன்—207, 310
வீட்டுமாச்சாரியன் - 252
வீமன் - 33, 252, 323
வீரபத்தினி - 202
வீழ்கொள்ளி 305
வெ
வெஃகாமை-140
வெகுளாமை - 174
வெண்கொற்றக் குடைநிழல் - 336
வெள்ளை நாகனார் - 229
வெறிபாடிய காமக்கண்ணியார் - 50
வெறிப்பத்து - 51
வெறியாடல் - 47, 50, 51
வெறியாட்டாளன் - 48
வெறியாட்டம் - 49
வெறியாட்டு - 44, 50,51,54
வெறிவிலக்கு 49
வே
வேதமுனி - 136
வேலன் - 44, 48, 49, 50
வேள் - 55
வை
வையாவிக்கோப்பெரும்பேகன் - 202
வடமொழி
ஜானகிகுலம் - 75
ஜேத்மாலனி - 284
ஸ்ரீவசன பூஷனம் - 77
ஹிட்லர் - 252

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
24	அ. கு.	குறுக்	குறுந்,
36	உம்.	புணையிழைகள்	புனையிழை-கள்
44	16	பூஜை	பூசை
72	20	கற்பைபற்றி	கற்பைப்பற்றி
88	12	வருவோரை	வருவோரைத்
186	8	செல்வத்தை	செல்வத்தைச்
252	23	வீடுமாச்சாரியன்	வீட்டுமாச்-சாரியன்

First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) **Tamil Payitrum Murai [1957]**
2) **Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]**
3) **Kalvi Ulaviyal Kotpaadukal [1989]**
4) **Vainava Selvam [1995]**

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21

b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

India

Book of Records

CERTIFICATE

CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.

India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.

ISBN 978-81-939637-3-9

9 788193 963739